~~224028~~
Q22WX
N20.
22400~~47~~



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிள்ளைலோகஞ்சீயரருளிச்செய்த

ராமாநுஜார்ய் திவ்யசரிதை.

(பிள்ளைலோகஞ்சீயர் தனியன்.)

ஸ்ரீஶாமிமாவொஜிவ்ய ஸ்ரீவாதூலஜ்யொவ்ருதஜ்!

ஸ்ரீஷெ்யதீநவ்ருவணம் ஸ்ரீலொகாய்ஜொநிஂஸஜெ॥

ஸ்ரீய:பதியாய், ஶேஷஶாயியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ...ரார்ணவநிகேதநனாய், ஹேயப்ரதிபட கல்யாணகுணைகதானனாய், ...வாந்தர்யாமியான ஸர்வேச்வரன்; ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவந கா...கையாலே, (வைகுண்டேதுபரேலோகே ஸ்ரியாஸார்த்தம்ஜகத்பதி:। ...ஸ்தேவிஷ்ணுரவிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ) என்று ...ல்லுகிறபடியே-உபயவிபூதி நிர்வாஹகமான வடிவுதோற்றஸ்ரீபூமி ...நாயகனாய், சேஷித்வஸூசகமான முடிசூடி * வீற்றிருந்தேழு ...கும் தனிக்கோல்செல்ல எழுந்தருளியிருக்கிற இருப்பையும் ஒரிரு ...பாக மதியாதே, (மஹதாதமஸாவ்ருத:) என்னுமாப்போலே (க) ஸம் ...ஸார்த்தத்திலே ஆழங்காற்பட்டுக்கரையேறமாட்டாதே து:கா ...ரான சேதநவர்க்கத்தைக்கண்டு, (ஸ்வஶமஹவதிஷாதவித:) என்னும் ...ய-இவர்களுஜ்ஜீவிக்கும் விரகென்? என்று, ஶரீரஹேதைஸ்தவ ...ஷதாஂமதை:) என்கிறபடியே - ஸ்வாதீந நிர்வாஹோசித பரிகா...சஷமான திருவநந்தாழ்வானையும், (வேதாத்மாவிஹகேஶ்வர:) ...று சொல்லப்படுகிற (உ) பறவைக்கிறையையும்பார்த்து, லீலா

(க) ஸம்ஸாரார்த்தம் - ஸம்ஸாரமாகிற படுகுழி. (உ) பறவைக்கு இறை-...பிராஜன்; - கருடன்.

காப்பகம்
224097
நூலகம்

விபூதிக்கு நிகர்ஷஸ்தலமான பாரதவர்ஷத்திலே, (ஶ்ருதிர்நஷ்டாஸ்ம்ருதிர்லுப்தா ப்ராயேணபதிதாத்விஜா:। அங்காநிவவிஶீர்ணாநி ஹாஹ்ஹா யாவர்யதே கலி:) என்றும், (யதாயதா ஸதாம்ஹாநிர்வேதமார்காநுஸாரிணாம்। ததாததா கலேர்வ்ருத்திரநுமேயாவிசக்ஷணை:) என்றும்சொல்லுகிறபடியே-ஸாம்ராஜ்யம்பண்ணுகிறகலியும்கெடும்படிபண்ணி, (வேதநஸ்யாபயாமாஸ) என்றும் (ஸத்யேநலோகாந்ஜயதி) என்றும், (யர்மமூலமிதம்ஜகத்) என்றும், சொல்லுகிறபடியே - * தர்மே ஸர்வம்ப்ரதிஷ்டிதமாக்கவும், வைதிகவிரோதிகளான பாஷண்ட வித்வம்ஸநம் பண்ணவும், நீங்களிருவரும் * இருள்தருமாஞாலத்திலே ஶரீரபரிக்ரஹம் பண்ணுங்கோள் என்ன; இவர்களும், அவன்திருவுள்ளத்துக்கு பின்செல்லும்படிக்கு இடம்பார்த்து நிற்க;

அக்காலத்திலே, (மமாத்மாஜ்ஞாநிநாம்வர:) என்று சொல்லுகிறபடியே பகவதவதாரமான, யமுனைத்துறைவர்நாட்டிலே (க) எழுத்தாணிப்பணம் வாங்குகிற ராஜபுரோஹிதனையும் ஜயித்து (ஆஸைலாதத்ரிகந்யா) என்று விருதுசொல்லி, "எம்பெருமான் ஸர்வஸ்மாத்பரன், ஸகலஜகத்காரணன்" என்றறுதியிட்டு, துஷ்டமதங்களை நிரஸித்து ஸ்வமதஸ்தாபநம்பண்ணிக்கொண்டு ஆளவந்தாரெழுந்தருளியிருக்க; அவர்ஸ்ரீபாதத்துமுதலிகளில் ப்ரதாநரான பெரியதிருமலைநம்பி, * கானமும்வானரமும் வேடுமுடைய திருவேங்கடமுடையானை * அடிக்கீழமர்ந்து ஸேவித்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க; அவருடன் பிறந்த பெண்பிள்ளைகள் ஸ்ரீபூமிப்பிராட்டியாரென்றும் பெரியபிராட்டியாரென்றும் பேரையுடைய இருவரிலே, மூத்த பூமிப்பிராட்டியார், ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸூரிஸர்வக்ரதுகேஶவதீக்ஷிதர்க்கு வாழ்க்கைப்பட்டார்; இளையபிராட்டியார், நிரந்தரவகரத்திலே கமலநயநபட்டருக்கு வட்டமணிக்குலத்திலே வாழ்க்கைப்பட்டார்.

(இளையாழ்வார் திருவவதாரம்.)

இவர்களும் தந்தாம் புக்ககங்களிலே வாழுங்காலத்திலே; (யயாவதாரந்மயூராம்ரோ ராமஸ்யஸாகேதபுரீவயத்வத் - தயாயதீந்த்ரஸ்யஸதாமுபாஸ்யாபுண்யாமஹாபூதபுரீவபூவ) என்று-அந்தஸ்தலத்திலே, (ஶாரீரகமஹாபாஷ்யம்ரங்யகர்த்தாஜிதேந்த்ரிய:-வேதார்த்தவித்தமஸ்ஸஶ்வத்வைஷ்ணவோதேஶிகோத்தம: - அஸ்மிந் மஹாபூதபுரேஸவிஷ்யதிநஸம்ஶய: - தேநத்வயாஞ்சீதாவத்ஸஸ்ம்ஜீதிஸ்ஸாத்விகஶாயிநீ-ப்ரதிஷ்டாம் பரமாம்கீர்த்திம்மமிஷ்யதிமஹீதலே - தஸ்ய ஸம்வந்திநஶ்ஶிஷ்யாஸ்ஸஞ்சரணாமபிதர்மமம் - மாம்ப்ராப்யப்ராப்தநிர்வாணாஸ்ஸமிஷ்யந்திகலௌயுகே) என்றும், (அநந்தப்ரயமம்ரூபம் லக்ஷ்மணஶ்சததப்பரம் - [illegible] ஸ்து கலௌகஶ்சித்பவிஷ்யதி) என்றும் இதிஹாஸதீவசநத்தின்படியே - திருவவதாரஸ்தலங்களோடே விகல்பிக்கும்படியான பெருமையையுடைய ஸ்ரீமந்மஹா

பூதபுரியிலே; ஆஸூரிகேசவப்பெருமாள் என்கிறவர், (க)மாதவமாஸத்திலேமயிலாபுரியில்கைரவிணீதீரத்திலே, மஹதாஹ்வயருடைய அபிமாநஸ்தலத்திலே, (அஹம்ஹிஸர்வயஜ்ஞாநாம் போக்தாசப்ரபுரேவச) என்றும், (யஜ்ஞைர்வபரோயர்மோக்ஷமவத்ப்ரீதிகாரக:। அபீஷ்டகர்மப்ரும்யஜ்ஞஸ்தஸ்மாத்யஜ்ஞபராமதி: - இதிதஸ்மாத்ப்ரஜாஸ்ஸர்வா: குர்யுஸ்ஸங்கவிவர்ஜிதா: - யஜ்ஞைப்ரீதோஹரிஸ்ஸர்வம்அபீஷ்டஞ்ப்ரயச்சதி) என்றும்சொல்லுகிறபடியே-அவன் அபீஷ்டத்தைக்கொடுக்குமவனாகையாலே, அப்படியே, * பார்த்தன்றன் தேர்முன் நின்றானாய், "அன்றவர்தெய்வத்தேரினிற்செப்பிய கீதை" என்னும்படி உபதேசித்தருளின கீதோபநிஷதாசார்யனானராமாநுஜன்ஸந்நிதியிலே, புத்ரார்த்தியாய்அவனையுத்தேஶித்து யஜ்ஞம்பண்ண; (நநுராமாவரஜஸ்ஸ ஏஷபூய:) என்கிறபடியே-அவனே * கீதையின் செம்மைப்பொருள்தெரியப் பாரினிற்சொன்ன விராமாநுசனாகவும்; அதுக்குமேலே, * பரதனும் தம்பி சத்துருக்கனனு மிலக்குமனோடு மைதிலியும் இரவுநன்பகலும் துதிசெய்யநின்ற விராவணாந்தக னெழுந்தருளியிருக்கையாலே, அங்கே நித்யஸேவைபண்ணுகிற (உ) இராமாநுசர்கள் மூவரும் மேஷமாஸத்தில் புஷ்யாஶ்லேஷங்களிலே (ந) க்ரதுபலமாக முன்பவதரித்தாப்போலே, (பத்யுஃபங்கஜவாஸிந்யா:ப்ரேஷணாத்ப்ரீதிவீதலே-அஹீநாமீஶ்வரஶ்ஸ்ரீமாநாஸீத்ராமாநுஜோமுநி:- சைத்ரேமாஸிமதேஸ்ம்யமார்த்ராயாம்ஸமஜாயத-ஸஹஸ்ரமூர்யாவிஶ்வாத்மாஶேஷஸ்தஸ்மிந்ஸமாவிஶத்-ஶேஷோவாஸைந்யநாயோவா ஸ்ரீபதிர்வேதிஸாத்விகை:, கல்யப்தேதிவ்யகும்பேபஞ்ஜநவிதேவத்ஸரேபிங்களாவ்யே சைத்ரேமாஸேமதேஷஷ்வியுதமஶதிநேஷ்வேயமாநேஹிமாம்ஶௌ-பஞ்சம்யார்த்ராஸமேதே ஸுரகுருதிவஸேகர்க்கடாக்யேவலக்நே ஸ்ரீமாந்ராமாநுஜார்யஸ்ஸமஜநிமஹாஜார்யஸம்ரக்ஷணார்யம்) என்று சொல்லுகிறபடியே - கலியுகம்பிறந்து நாலாயிரத் தொருநூற்றுப் பதினெட்டு வர்ஷத்துக்குப்பின்பு, பிங்களவர்ஷம் சித்திரைமாஸம் ஶுக்லபக்ஷத்தில்பஞ்சமி குருவாரம் திருவாதிரையிலே ஶுபமுஹூர்த்தத்திலே கர்க்கடலக்நத்திலே துளஸீவநத்திலே * நெடுங்காலமும் கண்ணன்நீண்மலர்ப்பாதம் பரவுகையாலே, "வெறிகொள் துழாய் மலர்நாறும்" என்னும்படிபுண்யகந்தவாஸிதாநந்தகிகந்தராளராய், உதயபர்வதத்தினருகே கனைகடலிலே ஆதித்யனுதிக்குமாப்போலே, இவரும், * நீர்வண்ணன் நீர்மலையருகானதாய் பெரிய ஏரியையுடைய பெரும்பூதூரிலே, * ஸ்ரீமானான ராமாநுஜதிவாகரனும், (ஆவிர்பூதம் மஹாத்மநா) என்று சொல்லுகிறபடியே-ஸ்ரீபூமிப்பிராட்டியார்திருவுதரத்திலே தோன்றியருளினார்.—அநந்தரம், பெரியதிருவடியும், இவருடைய நியமநத்தின்படியே, அவ்வர்ஷம் தைமாஸம் பூர்ணசந்த்ர

(க) மாதவமாஸம் - வையாசிமாஸம். (உ) இராமாநுசர்கள் மூவர் - பரதன், சத்துருக்நன், இளையபெருமாள். (ந) க்ரது - யாகம்.

வாஸரம் புனர்பூசத்திலே, (விநதாபதமேஶ்வரம்) என்றும் சொல்லுகிறபடியே-பெரியபிராட்டியார் திருவுதரத்திலே அவதரித்தருளினார்.

(ஜாதகர்மம் நடத்தினது.)

(ஆர்த்ராயாம்ஸமஜநிவைத்ரமாஸிதஸ்மாதார்த்ராத்மாவஹ்னக்ஷீபாரஸேநகஶ்சித்-ஸம்க்ராதும்ஜநமவிலம்விஹாரஹங்ம்யாஸாக்ஷாத்ஸ்ரீதீபிதமஸ்யதிவ்யஸூரி:) என்று அவதாரவிஶேஷமாக அவதரித்தவிது தான், * தேவகிபூர்வஸந்த்யையில் அச்யுதபாநு ராவிர்ப்பவித்தருளினாப்போலேயாய்த்து. இப்படி நிரவதிகதேஜஸ்ஸோடே அவதரித்து, (கௌஸல்யாஶுஶுபேதேநபுத்ரேணாமிததேஜஸா) என்னும்படி *தாயைக்குடல் விளக்கம்செய்து, யதார்த்தநாமமாக காந்திமதியாக்க;(ஜாதேகுமாரேஜநகஸ்ஸவேலஸ் ஸ்நாத்வாதடாகாதிஷு-ஜாதகர்மகுர்யாத்பிஶோர்நாபிவிகர்த்தநாத்ப்ராக் ஹேம்நைவநாந்தீமுவமத்ரஶஸ்தம்,) (ஜாதமாத்ரேகுமாரஸ்யஜாதகர்மவிதீயதே - ஸ்தந்யப்ராஶநாத்பூர்வம்நாபிகர்த்தநதோபிவா॥ஜந்மநோநந்தரம்கார்யம்ஜாதகர்மயதாவிதி - தைவாதீதகாலஶ்சேததீதேஸூதகேஹவேத்) என்று சொல்லுகிறபடியே - * விண்ணின்தலைநின்று மண்ணின்தலத்துதித்தவர்க்குப்பிதாவானவர் ஸசேலஸ்நாநபூர்வகமாக ஜாதகர்மத்தையும் பண்ணி, அநந்தரம், அநேக வ்ரீஹிதாநங்களும் ஸ்வர்ணதாநங்களும் பூதாநங்களும் கோதாநங்களும்பண்ணி உபலாளிக்க; அநந்தரம், பூமிப்பிராட்டியாரும் மனம்மகிழ்ந்து * வனமுலைகள்சோர்ந்துபாயக்கொடுத்து, புத்ராநநாவலோகநம்பண்ணிக்கொண்டிருக்க, * கேசவநம்பி பிறந்தனில் எண்ணெய்சுண்ணமெதிரெதிர் தூவினாப்போலே, அங்கிருக்கிற கேசவநம்பியான எம்பெருமானும், வைதிகோத்தமரான இவரவதாரத்துக்கு அநுகுணமாக, அங்குண்டான * கேசவன்தமரான வைதிகரைக்கொண்டு தம்முடைய திருமுற்றமெங்கும் ஸ்நேஹப்ரீவாஹமாக ஸம்ப்ரமத்துடனே ஸம்பவோத்ஸவத்தை நடத்துவித்து, அநந்தரம், (ஜாதஸ்யபஞ்சமதிநேஸுஶுபேமுஹூர்த்தே பஞ்சாயுதாபரணமிஷ்டமதீவஹாஹூ:) என்னும்படி பஞ்சாயுதாம்ஶாவதாரமான இவர்க்கு பஞ்சாயுதாபரணத்தையும் பாலபரிபாலநார்த்தமாக தரிப்பித்தருளினார்.

(நாமகரணம்.)

இச்சேதியைத்திருமலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்துபோகவிட, அவரும் இத்தைக்கேட்டு, ஸ்ரீபெரும்பூதூரேறவெழுந்தருளி, ஸர்வக்ரது கேஶவஸோமயாஜியாரையும் ஸத்கரித்து, அவர்புத்ரனையும் முகவொளிதிகழக்கடாக்ஷித்து, "இவன் ஹஸ்ராகாரன், (ஸர்வலக்ஷணஸம்பந்நோலக்ஷ்மணோலக்ஷ்மிவர்தந:) என்கிறபடியே - ஸகலஶாஸ்த்ரங்களையும் அதிகரிக்குமாகையாலே, (* தத்தஸ்யஸத்ருஶம்

ஹவேத்) என்று சொல்லுகிறபடியே-இளையபெருமாள் திருநாமத்துக்குத்தகுதியாக "இளையாழ்வா ரென்று திருநாமஞ்சாத்தவேணும்", என்றும், (அஷ்டாதஶாஹேவிமதேதஶாஹேஸ்யாத்வாதஶாஹேப்யயமாஸிவர்ஷே। வம்ஶாநுகூலேதிவஸேஶுபாஹே புத்ரஸ்யகுர்யாதயநாமகர்ம॥யும்மாக்ஷரம் வோஷபதாதிமய்யம் அஜஸ்யதீர்கம் ஸவிஸர்ஜநாஜும்। ஸந்நாமதேவர்ஷிமஶ்ரோஶ்வபித்ரோர்நாமாநிவாஸத்யுபஸர்மயும்வா) என்றுசொல்லுகிறபடியே-பன்னிரண்டாம்திவஸத்திலே நாமகரணோத்ஸவம் பண்ணுவிக்கிற திருமலைநம்பியும், இவருடைய புத்ராருடையதக்ஷிணதக்ஷிண புஜங்களிலே, விலக்ஷணமான சங்கசக்ரங்களையும்ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமென்று கேசவஸோமயாஜியாரைக்கொண்டுபண்ணுவித்து; அநந்தரம், இளையாழ்வார் என்றுதிருநாமம்சாத்தியருளினார்.— அநந்தரம், ஸ்ரீபெரும்பூதூருக்கு ஆஸந்நமாக, அதுக்குமேலைத்திருவீதி என்னலாம்படியாயிருக்கிற நிரந்தரவகாரத்திலேயெழுந்தருளி, பெரியபிராட்டியார்புத்ரனையும் இளையாழ்வாரைப் போலே தன் * தாமரைக்கண்களால்நோக்கி; (ஆஜிஷ்ரந்மூர்த்நிஸஸ்நேஹம்) என்று உச்சியைமோந்து, "இவன் (அநஸூயாக்ஷமாஶாந்திஸ்ஸந்தோஷப்ரியவாதிதா।காமக்ரோதபரித்யாகஶ்ஶிஷ்டாசாரஸ்யலக்ஷணம்) என்று சொல்லுகிறபடியே - ஆத்மகுணங்களை உடையனும், வைதிகபக்ஷவானும்" என்று திருவுள்ளம்பற்றி, "கோவிந்தர்" என்று திருநாமஞ்சாத்தியருளினார். அநந்தரம், சிலநாள்கழிந்தவாறே பெரியபிராட்டியாருக்கு த்விதீயபுத்ரனுண்டாக, திருமலைநம்பியும், க்ருஷ்ணப்ரேமாதிஶயத்தாலே, அவருக்கு "சிறியகோவிந்தர்" என்று திருநாமம் ப்ரஸாதித்தருளினார்.

ஸூர்யதர்சநம் முதலானவை.

இப்படி ஆதரணீயரான இளையாழ்வாரை * வண்ணச்சிறுத்தொட்டிலிலே கண்ணுக்கினிதாகக் கண்டுகொண்டிருந்து, "அத்திரிசூழ் ஞாலமநந்தாவதாரமெனச் - சித்திரையிலாதிரைநாள் வந்துதித்ததேசிகனே - கேசவனார்வாழக்கிளைவாழக்கீர்த்தியிரும் - ஆசூரிவந்துதித்தவாரியனைச்சொன்னாரார்" என்றுதாலாட்டிச் சீராட்டிக்கொண்டு "செங்கண்மால்கேசவன் தன்திருநீர்முகத்துத்துலங்குசுட்டி" என்னும்படி கேசவசிசுவினுடைய சுட்டியையும்முகத்தையும் த்ருஷ்டிகளாலே கண்டுஉபலாளிக்க; அவ்வளவிலே, அழகியநங்கையார்க் கொத்திருப்பாராயிருக்கிற யஜ்ஞபத்நிகளான நங்கைமார்வந்து இவரைக்கண்டுகளித்து எடுத்துக்கொண்டு உபலாளிக்க; அநந்தரம், (ஶிஶோர்நிஹ்ராந்நிஷ்க்ரமணம்சதுர்த்தே மாஸிப்ரஶஸ்தம் ஶுபவாஸரேஸ்யாத் । ப்ரத்ரீக்ஷ்யஸூர்யம் ஶஶிநம்ஹரிஞ்ச்ம்ராமாயிநாயம்தத்தவவநீத்வா॥ ம்ஹாணி மாதாமஹ மாதுலாநாம் ததஸ்ததாநீம் நிவேஶ்யேத்ஹேஸ்வே) என்றுசொல்லுகிறபடியே-நாலாம்மாஸத்திலே ஆதித்யதர்ஶநம்சந்த்ரதர்ஶநம் முதலானவற்றையும் பண்ணுவித்து, (கார்த்திகேமாஸி

பௌஷேவா வைத்ரேவா ஷால்மஷ்நேபிவா।கர்ணவேயம் ப்ரஶம்ஸந்தி ஶுக்லபக்ஷேஶுபேஹநி॥ஶிஶோராஜாதஷநஸ்யமாதுருத்ஸங்கஸர்ப்பிணஃ। ஸூசிகோவேயயேத்கர்ணம் ஸூச்யாத்விமுணஸூத்ரயா) என்று சொல்லுகிறபடியே-"கேசவநம்பியுன்னைக்காதுகுத்த" என்னும்படி * வார்காது தாழப்பெருக்கி அமைத்துப்போர ;

—:※:—

அந்நப்ராசநமும், ஆண்டுநிறைவும், சௌளமும்.

அநந்தரம், (ஷஷ்டேஷ்டமேமாஸிஸவேத்ஸுதஸ்யஜாதேஷுஷ்ஷேஷ்வயவத்ஸரேஷு। ஆஜ்யோதநப்ராஶ நமஸ்யமாதா ஸ்வாங்கே ஸமாரோப்ய ஹிரண்யபாத்ரே॥ வ்ருதேநதத்நாபயஸாக்தமந்நம் ஸமந்த்ரகம் ப்ராஶயதேகுமாரம்) (அந்நப்ராஶநமாதித்யம்விவாஹம் வாஸ்துகர்மச। ராத்ராவேவாநிஶம்குர்யாத் ஶேஷாண்யஹநிகாரயேத்) என்றும் சொல்லுகிறபடியே - ஆறும்மாஸத்திலே அந்நப்ராஶநமும் பண்ணுவித்து, மேல் ஆறுமாஸம் சென்றவளவிலே நாற்றிருபதாண்டுக்கடியான ஆண்டுநிறைவுகல்யாணமும் வேண்டினபடி உபலாளிக்க ; அநந்தரம், இளையாழ்வாரும், * தன்முகத்துச்சுட்டி தூங்கத் தூங்கவிளையாடிக்கொண்டிருக்கிற விவரையெல்லாரும்கண்டுகளித்து உபலாளிக்க; அநந்தரம், சிலநாள் கழிந்தபின்பு, (குரோதிசௌளம் ப்ரதமேத்ருதீயேவர்ஷேயவா ப்ராமுபநீதகாலே।ஶிஶோஸ்துமாதாயதிகர்ஹிணீஸ்யாத் நபஞ்சமாத்ப்ராக்பரதோநதோஷஃ) என்றும் (ஜந்மநோப்ருதீயேவர்ஷே) என்றும் சொல்லுகிறபடியே - மூன்றும் வர்ஷத்திலே சௌளகர்மத்தையும் பஹுவாதரத்துடனே செய்வித்து உபலாளிக்க ; அப்போது, இளையாழ்வாரும், பொற்பூவாலே அலங்க்ருதமான பிற்பக்கத்திலே சிறுகுடுமியும், * கழுத்தினிற்காறையும், பின்னில்தூலங்குமாசிலையும் பீதகச்சிற்றுடையும், * பொன்னரைநாணொடு மாணிக்கக்கிண்கிணியுமான ஆகாரத்துடனே மண்டிதராய், தமக்கு இணையாயிருக்கிற * தன்னேராயிரம் பிள்ளைகளான வைதிக புத்ரர்களுடனே, (பாலா அபிக்ரீடமாநாஃ ம்ருஹத்வாரேஷுஸம்பஶஃ। ராமாஹிஷவஸம்யுக்தாஶ்சக்ருரேவம்மியஃகயாஃ) என்றும், (பாலக்ரீடநகைஃக்ரீடந் க்ருஷ்ணக்ரீடாம்ய ஆதஷே) என்றும்-பகவல்லீலாநுகாரிகளாய், "கேசவா" என்னும்படிபேசுவது, "கேசவனேயிங்கேபோதராய்" என்று எழுந்தருளப்பண்ணுவது, "கேசவநம்பியைக்கால்பிடிப்பாள்" என்று திருவடித்தொழுவது, "சேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லால்மற்றும்கேட்பரோ" என்று. இப்படிகேசவன்தமராய், * கேசவனெம்பெருமானைப் பாட்டாயபலபாடி * இன்புறுமிவ்விளையாட்டுக்களாலே எல்லாரையும் ஆநந்திப்பித்துக்கொண்டு, அதுக்குமேலே, "பொன்னிவர்மேனி" என்னும்படியான வடிவழகாலும் நடையழகாலும், கௌமுதீசந்த்ரனைப்போலே, கண்டவர்களைக் கண்குளிரப்பண்ணிக்கொண்டுவளர்ந்து செல்லாநிற்க ; இப்படி (ராஜவத்பஞ்சவர்ஷாணி)

என்னும்படிபோஷித்துக்கொண்டுபோந்து; அநந்தரம் (அ இதிப்ரஹ்ம) என்றும் (அக்ஷராணாமகாரோஸ்மி) என்றும்ப்ரதிபாதிக்கிற ஶப்தங்களுக்கெல்லாம், "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்னும்படி அகாராத்யக்ஷரஶிக்ஷை பண்ணுவிப்பதாக மண்ணளந்த பெருமாள்கோயிலிலேயுபக்ரமித்து, அக்ஷரஶிக்ஷகனிடத்திலேவைக்க, அந்த * மண்ணையிருந்துதுழாவி "சங்குசக்கரம்தண்டுவாள்வில்லுமல்லதிழைக்கலுறுள்" என்னும்படி அதிலேயிவரும் தக்ஷராய், * தெரிந்தெழுதிவாசித்துத் திருந்தினவநந்தரம் ;

—:※:—

உபநயநம்.

(கர்பாஷ்டமேப்தேவ்ரதபந்தநம்ஸ்யாத் விப்ரஸ்யகுர்யாதஷ்டவாஷ்டமேப்தே।வ்ரதக்ஷயோபஞ்சமஷஷ்டயோர்வாஸ்யாதேதஹந்தம்ஹிகபர்ஷிமுக்யைஃ॥ விப்ரம்வஸந்தேக்ஷிதிபம்நிதாகே வைஶ்யம்வநாந்தேவ்ரதிநம் விதத்யாத்।ஆஷோடஶாப்தாநுப நீதகாலோ வ்ருத்யாதஷ்ர்யிவம்ஸவதித்விஜந்மா) என்றும், (கர்பாஷ்டமேஷு ப்ராஹ்மணமுபநயீத) என்றும்-கர்ப்பாஷ்டமத்திலேதானே உபநயநகர்மத்தையும் சீரியதாக உபலாளிக்க ; இளையாழ்வாரும், * பொங்கிலங்கு புரிநூலும் தோலுமானவடிவும், வடிவான ஆகாரத்துக்கு அநுகுணமாக கௌபீநகடிஸூத்ரமும், முஞ்சியாலே அஞ்சிதமான அரையும், பாலாஶதண்டமண்டிதகரமும், புண்ட்ரகுண்டல மண்டித முகமுமாய் விளங்காநிற்கிறவிவரை, எல்லாரும் கண்டு களித்து உபலாளிக்க ; பின்பு ப்ரதமோபாகர்மம்நிறைவேறினவநந்தரம், (ஸ்வாத்யாயோத்யேதவ்யஃ) என்று விதிக்கிறக்ரமத்திலே வேதாத்யயநம் ஆரம்பித்து நடத்த ; (ப்ராஹ்மாயீத்யஸ்விஸ்தரம்) என்று-க்ருஷ்ணன் ஸாந்தீபிநிபக்கலிலே அல்பகாலத்திலே அதிவிஸ்தரமானவேதத்தை அதிகரித்தாப்போலே, இவரும், ஸாங்கோபாங்கமாக, சதுர்வேதத்தையும், "சுருதிகள்நான்குமெல்லையில்லாவறநெறியாவுந்தெரிந்தவன்" என்னும்படி திருத்தமப்பனார்ஸந்நிதியிலே அதிகரித்து, (ஸர்வேவேதாயத்பதமாமநந்தி,) (யத்ரைகம்பவந்தி) (வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யஃ) என்று-எல்லாம் பகவத்ப்ரதிபாதகமாகையாலே அநவரதம் ஆவர்த்திபண்ணிக்கொண்டு ஸமிதாதாநாதிகள்தொடக்கமானப்ரஹ்மசர்யவ்ரதத்திலேநிரதராய்நிற்க ;

—:※:—

திருக்கல்யாணம்.

பின்பு, பிதாவானவர், ஷோடஶவார்ஷிகரானவளவிலே, ஸதாராம்பதி ஸங்கல்பித்து, கோதாநவ்ரத ஸமாவர்த்தந பூர்வகமாகஇவருக்கு ஸத்ருஶமான ஸ்தலத்திலே ஸம்பந்தமாம்படி உத்வாஹகர்மத்தையும் நிறைவேற்ற ; பின்பு, இளையாழ்வாரும், வஸ்த்ரயுக்ம

வேஷ்டகத்துடன் அங்குலீயகாத்யாபரணசோபிதராய், (ஏராஸ்பித்ஜீ க்ஜீதா இதி)என்கிறப்ரீதியுடனே ஸபத்நீகராய்க்ரஹஸ்த்தாஸ்ரமத்திலே யிருந்துகொண்டு, (வர்ணாஸ்ரமாசாரவதா புருஷேணபரஃபுமாந் । விஷ்ணுராராய்யதேபந்யாநாந்யஸ்தத் தோஷகாரக:) என்றுசொல்லுகிறபடியே — * வேள்வி யைந்திலும் ஏதமில்லாதவராய், அக்நிகார்யமான ஔபாஸநம் அதிதிஸத்காரம்தொடக்கமானவற்றையும் நடத்திக்கொண்டு போராநிற்க ;

—✻—

திருக்கச்சிநம்பி, பேரருளாளருக்கு அந்தரங்ககைங்கர்யம் செய்துகொண்டிருந்தது.

அக்காலத்திலே, ஸஹஜதாஸ்யத்தையுடையராய் பூவிருந்தவல்லி வேந்தனை திருக்கச்சிநம்பியும், பூவிருந்தவல்லியிலும், பெருந்தேவியார் நாயகனை பேரருளாளரை ஸேவிக்க வெழுந்தருளுகிறவர், பலகாலும் ஸ்ரீபெரும்பூதூர்வழியாக எழுந்தருளுவர்; அத்தைக்கண்டு இளையாழ்வாரும், திருக்கச்சிநம்பியை "ஒருராத்ரி இங்கே வஸிக்க வேணும்" என்ன ; அவரும் அப்படியேசெய்து, இவரிடத்திலே தீர்த்தஸ்வீகாரம்பண்ணிப்போக;அன்றுதொடங்கி அந்யோந்யம் ப்ரேமம்நடவாநிற்கும்; அவருடையபக்தியடியாக இளையாழ்வாரும்அவரை மிகவும் பக்திபண்ணிக்கொண்டுபோருவர் ; அக்காலத்திலே, நம்பியும் பெருமாள்நியமநத்தின்படியே ஸதாசார்யஸமாஸ்ரயணத்திலே ஸாதரராய்க்கொண்டு பெரியகோயிலேற வெழுந்தருளி,பெரியநம்பிபுருஷகாரமாகப் பெரியமுதலியாரைத் திருவடித்தொழுது, தம் அபேக்ஷிதங்களை ஆவிஷ்கரிக்க ; அவரும், அப்படியே விசேஷகடாக்ஷம் பண்ணியருளி அங்கீகரித்து அசேஷரஹஸ்யங்களையும் அவர்ப்ரஸாதித்தருளக்கேட்டு க்ருதார்த்தராய், "திருக்கச்சிநம்பிதொழும் சீருடையோன்வாழி"என்னும்படிபெரியநம்பிதிருமாளிகையிலேநித்யஸேவை பண்ணிக்கொண்டு போருகிறவர், "பெரியநம்பி ஒருநாள் நம்மை 'அளியனம்பையல்' என்று அபிமாநித்த வன்றுய்ந்து நம்ஸ்வரூபஸித்தியுள்ளது" என்றறுதியிட்டு, அவரபிமாநத்தை அபேக்ஷித்துக்கொண்டிருக்க ; அவரும், ஒருநாள் இவரைக்காணமல், "நம்முடைய திருக்கச்சிநம்பிதாஸர் எங்கே?" என்று தேடியருள ; இத்தைச்சிலர் அவர்க்கப்படியே அறிவிக்க ; அவரும் இதைக்கேட்டு, "அடியானிவனென்றெனக்காரருள் செய்யும் நெடியான்" என்று அத்யந்தஹ்ருஷ்டராய், அங்கு நின்றும் புறப்பட்டு உத்தரவேதியிலே உதிதரான ஹஸ்திகிரிநாதனுக்கு, (பார்ஸ்வேஹரதஸத்ருஸ்நௌ .தாலவ்ருந்தவிவேஜிது:) என்னும்படி ஆலவட்டமுங்கையுமாய் அநவரதம் அந்தரங்ககைங்கர்யம் செய்துகொண்டு போருகை. பெருமாளுக்கு அத்யந்தம் ப்ரீதிவிஷய ...பேசி, "வரந்தரு ...ருமாள்

என்னும்படியான பெருமாளும் அதிதார்ச்சாவ்யவஸ்த்தராய் இவருடனே வாசாமகோசரமாக வார்த்தையருளிச்செய்ய ; இப்படி அலவலையான அழகியவரதரை, நம்பியும் ஏகாந்தத்திலே "அடியேனுக்கு ஆத்மதாஸ்யமாயிருப்பதொரு தாஸ்யநாமம் ப்ரஸாதித்தருளவேணும்" என்ன ; * ஒரு வாரணம் பணிகொண்டவனை வாரணாசலபதியும், வாரணபதியானவவரிடத்தில் க்ருபைபின்னாட்டி, தந்நாமத்தாலேஸ்ரீகஜேந்த்ரதாஸர்என்றுதிருநாமம்ப்ரஸாதித்தருளினார்.

—✻—

உடையவர் பெருமாள்கோவிலில் எழுந்தருளியிருக்கும்போது, திருமருமகன்மார் அவதரித்தது.

இப்படிஅந்தரங்கராய் அங்குத்தைக்கு அடிமைசெய்துகொண்டு போருகிறவக்காலத்திலே, இளையாழ்வாரும் ஹஸ்திகிரியிலேசென்று, உத்தரவேதிநாதனைத் திருவடித்தொழுது, அங்கே நித்யவாஸம்பண்ணுவதாக, தமக்கிஷ்டமான பட்டர்கள் வீதியிலே கிழைச்சிறகிலே வடக்கடைய ஒரு திருமாளிகையை யுண்டாக்கிக்கொண்டு ஸபத்நீகராய் க்ரஹஸ்த்தாஸ்ரமத்திலே யெழுந்தருளியிருக்கிற வக்காலத்திலே; (ஸௌமிகமலாஹ்யாநே புண்யே ராமாநுஜஸ்யஸஹஜேஷ்வே। தத்தாஷ்ஜேஸாவஸுதாஸ புத்ரௌதாஸரதிவரதவிஷ்ண்வார்யௌ) என்றும், "ஆசூரிப்பெருமானென்றுமவ ரெதிராசர்க்கநுசர் கேசவப்பெருமாளவர் குமாரர் - பூசுரர்கோன் பெம்மானு மிளையாழ்வாரும் பூமியுடன் கமலையுடன் புதல்விமாரும் - பேசுமெதிராசர்க்குப் பின்பிறந்தபூமியென்பாளுயர்கந்தாடை|- யாசிரியனனந்தனார்னருளினாலே முதலியாண்டானென்றுள்" என்னும்படி இளையாழ்வாருக்கு பாகிநேயராய்க்கொண்டு, தாஸரதி வரதவிஷ்ணவார்வர்களாகிற புருஷஸ்ரேஷ்டர்களும், ஸ்ரீபுருஷமங்களாதிகளிலே அவதரித்துப் பரிணமித்துக்கொண்டுபோந்தார்கள்.

—✻—

முதலியாண்டான் கூரத்தாழ்வான் இவர்கள்திருவவதாரம்.

அவர்களிலே, முதலியாண்டான், (ஸ்வர்பீயாஸஸரத்மநௌ கலியுகே ஸம்வத்ஸரே ஸ்ரீமுகே வெத்ரேமாஸிஸிதத்யுதாவுபஜீதாவஷ்டாதஸேவாஹநி । ஷஷ்ட்யாமிந்துஜிநே ரவௌப்ரவரஹே வாயூல வம்ஸ்யாம்ரணீ: ஜஜ்ஞேதாஸரதிர்ஹி யஸ்யமஹிதோ ராமாநுஜோமாதுல:)என்று அவதரித்துப் போரப்பொலிந்தருளினார்.—அப்படியே, *கூரியமெய்ஞ்ஞானத்தையுடையரான கூரத்தாழ்வானும்,ஹாரீதகுலதிலகராய், அவர்பிதாவானவர், யாகம்பண்ணுகையாலே ஸ்ரீராமநாமஸோமயாஜியானவர்ஸூநுவாய், ஸ்ரீவத்ஸாத்மகராய், (கல்யப்தே கலிபாவகே மகாமே ஸுர்யேவஸக்லோத்தரே வர்ஷேஹாநுதீய

வாஸரவரேபக்ஷேவஸஙக்லோத்தமேபஞம்யாம்கரிஸைலகேதுரநவே நக்ஷத்ரவர்யேவ்யயஃ ஸ்ரீவத்ஸாம்கஸ்ரீவாதராஜஸஸ ஸூலோகபுண்யோதயஃ) என்கிறபடியே - கூரத்திலே அவதரித்துப் போரப்பொலிந்தருளினர்.

—❧❧✵❧❧—

"ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" என்கிறச்ருதிக்கு யாதவப்ரகாசன் அபார்த்தம்பண்ணினதும் அதற்கு உடையவரருளிச் செய்த நிர்வாஹமும்.

அநந்தரம், இளையாழ்வாரும், பெருமாள்கோயில்ஸமீபத்திலே யாதவப்ரகாஸன் என்பானொருவன் ஏகதண்டி வேதாந்த வ்யாக்யாநம் பண்ணுகிறானென்றுகேட்டு, இவரும் அங்கேசென்று அவன் பக்கல் மேதாவிகளோடு ஸஹாத்யாயிகளாய்க்கொண்டு படிக்கிற சேதியைகோவிந்தர் கேட்டு, (ஸர்ப்பம்நஸ்ஸமீஹிதம்) என்று, நமக்கு ஜ்யேஷ்டப்ராதாவான இளையாழ்வாரோட்டைஸம்பந்தமுண்டென்று பேராசையோடேவந்து வாசிக்கத்தொடங்கினர். அநந்தரம், யாதவப்ரகாஸன்வ்யாக்யாநவேளையிலே ; (ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம) என்கிற வாக்யத்துக்கு ("ஷண்டோமுண்டஃ. பூர்ணஶ்ருங்கோகௌஃ) என்று கண்டத்வ முண்டத்வ பூர்ணஶ்ருங்கத்வமாகிற விஶேஷணங்கள் ஒருகோவ்யக்தியிலே கூடிநிற்குமாபோலே ப்ரஹ்மத்துக்கும் இவ்விஶேஷணங்கள் கூடுவது" என்று யாதவப்ரகாஸன் அபார்த்தப்ரதிபாதகம்பண்ண ; இத்தை இளையாழ்வார் நிரோதித்து ; ஸத்யபதத்தாலே - க்ஷணிகவ்யாவ்ருத்தியும், ஜ்ஞாநபதத்தாலே - அசித்வ்யாவ்ருத்தியும், அநந்தபதத்தாலே-பரிச்சிந்நவ்யாவ்ருத்தியும் பண்ணி, "சேதநாசேதந விலக்ஷணமுமாய் நித்யமுமாயிருக்கும் ப்ரஹ்மம்" என்று இளையாழ்வார் ப்ரதிபாதிக்க; யாதவப்ரகாஸன் அத்தைக் கேட்டு ஹூங்காரம்பண்ணினன்.

—❧❧✵❧❧—

"தஸ்யயதாகப்யாஸம்" என்கிறச்ருதிப்ரசம்ஸை.

அதுவுமன்றியே, இளையாழ்வார் கோவிந்தபட்டரை ஸ்வாதீநமாகக்கொண்டு சிந்தனைபண்ணுவிக்கிறதும் குறுமாகாநிற்க, ஒருநாள் இளையாழ்வார் யாதவப்ரகாசனுக்கு அப்யஞ்ஜநத்தொழில்செய்யாநிற்க, அவ்வளவிலே, (தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிற வாக்யத்துக்கு அவன் அநுசிதார்த்தம் சொல்ல, அதுகேட்டு ஶோகாஸ்ருவிழுந்து அவன்தொடைவேக, அவன் இவர்முகம் பார்த்து, "துக்கமாவானென்?" என்ன ; இளையாழ்வாரும், (ஸர்வமேபித்வர்புகர்வர்ஷே ஸ்ஜிஜத்யம்ஸமதஃகராஃஜலாநிகதிவித்) என்றும் (ஸ்ருதக்ரமதீர்மோக்ஷார்த்மேவர்ஷார்யேதுமாதத்ரயம்) உதும்

ஶாதஜுவர்மேஸ்யாத்) என்றும் (கம்பிவநிதிகபி:) என்று-ஸூர்யனை (ஆஸஉபவேஸே) என்று - ஸமாஶ்ரயத்தையுடைத்தான கமலமென்று இத்யாதிசொல்லலாயிருக்க, அபார்த்தம்கேட்டவாறே" என்ன ; அதுகேட்டு யாதவனும் குபிதனாய், "நான்சொன்னபடி கேட்கில் வாசித்திரும், அல்லாவிடில் விட்டுப்போம்" என்ன ; இவரும் அப்படியே விட்டிருக்க ; உடனே தன்னுடைய ஶிஷ்யர்களிலே அநுகூலரையழைத்து, "நீங்கள் நான் சொன்ன அர்த்தத்தை ஸம்மதித்திருக்க, இளையாழ்வாரொருவருமே நம்மோடேயெதிர்த்தட்டாக ஆக்ஷேபியாநின்றார், இவராலே நம்முடைய அத்வைதரீதி குலையும், இவர்முடியும் விரகென்?" என்ன; அவர்களும், பலபடி படும்வண்ணம் சொல்ல ; "அவ்வோவழிகளுக்குப் பழி பாவங்களுண்டாம், அவை வாராமல் நாம் நினைத்தபடியே கைகூடும் ; - மணிகர்ணிகையிலே ம்ருதியுண்டாக்குகையென்று என் அகவாயிலுற்றது" என்ன ;

—❧❧✵❧❧—

யாதவப்ரகாசன், இளையாழ்வாரைக்கொல்ல நினைத்து வடதேசத்துக்கு எழுந்தருளுவித்துக்கொண்டுசென்றது.

ஸர்வரும் ஐகமத்யம் பண்ணிக்கொண்டு, துர்யோதநன் தர்மபுத்ரவிஷயத்தில் ஜதுக்ருஹநிவாஸநம் பண்ணினாப்போலே, அந்தரங்கித்து, இளையாழ்வாரையழைத்து, "நீரில்லாவிடில் ஒரு சாயலாயிருந்தது, கோபியாமல் ஆரம்பித்தக்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்தும்" என்று நன்மையுரைத்து, உள்ளிட்டு, ஒருநாளாக கங்கையாத்ரையை உத்யோகித்துப் புறப்பட்டுப்போக ; நின்றநின்ற விடங்களிலே இளையாழ்வார் கோவிந்தபட்டருட்பட ஸச்சாத்ரகோடிகள் ஶுஶ்ரூஷிக்க, கங்கைக்கணித்தாக ஒருபயணத்திலே இளையாழ்வாருடைய அதிஶயமான ஸூக்திவிசேஷங்களைக்கேட்டு இவரிடத்திலே அஸூயைநடக்க,ததீயரும் அப்படியேகடிகடி என்றுவழிச்செல்லாநிற்க;விந்த்யப்ரதேசத்திலே ஒருபள்ளக்கரையிலே ஸ்ரீபாதம்விளக்குவதாகஇளையாழ்வாரும் கோவிந்தபட்டரும்கூடினவளவிலே,கோவிந்தபட்டர் விஜநஸமயமறிந்து, இவர்களுடைய கங்காயாத்ரா நிமித்தத்தை ஜ்யேஷ்டப்ராதாவுக்கு ஸூசிப்பித்துத் தாம் போந்தார்.

—❧❧✵❧❧—

அவன்கருத்தைப்பிழைப்பித்து மீண்ட இளையாழ்வாரை பெருமாளும் பிராட்டியும் வழிநடத்த கச்சிநகரேறவெழுந்தருளினது.

இளையாழ்வாரும், ஆப்தவசநத்தாலே விஶ்வஸ்தராய், ஆரண்யத்திலே அவர்களையகன்று, வழியைவிட்டுக்குறுக்கறுத்து, ஒருமரத்தடியிலே நின்று, (பதிவிஜநேவ்நேதபதிஶூர்யநி வர்மருவெள வரதரகண்டகே விமதவாரிணிஶார்க்கரிலே) என்றும் (அஸ்த்யாரண்யம்தர

ண்யமாஸாரண்யஜுர்பிபாஷபம் ஸூரீக்ஷத்தபரீரமஹரீஸுப்தஸரீஸ்ஸேபம்) என்றும் (ஸிமஹவ்யாக்ரஸரீஸ்ஸேபம்) என்றும் சொல்லப்படுகிற சிறந்தகாட்டிலே, * ஆவாரார்துணையென்று * பக்கம்நோக்கி * அலமர்ந்து * மதியெல்லாமுள்கலங்கி * அடியிடத்திமிர்கொண்டாலொத்திருக்க; ஸர்வேஶ்வரனும், (மத்வித்தாமத்மதப்ராணா:) என்றும், (யோமக்ஷேமவஹாம்யஹம்) என்றும், "அருள்தருவானமியான்" என்றும், "தனதன்பர்க்கன்பாகும்" என்றும், வேடனும்வேடுவிச்சியுமான வேஷத்துடனே*வாளும் வில்லுங்கொண்டு * இடர்கெடவிந்து தோன்றி ஸஹதர்மசாரிணியான பிராட்டியும், இவர்விடாயை யாற்றுகைக்காகத் தோற்றி, இவரைவினவி, "வாராய்! ப்ராஹ்மணா! * வழிதிகைத்தலமருகின்றவுமக்கு நல்வழிகாட்டுகிறோம் நாங்கள்" என்ன; இவரும் அவர்களைக்கண்டு கலக்கமற்று, "நீங்கள் எங்குநின்றும் வந்திகோள்? எங்கேறப்போகிறிகோள்?" என்று கேட்க; "உத்தரதேசஸித்தாஶ்ரமத்திலிநின்றும் வருகிறோம், ஸத்யவ்ரததேஶமேறப்போகிறோம்" என்ன; "ஆகில் நானும் உங்களுடனே புண்யகோடியேறவருவானாகநினைத்திராநின்றேன்" என்ன; நல்லதுஎன்று, அவர்கள் முன்னடியிட, இவரும் அவர்களைப் பின்செல்ல; அவர்கள் ஸ்வாதீநமான வழிநடத்த, விந்த்யம் பிற்காலித்தவாறே ஸாயங்காலமாக, காலோசிதமான கர்மாநுஷ்டாநங்களையும் செய்து, அவர்களுடனே உபவாஸித்து, (மலீமஸமிதமோஜமஹஶேஷமாவருஷதி) என்று சொல்லுகிறபடியே - தமோமயமான வளவிலே, முன்னடிதோன்றாமல், (பஞ்சவட்யாமயோராம:) என்கிறபடியே - ஒருவ்ர்க்ஷராஜனை ஆஶ்ரயித்து நீர்க்கரையிலே யிருந்தார்கள்.

—⁂—

தம்நிஜரூபத்தை மறைத்துவந்த பெருமாளுக்கும் பிராட்டிக்கும் சாலைக்கிணற்றில் தீர்த்தம் ஸமர்ப்பித்தது.

அநந்தரம், வ்யாதபத்நியானவள் நல்லதண்ணீர்மடுக்க ஆசைப்பட, அதுக்கு வ்யாதபுருஷனும், கிட்டவே பாநார்ஹக்கிணற்றிலே (மயூராநிர்மலஶீதளமம்பிவ) என்கிறபடியே - பருகுநீர் விடியக்காட்டுகிறோமென்ன; இளையாழ்வாரும், "ஐயோ! மஹோபகாரகரான விவர்களுக்கு லப்தமநோரதமாக்குகைக்கு அநபிஜ்ஞ தேஶமாய்விட்டதே!" என்றுகொண்டு மிகவும் நிர்விண்ணராகா நிற்க; பின்பு * கனவிருளகன்று * கீழ்வானம் வெள்ளென்று குளிர்காற்றுவீச, * அரிஅரியென்று பேரரவங்கொண்டு எழுந்திருந்து, சடக்கென காலீநகர்மத்தைமுடித்துக்கொண்டிருக்கிறவளவிலே; அந்த தம்பதிகளிருவரும் ஸமீபத்திலே ஒருகிணற்றங்கரையிலே அழைத்துக்கொண்டுபோய்விட்டு, இவரைப்பார்த்து, "தயாவானே!, தாஹித்தோம், இந்தக்கிணற்றிலேயிறங்கி உதகப்ரதாநம்பண்ணும்" என்ன; அவரும் அப்படியே அந்தக்கிணற்றிலேயிறங்கி இரண்டு திருக்கையாலும்மண்டித் திருமஞ்சநத்தைமொண்டு மூன்றுகை திருமஞ்சநம் ஸமர்ப்பிக்க; அவர்களும் மண்டியுண்டு உருக்காட்டாதே ஒளிக்க; இவரும் கரையேறிவழிநடத்துமவர்களைத் தேடிக்காணமல் ஸர்வதோதிக்கமாகக் கூப்பிட்டு, நாலடிதோன்றினவழியிலே நடந்துவந்து, * கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைய, ஜநபதங்கள் ஸ்பஷ்டமாக, "நேற்றுநின்றநிலைக்கு இப்படி ஒருவெளிநாடு கண்டதே!" என்று ஆஶ்சர்யயுக்தராய்நோக்க; அங்கே நாலிரண்டு பேர்வரக்கண்டு, "இவ்விடம் எவ்வூர்? எந்ததேசம்? எந்தஸ்தலம்?" என்ன; அவர்களும், "இதென்ன ப்ராஹ்மணா! புண்யகோடிவிமாநம் முன்னே நிற்க தெரியாதோ? இது சாலைக்கிணறன்றோ?" என்ன; இளையாழ்வாரும் "ஹா, ஹா" என்று தத்க்ஷணத்திலே கர்த்தவ்யதாமூடராய், (கிமாமதோஸ்மி) என்றும் (க்வாஹமத்யஜஹுர்வஹ்ய:) என்றும் (க்வவத்ஸலதா) என்றும் - அவர்களைப் பெருமாளும் பிராட்டியுமாக புத்திபண்ணி, (நியதபுளகிதாங்கீ நிர்ஜராநந்தபாஷ்பா) என்று பக்திரஸம் உந்மஸ்தகமாக, ஆழ்வாரைப்போலே அவனுடைய ஸௌலப்யஸௌஶீல்யாதிகளை அநுபவித்து, "எத்திறம்!" என்று மோஹித்துக்கிடந்தார்.

—⁂—

நாள்தோறும் சாலைக்கிணற்றிலிருந்து திருமஞ்சநம்கொண்டு வந்து ஸமர்ப்பித்தது.

(ஶநைராஶ்வாஸிதஸ்வயம்) என்று தம்மிலே வ்யாமோஹம் தெளிந்து, (ஹேக்ருஷ்ணஹேயாதவஹேஸகே) என்று கூடத்திரிந்த அர்ஜுநனைப்ரமிப்பித்தாப்போலே, *நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப்புகுந்து "உருக்காட்டாதே யொளிப்பாயோ" என்று இப்படிபலவகை புலம்பி, தம்மிலே உள்ளந்தேறியெழுந்து ஆநந்தநிர்ப்பரராய், பெரியமார்க்கத்திலே சென்று, வையமாளிகையேறி, "தென்னத்தியூரர்கழலிணை" என்னும் * திருப்பொலிந்தசேவடியிலே தண்டன் ஸமர்ப்பித்து, அவன் அந்தர்த்தாநம்பண்ணின விடத்திற்கருத்தறிந்து அந்தச்சாலைக்கிணற்றிலே பெருமாள் திருவாராதநத்துக்குத் திருமஞ்சநம் ஸமர்ப்பித்துக்கொண்டுபோராநின்றார்.

—⁂—

யாதவப்ரகாசன் சிஷ்யர்களுடனே கங்கைக்கரையைச் சென்று கிட்டியது.

அங்கேயாதவப்ரகாஶனும் இவர்கள்வருமளவும்நிற்க, அவ்வளவிலே கோவிந்தபட்டர்வர, அவரைக்கண்டு அவனும் "இளையாழ்வாரெங்

கே?" என்ன; கோவிந்தபட்டரும், "அவரை நான்கண்டிலேன்" என்ன; அவனும் அந்தேவாஸிகளை விட்டுத்தேட, அவர்களும் தேடிக்காணாமல் மீள; ஐயோ! காட்டிலே என்னதீங்கு வருகிறதோ! என்று துக்காகுலராய், பயணகதிகளிலே கங்காதீரத்தைச் சேர்ந்தார்கள்.

—※—

உள்ளங்கைகுளிர்ந்த நாயனார், காளஹஸ்தி ஸ்தலத்துக்கு ஸர்வாதிகாரியானது.

ஸர்வரும் கங்கையிலே மாகஸ்நாநம்பண்ணாநிற்க, ஒருநாள் கோவிந்தபட்டர் அகமர்ஷணம் பண்ணுகிற ஸமயத்திலே கையிலே ஒருலிங்கம்வந்துசேர; அவரும்விஸ்மிதராய்க்கொண்டு யாதவப்ரகாஸனுக்குக்காட்ட; யாதவப்ரகாஸனும், "வாரீர் கோவிந்தபட்டரே! நீர் தைவஜ்ஞாகையாலே கங்காஸ்நாநபலம் கைசேர்ந்தாப்போலே கங்காதரனே கைசேர்ந்தான்" என்று இவரிடத்திலே விஸேஷப்ரதிபந்நனாகாநிற்க; இவர்கைசேர்ந்ததுவே நிரூபகமாக 'உள்ளங்கைகுளிர்ந்த நாயனார்' என்று அழைக்கத் தொடங்கினார்கள்.—ஸர்வரும் மாகஸ்நாநம் பண்ணி மீண்டு ஜகந்நாதம் அஹோபிலம்வழியாகவர, மத்யே உள்ளங்கைகுளிர்ந்தநாயனாரும், "இந்த பாணிலிங்கத்தை ஒருசிதஸ்தலத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேன்" என்ன; அவனும் "அப்படியேசெய்யும்" என்றனுப்பி, தானும் பெருமாள்கோயிலேறப்போந்தான். உள்ளங்கைகுளிர்ந்தநாயனாரும் நிரந்தரவகாத்திலே சென்று அங்கிருக்கிற மஹாஜநங்களைத்திரட்டி காஸ்தலிங்கத்தை ப்ரதிஷ்டிப்பித்து தத்பக்தியுக்தராய்நிற்கிறவளவிலே; காளஹஸ்திநாதன் ஒருநாளாக இவரிருப்புக்குவிரும்பி, "நீர் நம்பக்கலிலே வந்திருக்கவேணும்" என்று இவர்ஸ்வப்நத்திலேயும், ஸ்த்தாநக்கோத்தார்ஸ்வப்நத்திலேயும் "உள்ளங்கைகுளிர்ந்தநாயனாரை அழைத்துக்கொண்டு வாரும்கோள்" என்று ப்ரேரிக்க; அவர்களும் அனேத்துக்கொத்தும்வந்து அகேகபஹுமாநத்திலே யழைத்துக்கொண்டுபோய், தங்கள்கோயிலுக்கு வேண்டும்முத்ரைகளுக்கும் இவரையே முக்யராக்கினார்கள்.

அங்கே யாதவப்ரகாஸனும் பெருமாள்கோயிலிலே இளையாழ்வாரைக்கண்டு, "(இயமநஹ்ராவஜிஷ்டி:) என்று, விந்த்யத்திலே, அந்யதாஸங்கைபண்ணி கனக்க நிர்வேதித்தோம், இவ்வளவு காணப்பெற்றோமே!" என்ன; அதுக்கு இவரும் உங்களை யகன்றபின்பு அங்கே ஒரு வில்லிவ்யாஜேந பெருமாள்கோயிலேறின வ்ருத்தாந்தத்தை விவரிக்க; யாதவப்ரகாஸனும், இவர்கடை லோகாதீதமாயிருந்தது என்று உள்ளங்குளிர்ந்து ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்தத்தை நடத்தாநின்றான்.

—※—

26-12-85.

ஆளவந்தார், உடையவர்ப்ரபாவங்கேட்டு கோயிலினின்றும் பெருமாள்கோயிலுக்கெழுந்தருளினது.

இந்த வ்ருத்தாந்தத்தைப் பெருமாள்கோயிலினின்றும் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கோயிலுக்கெழுந்தருளி, ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து விண்ணப்பஞ்செய்ய; ஆளவந்தாரும் இத்தைக்கேட்டு ஆஸ்சர்யப்பட்டு, (ஏஷ ஸ்ரீமாநவிராளஹணம்ராமணீர்நாளிகோ:) என்கிறபடியே-ஊவர்த்தரையிலே கல்பகவ்ருக்ஷம் கண்டாப்போலேயும், (அஸஹாஏவாத்ர ஹிஸம்ஹவஹிஹஸஹிகாயாபிவஹவ்யவாஹ:। அத்ரைவஸஞ்ஞாயதிஸம்ஹவஹி தத்ரைவலாஹஸ்யஸஷீருஹாணாம்) என்கிறபடியே இந்தளத்திலே தாமரைபூத்தாப்போலே இப்படி ஒருவருண்டாகப் பெற்றதே!! என்றுமுதலிகளைப் பார்த்தருளிச்செய்து, "அவரைப் பார்க்கப்போகவேணும்" என்று ஆளவந்தாரும் முதலிகளும் புறப்பட்டுத் திருக்கோவலூரிலே எழுந்தருளி, ஆழ்வார்கள்நாயனாரையும் ஸேவித்து, அங்கிலும்புறப்பட்டு, (கமீணாஞ்ஸர்வாஸாம்ஸேஷாபாபஹராஹிஸா। ஏகாகாஞ்சீதிவிஃயாதாபுநீபுண்யவிவர்யநீ) என்று சொல்லப்படுகிறமாஹாத்ம்யத்தையுடைத்தான பெருமாள்கோயிலுக்கெழுந்தருளினார்.

—※—

ஆளவந்தார், பேரருளாளர்பெருந்தேவியாரை தண்டன்ஸமர்ப்பித்து எழுந்தருளியிருக்கிறவளவிலே திருக்கச்சிநம்பி இளையாழ்வாரைக் காட்டியருளினது.

அநந்தரம், திருக்கச்சிநம்பியும், ஸ்வாசார்யரான ஆளவந்தாரெழுந்தருளின இச்சேதியைக் கேட்டுவந்து, அவர்ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க; ஆளவந்தாரும் அவரை விஸேஷகடாக்ஷம் செய்தருளி, "ஸ்ரீகஜேந்த்ரதாஸரே! பேரருளாளரை அந்தரங்கஸேவைபண்ணித் திருவாலவட்டகைங்கர்யம் செய்துகொண்டிருந்தீரோ?" என்றருளிச்செய்து, அவர்புருஷகாரமாக, * உலகேத்துமாழியானத்தியூரானைய் * அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதரான பேரருளாளரை ஸேவிப்பதாக, ப்ரதமம்பேரருளாளன்பெருந்தேவியாரைத் திருவடித்தொழுது, மீண்டு ப்ரதக்ஷிணமாகஎழுந்தருளாநிற்க, (உதக்பஸ்சிமஹாமஸ்யம்வல்மீகம்மஹதோஸிரோ:பூஜநீயஸ்வதத்ராஸ்தேஸேஷ:ஹஸ்ஸிதாம்வர:) என்றும் சொல்லுகிறபடியே திருப்புற்றுஸமீபத்திலே திருவநந்தாழ்வானை ஸேவித்து, அதுக்குக்கிழக்காகக் கரியமாணிக்கத்தாழ்வாரையும்ஸேவித்து, ஆளவந்தாரும் முதலிகளும் பஸ்சிமாபிமுகராய் எழுந்தருளுகிறவளவிலே, யாதவப்ரகாசனும் அவனுடன் சாஸ்த்ராப்யாஸம்பண்ணுமவர்களும் பெருமாளைஸேவித்து ப்ரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு வாராநிற்க, "இவர்களிலே

ஆஸுரி இளையாழ்வாரார்?" என்று ஆளவந்தார் நம்பியைக் கேட்டருள; நம்பியும், (ஆயதாம்சஸுவ்ருத்தாம்சவாஹவ்யபரிவோபமா:) என்னும் சொல்லுகிறபடியே-ஆஜாநுபாஹுவாய், சிவந்து நெடியவலிய வாய திருவடிகள் நகதேஜஸ்ஸோடே கூடிக்கொண்டு முழந்தாள் தசைந்து பழுத்த திருப்பரியட்டமும் சாத்திக்கொண்டு உதரபூர்த்தியையுடையராய், அகன்ற திருமார்பும் தசைந்ததிருக்கழுத்தும் சிவந்த திருவதரமும் சந்த்ரமண்டலம்போலேயிருக்கிற திருமுகமண்டலமும் சந்த்ரகிரணம்போலே திருமுத்தினொளியும் திருமுடிச்சிலையும் செவிமறையச்சாத்திக்கொண்டு நடுவேவருகிறவர்" என்று விண்ணப்பஞ்செய்ய;

ஆளவந்தார், இளையாழ்வார் தர்சநப்ரவர்த்தகராம்படி பேரருளாளரைச் சரணமடைந்தது.

அநந்தரம், ஆளவந்தாரும் இவரை, * ப்ரஸந்நமதுரகபீரஸிஸிராதாம்ரநயநங்களினாலே பூயோபூயஸ்செவ்வரியோடப்பார்த்து, (ஆமுதல்வனிவன்) என்றும், "சேஷாவதாரம்" என்றும் விசேஷமாக கடாக்ஷித்து, இவருக்கொரு நல்வார்த்தைசொல்லுகைக்கு அவகாசமில்லாமையாலே பெருமாளை நோக்கி, (யஸ்யப்ரஸாதகலயாபதிர ஸ்ருணோதிபங்குப்ரதாவதிஜவேநவக்தி மூக:। அந்த:ப்ரபஸ்யதிஸுதம் லபதேசவந்த்யாதம்தேவமேவவரதம்ஸரணம் கதோஸ்மி) என்றும், (தேவேந்த்ரஸ்த்ரிபுவநமர்த்யமேகபிங்கஸ்ஸர்வார்த்திம் த்ரிபுவநமாதுகார்த்தவீர்ய:। வைதேஹப்ரமபதம்ப்ரஸாத்யவிஷ்ணும்ஸம்ப்ராப்தஸ்ஸகலமிதப்ரதோஹிவிஷ்ணு:) என்கிறபடியே-தேவரீர்ஸகலபலப்ரதராகையாலே, (தாம்வேண்டும்காமமேகாட்டும்கடிது) என்கிறபடியே அவ்வவருடைய இஷ்டகாமங்களைக்கொடுத்தருளுகையாலே, அடியேனும், இவ்விளையாழ்வாராகிற மஹாநுபாவன், நமக்குச்ரவணத்துக்குறுப்பான ச்ரோத்ரமும், கதிஸாதநமான பாதமும், வாக்வ்யவஹாரயோக்யமான வாக்கும், தர்சநஸாமக்ரியான த்ர்ஷ்டியும், நிரயநிஸ்தாரகனும் ப்ரீதிஹேதுவான புத்ரனும், எல்லாம் இவரேயாகவரம்தந்தருளும்படி சிரஸாயாசித்து, "தர்சநப்ரவர்த்தகராம்படி இவரைவிசேஷகடாக்ஷம்பண்ணியருளவேணுமென்று சரணம்புகுந்தேன்" என்று விண்ணப்பம்செய்து, பின்பு ஹஸ்திகிரியின்மேலே யெழுந்தருளிப் பேரருளாளரையும் ஸேவித்து தீர்த்தப்ரஸாதமும்ஸ்வீகரித்து, திருக்கச்சிநம்பியையும் பெருமாள்ஸந்நிதியிலே நிறுத்தி, ஆளவந்தாரும் முதலிகளும்மீண்டு கோயிலுக்கெழுந்தருளி, (ஆம்நிதேஷ்வதிமஹார்யாந் ஆசிஸஶ்சா:ப்ஜயக்ப்ஜயக்। ராமாநுஜார்யாயதம்வந்தேயாமுநம்முநிம்) என்னும்படி பெரியநம்பி

முதலான பெரியோர்களிடங்களிலே, திருமந்த்ரம் த்வயம், சரமச்லோகம் முதலானவற்றையும் இளையாழ்வார்க்காக நிக்ஷிப்தமாக்கி வைத்து தாமும் நிர்ப்பராய் எழுந்தருளியிருந்தார்.

பாண்டியராஜன், தன்மகளுக்குப்பிடித்திருந்த ப்ரஹ்மராக்ஷஸ்ஸை நிவர்த்திப்பிக்கைக்காக, யாதவப்ரகாசனுக்குச் சொல்லி வரவிட்டது.

பின்பு பெருமாள்கோயிலிலே யாதவப்ரகாசன் தன்னருகிலுள்ளார்க்கு சாஸ்த்ராப்யாஸம் பண்ணுவித்துக்கொண்டு போருகிறகாலத்திலே, அந்த ராஜ்யத்தின் ராஜாவினுடைய புத்ரியை ப்ரஹ்மராக்ஷஸ்ஸு பிடிக்க; ராஜாவும் து:காகுலனாய், அங்கிருக்கிற மந்த்ரவாதிகளைக்கொண்டுபார்ப்பிக்க; அந்தராக்ஷஸ்ஸு ஒருவர்க்கும் போகாமையாலே அவனும், "பெருமாள்கோயிலிலே, யாதவப்ரகாசனென்பானொருவன் மந்த்ரவாதியாயிருக்கிறான்" என்றுகேட்டு தன்மநுஷ்யரையனுப்பி யாதவப்ரகாசனுக்கறிவிக்க; அவனும், அந்தராஜமநுஷ்யர் சொன்னவார்த்தையைக்கேட்டு, தன்க்யாதி ப்ரஸித்தமாம்படி அவர்களைப்பார்த்து, "யாதவப்ரகாசன் உன்னைப்போகச்சொன்னானென்று சொல்லுங்கோள்" என்று அவர்களையனுப்ப; அவர்களும் போய் அங்கேசென்று அந்தராக்ஷஸ்ஸைப்பார்த்து, "யாதவப்ரகாசன் உன்னைப் போகச்சொன்னான்" என்ன; அந்தராக்ஷஸ்ஸும், அவர்கள்சொன்னத்தைக்கேட்டுச் சிரித்து, "அவன்தன்னை அங்குநின்றும் போகச்சொன்னானென்று சொல்லுங்கோள்" என்ன; அந்தவிசேஷத்தை ராஜாவும், யாதவப்ரகாசனுக்குச்சொல்லி வரவிட்டான்.

யாதவப்ரகாசனுக்கும் ப்ரஹ்மராக்ஷஸ்ஸுக்கும் நடந்தஸம்வாதம்.

பின்பு, யாதவப்ரகாசன் போரகுபிதனாய் சிஷ்யர்களைக் கூட்டிக்கொண்டு ராஜாஸ்தாநத்தேறப்போய் உக்ரமான மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு முஷ்டிபிடித்து க்ஷுபிதனாய் ப்ரஹ்மராக்ஷஸன் முன்னே போய்நிற்க; அந்தப்ரஹ்மராக்ஷஸ்ஸும், முடக்கினகாலை பின்னையும் நீட்டி "வாடாயாதவப்ரகாசா! நீயா நம்மைமீட்கவந்தாய், நீ இந்த மந்த்ரமன்றோ ஜபித்துக்கொண்டுவந்தாய், அந்தமந்த்ரங்களெல்லாம் எனக்கு வாராதென்றிருந்தாயோ, நீஜபிக்கிறமந்த்ரம் நானறியேனோ என்று அம்மந்த்ரத்தையும்சொல்லி, நான் உனக்குப்போவேனோ, நீ உன் ஜந்மமுமறியாய், என்ஜந்மமுமறியாய்" என்ன; அதுக்கு "பிரானே! நீஸர்வஜ்ஞனாயிருந்தாய், உன்னுடையஜந்மமேது, என்னுடையஜந்மமேது" என்று யாதவப்ரகாசனும்கேட்க; அந்தராக்ஷஸ்ஸும்,

உன்னுடையஜந்மம் இஜ்ஜந்மத்துக்குமுன்பு பன்னிரண்டாம்ஜந்மத்திலே, "கங்கைக்கரைகண்டம்" என்கிறதிருப்பதியிலே எம்பெருமான் கோயிலிலே ஒருகிரியாய்த்திரியும்படியையும் அதுக்கு சபராநலேசரீரநாசம்வருமளவிலே, அங்கே பரமைகாந்தியாயிருப்பாரொருவருடைய கரஸ்பர்சம்பெற்றபடியையும், பின்பு ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிக்கரையிலே யிருப்பதொருபுற்ருய், அதிலே நீ உடும்பாயிருப்புதி; திருமலைப்பெருங்கூட்டம்போகிறபோது, அங்கே ஸ்ரீவைஷ்ணவர்களெழுந்தருளி நீராடி தளிகைக்குப்பண்ணி, அநந்தரம் அவர்கள் திருவாராதநம்செய்து அமுதுசெய்தருளின இலைத்தளிகையின்கீழே சிந்தின ப்ரஸாதத்தையும், அவர்கள் திருவடிவிளக்கின தீர்த்தத்தையும் ப்ராஸாதப்பட்டாய்; அத்தாலே புண்யமான ப்ராஹ்மணஜந்மத்திலே ஜநித்து, "யாதவப்ரகாசன் என்று வித்வானாய்ப்பிறந்தாய்" என்ன; அப்படி சொன்னவார்த்தையைக்கேட்டு யாதவப்ரகாசனும், அப்படிப்பட்ட ஸ்ரீபாததீர்த்ததளிகைப்ரஸாதத்துக்கு ப்ரமாணமுண்டோவென்ன; அந்தரக்ஷஸ்ஸும் உண்டு என்று ப்ரமாணம்சொல்லுகிறது.

—⁂—

பாகவத ஸ்ரீபாததீர்த்தம், தளிகைப்ரஸாதங்களின்மாஹாத்ம்யம்.

(வைஷ்ணவாநாஞ்ஜயோமர்த்ய:பிபேத்பாதோதகம்ஸதா। க்ஷயரோகாதிகுஷ்டாத்யாஸ் ஸர்வேநச்யந்திஸாரத॥ திஸ்ரஃகோட்யர்த்தகோடீவதீர்த்தாநிஸுவநத்ரயே। வைஷ்ணவாங்க்ரிஜலாத்புண்யாத்காமிஹாமேககோஸம:॥ மத்பக்தபாதோதோயேநமத்ஸ்நாபிதஜலேநவா। நராஃபாபாத்ப்ரமுச்யந்தேஸ்நாநபாநாதிகர்மணா॥ஸரஸ்வதீஸேதுமத்யமாமஹாக்யோனைமிசாதபி। பாவநம்விஷ்ணுபக்தாநாம்பாதப்ரக்ஷாளநோதகம்॥ காங்க்ஷந்திஸகலாநத்ய:கலுஷாத்ஸ்நாநகில்பிஷை:॥ஆத்மபாபவிமுக்த்யர்த்தம்வைஷ்ணவாங்க்ர்யவகாஹநம்॥ஸர்வயாஸ்நாநபுண்யேநஸம்பதாஸஹவாரிணா।முக்தாமோக்ஷாவரீஷம்மாமஹாபாபப்ரணாசநீ॥நாரதஸ்யாதியேஃபாதெள ஸர்வாஸாம்ந்திரேஸ்வயம் । க்ருஷ்ணஃப்ரக்ஷாள்யபாணிப்யாம்பெளபாதோதகம்முதே:॥ மஹாபாதகஸம்ப்ராப்தெளவ்ரஜேத்வைஷ்ணவமந்திரம்।யாவயேதக்ஷம்ஸீதம்தத்ஸாவேஜலம்பிபேத்॥ மஹாபாதககோட்யஸ்துவ்ரஹ்மஹத்யாயுதம்தயா । அம்பபாநாத்ப்ரணச்யந்தி வைஷ்ணவஸ்யது மந்திரே॥ கோடிஜந்மார்ஜிதம்பாபம் ஜ்ஞாநதோஉஜ்ஞாநதோபிவா । ஸத்யஃப்ரதஹ்யதேக்ஷீணம்வைஷ்ணவோச்சிஷ்டபோஜநாத்॥ யோவைமந்த்ரவரம்ப்ராப்தஸ்ஸாரோத்யேபுஷாயநம்। ப்ரதிக்ஷேத்சநுவர்யஸ்யதஸ்யோச்சிஷ்டம்ஸபாவநம்॥ சேஷோர்யஸ்யயோச்சிஷ்டம்போஜ்யம்தத்புத்ரசிஷ்யயோ:। ஸர்வேஷாம்வசேஷோர்விஷ்ணுரக்தாந்யஞ்நிவேதிதம்॥ பாதாஞ்யகம்சிரோஷ்யம்வைஷ்ணவோச்சிஷ்டபோஜநம் ।ஏகைகம்பாண்டவச்ரேஷ்ட

ராஜஸூயாத்விசிஷ்யதே॥ தத்பாதாம்வு துலஸீர்யம் தச்சிஷ்டம்ஸபாவநம்।தச்சக்திமாத்ரம்மந்த்ராம்ர்யம்தத்ஸ்ப்ருஷ்டமவிசம்சுசி। ஸமவஸ்ஸக்தஸம்ஸக்தபாத்ரவஸ்த்ரௌநாதராத்। கோபிதாவஸீஸதோஸக்த்வாம்ர்தோவைநாரதீபவேத்) என்று இத்யாதி வசநங்களைச்சொல்லி, இப்படிப்பட்ட ஸ்ரீபாததீர்த்த தளிகைப்ரஸாதத்தாலே நீ இப்படிவித்வானாகப்பிறந்தாய்; என்னுடைய ஜந்மம் ப்ராஹ்மணஜந்மம், யாகம்பண்ணினேன், மந்த்ரலோபக்ரியாலோபம்வந்தவாறே ரக்ஷஸ்ஸானேனென்ன;

—⁂—

யாதவப்ரகாசனால் நிரஸிக்கக்கூடாத ப்ரஹ்மரக்ஷஸ்ஸு இளையாழ்வாரால் நீங்கிற்றென்பது.

ஆனால்நீயாருக்குப்போவுதியென்ன? அந்தரக்ஷஸ்ஸும், "உன்னுடனேவாசிக்கிறவரிலேயொருவர். அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளாகிற நித்யஸூரிகளிலே ஒருவர்" என்று இளையாழ்வாரைக்காட்டி, அவர் போகச்சொன்னாகில் போகிறேனென்ன; யாதவப்ரகாசனும், ஆகில், "இளையாழ்வீர்! நீர்போகச்சொல்லும்" என்ன; இளையாழ்வாரும், அவன்வார்த்தையைக்கேட்டு, அந்தரக்ஷஸ்ஸைப்பார்த்து, "நீ எங்கேயிருப்புதி" என்ன; அந்தரக்ஷஸ்ஸும் இவ்வரசிலேயிருப்பேன்" என்ன; இளையாழ்வாரும், "நீபோகிறத்துக்கு அடையாளத்தைக்காட்டிப்போ" என்ன; ரக்ஷஸ்ஸும் தேவரீருடைய திருவடித்தாமரைகளை என்தலைமேலேவைத்தாலொழிய நான்போகிறதில்லை" என்ன; அநந்தரம் இளையாழ்வாரும், * ஸ்மபமாநமுகாம்போஜத்தையுடையராய், தம்முடைய திருவடித்தாமரைகளை அதின்தலைமேலேவைக்க; பின்பு அந்த ரக்ஷஸ்ஸும் அத்யந்தம்ப்ரீதியாய், மீளவும் இளையாழ்வார்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, "இவ்வரசு முறிந்துவிழும்" என்று சொல்லி அவ்வரசை முறித்துக்கொண்டுபோய்த்து. பின்பு யாதவப்ரகாசனும், இத்தைக்கண்டு ஆச்சர்யப்பட்டு, "இளையாழ்வீர்! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்" என்று மிகவும் உபச்லோகித்து, மீண்டு தன்னுடையமடமேவந்துபுகுந்தான்.

—⁂—

இளையாழ்வார், "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம" முதலானச்ருதிகளுக்கு விசிஷ்டாத்வைதபரமாக அருளிச்செய்ததைஸஹியாத யாதவப்ரகாசனைவிட்டு விலகி பெருளாளருக்கு சாலைக்கிணற்றினின்றும் திருமஞ்சநம்கொண்டுவந்து ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தது.

இப்படி யாதவப்ரகாசன், தன்னருகிலுள்ளார்க்கு சாஸ்த்ராப்யாஸம்பண்ணுவித்துக்கொண்டு போருகிறகாலத்திலே, கோயிலிலே ஆளவந்தாரும், வ்யாக்யாநஸமயத்திலே "இலிங்கத்திட்டபுராணத்

"தீரும்" என்கிறபாட்டு ப்ரஸ்துதமாக, நமக்குப்பின்பு, இத்தர்சநார்த்தம் நடத்துவாரைக்காணப்பெற்றிலோமே!" என்கிற விசாரத்திலே, இளையாழ்வாரிடத்திலே திருவுள்ளமாய், "இளையாழ்வாரை, யாதவனோடு உறவறுத்து நம்மோடொக்கச் சேர்க்கவிரகுண்டோ" என்றருளிச்செய்து, பேரருளாளரைக்குறித்து, "நம்ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேணும்" என்றுமீளவும் ப்ரார்த்தித்தருளினார். பெருமாள்கோயிலிலேயாதவப்ரகாசனும் க்ரந்தத்தைநடத்தாநிற்க, அவ்விடத்திலே, (ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம) (நேஹநாநாஸ்திகிஞ்சந" இத்யாதிவாக்யங்களுக்கு யாதவனும், ஜீவப்ரஹ்மணோரைக்யம் ப்ரதிபாதிக்க; அவ்வாக்யார்த்தங்களை இளையாழ்வார்நிராகரித்து,விசிஷ்டாத்வைதமாக உபந்யஸிக்க ; யாதவனும், அத்தைக்கேட்டு குபிதனாய், "நான் சொன்னபடிகேட்கில் வாசித்திரும், அல்லாவிடில் விட்டுப்போம்"என்ன ; இவரும் நீ ஒருவார்த்தைசொல்லவேணுமென்றிருந்தேன், (ஸர்வஸ்வலப்ஸ ஸ்ரீமாந்) என்றுகொண்டு தம்திருமாளிகையிலே யெழுந்தருளி, திருத்தாயாரைஸேவித்து அச்சேதியைச்சொல்ல ; அவரும், இப்படிதுர்மார்க்கரோடேபோன அம்மார்க்கதுஃகங்களெல்லாம் தப்பாமல்ஸ்மர்திவிஷயமாய் நலியாமல் ஸ்வப்நகல்பமாம்படி கழியக்கண்டு.ஹர்ஷ்டராய்,விரோதிகள்நின்றும்பாதிதராகாமல்போதத்துடன் தப்பிவந்தவிவரை பஹுவிதமாக ஆசீர்வதித்து, அநந்தரம் இளையாழ்வாரைப்பார்த்து, "வாரீர்பிள்ளாய் ! நீர் இதுக்குமுன்பு படித்தது போதும், திருக்கச்சிநம்பி பெருமாளைஸேவித்து பெருமாளுக்கு அந்தரங்கராய் ப்ராணபூதராயிராநிற்கிறார், நீர் அவரைஸேவித்து அவரருளிச்செய்தத்தைச் செய்துகொண்டிரீர்" என்று சொன்னார் ; அவரும்,அப்படியேதிருத்தாயார்சொன்னத்தை ஹிதமாயெண்ணித் திருக்கச்சிநம்பியைஸேவித்து, "(க்ரியதாமிதிமாம்வத) என்றுசொல்லுமாப்போலே அடியேன்செய்யும் கைங்கர்யத்தை நியமித்தருளவேணும்" என்றுவிண்ணப்பம்செய்ய; நம்பியும்திருவுள்ளமுகந்து, "ஜலமேவாஹ்நேஷோஜ்யம்லக்ஷ்மணோநாஹர்தம்ஸ்வயம்" என்கிறபடியறிந்து,"பெருமாளுக்கு சாலைக்கிணற்றின் தண்ணீரமுதுபாங்காயிருக்கும்,ஆகையால் அத்தை,காலகாலத்திலே, தேவரீர், திருவாராதநத்துக்கு உதவ ப்ரதிதிநமும் முன்புபோலே ஒருகுடம் திருமஞ்ஜநம்கொண்டுவந்து ஸமர்ப்பியும்" என்றருளிச்செய்ய ; அவரும் அப்படியே தப்பாமல் அந்தகைங்கர்யத்தைச் செய்துகொண்டுபோராநிற்க ;

ஆளவந்தார், பெரியநம்பிமுதலானார்க்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தையருளிச்செய்தது.

இப்பால்கோயிலிலே, ஆளவந்தார் திருமேனிநோவுசாத்தியெழுந்தருளியிராநிற்கச்செய்தே, திருவரங்கப்பெருமாளரையர் புருஷகாரமாகத் திருக்கோட்டியூர்நம்பியும் பெரியநம்பியும் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே தெண்டன்ஸமர்ப்பித்து, "அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தையருளிச்செய்யவேணும்" என்று விண்ணப்பம்செய்ய ; ஆளவந்தாரும், முதலிகள்மூவரையும் திருவுள்ளம்பற்றி, "உங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் இது,கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலை, உங்களுக்குத் தஞ்சமென்று புத்திபண்ணிப்போருங்கோள், பெரியபெருமாள்திருவடிகளின்கீழே வீணையும்கையுமாய் ஸேவித்திருக்கிற திருப்பாணாழ்வார்விக்ரஹத்தை பாதாதிகேசாந்தமாக ஸேவித்துக்கொண்டுபோருங்கோள்' என்றருளிச்செய்து, இதுக்குப்ரமாணமாக, திருவேங்கடமுடையானுயிர்நிலையறிந்துபோரும் குறும்பறுத்தநம்பியையும், பேரருளாளப்பெருமானுயிர்நிலையறிந்துபோரும் திருக்கச்சிநம்பியையும், பெரியபெருமாளுயிர்நிலையறிந்துபோரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வாருயிர்நிலையறிந்துபோரும் திருவரங்கப்பெருமாளரையரையும் காட்டியருளி, ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரைப்பார்த்து, நீர்,"பெரியபெருமாள் உயிர்நிலையறிந்துபோரும் விக்ரஹமே அடியேனுக்கு உபாயோபேயம் என்று புத்திபண்ணிப்போருவன்" என்றருளிச்செய்ய; திருவரங்கப்பெருமாளரையரும், ஆளவந்தார் திருமுகமண்டலத்தைப்பார்த்து, "தேவரீர்நித்யவிபூதியிலே பரமபதநாதனைஸேவித்து * இமையாக்கண்ணராய்க்கொண்டுபோரத் திருவுள்ளம்பற்றியருளிற்றோ". என்று விண்ணப்பம்செய்ய ;

ஆளவந்தாரும் அவரைக்குறித்து, "நீர் பரஸம்ர்த்திக்கு அத்யவஸித்திரும்" என்று அருளிச்செய்து, "ஒருவன்,ப்ரபந்நனானல்பகவததீநமான ஆத்மயாத்ரையிலும் கர்மாதீநமான தேஹயாத்ரையிலும் அந்வயமுண்டென்றிருந்தானாகில் ஆத்மஸமர்ப்பணமும் குலைந்து நாஸ்திகனாய்விடும் ; நாராயணனுக்குநைரந்தர்யவேஷம் ; தம்பக்கல் பேற்றுக்கு, 'நம:' என்னாதவர்களையும், (* வானவர்நாட்டையும் நீ கண்டுகொள்) என்பதொரு ஔதார்யவிசேஷமுண்டு ; நாங்களுக்குநைரந்தர்யவேஷம், (நாராயணனே நமக்கேபறைதருவான்) என்று நிர்ப்பரனாயிருக்குமதொழிய, தன்பேற்றுக்குத்வரிக்கையும் ஸ்வரூபஹாநி ;'எம்பெருமான் ரக்ஷகன்' என்றிருக்கையும் ஸ்வரூபஹாநி; இப்படியிராதேயிருந்தானாகில் அநந்யார்ஹசேஷத்வத்துக்கும் ஸ்வஸ்வாமிஸம்பந்தத்துக்கும்சேராது" என்றருளிச்செய்ய ; அவர்களும்,

"அடியோங்களுக்குப்பற்றுமுபாயமேது?" என்றுகேட்க; ஆளவந்தாரும், அடியேனை நீங்கள்பற்றியிருங்கோளென்கை அடியேனுக்குஸ்வரூபஹாநி;(எம்பெருமான் தாள்தொழுவாரெப்பொழுது மென்மனத்தேயிருக்கின்றாரே) என்கிறபடியே "அவர்களே உங்களுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப்போருங்கோள்" என்று அருளிச்செய்ய; முதலிகளும், திருவுள்ளத்திலே தலைமுசித்துக்கிடக்க; ஆளவந்தாரும், இவர்களைக்கண்டு, "நீங்கள்முசிக்கவேண்டா, உங்களுக்கு திருமந்த்ரார்த்தம் போகமண்டபம்,சரமச்லோகார்த்தம் புஷ்பமண்டபம், மந்த்ரரத்நார்த்தம் த்யாகமண்டபம்; இதுக்குப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார்முதலானார்கள்" என்றருளிச்செய்தார்.

பின்பு, திருவரங்கப்பெருமாளரையரும், தேவரீர்அவதாரம் தீர்த்தம்ப்ரஸாதித்துப்போமளவிலே,க்ருமிகீடாதிகளுக்கு ஒழிவுவந்தால் சேதமில்லையென்று விண்ணப்பம்செய்து, இவ்வார்த்தையை முதலிகளிருவரும் திருவுள்ளம்பற்றி, "ஆளவந்தார்விச்லேஷத்தில் நாம்ஆத்மத்யாகம்பண்ணக்கடவோம்" என்று தேறியிருந்தவளவிலே, பெரியபெருமாள் திருவோலக்கத்திலே இவ்விசேஷம்பிறக்க; பெரியபெருமாளும், திருவரங்கப்பெருமாளரையர்,திருக்கோட்டியூர்நம்பி, பெரியநம்பிமுதலாக அருள்பாடிட்டருளி, "ஆளவந்தார்விச்லேஷத்தில் நீங்கள் அவிவேகம்பண்ணினிகோளாகில் உங்களுக்கு நம்மாணை" என்று ஆஜ்ஞாபித்து, இவர்களைத் திருவரங்கப்பெருமாளரையர் திருக்கையிலேகாட்டிக்கொடுக்க; அரையரும், முதலிகளிருவரையும் கையைப்பிடித்துக்கொண்டுபோய், ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தெண்டன்ஸமர்ப்பித்து அச்சேதியைவிண்ணப்பம்செய்ய; ஆளவந்தாரும், இத்தைக்கேட்டருளி, "நம்பேற்றுக்கு ஸஹியாதவர்கள், பெரியபெருமாள் இரண்டாற்றுக்கும் நடுவே திருவாராதநங்கொண்டருளஸஹியாதவர்கள்" என்று அருளிச்செய்து, "நம்முடைய விச்லேஷத்தில் அவிவேகம்பண்ணினிகோளாகில், உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, பெரியபெருமாளுகந்த நஞ்சடகோபன்திருவுள்ளத்தை மறுத்தவராவுதிகோள்" என்றருளிச்செய்ய;

ஸ்ரீபாததீர்த்தம் ஸாதிக்குமவர்களும் தீர்த்தம்சேர்க்குமவர்களும் இருக்கவேண்டும் நிலைமை.

அவர்களும் அப்படியே புத்திபண்ணியிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும், இவர்களைக்குறித்து, பகவத்பாகவதவிஷயமென்றுல்தரமிடாதே பாகவதவிஷயத்திலே பகவன்னேக்கானவனாய், பகவானை, குருபரம்பராதியாகத் திருவடிவிளக்குமாப்போலே பாகவதவிஷயத்திலும் தன்ஸத்தைமாண்டு, ஆசார்யவிக்ரஹத்தை யநுஸந்தித்து

தீர்த்தங்கொண்டுபோருகையும், அவர்களும் தீர்த்தம்கொடுக்குமிடத்தில்அர்த்தகாமபரவசரன்றிக்கே,தாம்நேரே ஆசார்யனை யநுஸந்தித்து குருபரம்பராபூர்வகமாக த்வயத்தையநுஸந்தித்து தீர்த்தம்கொடுக்கையும் இருவர்க்குமுபாதேயம்; ஜ்ஞாநாதிகவிஷயமுமாய் ஸமூஹமுமாய்ச்சென்றவளவிலே இருவரும் அர்த்தகாமபரவசராய் ப்ராக்ருதசரீரத்திலேநோக்காய் முதலிகள் இகழ்ந்து திருவுள்ளம்கன்றுமாகில் ஆசார்யனேயாகிலும் அவர்களுக்கு அத்தீர்த்தம் உபாதேயமன்று" என்றருளிச்செய்தார்.

ஆளவந்தாருக்குத் திருமேனிபாங்காகி, பெரியபெருமாளை மங்களாசாஸநம்செய்தருளியது.

அவர்களும் அப்படியேபுத்திபண்ணி யிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும்முதலிகளைக்குறித்து, "உங்களுக்கு சரமார்த்தம், பெரியபெருமாள்திருவடிகளிலேஸூகருமுகைவெடிக்கவைக்கையும்,ஆசார்யவிஷயத்தில்ப்ரதமதசையிலின்றும் சரமதசையையநுஸந்தித்துப்போருகையும், உத்தாரகப்ரபத்தி" என்றருளிச்செய்து, அவர்களைத் திருவரங்கப்பெருமாளரையர்திருக்கையிலேகாட்டிக்கொடுக்க; அவரும், முதலிகளிருவரையும் கையைப்பற்றி, "ஆசார்யவிச்லேஷத்தில் நீங்கள் அவிவேகம்பண்ணினிகோளாகில் உங்களுக்கு தேசவிசேஷமுமின்றிக்கே, நித்யஸூரிகள்திரளிலும்புகுரப்பெறாதே இழப்புதிகோள்" என்றருளிச்செய்ய; அவர்களும் அப்படியே புத்திபண்ணியிருக்கிறவளவிலே, ஆளவந்தார்திருமேனிநோவுசாத்தினது ஆரோக்யமுண்டாய் நீராடி, "பெரியபெருமாளுக்கு உத்ஸவமாய்ப் பெரியதிருமஞ்ஜநங்கொண்டருளி உடுத்துமுடித்துசாத்துப்படிசாத்தியருளி, அங்குள்ள ஸ்ரீரங்கமறையோர்ஸேவிக்க அமுதுசெய்தருளித் திருத்திரைநீக்கினவளவிலே, ஆளவந்தாரும், திருவோலக்கத்திலேயெழுந்தருளி க்ருதாஞ்ஜலிபுடராய் ஸேவித்திருக்க;பெரியபெருமாளும் நினைவறத் திருவரங்கப்பெருமாளரையரை அருள்பாடிட்டருள; அவரும் ஸேவிக்குமடைவொழிய, * சூழ்விசும்பணிமுகிலை ஸேவிக்க;திருவோலக்கமடைய, "இதேதோ" என்று விஸ்மயப்பட;

ஆளவந்தார்விசிஷ்டாத்வைதஸ்த்தாபநார்த்தமாகச்செய்தருளின எட்டுப்ரபந்தங்களில் த்வயப்பொருளைவிளங்கச்சொல்லுமதான ஸ்தோத்ரரத்நத்தை பெரியநம்பிதிருக்கையிலேகொடுத்து இளையாழ்வாருக்குவரவிட்டது.

அவ்வளவிலே பெரியபெருமாள்திருநெற்றிமாலைநழுவிவிழ; நம்பியாரெடுத்து, "ப்ரஸாதிக்கிறோம்" என்றிருக்கிறவளவிலே திருவரங்கப்பெருமாளரையர் சடகோபனையெடுத்து ஆளவந்தாருக்கு

ப்ரஸாதித்தருள; ஆளவந்தாரும் திருவுள்ளம்குளிர்ந்திருக்கச்செய்தே, திருவரங்கப்பெருமாளரையரும், "உம்முடையநினைவு ஸித்தித்ததே" என்ன; பெரியபெருமாளும்,இவர்க்கு தீர்த்தப்ரஸாதமும் திருமாலை ப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்துவிடைகொடுத்தருள; ஆளவந்தாரும் மடமேயெழுந்தருளி, திருவரங்கப்பெருமாளரையர், திருக்கோட்டியூர்நம்பி, பெரியநம்பிமுதலானமுதலிகளை தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி, "ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளவேணும்" என்று விண்ணப்பம்செய்து பின்பு அமுதுசெய்தருளி, அவர்களுக்கு பூர்வம்போலே ரஹஸ்யார்த்தங்களை அருளிச்செய்து கொண்டெழுந்தருளியிராநிற்க; அவ்வளவிலே, "ஆளவந்தார்திருமேனி நோவுசாத்தியருளினார்" என்று பெருமாள்கோவில்நின்றும் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி, ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்துநிற்க; ஆளவந்தாரும், பெருமாள்கோவில்விசேஷம் கேட்டருளி, "இளையாழ்வார்செய்கிறதென்" என்று அவர்களைக் கேட்க; அவர்களும், "இளையாழ்வார், யாதவனிடத்தில் சேராச்சேர்த்தியாய்,பேரருளாளர்திருவடிகளிலே மிகவும்ப்ரவணராயிராநின்றார்" என்று விண்ணப்பம்செய்ய; ஆளவந்தாரும் ப்ரீதராய், "பேரருளாளர்நம்ப்ரபத்தியை ஸபலமாக்கியருளினார்" என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராய், (அத்வைதம்வாஞுஸூர்ய0ஸூமதநமபவி0யாஜவாரண்யஊரவ0வார்வாகவ்யாளதார்க்ஷ்ய0க்ஷபணகஹரிணஷ்வீபிந0யாமுநார்யம்| ஸ0ஜேஸ0ஜஹஸாந்த்யைஶ்ருதிஶிவரஶிரா0வ்யாஸஸூத்ரஸ்யஹாஷ்ய0ப்ராணைஷீல்லக்ஷ்மணார்ய: ப்ரதிபதமநுஸ0யாயயஸ்யப்ரபந்தா:|| ஸேவேத0யாமுநார்ய0ரவுவரவரிதைஸ் ஸ0ஶ்ரித0யோவிஶிஷ்டாத்வைத0 வித்யாஞமர்யம்ப்ரகடிதமதநோதஷ்டஹிஸ்வஸ்வப்ரபந்தை:| யஶ்ஶ்ரீராமாநுஜார்ய0ஹ்யயிபதிரயமேவாஸ்மதீயஸ்யஸூயாத்விதயாஞஸ்யேதிவோக்த்வாதமயநிஜக்ஷீபாவிக்ஷயாலக்ஷயஞ்ச|விதயிதீர்யஞபுருஷேஷவிஜா0ஸ்துதீஶஶ்ரீஶ்ரீஶயோஶ்சபுருஷார்யவிநிர்ணய0ய:| ஶ்ரீதார்யஸ0ஹ்ரஹமயாஊமமாநமாஹ த0யாமுநேயமுநிவர்யமஹ0ப்ரபத்யே)என்கிறபடியே இளையாழ்வார்தர்ஶநப்ரவர்த்தகராம்படி எட்டுப்ரயந்தமிட்டருளியும், அதில் ஸகலப்ரமாணவிலக்ஷணமுமாய் மந்த்ரார்த்த ப்ரகாசகமுமானஸ்தோத்ரரத்நத்தை ப்ரமாத்ரூத்நமான பெரியநம்பிதிருக்கையிலேகொடுத்து, "இளையாழ்வார், யாதவனிடத்தில் சேராச்சேர்த்தியாய் பேரருளாளர்திருவடிகளிலே மிகவும் ப்ரவணராயிராநின்றாரென்று கேட்டோம், அவரை இப்போது நம்மோடொக்கச்சேர்க்கவேணும்" என்று அருளிச்செய்ய; *அன்னமரவயல்கச்சியருளாளரருள்பெற்ற ஆளவந்தாரடியிணையை அகலாதோரானவரும், ஆசார்யநியமநத்தைப்பற்ற அப்போதேபுறப்பட்டுப் பெருமாள்கோவிலேகேயெழுந்தருளினார்.

ஆளவந்தார் நோவுசாத்தித் திருநாட்டுக்கெழுந்தருளியது.

அநந்தரம், ஆளவந்தாரும் மீளவும் திருமேனிநோவுசாத்திக்கண்வளர்ந்தருள; அப்போது முதலிகளும், "பெரியபெருமாள் திருவுள்ளமேதோ" என்று தங்களிலே சிந்தித்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும், பேரருளாளர் அயன்கண்ட வைகாசித்திருநாள் அவப்ருதிவஸத்தினன்று ஆளவந்தாரும் நீராடி பெரியபெருமாளைத் திருவடித்தொழச்சென்று உத்தமஸந்தியமுதுசெய்து திருத்திரைநீக்கினவளவிலே தண்டன்ஸமர்ப்பித்து, பாதாதிகேசாந்தமாகவும் கேசாதிபாதாந்தமாகவும்ஸேவித்து, திருவடிக்கீழ் திருப்பாணாழ்வாரையும் ஸேவித்திருக்கிறவளவிலே நம்பிமார்இவர்க்கு தீர்த்தப்ரஸாதமும் திருமாலைப்ரஸாதமும் ப்ரஸாதிக்க; திருப்பதியார், திருத்தளிகை ப்ரஸாதமும் ப்ரஸாதித்துவிடைகொடுத்தருள;

ஆளவந்தாரும் மடமேயெழுந்தருளி, திருவரங்கப்பெருமாளரையர்; திருக்கோட்டியூர்நம்பிமுதலான முதலிகளை தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி முஹூர்த்தமிட்டு,வைகாசிமாஸம் இருபதாந்தேதி ச்ரவணநக்ஷத்ரத்திலே அபிஜித்முஹூர்த்தத்திலே முதலிகள் சேஷாம்சத்தை அங்கீகரித்து ஆழ்வார்களைச்சரணம்புக்கு ஆசார்யர்கள் முதலிகள் ஸ்தாநத்தார்முதலாக எல்லாரையுமழைப்பித்து அபராதக்ஷாபணம்பண்ணிக்கொண்டு வேண்டிக்கொள்ள; அவர்களும், "பெரியபெருமாளுக்கு அபராதமுண்டாகிலன்றோ தேவரீருக்கு ஒருஅபராதமுண்டாவது" என்ன; திருவரங்கப்பெருமாளரையர்முதலானமுதலிகளை அங்குள்ளமுதலிகள்திருக்கையிலேகாட்டிக்கொடுத்து, ஸ்தாநத்தாரைப்பார்த்து, "பெரியபெருமாளுடைய திருவாராதநம், திருமந்த்ரபுஷ்பம் காலகாலங்களிலேநடத்திக்கொண்டுபோருங்கோள், ஆசார்யர்கள்முதலிகள் தேசாந்த்ரிகள்முதலானாரை அரவணைத்துக்கொண்டுபோருங்கோள்" என்றுகாட்டிக்கொடுத்தருள; அவர்களும், "அப்படியேயாகிறது" என்று அங்கீகரிக்க; "இது புதுமையாயிருந்தது" என்று எல்லாரும் விடைகொண்டுபோக;

பின்பு, ஆளவந்தாரும், பத்மாஸநமாக வெழுந்தருளியிருந்து மணக்கால்நம்பியைத்யாநித்துக்கொண்டு அவர்திருவடிநிலைகளை தம்முடையமுன்னேவைத்துக்கொண்டு, அவர்திருவடிநிலைகளை தம்முடைய நெஞ்சிலும் கண்ணிலும் திருமுடியிலும் தரித்துக்கொண்டிருக்க; ஸ்ரீபாதத்தில்முதலிகள், ப்ரஹ்மவல்லி, ப்ருகுவல்லி, புருஷஸூக்தம், *சூழ்விசும்பணிமுகில்ஸேவிக்க*; ந்ருத்தகீதவாத்யங்கள் முழங்க, திருச்சங்குபணிமாற, ஸகலவாத்யங்களும் எங்கும்முழங்க, ப்ரஹ்மரந்த்ரத்தாலே ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருள, திருவரங்கப்பெருமாளரையர் திருக்கோட்டியூர்நம்பிமுதலான முதலிகளெல்லாரும்.

வோற்றமரம்போலே கோஷித்துக்கொண்டுகிடந்து துடிக்க, திருமிடறுதழுதழுப்ப திருமூச்சுவெப்படிக்க, அவசராய்க்கிடந்து சோகித்து, *இணைமலர்க்கண்ணீர்ததும்ப, தாராவர்ஷமாகத்திருமுத்துதிர்த்து ப்ரலாபித்துக்கொண்டுகிடந்துதுடிக்க ; அருகிருந்தமுதலிகள் இவர்களைத் தேற்றத்தேறிநின்று, ஆளவந்தார்குமாரர்சொட்டைநம்பியைக்குறித்து, "முன்னடக்கும் க்ரமத்தைச்செய்தருளவேணும்" என்ன ; அவரும் சுகப்ரச்நஸம்ஹிதோக்தப்ரகாரத்திலே ஸ்ரீசூர்ணபரிபாலநம்பண்ண உபக்ரமித்தார்.

ஆளவந்தாருக்கு ப்ரஹ்மமேதஸம்ஸ்காரம்நடந்தவிதம்.

அதெங்ஙனேயென்னில் ; (ஸர்வம் ஸ்ரோதுமிச்சாமி வைஷ்ணவஸ்யபரேயுஷ:। ஔர்த்வதேஹிகஸம்ஸ்காரம் ப்ரஹ்மமேயம்ஹிவைதிகம்.) ப்ரஹ்மெளவாச; (ஸ்ரூயதாமவ்யயாநேநமத்தஸ்த்வம் வததக்ரமாத்| வைஷ்ணவாநாம்வஹம்மதாம்ப்ரஹ்மமேயாவ்யஸம்ஸ்க்ருதிம்|| விப்ராம்விதாநஸம்யுக்தாம்உபகார்யாம்ப்ரகல்பயேத்|| நாளிகேரபலைர்புஷ்பைர்தர்ப்பமாலாஸமாவ்ருதாம்|| லம்பமாலாஸமாகீர்ணாம் தோரணைருபஸோபிதாம்। கதளீஸ்தம்பபூகைஸ்ச ஸர்வதஸ்ஸமலங்க்ருதாம் || தந்மத்யதேஸேதத்ரைவவேதிகாஞ்சப்ரகல்பயேத் । காரயேத்வாரதேஸேஷு ஹோமயாகேலேபமண்டலம் || ஸிதசூர்ணைதத்ரைவதிக்ஷுரேவாஸ்ஸமாலிகேத் । வீப்யாம்வாவிவிதைர்வஸ்த்ரைர்விமாநஞ்சப்ரகல்பயேத்|| கதளீஸ்தம்பபூகைஸ்சவிமாநைருபஸோபிதம்|| பரிதஸ்தம்ஸம்யுக்தம்வேஷ்டிதம்பட்டவஸ்த்ரகை: । தர்ப்பமாலாஸமாகீர்ணம்க்ருத்வா ஸாமவதாஸ்ஸம் || யாநயஞ்ஞோதிஸாஸ்யாஸேம்ராமேஷுவவதாஷ்பயே । தாளமர்தளபேரீபிர்திவ்யமாநைஸ்ச கோஷயேத்| வைதிகம் தாந்த்ரிகம்வைவதயாவைதிகதாந்த்ரிகம் । த்ரிவிதம்கர்மஸம்ப்ரோக்தம் பஞ்சராத்ராம்ர்தார்ணவே|| வைதிகம்ப்ராஹ்மணாநாஞ்ச ராஜ்ஞாம்வைதிகதாந்த்ரிகம்|| தாந்த்ரிகம்வைஸ்யஸூத்ராணாம் ஸர்வேஷாந்தாந்த்ரிகஞ்சவா । வைதிகம்மந்த்ரஸம்யுக்தம்தாந்த்ரிகம்மந்த்ரவர்ஜிதம்|| மந்த்ரஸம்ஸ்காரஹீநஸ்ய குர்யாத்ஸ்ரீசூர்ணமந்த்ரகம் । அநாயப்ரேதரூபஸ்யதாந்த்ரிகஸ்ஸவிதீயதே|| நாம்நாப்ராகர்ம்தபுத்ராணாம் கந்யகாநாஞ்சயோஷிதாம் । சதுராஸ்ரமிணாம்யாமம் சூர்ணகர்மவிதீயதே|| ப்ரஹ்மமேயவிதௌதாவத்வைதிகம்கர்மகாரயேத் । அபரம்தாந்த்ரிகம்வைவக்ரியாமாத்ரஞ்சகேவலம்|| ஹரித்ராசூர்ணஸம்ஸ்காரம் க்ரியதாம் ப்ரயமேஹநி| அந்திமத்பாத்யவிதிவத்ப்ரஹ்மமேயப்ரயோகத:|| ம்ர்தஸ்யோத்தபநாத்பூர்வம் க்ரியாங்கிர்வர்த்யதத்வத: । உபவீதீபவேத்கர்த்தாப்ராப்துயாத்வைஷ்ணவாந்ஸதா || வத்யாஞ்ஜலிபுடஸ்திஷ்டந்வைஷ்ணவாநபிவாதயந்| ஹரித்ராசூர்ணகரணம் ஸவக்ஷீக்ரியதாம்ஸதா:|| இதிவ்ரூயாத்ஸதஸ்யாஸ்தே ப்ரதிவ்ரூயுஸ்ததைவச । ஆசா

பின்னையும் சிலநாள்கழிந்தவாறே யாதவப்ரகாசனுடைய[illegible]வுக்கு இத்தர்சநத்திலே ஊற்றம்பிறந்து, "இத்தர்சநத்திலேயாதவனுமிறங்கினனாலோ" என்றுநினைத்துக்கொண்டு வையமாளிகையேறுநிற்க, அவ்வளவிலே, "நல்லதுநல்லது" என்றுஒரு அசரீரிவாக்குண்டாக, அவளும் ஸ்வக்ருஹமேபோய், புத்ரனையாதவனுக்கு அச்சேதியையறிவிக்க; யாதவனும் நான்சிகாயஜ்ஞோபவீதத்யாகம்பண்ணினதுக்கு ப்ராயஶ்சித்தமாகபூப்ரதக்ஷிணம்பண்ணவேணும், அதுக்குநான்வ்ருத்தனாகையாலே அநுகூடாது" என்ன; அவளும், "நம்பிராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம் பண்ணிஸந்யஸியாய்" என்றுயாதவனுக்குச்சொல்ல; அவனும் அத்தை விச்வஸித்துக்லேசித்துக்கிடக்க; அன்றுராத்ரி யாதவப்ரகாசனுடைய ஸ்வப்நத்திலேபெருமாளெழுந்தருளி "நம்பிராமாநுசனைப்ரதக்ஷிணம்

பண்ணி "ஸந்ந்யஸியாய்" என்றருளிச்செய்ய ; யாதவனும் அத்தை அவிச்வஸித்து,மற்றைநாள் விடிவோறேதிருக்கச்சிநம்பிமடத்திலேவந்துஸேவித்து நம்பியைப்பார்த்து, "நம்பீ! நான் ஒருநினைவுநினைத்தேன், அத்தை நீர்பெருமாளுக்குவிண்ணப்பம்செய்து அவரருளிச்செய்த சேதியை, தேவரீர் அடியேனுக்கருளிச்செய்தருளவேணும்" என்று விண்ணப்பம்செய்ய ; பின்பு திருக்கச்சிநம்பியும், "அன்றுராத்ரி பெருமாளுக்குத் திருவாலவட்டம்ஸேவித்து ஏகாந்தமானவாறே பின்னையும் ஸேவித்துநிற்க ; பெருமாளும், "ஏன் ? நம்பி, ஒன்றுசொல்லுவாரைப்போலேயிருந்தீர்" என்று பெருமாள்திருவுள்ளமாயருள ; அப்போது, "யாதவப்ராகாசன், ஒருநினைவுநினைத்தேன், அவையெவை என்றுதேவரீரைக்கேட்டுவந்துசொல்லவேணும்என்று மிகவும் ஆதரவாய்நின்றான்,அவற்றை யருளிச்செய்யவேணும்"என்று விண்ணப்பம்செய்ய; பேரருளாளரும், நம்பீ ! அதுகேளீர்,' "அவனுடையமாதாவுக்கு நம்தர்சநத்திலே ஊற்றம்பிறந்துயாதவனைப்பார்த்து,'நம்மிராமாநுசனைப்போலே த்ரிதண்டஸந்ந்யாஸம்பண்ணி ஸங்கத்திலேயிருக்கவொண்ணாதோ' என்று நியமித்துச்சொன்னாள், நாமும் அவனுக்கு ஸ்வப்நமுகேநசொன்னோம், அதிலும் அவனுக்கு விச்வாஸமில்லாமையாலே உம்மைக்கேட்கச்சொன்னான், அப்படியே நம்மிராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணி த்ரிதண்டஸந்யாஸம்பண்ணச்சொன்னோமென்றுசொல்லும்" என்றருளிச்செய்து, நம்பீ! போதுவைகிற்றுக்காண் என்றனுப்ப ; நம்பியும், மடமேயெழுந்தருளி திருக்கண்வளர்ந்து மற்றைநாள்விடிவோறே யாதவப்ரகாசனைக்கண்டு, "வாரீர்யாதவப்ரகாசரே ! பெருமாள்திருவுள்ளம்பற்றினவார்த்தையைக்கேளீர்என்று, அருளிச்செய்து இவைஉமக்குநினைவோ" என்ன; யாதவனும்,"ஆம்" என்று திருக்கச்சிநம்பிஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து ; திருக்கச்சிநம்பி புருஷகாரமாக ராமாநுசன்திருவடிகளிலேமஹாவிச்வாஸம்பிறந்து மடமேபோய் ராமாநுசன்திருவடிகளிலே அடைவுகெடதண்டன்ஸமர்ப்பித்து,(புவியுமிருவிசும்புந்நின்னகத்த,நீயென்செவியின்வழிபுகுந்தென்னுள்ளாய்) என்றும், (சிக்கனச்சிறிதோரிடமும்புறப்படாத்தன்னுள்ளேயுலகுகள்,ஒக்கவேவிழுங்கிப்புகுந்தான்)என்றும், (அஹமாவிர்ஹவிஷ்யாமி) என்றும் சொல்லுகிறபடியே ராமாநுசன்திருவுள்ளத்திலே பெருமாள்ஸவிபூதிகராயிருக்கையாலே ராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணி ஸவிநயராய்நிற்க ; கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் ராமாநுஜன்திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்து, (த்வேஷாத்வைமத்யாதய:) என்கிறபடியே தேவரீருக்குப்பண்ணின த்வேஷந்தானே இவருக்கு உஜ்ஜீவநஹேதுவாய்த்து, (அஸ்மாஹிஸ்துல்யோஹவது) என்றுவிண்ணப்பம்செய்ய ; ராமானுசனும்,போரவுகந்தருளி,"இவர்-சிகாயஜ்ஞோபவீதத்யாகம்பண்ணினதுக்குப்ராயச்சித்தமும்பண்ணுவித்து செள்ளோபநயநாதிகளையும்பண்ணுவித்து,

த்ரிதண்டகாஷாயாதிகளையும்ப்ரஸாதித்து, (ப்ரயாநந்தாபஸம்ஸ்காரம் வைஷ்ணவைர்முநிஹிஸ்ம்ஸ்ருதம் | ஸர்வாஸ்ரமேஷு-வஸதாம்ஸ்த்ரீணாஞ்ச்ச த்விஜஸத்தம) என்றும் சொல்லியிருக்கையாலே திருவிலச்சினையும் ப்ரஸாதித்து,"கோவிந்தஜீயர்" என்று திருநாமத்தையும்சாத்தி மிகவும் க்ருபைபண்ணியருளினார்.

—❧❧✻❧❧—

கோவிந்தஜீயர் (யதிதர்மஸமுச்சயம்) என்கிற ப்ரபந்தமிட்டருளி திருநாடலங்கரித்தாரென்பது.

அதின்மற்றைநாள் ராமாநுசனும், கோவிந்தஜீயரைப்பார்த்து, கோவிந்தஜீயரே ! சாஸ்த்ரங்களிலே இதரவசநவையர்த்யங்கள் வாராதபடி, யதிதர்மஸமுச்சயம் என்கிறப்ரபந்தத்தைப்பண்ணும்" என்ன ; அவரும்நியமநப்படியே, (விபிசத்ஸுமாலிநம்ப்ரயோமோமூல்யகர்மவ | அஹோராத்ரக்ரியாஜாரோ லிங்கயர்மோதநிஸ்யதி:|| ப்ராயஸ்சித்தாநிஸம்ஸ்காரா: இத்யேகாதசபர்வக:) என்றும் சொல்லுகிறபடியே ஸங்க்ரஹப்ரபந்தத்தைப்பண்ணி ராமாநுசன்ஸந்நிதியிலே வைக்க;ராமாநுசனும்ஆத்யந்தமாகத்திருக்கண்சாத்தியருளி ஸந்தோஷித்து மிகவும் க்ருபைபண்ணியருளினார் ; அவரும் ஆசார்யபரதந்த்ரராய் ஸேவித்துக்கொண்டிருந்து அசிரேணபரமபதத்தை ப்ராபித்தருளினார்.

—❧❧✻❧❧—

நம்பெருமாள், பேரருளாளருக்கு அனுப்பியதிருமுகம் பயன்படாமற்போயிற்றென்பது.

அநந்தரம் இளையாழ்வாருடைய ஆச்ரமப்ராப்திமுதலான இச்சேதியை, கோயிலிலே ஆளவந்தார்ஸ்ரீபாதத்தில்முதலிகளெல்லாருங் கேட்டு ப்ரீதராய், நம்பெருமாள் ஸந்நிதியிலேசென்று தெண்டன்ஸமர்ப்பித்து, "ராமாநுசனை தேவரீர்ஸந்நிதியிலே நித்யவாஸம்பண்ணும்படிக்கும், தேவரீர்ஸ்ரீகார்யமாராயும்படிக்கும் இங்கேயழைத்துக்கொண்டருளவேணும்" என்று விண்ணப்பம்செய்ய; நம்பெருமாளும், இவர்கள் ப்ரார்த்தித்தபடியே தலைக்கட்டுவதாகத்திருவுள்ளம்பற்றிப் பேரருளாளருக்குத்திருமுகம்போகவிட்டருள ; பேரருளாளரும் திருமுகத்தையங்கீகரித்து, "தந்தாமபிமாநத்தைவிடிலன்றோ நாம்நம்மிராமாநுசனைவிடுவது" என்றருளிச்செய்து மீளவும்திருமுகம் போகவிட்டருளினார்.

—❧❧✻❧❧—

திருவரங்கப்பெருமாளரையர், பேரருளாளரை இசையாலே உகப்பித்து, ராமாநுஜனை ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்தது.

முதலிகளும் இத்தைக்கேட்டு, இனிச்செய்யவடுப்பதென்'' என்று முசித்து, பின்பு ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரைப்பார்த்து, பேரருளாளர், பாட்டுக்குபோரகல்லராயிருப்பர், ஆகையாலே, அவரை, (வேகவத்யுத்தரேதீரே க்ஷேத்ரேஸத்யவ்ரதாஹ்வயே । அஸ்திகாஞ்சீதிவ்யாதாபுரீபுண்யவிவர்த்திநீ) என்றும்சொல்லுகிறபடியே-வேகவதியின்வடகரையிலே உத்தமமான காஞ்சீமஹாநகரியில் வைத்துக்கொண்டு ச்ரேஷ்டமானஹஸ்திகிரியின்மேலே யெழுந்தருளியிருக்கிற பேரருளாளரைஸேவித்து, பின்பு, அவர் ✻ அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதராயிருப்பர், அவரைப்பாடியுகப்பித்து, ''நமக்குராமாநுசனைத் தந்தருளவேணும்''என்று விண்ணப்பம்செய்து, ராமாநுசனை யெழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டுவரவேணும்'' என்று விண்ணப்பம் செய்தார்கள் ;

ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரும், முதலிகளருளிச்செய்தத்தைக்கேட்டு நம்பெருமாளை தண்டன்ஸமர்ப்பித்து அப்போதேபுறப்பட்டுப் பெருமாள்கோயிலைநோக்கியெழுந்தருளினார். இவரெழுந்தருளினசேதியை ஸ்வஜநமான வரந்தரும்பெருமாளரையர்கேட்டு எதிர்கொண்டு தம்முடையதிருமாளிகையிலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் அமுதுசெய்யப்பண்ணிஸத்கரிக்க ; அரையரும் அமுதுசெய்து ஸஹ்ர்தயராயெழுந்தருளியிருந்தார். அதின்மற்றைநாள் பேரருளாளரும், வையமாளிகையிலே ''கச்சிக்குவாய்த்தான்'' என்கிற திருமண்டபத்திலேயேறியருளி அனைத்துக்கொத்திலுண்டானவர்களும்ஸேவித்திருக்க ; திருக்கச்சிநம்பியும் திருவாலவட்டம்பரிமாற, அவ்வளவிலேராமாநுசனும் த்ரிதண்டமண்டிதகராய், நம்பி விண்ணப்பம் செய்த வரதராஜாஷ்டகத்தையநுஸந்தித்துக்கொண்டுஸேவித்திருக்க ; அவ்வளவிலே திருக்கச்சிநம்பியும், திருவரங்கப்பெருமாளரையரெழுந்தருளின சேதியைக்கேட்டருளி அவர்திருமாளிகையிலேயெழுந்தருளி தண்டன்ஸமர்ப்பிக்க ; அவரும் தண்டன்ஸமர்ப்பிக்க ; இப்படிஅந்யோந்யம்வந்தநபராயிருந்துகொண்டிருக்கச்செய்தே, அரையரும், ''வரதராஜனைஸேவிக்கவேணும்''என்று திருக்கச்சிநம்பியோடேவிண்ணப்பம்செய்ய; நம்பியும்ஸம்மதித்துஅரையரையுங்கூட்டிக்கொண்டுபெருமாள்திருவோலக்கமேயழைத்துக்கொண்டுபோய் ஸேவிக்கப்பண்ண ; அரையரும்வரதராஜனைஸேவித்து, (கடாபுநஃசங்கவராங்கதக்கல்பகத்வஜாரவிந்தாங்குசவஜ்ரலாஞ்சநம் । த்ரிவிக்ரமத்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி) என்கிறச்லோகத்தை யநுஸந்தித்துக்கொண்டிருக்க ; பேரருளாளரும் போரவுகந்தருளி, இவர்க்குதீர்த்தம் திருமாலைதிருப்பரியட்டத்துடனே சடகோபனையும் ப்ரஸாதித்தருள ; அரையரும், (திருப்பொலிந்தசேவடி யென்சென்னியின்மேல் பொறித்தாய்) என்றுஅங்கீகரித்து, பின்பு பக்திபுரஸ்ஸரமாக, (என்னெஞ்சமேயானென்சென்னியான் । தானவனைவன்னெஞ்சங்கீண்டமுகில்வண்ணன் । முன்னெஞ்சே । ஊழியானூழிபெயர்த்தானுலகேத்தும்ஆழியானத்தியூரான்) என்றும், (பிணியவிழ்தாமரைமொட்டலர்த்தும் பேரருளாளர்) என்றும், (தொழுதெழுதொண்டர்கள்தமக்குப்। பிணியொழித்தமரர்பெருவிசும்பருளும்பேரருளாளன்) என்றும் இப்படி ஆழ்வார்கள்ஸ்ரீஸூக்தியான ✻ பண்ணார்பாடலின்கவிகளை தேவகாநத்திலே இயலிசையாகப்பாடாநிற்க ;

(தென்னுவென்னுமென்னம்மான்)என்கிறபடியேபேரருளாளரும் பேரிரவுகந்தருளி, தாம்சாத்தியிருந்த திருமுத்தின்தாவடம், திருப்பரியட்டம், சத்ரசாமராதிகள்முதலாகப் பலவரிசைகளெல்லாம் ப்ரஸாதித்தருள ; திருவரங்கப்பெருமாளரையரும், ''நாயன்றே! அடியேனுக்கு இவற்றிலொன்றும் அபேக்ஷையில்லை, தேவரீர், ✻ அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதராகையாலே அடியேனர்த்தித்தத்தைத் தந்தருளவேணும்'' என்று விண்ணப்பம்செய்ய ; பேரருளாளரும், ''நீர்வேண்டினத்தைக்கொள்ளும்'' என்ன ; அரையரும் ஸந்தோஷித்து, ராமாநுசனைக்காட்டி ''இவரை அடியேனுக்குத்தந்தருளவேணும்''என்று விண்ணப்பம்செய்ய ; பேரருளாளரும், அவர்வார்த்தையைத்திருச்செவிசாத்தியுசித்து, ''அப்போதே அறியப்பெற்றிலோம் என்றும், நம்மிராமாநுசன்தவிர வேண்டினத்தைத்தருகிறோம்'' என்றுவினவியருள ; அரையரும், ''(ராமோத்விர்நாபிபாஷதே) என்கிறபடியே தேவரீர் இரண்டுவார்த்தையருளிச்செய்யலாமோ'' என்று விண்ணப்பம் செய்ய ; பேரருளாளரும், ''ஆனால்தந்தோம்'' என்றருளிச்செய்ய ; அரையரும், பெருமாளைஸேவித்து அநுமதிகொண்டு ராமாநுசன்திருக்கையைப்பிடித்து, ''கோயிலுக்கெழுந்தருளவேணும்'' என்ன ; ராமாநுசனும் பேரருளாளருக்கு தண்டன்ஸமர்ப்பித்துநிற்க ; பேரருளாளரும், (சந்ததியில்லாமனைமகள்போலே தடமூலையில்லாமடமகள்போலே, செந்தணலில்லா வாகுதிபோலே தேசிகனில்லாவேதநைகபோலே, சந்திரனில்லாத்தாரகைபோலே இந்திரனில்லாவுலகம்போலே, எங்களிராமாநுசமுனிபோனால்இப்புவிதானினியெப்படியாமோ) என்றருளிச்செய்து ராமாநுசனைத்தனித்து விடைகொடுத்தருள ; பின்புராமாநுசனும், திருவரங்கப்பெருமாளரையருடனேகூடக் கோயிலுக்கெழுந்தருளப் புறப்பட்டருளி, கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும்கடாக்ஷித்தருளி, ''மடமேபோய்நம்முடைய

திருவாராதநமான பேரருளாளரையெழுந்தருளுவித்துக்கொண்டு வாருங்கோள்" என்றருளிச்செய்ய ; அவர்களும் அப்படியே யெழுந்தருளுவித்துக்கொண்டுவந்து கூடினவளவிலே திருக்கச்சிநம்பியும் இவர்களைவழிவிட்டு எழுந்தருள, ராமாநுசனும், (திக்குநோக்கித்திரும்பித்திரும்பியே தேவராசர்தன்கோயிலைநோக்கியே | செக்கர்மேனிமிகப்பெருக்கைகளால் சோர்ந்தகண்கள்பனிநீர்தெறித்திட | மிக்ககோயில்பெருவழிதன்னிலே வேதநல்லமறையோர்கடம்முடன் | புக்ககத்துக்குப்போகிறபெண்கள்போல் போயினார்பெரும்பூதூர்முனிவனார்) என்றும், (யஃப்ருத்வாநரோயாதிநரகம்நாப்யயோஷதிம்| நவஜ்ஞாநஸ்ய ஸம்ஸோகவம்நவைவயமஸோவசம் || தஸ்மாத்ரங்கம்மஹாபுண்யம் கோநஸேவேதவைஷ்யிமாந்)என்றும்சொல்லுகிறபடியே ஜ்ஞாநவர்த்தகமுமாய் புண்யவர்த்தகமுமாய், ✱ நமன்றமராலாராயப்பட்டறியாததுமான ✱ திருவரங்கப்பெருநகரைநோக்கிப் பயணகதிகளிலேயெழுந்தருளி வடவாற்றிலே நீராடியருளி கேசவாதியான திருநாமங்களையும் சாத்தியருளி எழுந்தருளியிருக்கிறவளவிலே, இவரெழுந்தருளின சேதியைப் பெரியபெருமாள்கேட்டருளி, தேசாந்தரகதனானபுத்ரன் வருகிறானென்றால்மாதாபிதாக்கள்காணவாசைப்படுமாப்போலேராமாநுசனைக்காணவாசைப்பட்டு மிகவும்ப்ரீதராய், "நம்மிராமாநுசனை எதிர்கொண்டுவாருங்கோள்" என்று சேனைமுதலியாருக்கு அருள்பாடிட்டருள ;

—✱—

ராமாநுசன், தம்மையெதிர்கொண்டுவந்தசேனைமுதலியார்முதலான அனைத்துப்பரிகரத்துடனே அழகியமணவாளன்திருமண்டபத்தில் திருக்கைத்தலத்திலெழுந்தருளின நம்பெருமாளைஸேவித்து, சேர்த்தியில்மங்களாசாஸநம்செய்தருளியது.

சேனைமுதலியாரும், ஆளவந்தார்ஸ்ரீபாதத்தில் பெரியநம்பிமுதலானமுதலிகளும், ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் மற்றுமுண்டான பெருமாள்பரிகாரமும்அனைத்துக்கொத்தும்ஸகலவாத்யகோஷத்துடனே வந்து, ஜீவன்முக்தராய்ப்போருமவர்களை, நித்யஸூரிகளும் திவ்யாப்ஸரஸ்ஸுக்களும் விரஜைக்கரையிலேவந்து எதிர்கொள்ளுமாப்போலே வடவாற்றங்கரையிலேவந்துஎதிர்கொள்ள ; ராமாநுசனும்ஸவிநயராய் சேனைமுதலியார்ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து, அநந்தரம் பெரியநம்பிதிருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, அநந்தரம் பெரியோர்களெல்லாருக்கும் தண்டன் ஸமர்ப்பித்து, பின்பு இவர்களுடனேகூடவெழுந்தருளிப்போய், (கொடியணிநெடுமதிள்கோபுரங்குறுகினார்)என்கிறபடியே க நெடுகொடிமதிளையும் தாமோதரப்பெருந்திருக்கோபுரத்தையும்கிட்டிதண்டன்ஸமர்ப்பித்துமாடத்திருவீதியிலே புகுந்து ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, த்ரிவிக்ரமன்திருவீதியை

ப்ரதக்ஷிணமாகவெழுந்தருளிப் பெரியஸ்ரீபலிபீடத்தருகேதண்டன்ஸமர்ப்பித்து, ஸேவாக்ரமத்திலே ஆழ்வார்களையும் திருவடித்தொழுது ஸ்ரீரங்கநாயகியாரையும்ஸேவித்து, ஸ்ரீசந்த்ரபுஷ்கரிணியின் தீர்த்தத்தையும்ஸ்வீகரித்து,வண்குருகூர்ச்சடகோபனையும்,கண்ணிநுண்சிறுத்தாம்பையநுஸந்தித்துதண்டன்ஸமர்ப்பித்து, திருமங்கையாழ்வாரையும் திருவடித்தொழுது,✱ அணியரங்கன்திருமுற்றத்திலேசென்று தண்டன் ஸமர்ப்பித்து உள்ளேபுகுந்து ப்ரணவாகாரவிமாநத்தையும்ஸேவித்து, ஸேனைமுதலியாரையும்ஸேவித்து அழகியமணவாளன் திருமண்டபத்திலேயெழுந்தருளினவளவிலே, நம்பெருமாளும் திருக்கைத்தலத்திலே புறப்பட்டெதிரேயெழுந்தருள்; இவரும் விழுவதுதொழுவதாய்ஸேவித்து, (பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம்துறந்தார்தொழுதாரத்தோள்)என்று விண்ணப்பம்செய்ய; நம்பெருமாளும், "நீர்வந்ததூரத்துக்குப்போருமோநாம்வந்தது"என்று உள்ளேபுகுந்தருளிசேர்த்தியிலேயெழியருள; இவரும்,✱மணத்தூணேபற்றிநின்றுவாயாரவாழ்த்திப்ரேமபரவசராய்க்கொண்டு ✱ அமலனாதிபிரானில்படியே பாதாதிகேசாந்தமாக ஸேவித்து,திருப்பல்லாண்டையும் அநுஸந்தித்துக்கொண்டு; (நமோநமோவாங்மநஸாதிபூமயே நமோநமோவாங்மநஸைகபூமயே | நமோநமோநந்தமஹாவிபூதயே நமோநமோநந்ததயைகஸிந்தவே|| நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீநபக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே | அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம்ஶரணம்ப்ரபத்யே) என்று பரமாசார்யரான ஆளவந்தார், தம்மைக்குறித்துப் பெருமாள்விஷயமாகவருளிச்செய்ததிவ்யஸூக்தியை அநுஸந்தித்துக்கொண்டிருக்க;

—✱—

நம்பெருமாள்,"உபயவிபூதியையுமுடையவர்"என்றுராமாநுசனுக்குத் திருநாமம்சாத்திகோயில்கார்யங்களை ஆராய்ந்துபோரும்படி சட்டளையிட்டருளியது.

பெரியபெருமாளும் மிகவும் க்ருபைபண்ணியருளி, இவர்க்கு, தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டத்துடனே ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்தருளி ✱ திருப்பவளச்செவ்வாய்திறந்து, உமக்கு (பொங்கோதஞ்சூழ்ந்தபுவனியும் விண்ணுலகும், அங்காதுஞ்சோராமேயாள்கின்ற) என்கிறபடியே - "உபயவிபூத்யைச்வர்யகைங்கர்ய ஸ்ரீயையும் நாம் உமக்குத்தந்தோம், நீர் உபயவிபூதியையுமுடையவர்" என்று திருநாமம்ப்ரஸாதித்தருளி, நம்முடையகோயில்கார்யத்தையெல்லாம் ஆராய்ந்துநடத்தும்" என்று திருவுள்ளமாயருள ; உடையவரும் "யந்யோஹமஸ்மி"என்று அருளிச்செய்து, பின்புபெரியநம்பிதிருமுகமண்டலத்தைப்பார்த்து, " (பெரியார்க்காட்பட்டக்கால்பெறுதபயன் பெறுமாறு) என்று தேவரீர்க்காக அடியேனை நம்பெருமாள்வாழ்வித்

தருளினர்" என்று விண்ணப்பம்செய்ய ; பெரியநம்பியும், "ஆழ்வார், பூதபவிஷ்யத்வர்த்தமாநமறிந்தவராகையாலே, (கலியுங்கெடும் கண்டுகொண்மின்) என்று தேவரீர் திருவவதாரத்தைக்கடாக்ஷித்தன்றோவருளிச்செய்தது" என்றருளிச்செய்தருளினர். அவ்வளவிலே பெரியபெருமாளும், பஹுமாநத்துடனே சேனைமுதலியாரையும் தம்முடையஅனைத்துப்பரிகரத்தையும்மற்றுமுண்டானவர்களையுங்கூட்டி, "மடத்திலே நம்முடையவரைவிட்டுவாருங்கோள்" என்றுநியமித்தருள ; அவர்களும் அப்படியே அனைத்துபரிகரமும் ஸம்ப்ரமத்துடனேஸேவிக்க மடத்திலேப்ரவேசித்தருளி ஆழ்வான்முதலானமுதலிகளோடேவாழ்ந்துகொண்டெழுந்தருளியிருந்தார். அவ்வளவிலேஅங்குண்டான அனைவரும், திருவரங்கப்பெருமாளரையரைப்பார்த்து, "கோயில்மணியான*ஸ்ரீரங்கமங்களமணியோடே ராமாநுஜஜீவரத்நத்தைப் பெருவருத்தத்தோடே கொண்டுவந்துசேர்த்தீரே" என்று அவரைப்பெருக்கவாதரித்து உபகாரஸ்ம்ருதிபண்ணி ப்ரீதராயிருந்தார்கள்.

—※—

உடையவர் நம்பெருமாளுடைய கைங்கர்யங்களுக்கெல்லாம் தனித்தனியே ஒவ்வொருவரையேற்படுத்திக்குறைவற நடத்தியருளினரென்பது.

மற்றைநாள் * கீழ்வானம்வெள்ளென்று கிழக்குவெளுக்கிறவளவிலே திருப்பள்ளியுணர்ந்தருளி முதலிகளுடன் கீழ்திக்கைநோக்கியெழுந்தருளி, மகழாதிகேசவன்துறையிலே, "எதிராசன்துறை" என்று தம்துறையென்னும்படிநீராடி நித்யாநுஷ்டாநங்களையும் நிறைவேற்றித்திருமண்காப்புச்சாத்தி, காட்டுச்சிங்கர்முதலான சுற்றுக்கோயிலெம்பெருமான்களையும்ஸேவித்து, * ஆராமஞ்சூழ்ந்த வரங்கத்திருத்தோப்புக்களையும்ஸேவித்து, அங்குண்டான பூமரந்தொடக்கமானவற்றையும், இப்பால் * அன்பொடுதென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளுகிற திருமுகத்துறையிலேநின்று திருக்கண்பார்வைக்கிலக்காம்படி ஸேவித்து, மேற்கேயெழுந்தருளிச் சூடிக்கொடுத்தநாய்ச்சியாரையும் ஸேவித்து, *சூடிக்கொடுத்தவள்தொல்லருளால் வாழ்கின்றவள்ளலாய்ப்புறப்பட்டு, அவ்வருகிலுண்டான * வண்டினமுரலுஞ்சோலைகளையும் * அங்கயல்பாய்வயல்களையுங்கண்டு களியாநின்றுகொண்டு, வடக்கேயெழுந்தருளி, (மீனோடாமைகேழலரிகுறளாய் முன்னுமிராமனாய்த்தானாய்ப்பின்னுமிராமனாய்த்தாமோதரனாய்க் கற்கியுமானான்றன்னை) என்கிற தசாவதாரக்கோயிலையும், (கன்னபுரத்தடியன் கலியன்) என்கிற திருமங்கையாழ்வாரையும் திருவடித்தொழுது வடக்குத்திருவாசலாலே உள்ளேயெழுந்தருளி, * ஸ்ரீரங்கஹர்ம்யதலமங்களதீபலேகையான ஸ்ரீரங்கநாயகியாரையும், (காஞ்ஸ்தே) இத்யாத்யநுஸந்தாநத்

தாலே விநதராய்ஸேவித்து, *பூவளரும்திருமகளாலருள்பெற்றுப்புறப்பட்டு, ப்ரதக்ஷிணமாகவெழுந்தருளிப் பெரியதிருவடியையும் திருவடித்தொழுது, உள்ளேபுகுந்து பெரியபெருமாளைஸேவித்து, அவராலே பூர்வோக்தப்ரகாரத்தின்படியே ஸத்க்ருதராய் ப்ரீதியுடனே உள்ளிலும் புறப்பட்டுவர; அவ்வளவிலே அனைத்துக்கொத்திலுண்டானவர்களும் வந்து திருவடிகளிலேஸேவிக்க ; பின்பு உடையவரும் பெரியதிருமண்டபத்திலேயெழுந்தருளியிருந்து, பெருமாளுக்கு அமுதுபடி சாத்துப்படிகளெல்லாம் அங்குத்தைக்கு அநுரூபமாகவே நாள்தோறுமாராய்ந்துபோருகிறவர். அமுதுபடி, நெய்யமுது, மிளகுபொடி, தளிகைக்கு பதக்கு உழக்கு அழாக்கு ஆழாக்காம்படியாகவும், கறியமுது கொம்பஞ்சு கொடியஞ்சும் கந்தமூலபலாதிகளுடனும் ஸூபாபூப க்ருத க்ஷீரசர்க்கராஜ்யாதிகளுடன்படைத்து நீட்டும்படியாகவும், மற்றும் திருமடைப்பள்ளி, திருமண்டபங்கள், கருவூலங்களழிவுசோர நன்றாகவாராயும்படியாகவும் கற்பித்தருளி, அனைத்துக்கொத்திலுண்டானவர்களையும்*அண்டர்கோனணியரங்கனுக்கு * அத்தாணிச்சேவகம்செய்துபோரும்படிக்கு அண்ணிதாகத்திருமதிளுக்குள்ளே யிருக்கும்படி கற்பித்து, காலோசிதமாக அமுதுசெய்தருளும்படி ஆராய்கைக்கு ஆத்மஸமரான முதலியாண்டானைக்கற்பித்தருளியும், அவர், பால்குழம்பு அமுதுசெய்தவநந்தரம் நாவல்பழம் அமுதுசெய்யப்பண்ணின படியைக்கேட்டுக் கலங்கியருளி, அந்தவிசேஷயத்தை ப்ரத்யௌஷதத்தாலே பரிந்துபரிஹரித்தும்போர; அவர் * ஸர்வம்பலவதஃபத்யமன்றோ என்றதுக்கு இந்தஜ்ஞாநம் உனக்கு நசிக்கக்கடவது என்றருளிச்செய்து அதிஸுகுமாரமான திருமேனியை அடிக்கடிபேணிக்கொண்டு, தம்மைப்போலே, (அன்பினால்ஞாநநீர்கொண்டாட்டுவன்) என்னும்படி ப்ரேமார்த்ரசித்தராய்ப்ரதிதிநம் திருமஞ்சநமெடுத்து அடிமைசெய்யும்படியாகவும், (நின்பூவைவீயாமேனிக்குப் பூசுஞ்சாந்தென்னெஞ்சமே) என்கிறபடியே அநுராகரஞ்ஜிகமான கர்ப்பூரகஸ்தூரி காஶ்மீர ஹிமவாரி குங்குமஸஹிதமாக ஸம்மேளநம்பண்ணிமிதிச்சுச் சாத்தும்படி சதுரரைக்கற்பித்தும், (கண்ணியெனதுயிர்) என்னும்படியான காதலாலே * செண்பகமல்லிகையொடு செங்கழுநீரிருவாட்சியெண்பகர்பூவும், மற்றும் * எண்டிசையுமுள்ள பூவுங்கொண்டுவந்து * கலம்பகன்புனைந்து, அலங்கலந்தொடையல் * சூட்டுநன்மாலையென்னும்படியான திருமாலைசேர்த்து நீட்டுகைக்கு மாலாகாரதுளஸீப்ர்த்யரையும், (ஏலுமாடையும்) என்னும்படி திருவரைக்குப்பாங்காகத் திருப்பரியட்டம்லாட்டி நாநாவர்ணவிசித்ரமாக்கி ஸுகஸ்பர்சமாகக்கொட்டிமடித்து ஸந்நிதியிலே நீட்டுகைக்கு ஸ்ரீவைஷ்ணவவண்ணத்தானையும், (ஞாநச்சுடர்விளக்கேற்றினேன்) என்கிற ப்ரேமத்தாலேகர்ப்பூரஸர்ப்பிதீபாதிகள் ஏற்றும்படியாகவும், கர்ப்பூர

ஸஹிதமாக அடிக்கடி அடைக்காய்திருத்தி நீட்டும்படியாகவும், அதுக்குமேலாக * சிறுகாலேயூட்டி யொருப்படுத்தும்படியாகவும், * வாய்லகினின்னடிசில் * நெய்யமரின்னடிசில் நீட்டும்படியாகவும், அதுக்குமேலே திருப்பள்ளிக்கட்டிலிலே தாலாட்டியாட்டும்படியாகவும், மற்றும் அனைத்துக்கொத்திலுண்டானவர்களை அவ்வவபரிசர்யைகளைப் பரிவுடனேசெய்துபோரும்படியாகவும் கற்பித்து, இப்படிகோயில்குறைவறுத்து நாள்தோறும் திருவாராதநம் நன்றாகநடத்திக்கொண்டு போருகிறகாலத்திலே ;

—❧❧*❧❧—

உடையவர், திருவரங்கப்பெருமாளரையரிடத்தில் திருவாய்மொழியைப் பண்ணிசைதாளத்துடனேயோதி, தம்மைப்போலே பாடுவார் பலரையேற்படுத்தினாரென்பது.

உடையவர்க்கு, *மதிளரங்கர்வண்புகழ்மேலான்றதமிழ்மறைகளான திருவாய்மொழியோதத்திருவுள்ளமாய்ப் பெரியநம்பிதிருமாளிகைக்கெழுந்தருளி இத்தை விண்ணப்பம்செய்ய; பெரியநம்பியும், உடையவரருளிச்செய்தத்தைக்கொண்டு உடையவரைப்பார்த்து, “தேவரீர் திருவாய்மொழியையும் பெரியதிருமொழியையும்திருவரங்கப்பெருமாளரையர்ஸந்நிதியிலே அதிகரித்தருளும்” என்று அருளிச்செய்ய; உடையவரும் நம்பியநுமதியுடனே, (அய்யாயயஃயதிந்த்ரம்ய꞉பாரம்குருஸஹக்ஷிதம்।தந்நாயவம்ஶ்யம்வந்தே ஹம் ஶ்ரீரங்காயியதேஶிகம்) என்றும்சொல்லுகிறபடியே- திருவரங்கப்பெருமாளரையர்ஸந்நிதியிலேதிருவாய்மொழிஓதுகிறநாளையிலே அவர்பாடுகைக்குமுறையாக, மஞ்சள்காப்புசாத்தியும், இப்படிசுச்ரூஷாபூர்வகமாகத் திருவாய்மொழியைப் பண்ணிசையுடனேயோதிச்சாத்தினவநந்தரம், திருவாய்மொழியைப் பண்ணிசைதாளத்துடனேபாடும்படி அநேகம்விண்ணப்பம்செய்வாரைச்சேர்த்தருளியும், “செந்தமிழ்பாடுவார்வீதி” என்று அதுவேநிரூபகமாம்படி ப்ரதிஷ்டிப்பித்தும், தாமும், (திருவாய்மொழியின்-இன்னிசைமன்னுமிடந்தோறும்) என்னும்படி அவர்கள்ஸேவிக்குமிடத்துக்குஎழுந்தருளியிருந்து பாவங்களைகடாக்ஷத்தாலேகாட்டியருளியும், இப்படி அநுகூலரானவர்களுடனேவாழ்ந்துகொண்டுபோருகிறவர்.

பெருமாளுக்குத் திருமேனிக்காவலாகமங்களாசாஸநபரரை ஆராய்ந்துபோருகிறவளவிலே பிள்ளையுறங்காவில்லிதாஸரை, *கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி நீண்டவப்பெரியவாயகண்களில் காவல்படுத்த ; அவரும் (வாளும்வில்லுங்கொண்டு) என்கிறபடியே திருமேனிக்காவலாய் அதுவேயாத்ரையாய்ப்போருகிறவர் ; தாமும் தம்மருமக்களான வண்டரையும் சுண்டரையும் உடையவர்திருவடி

களிலே ஆச்ரயிப்பிக்க ; அவர்களும் ஆச்ரயித்தவன்றுதொடங்கி மடத்துக்கு ததீயாராதநத்துக்கு அமுதுபடி, பருப்பமுது, கறியமுது, நெய்யமுது நடத்திக்கொண்டுபோருவர்கள்.

—❧❧*❧❧—

நம்பெருமாள், ஒருகாலத்திலே வைகாநஸரீத்யா திருவாராதநம் கொண்டருளினதைநீக்கி, முன்போலே பாஞ்சராத்ரவிதிப்படி நடக்கும்படிபண்ணுவித்தாரென்பது.

அக்காலத்திலே ஒருகாலவிசேஷத்திலே ஒருஅவாந்தரத்திலே வைகாநஸர் திருவாராதநம்பண்ணிக்கொண்டுபோராநிற்க, அத்தைத் த்விர்ப்பித்து, (ஸ்ராஹ்மணை꞉பஞ்சராத்ரஜ்ஞை꞉பஞ்சஹிர்தீக்ஷிதைஸ்ஸஹ। நித்யைர்நைமித்திகைஶ்சைவநித்யமாநர்ச்யவைவிஶ꞉) என்றும், (தஸ்மைப்ரோவாசஸ்பகவாந்பஞ்சராத்ரம்ஸ்வயம்ஸுவே। தத்ரார்ச்யதிவைநித்யம்நித்யநைமித்திகைரபி) என்றும், (கோமந்த்ர꞉கஶ்சதேகல்ப꞉பூஜநேபுருஷோத்தம꞉।நிஜபூஜயதாம்பும்ஸாம்பலம்தத்ப்ரூஹிமேச்யுத;) ஸ்ரீபகவாநுவாச ; — (ஸாத்வதம்பௌஷ்கரஞ்சைவஸாம்ஹிதேபஞ்சராத்ரகே। தஜ்ஜக்தேநக்ரமேணைவ த்வாதஶாக்ஷரவித்யயா॥தீக்ஷிதோதீக்ஷிதைஸ்ஸார்யம்ஸாத்விகை꞉பஞ்சபிர்பரை꞉। அஷ்டாங்கேநவியாநேநநித்யமர்ச்யஸக்திமாந்) என்றும் சொல்லுகிறபடியே பூர்வமேவநடந்துசெல்லுகிறபாஞ்சராத்ரோக்தமான பாரமேச்வரஸம்ஹிதையின்படியே திருவாராதநம்கொண்டருளிப்போருகிற பரவாஸுதேவரான ஸ்ரீரங்கசாயிக்கு த்வாதசாக்ஷரநிஷ்ணதராய்பஞ்சராத்ரவிசாரதரானபரமபாகவதர்களைத் திருவாராதநம்பண்ணிக்கொண்டுபோரும்படி கட்டளையிட்டருளி, ஆளவந்தாருடைய ஆகமப்ராமாண்யத்தின் பஞ்சராத்ரசாஸ்த்ரம் எங்கும்ப்ரகாசமாகஸஞ்சரிக்கும்படி ப்ரமாணோத்கர்ஷமாக ப்ரதிஷ்டிப்பித்து, ப்ரபஞ்சாஉபலாயம்பண்ணி வஞ்சகராய்த்திரியுமவர்களையும் பஞ்சாயுததரராய் பஞ்சகாலபராயணராய் பஞ்சபாணபராங்முகராய் பஞ்சார்த்தஜ்ஞாநராய்ப்போரும்படி * திருத்தித் திருமகள்கேள்வனுக்காக்கியும், (அரங்கன்செய்யதாளிணையோடார்த்தான்) என்னும்படி திருவடிகளோடேஸம்பந்தித்துப் பெருமாளுக்குப்ரியதமராய், பெருமாளுக்கு நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களை தாழ்வறநடத்திக்கொண்டுபோருகிறகாலத்திலே;

—❧❧❧❧—

பெரியதிருமலைநம்பி, காளஹஸ்தியில் ருத்ராபிஷேகத்துக்குக் குடமெடுத்துவருகிற கோவிந்தபட்டரைக்கண்டு வார்த்தைசொல்லியது.

முன்பு திருமலைநம்பிஸந்நிதிக்குப்போகவிட்டருளின ஸ்ரீவைஷ்ணவர், ஹர்ஷப்ரகர்ஷத்துடனே கோயிலிலேபுகுந்து உடையவர்ஸந்நிதியிலேவந்து ராமாநுசன்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து ஸவிநயராய்நிற்க ; ராமாநுசனும் அவர்முகவிகாஸங்கண்டு கார்யஸித்தியைநிச்சயித்து அந்தவ்ருத்தாந்தத்தைவிவரியும் என்ன; அந்தஸ்ரீவைஷ்ணவரும், திருவடிகளிலேதண்டன்ஸமர்ப்பித்து அஞ்ஜலிபண்ணிக்கொண்டு, தேவரீர்விடைப்ரஸாதித்தருளினபின்பு க்ரமத்திலே திருப்பதியேறித் திருமலைநம்பியைஸேவித்து தேவரீர்நியமநத்தின்படியை விண்ணப்பம்செய்தேன்; நம்பியும், இத்தைக்கேட்டு உகந்தருளி, நாமே இதுசெய்யக்கடவதாயிருக்க, "நம்மிராமாநுசனும், * எண்ணம்புகுந்துதித்திக்குமவராகப்பெற்றதே !" என்று தேவரீருடைய ஆநுகூல்யத்துக்கு உகந்ததிருவுள்ளத்தராய் அந்தக்ஷணத்திலே ஸ்ரீபாதத்தில் முதலிகளுடனே அடியேனையுங்கூட்டிக்கொண்டு காளஹஸ்திப்ரதேசத்தில் குளக்கரையிலேவிட்டிருக்க ; அப்போது உள்ளங்கைகுளிர்ந்தநாயனாரும்ருத்ராபிஷேகார்த்தமாகக்குடமெடுத்துவரக்கண்டு, நம்பியும் அவனைப்பார்த்து, "கொன்றைச்சடைமுடியானைக் குளிரநீராட்டினால் இன்றுனக்குண்டாம்பயனென்" என்றருளிச்செய்ய ; அவனும் இப்பாசுரங்கேட்டு * ஸ்மயமாகமுகனாய் இவரையும் ஏறப்பாராநின்றுகொண்டுபோனான்.

—❀❀✱❀❀—

பெரியதிருமலைநம்பிக்கும் கோவிந்தபட்டருக்கும் நடந்தஸம்வாதம்.

நம்பியும், * அவன்செய்யும்சேமத்தையெண்ணித் தெளிவுற்று மீண்டு திருமலையிலேயெழுந்தருளி வ்யாக்யாநம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்துபின்னையுமொருநாள்அக்குளக்குரையில்வடவ்ருக்ஷச்சாயையிலே யெழுந்தருளியிருக்க ; அங்கே அவனும்குடமெடுத்து வரக்கண்டு நம்பியும் * அப்போதொருசிந்தைசெய்து, * என்மகன்சூழவருவானாய் * உறங்குவான்போல் யோகுசெய்தவன்தானே * உணர்வைப்பெறவூர்ந்திறுவற்றேவென்று, பரமாசார்யஸூக்தியிலே (ஸ்வாஸாவிகாஸவிகாஸிவயோபித்தத்வம்) என்கிறச்லோகத்தை ஓலைப்புறத்திலேயெழுதி அவன்வருகிறவழியிலேபோகடுவித்துநிற்க; அவனும்வழியிலேஓலையையெடுத்துவாசித்துக்கொண்டுகிடக்கப்புகட்டிஜ்லத்தந்த ஆஹநித்துக்கொண்டுமீண்டுவருகிறவன், முன்னெறிந்தவோலையையெடுத்து எங்களைக்கண்டு,(சோகஸ்லோகத்வமாமத:) என்று வால்மீகிபகவான்

அர்த்தசிந்தனைபண்ணினாப்போலே, ச்லோகார்த்தபர்யாலோசனைபண்ணாநின்றுகொண்டுகிட்டவந்து நம்பியையபார்த்து, "உங்கள்கையிலநழுவினபொருளிதுவோ" என்ன; நம்பியும், "வேறுசிலர்பொருள்நழுவுமதொழிய நழுவும்பொருள்எங்களதல்ல" என்ன; அவனும், "அதுகிடக்கிடீர், நீங்களெல்லாரும் ஓரிடத்திலே நடக்கிறதென்" என்ன ; நம்பியும், "மார்க்கம்கலக்கமற்றிருக்கையாலே" என்ன ; அவனும், கேவலனுக்கு துர்மார்க்கங்களுண்டோ" என்ன; நம்பியும், "* பொருள்கையுண்டாய்ச்செல்லுமவனுக்கு அடுப்பதுவன்றோ" என்ன ; அவனும், "உற்றுரைவிடைகொடுக்கவந்தீர்களோ" என்ன ; நம்பியும், அதல்ல"கறவைகொள்ளவந்தோம்" என்ன; அவனும், "அநுஷ்டானங்களுக்கு பசுபாததூளிபவித்ரமன்றோ" என்ன ; நம்பியும், "அது இடமறிந்துநேர்படில் நல்லது" என்ன ; அவனும், "அது குறுக்குநெடுக்காகில்பேதமேது" என்ன; நம்பியும், "செவ்வேயிருக்க திர்யக்காகையேபேதம்" என்ன ; அவனும், "புதுவார்த்தைகட்டுக்களோ" என்ன ; நம்பியும், "பழையவார்த்தைகட்டுக்களுமப்படியே" என்ன; அவனும், "பூர்வவிசாரம்வேண்டாவோ" என்ன; நம்பியும், "பாத்வத்திலேகாணும் விசாரமிருப்பது" என்ன ; அவனும் நிருத்தரனாய் யதாஸ்தாநமேபோம்போது தலைதுலுக்குதலும் அடியடைவுகேடும் காணலாம்படிபோனான்.

நம்பியும்; (ப்ரஸாதமமமக்ஷீத்தம்) என்னுமாப்போலே நெஞ்சம் நெகிழாநின்றதேயென்று முதலிகளுடன் ஸல்லாபித்துக்கொண்டு, மீண்டு திருமலையிலெழுந்தருளினாரென்றவாறே, உடையவருங்கேட்டு ஆநந்தித்து, கூரத்தாழ்வான் முதலியாண்டான்முதலானமுதலிகளைப் பார்த்து, "கேட்டிகோளே, கோவிந்தனுக்கு ஆளவந்தாருடைய திவ்யஸூக்திநெஞ்சிலுற்று வாங்மாத்ரத்தாலே வைதண்டிகச்சாயைக்காட்ட ; அச்சாயையாலே நம்பியுடையஸூக்தி வைசத்யக்ரமங்களிலே, (கூடஸ்யோக்ஷரஉச்யதே) (அமரர்களாதிமுதல்வன்) (தேஹீ ஸம்ஸார்ஹவர்த்திந:) (நெறிவாசல்தானேயாய்நின்றானை) (என்னுடைமையும் நீயே) (ஜ்ஞாநேநஹீநபசுபிஸ்ஸமாந:) (யேவாலலாடபலகேலஸதூர்த்வபுண்ட்ரா:) (தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின்) (நீறுசெவ்வேயிடக்காணில்) (வேதமூலப்ரமாணாத்)(மிக்கவேதியர்வேதம்) (பர்மேஸர்வம்ப்ரதிஷ்டிதம்) (அவித்யயாம்ருத்யும் தீர்த்வாவித்யயாம்ருதமச்நுதே। ப்ராணவோ தநுச்சரோஹ்யாத்மா ப்ரஹ்மதல்லக்ஷ்யமுச்யதே।। அப்ரமத்தேநவேத்தவ்யம் சரவத்தந்மயோபவேத்) (நாராயணாத்ப்ரஹ்மாஜாயதே, நாராயணாத்ருத்ரோஜாயதே) என்றித்யாதிகளாலே ஸக்ர்த்காலத்திலேமநஸ்ஸு அவகாஹிக்கையாலும் இவரும் அவனைஸாத்யகோடியிலேயிட்டுக்கொண்டு திரும்பியருளுகையாலும், அவனும் நிருத்தரனாய் டோலாயமாநசித்தனாய்ப்போகையாலும்

இவருடைய ஸாமர்த்த்யமிருந்தபடியென் என்று முதலிகளைப்பார்த்தருளிச்செய்து,பின்னையென்னெஞ்சே:- அந்த ஸ்ரீவைஷ்ணவரும், (யஂபஂஷ்ப்ஸிஹதிபாணிஸ்யாஂயஂயஂபஶ்யதிவக்ஷுஷா। ஸ்தாவராணயபி முச்யந்தே ஸிஂபுநர்பாந்தவாஜநா:) என்கிறபடியே - தேவரீருடைய உபயவிதஸம்பந்தமும்பழுதுபோமோ,மூன்றும்கக்ஷியில் கார்யஸித்தியைக்கேட்டருளவேணும் என்று விண்ணப்பம்செய்தார்.

—⁂—

பெரியதிருமலைநம்பி, காளஹஸ்திதோப்பில் (தேவனெம்பெருமானுக் கல்லால்பூவும் பூசனையும்தகுமே) என்கிறவாக்யத்துக்கு வ்யாக்யாநமிட்டருளும்போது, கோவிந்தபட்டர், "தகாதுதகாது" என்று படலிகையையும் ருத்ராக்ஷத்தையும் சுழற்றியெறிந்து அவர்திருவடியில்ஆச்ரயித்தாரென்பது.

எங்ஙனேயென்னில்; - திருமலையில் ❋சிந்தாமணியையும்திருவடித்தொழுது, (படிக்களவாகநிமிர்த்தநின்பாதபங்கயமேதலைக்கணியாய்) என்று ப்ரபத்திபண்ணிப்புறப்பட்டு அவர்களெல்லைநிலத்தில் தோப்பில் எழுந்தருளியிருந்து திருமலைநம்பியும், ஸ்ரீபாதத்தில்முதலிகளுக்குத் திருவாய்மொழிவ்யாக்யாநம்நடத்தாநிற்க; அங்கே உள்ளங்கைகுளிர்ந்தநாயனாரும் புஷ்பாபஹரணம்பண்ணிக்கொண்டு ஒருபாதிரிமரமேறியிருக்க; அவ்வளவிலே ❋ திண்ணன்வீடு ப்ரஸ்துதமாக; அவரும் முத்தமிழ்விரகராகையாலே மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கத்தவிர்ந்து காலாம்பாட்டிலே, (தேவனெம்பெருமானுக்கல்லால்பூவும் பூசனையும்தகுமே) என்றுவர; அவனும் திடுக்கென்று குதித்துக் கையில் படலிகையையும் சுழற்றியெறிந்து தரித்திருந்த ருத்ராக்ஷவட்டங்களையும் அலங்கலழிய வீசிப்போகட்டு, "தகாதுதகாது" என்று நம்பிதிருவடிகளிலே அடைவுகெடவிழுந்துகிடந்து, (அஜ்ஞஸ்வாவராஹீநஸ்வமஸிகே।" ஹ்வேஸாமரேநிமந்ந: (ஹம்யோஹஂவிஷயாந்நிநா) என்றும், (க்ருஷ்ணமேவேக்ஷபாபூர்ணேநிஷ்டித்யேவாந்நஹிக்ஷகே। ஆஶயாதஂபரித்யஜ்யயாதஸ்யமமதத்ஃபலம்) என்றும் - "உபயவிபூதிநிர்வாஹகத்துக்கும் முடிசூடினவனிருக்க விரிதலையாண்டியை விரும்பினேன் என்றும், புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் புகைக்கண்ணனைப்பூசித்தேன் என்றும், கடல்மண்ணுண்டகண்டனிருக்கக்கறைக்கண்டனைக்காமித்தேனென்றும், திருமங்கையுறைமார்பனிருக்கத் திருவில்லாதோனைத் தொழுதேன் என்றும், பீதகவாடைப்பிரானிருக்கப் புலியுரியையுடையானைப் பின்தொடர்ந்தேனென்றும்,

சதிரானகங்கையடியானிருக்கத் தண்ணளியால் சுடுகாடுகாவலனைச்சுற்றிவலம்வந்தேனென்றும், பெருமாலாகிற பெருந்துழாய்மரமிருக்கப் பெருங்கையால்குடமெடுத்துப்பேய்ச்சுரைக்கு நீர்வார்த்தேனென்றும், இப்படிபலவகையாலும்புலம்பி, "இவ்வாத்மாவை உஜ்ஜீவிக்கும்வகையருளாய்" என்று திருவடிகளிலேவிழுந்து எழுந்திராமலிருக்க; நம்பியும், (ஸ்ராஹ்மணோநிர்வேதமாயாத்) என்றும், (நிர்வேதஂஹ்ரஸமாயயௌ) என்றும் நிர்விண்ணராய், (பஶ்சாத்தாபேந ஶுத்யதி) என்று சுத்தியோகமுண்டாய் (த்யக்த்வாபுத்ராஂஶ்சதாராஂஶ்ச) என்று - சரணாகததர்மம்கூடினவளவிலே ஆளவந்தார்க்ருபைபண்ணும்படிக்குக் குறையில்லையேயென்று முதலிகளைப்பார்த்தருளிச்செய்து அவரையும்கையைப்பிடித்து அவருடம்பையும்தடவிப் பூலபடியாக ஸாந்த்வவாதநம்பண்ணி,(ப்ரேக்ஷணீயமநுத்தமம்) என்று எதிர்விழிவிழித்து விஸ்ரம்பகதநம் நடவாநிற்க;

—⁂—

ஸ்தலத்தார், கோவிந்தபட்டரைப்பிடித்திழுக்க, அவர், "உங்களுக்கும் நமக்கும் பணியில்லை" என்ன; அவருடனே தங்கள்ஸ்வப்நவ்ருத்தாந்தத்தைச் சொல்லி மீண்டுபோனார்களென்பது.

இத்தைஸ்தாநத்தாரடையக்கேட்டு நம்பிஸந்நிதியிலேவந்து நம்பியைப்பார்த்து, "எங்கள்ஸ்தாநத்துக்குக் கடவரானவிவரை அம்மான்பொடியிடவடுக்குமோ" என்ன; நம்பியும், "அம்மான்பொடிக்குஈடுபட்டவிவரைக்கேட்டுக்கொள்ளுங்கோள், எங்கள்வழி அந்யாதர்சயம், அசல்வழிவருகிறோமல்லோம்" என்ன; அவர்களும் நம்பியருளிச்செய்தத்தைக்கேட்டு, "நாயனாரேவாரும்" என்றுகையைப்பிடிக்க; நாயனாரும், உதறி, "கையைப்பிடிக்கக்கூடுமோ" என்று வெறுத்து கருவூலத்திறவுகோல்,இலச்சினைமோதிரம்எல்லாவற்றையும்கொடுத்து, "உங்களுக்கும் நமக்கும்பணியில்லை" என்று கையைத்தட்டிமுகம்திரும்பியிருக்க; அவர்களும், நேற்றே இச்சேதிகேட்டு ❋ தாங்கள் தங்களுக்கு நல்லனவேசெய்யாதே, "எங்கள்பிரான்வழிவருவானென்" என்று உங்களுடனே சண்டைக்குநிற்பதாக எண்ணியிருந்தோம், காளஹஸ்தியுடையாரும் தங்கள்கனவிலேவந்து, (க்ருரேகலியுகே ப்ராப்தே நாஸ்திகைஃகலுஷீக்ருதே। கலிநாதூஷிதாவேதா:) என்றும் பாஹ்யரான பௌத்தாதிகளாலே வேதசாஸ்த்ரங்கள் ப்ரதூஷிதமாகாநிற்க, நாஸ்திகநிரஸநம்பண்ணுகைக்கு, (க்வசித்க்வசித்மஹாபாகா:) என்றும், (தர்மஸஂஸ்தாபநார்தாய) என்றும், (கலியுங்கெடும்கண்டுகொண்மின்) என்றும் இளையாழ்வார், யமுனைத்துறைவர், கோவிந்தபட்டர்இவர்களாகவும்இவர்கள்சேர்த்திக்கு சங்கசக்ரபார்ஷதங்களாக

கூரத்தாழ்வான் முதலியாண்டானுகவும் அவதரித்தார்கள். அது நமக்கும் உகப்பாகையாலே, (மதாநுமதிகோலோக:) என்கிறபடியே - "கோவிந்தபட்டருக்கு காசீவாஸாபேக்ஷயிருக்கையாலே, நாமே உள்ளங்கைகுளிர்வ்யாஜமிட்டு அழைப்பித்துக்கொண்டதொழியமற்றைப்படியல்ல" என்று தங்கள் ஸ்வப்நத்தைச்சொல்லிமீண்டார்கள்.

—✻—

கோவிந்தபட்டரும் அவர்தேவிகளும் பெரியநம்பிதிருவடிகளிலே ஆச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரம்பெற்றது.

இச்செய்தியைகோவிந்தர்ஸ்த்ரீயுங்கேட்டு, (ஹர்த்தாரமநுமத்யமதி) என்று பர்த்தர்தர்மத்தையங்கீகரித்துத் திருமலையிலேவருவதாகவந்து திருமலைநம்பிதிருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து ஸவிநயையாய் நிற்க; திருமலைநம்பியும், அவளையுங்கூட்டிக்கொண்டு திருப்பதியேறவெழுந்தருளி, (விளம்பமஸஹந்நிவ) என்னுமாப்போலே ✻ நெடுமாலருவிகுளக்கரையிலேவபநாதிகளையும்செய்வித்து, (ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோஹிபரமாத்மந:) என்றும், (தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வேஹ்யாத்மாநஃபரமாத்மந:) என்றும், (ஒண்சக்கரப்பொறியொற்றி) என்றும், (கோயில்பொறியாலேயொற்றுண்டு) என்றும், (ஸம்ஸ்காராஃபஞ்சகர்த்தவ்யா:) என்றும் சொல்லுகிறபடியே பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்தருளினார்.

—✻—

கோவிந்தபட்டரும் அவர்தம்பியாரும், திருமலைநம்பியை ஆச்ரயித்தசெய்திசொன்னஸ்ரீவைஷ்ணவரை ராமாநுஜன் உபலாளித்தருளினது.

இவரும், (உதயந்ஹிமஹாசைலாந்மேரோரிவதிவாகர:) என்னுமாப்போலே ஆத்மகுணங்களெல்லாம்ப்ரகாசித்து, (வேறொன்றும் நானறியேன்) (தேவுமற்றறியேன்) (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) ✻ நாவினுள்ளுமுள்ளத்துள்ளும் அமர்ந்ததொழிலினுள்ளும் நவின்று ஸகலவிதகைங்கர்யங்களும்செய்துகொண்டுபோராநிற்க; ஒருநாள் கோவிந்தப்பெருமாள், தம்முடைய திருத்தம்பியாருக்கு ஒரு நல்வார்த்தைசொல்லிப்போகவிட; தான், ஸ்வசரணபாதாந்த்ர தீயாய்க்கிடப்பானேன், (ஏகஸ்ஸ்வாதுநபுஞ்ஜீத) என்கிறவசநமறியாயோ" என்று சொல்லிப்போகவிட; அவரும் அத்தைக்கேட்டு, க்ருதாஞ்ஜலிபுடராய் தத்க்ஷணத்திலேபுறப்பட்டுத் திருமலையிலேகோவிந்தப்பெருமாள்புருஷகாரமாகத் திருமலைநம்பிதிருவடிகளிலே அடைவுகெட தண்டன்

ஸமர்ப்பித்து ஸவிநயராய்நிற்க; திருமலைநம்பியும், (ஸ்நேஹஸம்பந்தஸம்பவ:) என்னுமாப்போலே✻ அவரையும் மஹாபாபம்விடக்கடாக்ஷித்தருள; "கோவிந்தப்பெருமாள், சிறியகோவிந்தப்பெருமாளோடேகூட ✻ ததீயத்தஸ்வரூபஜ்ஞாநத்தையுடையராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்கள், அடியேன் இந்நாள்ஸேவித்திருந்து விடைகொண்டேன்" என்று விண்ணப்பம்செய்ய; ராமாநுசனும்போரவுகந்தருளி அந்த ஸ்ரீவைஷ்ணவர்க்கு ஸ்ரீபாததீர்த்தமும் தளிகையும் ப்ரஸாதித்து மிகவும் க்ருபைபண்ணியருளினார்.

—✻—

பெரியநம்பி, உடையவருக்கு இரண்டாமாவர்த்தி த்வயப்பொருளை விளங்கச்சொல்லியது.

அதின்மற்றைநாள் உடையவர், பெரியநம்பிதிருமாளிகையிலேயெழுந்தருளிப்பெரியநம்பியை தண்டன்ஸமர்ப்பித்து, "அடியேனுக்கு த்வயார்த்தம் நெஞ்சில்படும்படி இன்னமொருருப்ரஸாதித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க; அப்படியே பெரியநம்பியும், ஸஸ்நேஹராய், உபாயோபேயாநுஷ்டாந ப்ரகாசிகையான ஸாரத்வயார்த்தத்தையும் ப்ரஸாதித்தருளுவதாக உபக்ரமித்து, அதுதன்னை, (வேதாம்ஸீதமஹாம்ஹோயோர்ஹரிணாத்வயமுத்தம் । தத்வயம்ஸ்ருணுவக்ஷ்யாமி ஸத்யோமுக்திப்ரதம்ஸுபம்॥ புராமந்த்ரத்வயம்ப்ரஹ்மக்விஷ்ணுலோகேமஹாபுரே । தஸ்மிந்நஃபுரேலக்ஷ்ம்யை மயாதத்தம்ஸநாதநம்) என்றும் இதின் அவதாரக்ரமத்தையும் (ஸத்யம்தத்வயம்ஸக்ருதுச்சாரோஹவதி,) என்றும் (யோப்ரஹ்மாணம்விதயாதிபூர்வம் யோவைவேதாம்ஸ்சப்ரஹிணோதிதஸ்மை, தம்ஹதேவமாத்மபுத்திப்ரகாஸம்முமுக்ஷுர்வைசரணமஹம்ப்ரபத்யே) என்றும், (ப்ரஹ்மணேத்வாமஹஸஓமித்யாத்மாநம்யுஞ்ஜீத) என்றும், (ஸும்மஜ்ஜாநயேவிஷ்ணவேதாஸதி) என்றும் இதுதான் கடவல்யுபஷத்துக்களிலும்இன்னப்ரதேசத்திலே இப்படி ஓதப்பட்டதென்றும், ததுபப்ரஹ்மணங்களாய் வேதாந்ததாத்பர்யமான புராணேதிஹாஸபஞ்சராத்ரங்களிலும் இதின்வைபவத்தைப்பரக்கதர்சிப்பித்து, த்வயத்தில்பஞ்சவிம்சாக்ஷரமாகவும், ஷட்பதமாகவும், பத்தர்த்தமாகவும்நிஷ்கர்ஷித்து, ஸ்ரீயஃபதியான நாராயணனுடைய சரணவரணத்தையும்தத்விஷயகைங்கர்யத்தையும்பேசினபடியே (தேசகாலாதிநியமமரிமித்ராதிசோதநம்।ஸ்வரவர்ணாதிதோஷஸ்வபௌநஸ்வரணகம்நது । ப்ராஹ்மணாக்ஷத்ரியாவைஸ்யாஸ்த்ரியஸ்ஸூத்ராஸ்ததேதரா:॥தஸ்யாயிகாரிணஸ்ஸர்வேமமபக்தோபவேத்யதி।பஞ்சஸம்ஸ்காரஸம்பந்நாஸ்ஸாத்யாவஞ்சநாஸூயகா:॥ ஹக்த்யாபரமயாவிஷ்டாயுக்தாஸ்தஸ்யாயிகாரிண: । பக்ஷம்ஸாக்ஷரோமந்த்ர:பதைஷஷட்ஸிஸ்ஸமந்வித:॥ வாக்யத்வயபரம்ஜ்ஞேயம்மந்த்ரார்த்தமநுத்தமம் । ஜமதாஸ்ய

ணீயாஸ்ரீஸ்ஸ0ஸ்ரிதாஜமதா0பதிம்||தயாநித்யாநபாயிந்யா ஸ0யுதம்பரமம்புமாந்|நாராயணோச்யுத ஸ்ரீமாந்வாத்ஸல்யகுணஸாகர:||நாயகஸ்ஸுசீலஸ்ஸுலபஸ்ஸர்வஜ்ஞஸ்ஸக்திமாந்பர: || ஆபத்பந்துஸ்ஸுஹ்ருந்மித்ர0பரிபூர்ணமநோரத:|க்ருபாஸ்ஸமுத்ராஸ்ஸவிதாவீர்யவாந்த்யுதிமாந்வஸீ|| ப்ரபத்யே சரணௌதஸ்யஸரண0ஸ்ரேயஸேமம | ஸ்ரீமதேவிஷ்ணவேநித்ய0ஸர்வாவஸ்தாஸுஸர்வதா|| நிர்மமோநிரஹங்கார:கை0கர்ய0கரவாண்யஹம்|ஏவமர்த்த0விசிந்த்யைவபஸ்சாந்மந்த்ர0ப்ரயோஜயேத்||நாராயணோஜிஷ்ணுமந்த்ரோமாயத்ரீசவராஸஹா|ஸ்வய0நாராயணஸ்ஸ்ரீமாந்தேவதாஸமுதாஹ்ருத:) என்றும், (ஸர்வேஸநயிதாநித்யாஸர்வமாஜமதாஸ்ரயா | நித்யாநபாயிநீவிஷ்ணோர்ஜமந்மாதோபகாரிணீ|| தயாவீநஸ்ஸ்ரியாஸார்த்த0குணவாந்பரமேஸ்வர: | ஸரணாகதஸ்ய சரணௌவ்ராஜாம்யஹமநிஸ்ஸ: | ஸ்ரீயாவீநாயஹரயேகுணதேஹாதிஸாலிநே|| ஸ்வாமிவித்தாநுரூபேணஸேஷவ்ருத்தி0கரோம்யஹம்) என்றும் கைங்கர்யபர்யந்தமாகசேகரித்து ப்ரமாணங்களாலேமூதலித்து அருளிச்செய்து, (கைங்கர்யமவிலாவ்ருத்திரித்யேஷஜ்ஞாநஸ0க்ர:) என்று இப்படித்வயத்துக்கு தாத்பர்யார்த்தமாகையாலே அத்தை அடியொற்றிப்போருகிற ஆழ்வார்கள் திவ்யஸூக்தியிலும் இதினுபதேஸாநுஷ்டாநப்ரகாரத்தை, (நாளுந்நந்திருவுடையடிகள்தம் நலங்கழல்வணங்கி) என்றும், (திருநாரணன்றாள்காலம்பெறச்சிந்தித்துய்மினோ) என்றும், (அலர்மேல்மங்கையுறைமார்பா – உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே) என்றும், (என்திருமகள்சேர்மார்வனே) என்றும், (முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்) என்றும் (அடிமைசெய்வார்திருமாலுக்கே) என்றும், (ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்) என்றும், (வேங்கடத்துறைவார்க்குநம) என்றும், பின்னையும், (தெய்வத்திருமாமலர்மங்கைதங்கும்திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்) என்றும், (கூறைதங்குவேல்தடங்கண்திருவைமார்பில் கலந்தவன்றாளணைமிநட்) என்றும், (தேனுடைக்கமலத்திருவினுக்கரசே- நானுடைத்தவத்தால் திருவடியடைந்தேன்) என்றும், மற்றேலொன்றறியேன்மாயனேயெங்கள்மாதவனே – அற்றேன்வந்தடைந்தேன் அடியேனையாட்கொண்டருள்) என்றும், (மடமலர்மங்கைதன்னைமார்வகத்திருத்தினானே | கடவுளேகாவளந்தண்பாடியாய்களைகண்நீயே) என்றும், (மாழைமான்மடநோக்கியை முன்னிட்டு – ஆழிவண்ணநின்னடியிணையடைந்தேன்) என்றும், (மின்னொத்தநுண்மருங்குல் மெல்லியலைத்திருமார்பில், மன்னத்தான்வைத்துகந்தான்மலரடியையடைநெஞ்சே) என்றும், (சொல்லாய்திருமார்பா உனக்காகித்தொண்டுபட்ட) என்றும், (அல்லிமாமலராள்தன்னொடும் அடியேன்கண்டுகொண்டு அல்லல்தீர்ந்தேனே) என்றும், (திருமாலைப்பாட) (திருமாற்கரவு) (சென்றால்குடையாம்) என்றும், (நாரா

யணனே நமக்கேபறைதருவான்) என்கிறத்தை, (கறவைகள், சிற்றஞ்சிறுகாலே) என்றும் இப்படிப்ரகாசிப்பித்து, ஸ்வாசார்யரான ஆளவந்தார்ஸ்ரீஸூக்தியிலும், (த்வத்பாதமூல0ஸரண0ப்ரபத்யே) என்று அதுக்குமேலே,(ஸதாதவைவோதிதயாதவஸ்ரியா,தயாஸஹாஸீநமநந்தஹோகிநீ) என்றுதொடங்கி, (கதாஹமைகாந்திகநித்யகிங்கரஃப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றுகைங்கர்யமே பலமாகவருளிச்செய்கையாலும், உமக்குப்பெரியபெருமாளும் பெரியபிராட்டியாருமான சேர்த்தியிலே கைங்கர்யமேகர்த்தவ்யமென்றும், (ஸ்ராதுஸ்சரணௌமா0நிபீத்யரகுநந்தந: | ஸீதாமுவாசாதிஸயாராகவஞ்சமஹாவ்ரதம்) என்றும், (பவா0ஸ்துஸஹவைதேஹ்யாகிரிஸாநுஷுரம்ஸ்யதே | அஹ0ஸர்வ0கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதஸ்சதே) என்றும் இத்யாதிகளாலே–ராமாநுசனுடையபடிகளையும்தர்சிப்பித்து, தேவரீரும் அந்தராமாநுசனைகையாலே அப்படியே யடிமைசெய்துபோருமென்று அருளிச்செய்ய; இப்படியே அநுஸந்தாநரஹஸ்யத்தினர்த்தத்தை இவர்நெஞ்சிலேஅடிப்படுத்தி, இனிமந்த்ரவிதிரஹஸ்யங்களினர்த்தத்தைத் திருக்கோட்டியூர்நம்பிஸந்நிதியிலேகேட்டுக்கொள்ளுமென்று நியமித்தருள;

—✽—

உடையவர், பெரியநம்பிநியமநப்படி, நம்பெருமாளுக்கு அசேஷசேஷவ்ருத்திகளும் பண்ணிக்கொண்டிருந்தது.

உடையவரும், நம்பி அருளிச்செய்தத்தைக்கேட்டு, அப்படியே கோயிலினும்புறப்பட்டுத் திருக்கோட்டியூரேறவெழுந்தருளி நம்பிதிருமாளிகையிலேயெழுந்தருளி நம்பியைஸேவித்து ஸவிநயராய்நிற்க; நம்பியும்,உடையவரைக்கண்டு மிகவும்ஸந்துஷ்டராய்ஸத்கரித்து,“எழுந்தருளினகார்யமேது?” என்று வினவியருள; இவரும், பெரியநம்பிபெரியமந்த்ரார்த்தச்ரவணவ்யாஜமாக ப்ரேரித்து வரவிட்டருளினபடியை விண்ணப்பம்செய்ய; நம்பியும் உடையவரருளிச்செய்தத்தைக்கேட்டு ப்ரீதியுடனே ப்ரஸாதிப்பதாக உபக்ரமித்து, அதுதான் நரநாராயணரூபேண அவதரித்தபடியையும், (ஓமித்யக்ரேவ்யாஹரேத்) இத்யாத்யுபநிஷத்திலேஓதுகிறபடியையும் அதின்வர்ணக்ரமங்களும்,அத்தைவைதிகரானரிஷ்யாதிகள் புராணாதிகளிலேவிருப்பத்துடனேபரக்கசப்தார்த்தநிர்ணயம்பண்ணிக்கொண்டு போந்தபடியையும், ஏதந்மந்த்ரநிஷ்டரான பரா0குசபரகாலாதிகளான ஆழ்வார்கள், ஸ்வஸ்வப்ரபந்தங்களிலே ஸந்ததம் இதினுடையசப்தார்த்தங்களையநுஸந்தித்து ஆதரித்தருளிச்செய்தபடியையும், அவர்களை அடியொற்றி, (மந்த்ரஜ்ஞோமந்த்ரஜத்தஸ்ச) என்னும்படியான ஆச்சார்யர்களும் இத்தை ஆபத்தநமாக அர்த்தாநுஸந்தாநம்பண்ணிக்கொண் டுபோரும்படியையும், நித்யகைங்கர்யப்ரார்த்தனையே இதில் நிர்ணயகமானவர்த்தமென்றுமருளிச்செய்து, மீளவும் (அகாரவாச்யஸ்யவிஹோரஸேஷ:) (அஹ0ஸதா)

(ஸ்வாமிமமகர்த்தாஸ்மிபரவாநஸ்மிதஸ்யயா।நித்யஂநாராயணாயைவகைஂகர்யஂகரவாண்யஹம்॥ மந்த்ரார்யஂவிஜ்ஞயேஷேவஂ ப்ராதருத்யாயவைஷ்ணவ:) என்கிறபடியே ஸங்க்ரஹமாகவும் ஸவ்யக்தமாகவும்ப்ரஸாதித்து, ப்ரணவாகாரமான விமாநமத்யத்திலே சேஷசாயியாய்க்கண்வளர்ந்தருளுகிற*நலந்திகழ்நாரணனான பெரியபெருமாள்விஷயத்திலே அசேஷசேஷவ்ர்த்திகளும் செய்துபோரும்படி அதிலே இவரைப்ரவணராக்கி ப்ரீதியுடனேயெழுந்தருளியிருக்க; நம்பியும், இவரைப்பார்த்து, "பின்னையும் சிலவர்த்தங்கேட்கவேணும் என்கிறவபேக்ஷைதோற்றவிராநின்றீர்" என்ன; உடையவரும், "அப்படியாம், சரமச்லோகங்கேட்கவேணுமென்று சபலனாயிராநின்றேன்" என்ன; நம்பியும், சரமச்லோகார்த்தத்தினுடைய கௌரவத்தையறிவிக்கைக்காகவும் இவருடைய ஆஸ்திக்யாதரபரீக்ஷார்த்தமாகவும் உபேக்ஷித்து, "இத்தசைக்கு ஊரேறப்போம்" என்ன; இவரும் தம்முரான கோயிலேறவெழுந்தருளினர்.

இப்படி உடையவரும், பதினேழுப்ரகாரம் வளையவளையவெழுந்தருளி, (மோக்ஷபூர்ணஸ்ருபஸக்திகுஸலோ யாஂஸ்ஸ்வ ஊஸேவிவாநாஂயாஂகாமபிவர்த்தநீமஸுமமாஂ த்ரையந்தகாந்தாரமாம். । ஸ்ரீமாந்ராஜபயீவகாரஷயயா ராமாநுஜாவ்யோமுநி ஸ்தாஂமோக்ஷஂநமரீஂ விஹாயஸரணஂநாங்யாஂபுரீஂமங்மஹே) என்கிறபடியே இவரும் பதினெட்டாம்ப்ரகாரம் அருளிச்செய்கிறோமென்று ஆறியிருக்க;*அவ்வருள்பெறுமளவாகில் நில்லாதே, ராமாநுசனும், பேரிழவாளராய்ப் பெரியவாற்றாமையோடேயிருக்க;நம்பியும்,இங்குத்தையில் இவரலாபக்லேசத்தை இங்குநின்றும்போன ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பம்செய்ய; நம்பியும்கேட்டு இரங்கியருளி, "ஆகில் அவரை, தண்டஜலபவித்ரத்துடன்வந்துகண்டுபோவது" என்று அருள்பாடிட்டு அந்த ஸ்ரீவைஷ்ணவரோடேவரக்காட்டியருள; அந்தஸ்ரீவைஷ்ணவரும் கோயிலேறவந்து ராமாநுசனைஸேவித்துநம்பியருளிச்செய்தத்தைவிண்ணப்பம்செய்ய;உடையவரும் அத்தைக்கேட்டு அதிப்ரீதராய்ஆநந்தாச்ருவோடே, (பயின்றதரங்கந்திருக்கோட்டி) என்கிறபடியே - பெரியத்வரையுடனேபுறப்பட்டுத் திருக்கோட்டியூரேறவெழுந்தருளி நம்பி திருமாளிகைவாசலிலே திருப்பாவையநுஸந்தாநத்துடனே தண்டன்ஸமர்ப்பித்து, (சீரார்வளையொலிப்பவந்துதிறவாய்மகிழ்ந்து)என்றவநந்தரத்திலே நம்பிகுமாரத்தியான தேவகிப்பிராட்டியார் திருக்காப்பைநீக்க; விஸ்மிதராய்அவரைவிழுந்துஸேவித்து, தேவகீபுத்ரரத்நத்தைப் பெறுகைக்குஅந்தேவகிப்பிராட்டிபுருஷகாரமாகஸந்நிதியிலேசென்று நம்பியைஸேவித்துநிற்கிறவளவிலே,நம்பியும்இவருடையஅதிகாரத்தைக் கண்டுஉகந்தருளிசபதபூர்வகமாகசரமச்லோகத்தைஸார்த்தமாகப்ரஸாதிக்க;இவரும் கேட்டுக்ர்தார்த்தராய் ஆஸ்திகாக்ரேஸரான ஆழ்வானுக்கப்பட அநுமதிகொண்டிருக்கிறவளவிலே, நம்பியும், "வாரீர் இளையாழ்வீர்! என்றழைத்தருளி, "உமக்கு ஒரு அர்த்தம்சொல்லுவதாகவிராநின்றோம், இவ்வளவிலே த்ர்ப்தராயிராநின்றீர்" என்றுகேட்க; உடையவரும், "அடியேனல்லேனோ" என்று தம்முடைய அஜ்ஞதையைமுன்னிட்டுக்கொண்டிருந்தார்; நம்பியும், உடையவரைப்பார்த்து, "நெஞ்சிலிருந்தபடிசொல்லீர்"என்ன; அதுக்கு உடையவரும், "தேவரீரருளிச்செய்தவர்த்தத்துக்குமேலே. ஒரு அர்த்தமுண்டென்றுகேட்டேனாகில்அவிச்வாஸியாகக்கடவேன்,கேளாதேயிருந்தேனாகில் அருளிச்செய்த அர்த்தமொன்றும் நெஞ்சில்பட்டதில்லையாகக்கடவது, விண்ணப்பம்செய்யும் விரகறியாமையாலேஸாபேக்ஷனாய்க்கொண்டிருந்தேனத்தனை"என்ன; நம்பியும்,"இப்படியுமொரு அதிகாரியுண்டோ" என்று உகந்து, "வாரீர் இளையாழ்வாரே! மோக்ஷத்தை உமக்கு இங்கேதருகிறோம்" என்று சிலஅர்த்தவிசேஷங்களாலே காட்டியருளினர். அதாவது - (க்ர்ஷ்ணஂயர்மஂஸநாதநம்) என்று - அவன் ஸநாதநமான ஸித்ததர்மமாகையாலே, அநித்யமான ஸாத்யஸாதநதர்மங்களில் கைவைக்கவேண்டா, உமக்கு உபாயாஂசத்தில் பாரபரப்பைவிட்டு உபேயாஂசமானநித்யகைங்கர்யத்திலே த்வரையுண்டாய்ப் போரும், அவற்றுக்குவிஷயமும் *அறஞ்சுவராகிநின்றவரங்கனார்க்காட்செய்கையே புருஷார்த்தமென்றருளினர்.

ராமாநுசனும் இவ்வர்த்தத்தைக்கேட்டு முக்தரிலேயொருவராம்படி முதிதராயிருக்க; தத்வேளையிலே தாமருளிச்செய்த ஈச்வராபிப்ராயத்துக்கு அநுகுணமாக, (தஸ்மாத்த்வாமுத்யவோஸ்ஜிஜ்ய) இத்யாதியாலே-உத்தவசரமச்லோகத்தையும், (பிதாஂமாதாஂஷாராந்) இத்யாதிபுராணவசநத்தையும், (நாயமாத்மா) (நகர்மணாநப்ரஜயா யநேந) இத்யாதிச்ருதியையும், (அயபாதகஹீதஸ்த்வம்) இத்யாதி இதிஹாஸபுராணவசநங்களையும் மற்றும்ப்ரபத்திவிஷயமான ஸ்ரீபாஞ்சராத்ரவசநங்களையும் உதாஹரித்தும், அதுக்குமேலே அவற்றையடியொற்றிப்போருகிற ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்தியான, (நோற்றநோன்பு)(குளித்துமூன்று) (கறவைகள்பின்சென்று) (இல்லறம்) (வரவாறொன்றில்லையால்) (ஐந்துதீயோடுநின்றுதவஞ்செய்யவேண்டா) (ஐந்துநெருப்பிடையேநிற்கவும்நீவேண்டா) என்று இத்யாதிபாட்டுக்களை எடுத்துக்காட்டியும்,இவரைஇதிலேமிகவும் விச்வஸிக்கப்பண்ணி, *சிஷ்டாக்ரகண்யரான ஆளவந்தார்திருவுள்ளத்தின்படியே விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தையும் ப்ரகடிப்பித்து குத்ர்ஷ்டிகளையும் நிராகரித்துக்கொண்டு, கோயிலிலே ஆளவந்தாரைப்போலே நம்தர்சநத்தை நடத்திக்கொண்டுபோருமென்று ஆதரித்தருளிச்செய்தருளினர்.

அநந்தரம்ராமாநுஜாசார்யரும்,ஆசார்யன்ஸந்நிதியிலேசரமார்த்தத்தைலபிக்கையால்வந்தராஜகுலமாஹாத்ம்யத்தையுடையராய்ப் புறப்பட்டு * மாருயதானவனைவள்ளுகிரால்மார்பிரண்டு, கூறுகக்கீறியகோனரியை, வேருகவேத்தியிருப்பாரானதாம், * திருக்கோட்டியூர்நாதனை நரசிங்கனை நவின்றேத்துவாராய், (ஸ்யஹ்ருணஂஹித்வாஸ்ஸாரேர்ஹஜ ஶ்ரீயுமளஂஈக்ஷிணேஂஸேம்ஜீஹீத்வா ஸ்வாங்மேஸஂஸ்யாப்யஹஸ்தைர் நிஶிதநவமுவைர்ஊரயந்நுத்தரேஶ:) என்னும்படியான் தெக்காழ்வார்ஸந்நிதியிலேதிரண்டிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் ச்லோகமந்த்ரத்தை ப்ரஸாதித்து அவர்கள்சோகத்தைதீர்த்தருளினர். (அன்றைவர்தெய்வத்தேரினில்செப்பியகீதை) என்றும், (மாயனன்றேோதிய வாக்கு) என்றும் அருளிச்செய்த அந்தராமாநுசன், ஒருவன்சோகந்தீர ஒருச்லோகத்தை * அங்கொருகாலிங்கொருகாலாய் அந்தரத்திலிருந்துபதேசித்து அவனதிகாரமாந்த்யத்தாலேபின்பு "பதண்பதண்" என்றான். அதுதான் ஒருத்திதலையில்மயிர்முடிப்பிக்கைக்காகவிறே; இந்தராமாநுசன், எல்லாருடையவும் சோகம்போகப்பாரிலே பதஸ்தராயிருந்து,ஸர்வரும் அதிகாரிகளாம்படி உபதேசித்துத் திருத்தித் தலைவணங்கும்படிபண்ணி, (காம்பறத்தலைசிரைத்து) என்னும்படி அவர்கள் தலையிற்சும்மையையும்கழித்துத் தாமும் ப்ரியதராய்நிர்ப்பரராயருளினரிறே.

—❦—

திருக்கோட்டியூர்நம்பிக்கும் உடையவருக்கும் நடந்தஸம்வாதமும், "எம்பெருமானர்" என்கிற திருநாமம்சாத்தப்பெற்றதும்.

பின்பு திருக்கோட்டியூர்நம்பியும், இவர் தூளிதாநமாகஎல்லார்க்குமிரங்கி ப்ரஸாதித்தருளினபடியைக்கேட்டருளி, "இவர் ஸ்வபாவத்தை சோதிக்கைக்காகஇவரையழைத்தருளி"நீர்,இப்படிபரமரஹஸ்யத்தைப் பலர்செவிப்படுத்திவெளியிட்டீர்,இப்படி ஆசார்யாஜ்ஞாதிலங்கநம்பண்ணிருக்குபலமென்"என்ன;ராமாநுசனும்,"நரகமேபலம்"என்ன;நம்பியும், "இப்படியறிந்திருந்து சொல்லுவானென்" என்ன ; அதுக்கு உடையவரும், "அடியேனெருவனுமன்றே நரகம்புகுகிறேன், இவ்வாத்மகோடிகளெல்லாம் உஜ்ஜீவிக்குமே" என்ன ; நம்பியும், "நம்பெருமாள்""நமக்காவாரைநாமே தேடிக்கொள்ளுகிறோம்,என்று சேரபாண்டியனில் அருளிச்செய்தஅவரோநீர்" என்று அருளிச்செய்து, "எம்பெருமானர்" என்று திருநாமஞ்சாத்தி, "எப்போதும் எம்பெருமானர்தர்சநமாயே நடக்கும்" என்று எல்லார்க்குமருளிச்செய்தருளினர்.

—❦—

கூரத்தாழ்வான், ஒருமாஸமுபவாஸமிருந்து உடையவரிடத்தில் சரமச்லோகார்த்தம்கேட்டது.

எம்பெருமானரும், * மாயனன்றேோதியவாக்கதனைப்பெற்று யதார்த்தஜ்ஞாநத்தையுடையராய்க் கோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளைஸேவித்து மீண்டும் மடமேயெழுந்தருள; கூரத்தாழ்வானெழுந்திருந்து ராமாநுசன்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க ; ராமாநுசனும் ஆழ்வானைப்பார்த்து, "ஆளவந்தார் விசேஷகடாக்ஷம் பண்ணி பேருளாளரைநோக்கிப்ரபத்திபண்ணினதுக்கீடாக, நம்பி, நம்மை வாழ்வித்தருளினர் கண்டீர்" என்றருளிச்செய்து, "உமக்குமுள்பட சுச்ரூஷைகொண்டு அத்யவஸாயமறிந்துசொல்லுமென்று நியமித்தருளினர்" என்ன ; ஆழ்வானும் இத்தைக்கேட்டு ஒருஸம்வத்ஸரம் இச்சரீரத்துக்கு நிலையுண்டோவில்லையோ என்று விசாரித்தருளி, பெற்றாலல்லதுதரியாத ஆர்த்தியாலே "ஆசார்யன்திருமாளிகைவாசலிலே ஒருமாஸமுபவாஸித்தால் ஸம்வத்ஸரசுச்ரூஷாபலம்"என்று சாஸ்த்ரஞ்சொல்லுகையாலே மாஸோபவாஸம்பண்ணிஅவ்வர்த்தத்தை லபித்தருளினர்.

—❦—

முதலியாண்டான், திருக்கோட்டியூர்நம்பிஸந்நிதியிலே ஆறுமாஸம் காத்திருந்து, அவர்நியமநத்தினாலே உடையவரிடத்தில் சரமச்லோகார்த்தம்லபித்தது.

பின்பு, முதலியாண்டானும், உடையவர்திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்துஸவிநயராய்,"அடியேனுக்கும்இந்தபரமரஹஸ்யார்த்தத்தை ப்ரஸாதித்தருளவேணும்" என்றுவிண்ணப்பம்செய்ய; ராமாநுசனும், ஆழ்வானெருவர்க்குமேயாய்த்து நம்பிஸ்ரீபாதத்திலேவிண்ணப்பம்செய்துகொண்டது,ஆகையால் நீரும் அங்கேபோய்க்கேளும்"என்றருளிச்செய்ய;அநந்தரம் முதலியாண்டானும், உடையவருளிச்செய்தத்தைக் கேட்டுத்திருக்கோட்டியூரேறவெழுந்தருளிநம்பிஸ்ரீபாதத்திலேதண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டு ஆறுமாஸம்நின்றவிடத்திலும் நம்பி ஒன்றுமருளிச்செய்யாமலிருக்க ; பின்பு ஒருநாள் நம்பியைஸேவித்து முதலியாண்டானும் "அடியேன்வந்துநிற்கிறகாரியத்தைத் திருவுள்ளம்பற்றியருளவேணும்" என்று விண்ணப்பம்செய்ய ; பின்பு முதலியாண்டானைப்பார்த்து நம்பியருளிச்செய்தபடி ; — (வித்யாமதோயநமதஸ்த்ரிதீயோஹிஜநோமத:। ஏதேமதாவலிப்தாநாமேதஏவஸதாஂதம:) என்கிற ச்லோகத்தையருளிச்செய்து, "இச்லோகத்துக்குப் பொருள்போமோ, இம்மூன்றுதத்துக்கும் பிழைத்தாயாகில் எம்பெருமானர்தாமே ப்ரஸாதித்தருளுவர், போம்" என்று தம்முடைய திருவடிகளை இவருடைய உத்தமாங்கத்திலேவைத்து விடைகொடுத்தருளினர்.

அநந்தரம் இவரும், சமதமாதிகுணங்களை மிகவுடையராய்க்கொண்டு கோயிலேறவெழுந்தருளி எம்பெருமானார்ஸ்ரீபாதத்திலே தெண்டன்ஸமர்ப்பித்து ஸவிநயராய்நிற்க ; எம்பெருமானாரும், ஸ்ரீபாதத்தில் முதலிகளைப்பார்த்து, "ஆண்டான், நம்பிஸந்நிதியிலே ஸ்வரூபசிக்ஷை பெற்றுவந்த வேஷமிருந்தபடிபாருங்கோள்" என்று அருளிச்செய்து, கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக்கும் ஸர்வகுஹ்யதமமான சரமச்லோகார்த்தத்தை ப்ரஸாதித்தருளி, இப்போதன்றோ நமக்கு தண்டும்பவித்ரமும்கைபுகுந்தது என்றருளிச்செய்தருளினார்.

———

உடையவர், திருக்கோட்டியூர்நம்பிநியமநப்படி திருமாலையாண்டான்
ஸந்நிதியிலே திருவாய்மொழிக்கர்த்தம் கேட்கும்போது
(அறியாக்காலத்துள்ளே) என்கிறபாட்டுக்கு இவ்விரு
வருக்கும்நடந்த ஸம்வாதமும் பின்பு முழுதும்
ஸேவித்து சாற்றியதும்.

அநந்தரம் சில்நாள்கழிந்தவாறே திருக்கோட்டியூர்நம்பி கோயிலுக்கெழுந்தருளி நம்பெருமாளைஸேவித்துப்புறப்பட்டுத் திருமாலையாண்டானையழைத்துக்கொண்டு எம்பெருமானார்மடமேயெழுந்தருள ; எம்பெருமானாரும், நம்பியெழுந்தருளினத்தைக்கண்டு தண்டன்ஸமர்ப்பிக்க; நம்பியும், உடையவரைப்பார்த்து, "தேவரீர், திருமாலையாண்டான்பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தங்கேட்டருளவேணும்" என்றருளிச்செய்து, உடையவரைத் திருமாலையாண்டான் திருக்கையிலேகாட்டிக்கொடுத்து நம்பியும் திருக்கோட்டியூரேறவெழுந்தருளினார். பின்பு திருமாலையாண்டானும் நம்பியருளிச்செய்தபடியே திருவாய்மொழிக்கு அர்த்தம்நடத்தாநிற்க ; பாட்டுக்கள்தோறும் "இங்ஙனே இப்படியானாலாமோ" என்று எம்பெருமானாருளிச்செய்ய ; இத்தைக்கேட்டு, "இது விச்வாமித்ரஸ்ர்ஷ்டியாயிருக்கிறது, ஆளவந்தாரருளிச்செய்யக்கேட்டறியேன்" என்று திருமாலையாண்டானருளிச்செய்ய ; இங்ஙனே நடவாநிற்கச்செய்தே, (அறியாக்காலத்துள்ளே) என்கிறபாட்டுக்கு – "அறிவுநடையாடாததசையிலே ஸம்பந்தஜ்ஞாநத்தைப்பிறப்பித்து, பிறந்தஜ்ஞாநத்தையழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும்வைத்தாய் என்கிற இழவாலேயருளிச்செய்கிறார்" என்று திருமாலையாண்டானருளிச்செய்ய; இவ்வர்த்தத்தை எம்பெருமானார்கேட்டருளி, "'முன்னில்பாட்டுக்களும் பின்னில்பாட்டுக்களும் பெரியப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அப்ரீதி தோற்றச்சொல்லுமது சேராது, ஆனபின்பு அங்ஙனேயாமித்தனை ;-

"'அறியாமாமாயத்தடியேனை–அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்துவைத்தாயால், என்று இத்தையும் உபகாரஸ்ம்ருதியாகக்கொள்ளக்குறையென்" என்று எம்பெருமானார் விசேஷார்த்தமருளிச்செய்ய; இத்தைக்கேட்டு, "இதுவும் விச்வாமித்ரஸ்ர்ஷ்டியாயிருக்கிறது, ஆளவந்தாரருளிச்செய்யக்கேட்டறியேன்" என்று திருமாலையாண்டான், திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்கைதவிர்ந்தார்.

பின்பு இச்செய்தியைத் திருக்கோட்டியூர்நம்பிகேட்டுக்கோயிலிலேயெழுந்தருளித் திருமாலையாண்டான்திருமாளிகையிலேயெழுந்தருளித் திருமாலையாண்டானைப்பார்த்து, "திருவாய்மொழிக்கு அர்த்தம் நடத்தாமல் தவிருவானென்" என்றுகேட்டருள ; அதுக்கு ஆண்டானும், "ஆளவந்தாரருளிச்செய்ததாக அடியேன்கேட்டவர்த்தமொழிய இவர்சிலவர்த்தங்களைவிச்வாமித்ரஸ்ர்ஷ்டிபண்ணுகையாலேதவிர்ந்தேன்" என்ன ; நம்பியும், "அவர்பண்ணின விச்வாமித்ர ஸ்ர்ஷ்டியேது" என்ன ; ஆண்டானும், "'அறியாக்காலத்துள்ளே' என்கிறபாட்டை உபகாரஸ்ம்ருதியாகவேணும் என்று உடையவருளிச்செய்கிறார்" என்ன; "இதுவும் ஆளவந்தாரருளிச்செய்ய நான்கேட்டிருக்கிறேன்" என்று நம்பியருளிச்செய்து, "ஸாந்தீபிபக்கலிலே க்ர்ஷ்ணன் அத்யயநம்பண்ணினாப்போலேகாணும் உம்முடையபக்கலிலே உடையவர் திருவாய்மொழிகேட்கிறது, ஆகையாலே ஆளவந்தார் திருவுள்ளத்திலிருக்கிற அர்த்தமொழியவேறு இவர்க்குப்ரகாசியாது என்றிரும், நீர் இவர்க்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணுகிறோமென்றிராதேகொள்ளும்" என்றருளிச்செய்தருளினார். அநந்தரம், திருக்கோட்டியூர்நம்பியும், திருமாலையாண்டானும் எம்பெருமானார்மடமேயெழுந்தருளித் திருவாய்மொழிவிட்டதறுவாய்தொடங்கிப்பலநாளுமாகஸாதிச்சு இவர்க்கு, சாற்றும் என்றீ அருளிச்செய்தருளினார்.

———

உடையவர், ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்ஸந்நிதியிலே
ஆளவந்தார்ஸ்தோத்ரம்முதலியவற்றுக்கு அர்த்தங்களையும்,
"லக்ஷ்மணமுநி" என்கிற திருநாமத்தையும் லபித்தது.

பின்பு உடையவரும் ப்ரீதராயெழுந்தருளியிருக்கிறவளவிலே, உடையவரைப்பார்த்து, இன்னமும் சிலவர்த்தவிசேஷம் ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்ஸந்நிதியிலேயுண்டு, அங்கேயெழுந்தருளி அவ்வர்த்தங்கேட்டருளவேணும்" என்று அருளிச்செய்தருளித் திருக்கோட்டியூர்நம்பியும் மீண்டு ஊரேறவெழுந்தருளினார். பின்பு உடையவரும் அவ்வர்த்தம் லபிக்கைக்காக அரையருக்கு ஆறுமாஸம்பாலமுது, காய்ச்சிஸமர்ப்பித்தும் அரையர்திருமேனிக்கநுரூபமாகமஞ்சள்காப்பு

சாத்தியும்போருகிறகாலத்திலே ஒருநாள் மஞ்சள்காப்புப்பாங்காக விராதபடியாலே திருமுகமண்டலத்தின் விகாரத்திலேயறிந்து பாத்ரத்தை அப்பாலேவைத்து மஞ்சள்காப்புப்பாங்காகச்சாத்தித் திருமஞ்சனம்பண்ணுவித்தருள ; பின்பு அரையரும் ப்ரீதராய், "என்னுடையஸர்வஸ்வத்தையும் கைக்கொள்ளவோ இப்படி செய்தருளினீர்" என்று உகந்து, "உமக்கொருபரமாஹஸ்யம்சொல்லுகிறோம்வாரும்" என்று * தேவுமற்றறியாத. மதுரகவிகளைப்போலேயிருக்கிற வுமக்கு, (గురురేవపరంబ్రహ్మగురురేవపరాగతిః । గురురేవపరావిద్యా గురురేవపరంధనమ్॥ గురురేవపరఃకామోగురురేవపరాయణమ్ । యస్మాత్తదుపదేష్టాసౌతస్మాద్గురుతరోగురుః) (குருரேவபரம்ப்ரஹ்ம குருரேவபராகதிः । குருரேவபராவித்யா குருரேவபரந்தநம்॥ குருரேவபரஃகாமோ குருரேவபராயணம் । யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌதஸ்மாத்குருதரோகுருः) என்றும், என்னைத்தீமனங்கெடுத்து * அறியாதனவறிவித்த ஆசார்யனே உபாயோபேயம் என்று விச்வஸித்திரும்–" * என்று இந்த பரமாஹஸ்யத்தையுமருளிச்செய்து, ஆளவந்தார்ஸ்தோத்ரத்துக்கும் சதுச்லோகிக்கும் அர்த்தமருளிச்செய்து, அநந்தரம் த்வயம், எல்லாரஹஸ்யார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி, "லக்ஷ்மணமுநி"என்று திருநாமமும்சாத்தியருளினார்.

—❧❧*❧❧—

முன்புள்ளார் உடையவருக்கு ஆசார்யர்களாகியும், பின்புள்ளார் சிஷ்யர்களாகியும் உஜ்ஜீவித்தார்களென்பது.

" பெரியநம்பிஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்தபோதே ஸ்வரூபஸித்தியுண்டாயிருக்கச்செய்தே உடையவர், பலர்ஸ்ரீபாதங்களை ஆச்ரயிக்கைக்கடியென்? அவர்கள்தான் மேல்விழுந்து அர்த்தங்களை உபதேசிக்கைக்கடியென்? என்னில் ; – ஸார்வபௌமனானராஜா புத்ரவாத்ஸல்யத்தாலே பலவிடங்களிலேயும் மந்த்ரிகளிடங்களிலேயும் நிதியைவைக்குமாப்போலே ஆளவந்தாரும் உடையவருக்காக இவர்களிடங்களிலே ஓரோ அர்த்தவிசேஷங்களை அருளிச்செய்துவைக்கையாலே ; ஆகையால் உடையவரும் ஆளவந்தார்ஸ்ரீபாதத்திலே ஸேவியாத இழவுதீர இவர்கள்ஸ்ரீபாதத்திலேஸேவித்து இவ்வர்த்தங்களைப்பெற்று * இழவுதீர்ந்தார். இவ்வாசார்யர்கள், " 'இம்மஹாநுபாவன், தர்சநத்திலேபுகுந்தாராகிலோ, என்று ஆளவந்தாரருளிச்செய்த மஹாநுபாவனன்றோ, ஆகையால் சிஷ்யனாகிலுமாம், ஆசார்யனாகிலுமாம், விலக்ஷண ஸம்பந்தமேவேண்டுவது" என்று மேல்விழுந்தருளிச்செய்தார்கள் ; முன்புள்ள ஆசார்யர்கள் இவருக்கு ஆசார்யர்களாய்ப் பேறுபெற்றார்கள் ; பின்புள்ள ஆசார்யர்கள் இவருக்கு சிஷ்யர்களாய் ஸ்வரூபம் பெற்றார்கள். ஆகையாலே ஓராபரணத்தின் நடுவேமாணிக்கங்கிடந்து அவ்வாபரணத்தை சோபிதமாக்குமாப்போலே, * இடையே ஸ்ரீராமாநுசமுனியாய் விளங்கியருளினார்.

—❧❧*❧❧—

உடையவர், கொங்குப்பிராட்டிக்கு த்வயத்தையுபதேசித்து, திருவடிநிலைகளை ப்ரஸாதித்தருளினது.

பின்பு சிலநாள்கழிந்தவாறே பட்டர் ஸாங்கோபாங்கமாகசதுர்வேதத்தையுமதிகரித்துஸகலவித்யாபாரங்கதரானபின்பு, ஆண்டானும்ஆழ்வானைப்பார்த்து,"இவர்களுக்குஒருகார்யம்செய்விக்கவேண்டாவோ" என்ன ; ஆழ்வானும்சென்று உடையவருடனே, "இவர்களுக்கு ஒருகார்யம்செய்விக்கவேண்டாவோ, நம்முறவின்முறையார் ப்ராக்தராயிருந்தார்கள்" என்று விண்ணப்பஞ்செய்ய ; உடையவரும், பெரியநம்பிதிருமேனி ஸம்பந்தத்திலே ஸ்ரீவைஷ்ணவஸாந்தாநிகரிடத்திலே பட்டருக்கு ஸம்பந்தம்பண்ணினால் ஸ்வஸூத்ரசாகைகளுக்கும் ப்ராஹ்மண்ய வைஷ்ணவத்துக்கும் பெரியசரணம் என்று தட்டுபடாதிறே" என்ன ; அவர்களும்ஸம்மதித்து, உடையவரைமுன்னிட்டுக்கொண்டு அவர்களிடத்திலே பெண்கேட்க; அவர்களும் "கொடுக்கிறோம்" என்றுஸம்மதித்து, பின்னையும், "புதுஸம்பந்தமன்றோ" என்று, இசையாதிருக்க; பின்பு சிலநாள்கழிந்தவாறே ஆண்டானும் ஆழ்வானுடனே, "இவர்களுக்கொருகார்யம்செய்விக்கவேண்டாவோ" என்ன; ஆழ்வானும், "ஈச்வரகுடும்பத்துக்குஎன்னையிருந்துகரையச்சொல்லுகிறீரோ" என்றருளிச்செய்து பெரியபெருமாள்ஸந்நிதியிலே எழுந்தருளிதண்டன்ஸமர்ப்பித்து தீர்த்தப்ரஸாதங்களும்ஸ்வீகரித்து மீண்டெழுந்தருளும்போது, "இவர்களுக்கு ஒருகார்யம்செய்விக்கவேண்டாவோ்வென்று சொல்லாநின்றார்களே" என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும், "அதுக்கு நீரோகடவீர், நாமேசூதியாகப்பண்ணிவைக்கிறோம், நீர்போம்" என்று திருவுள்ளமாய், அவர்களுக்கு மப்படியே ஸ்வப்நங்காட்டியருள ; அவர்களும் ஸம்மதித்துத் தாங்களேகொடுக்கிறோம் என்று ஸம்மதித்துவந்து, அக்கச்சியையும், மண்ணியையும்,பட்டர்திருத்தாயாரை விசாரித்து ✻ பெரும்பெருத்தகண்ணாலங்கள்செய்து உதகபூர்வகமாக ஸமர்ப்பித்தார்கள்.

—❦❦✻❦❦—

பட்டர், பெருமாளையும் நாய்ச்சிமாரையும், ஆழ்வானுமாண்டாளுமாக நினைத்துப்போந்தாரென்பது.

ஒருநாள் திரைவளைத்துக்கொண்டு, பெருமாள் ஏகாந்தமாகவெழுந்தருளியிருக்கச்செய்தே, பட்டர் பெருமாளைஸேவிப்பதாகவெழுந்தருள; பெருமாளும்சிறிப் பிற்படவிடத்திருவுள்ளமாக; மீளவும் "அவனையழையுங்கோள்" என்ன; பின்பு பட்டர்க்குஅருள்பாடிட்டருள; ஸந்நிதியிலேசென்றவளவிலே, "நாம் பிற்படவிட்டபோது என்ன நினைந்திருந்தீர்" என்ன; "பெருமாளும் நாய்ச்சிமாரும் என்றிருந்தேன்" என்ன; "நீர்முன்புநம்மைநினைத்திருக்கும்படியெங்ஙனே" என்ன; "ஆழ்வானுமாண்டாளுமாக நினைத்திருப்பேன்" என்ன; "நம்மானை, நீர்முன்புபோலே நினைத்திரும்" என்று திருவுள்ளமாயருளினார்.

—❧❧✻❧❧—

உடையவர், முதலியாண்டானை த்ரிதண்டஸ்தாநீயராக அபிமாநித்தருளியது.

உடையவர் ஆச்ரமப்ராப்திபண்ணியருளினபின்பு ஸ்ரீபாதத்தில் முதலிகளெல்லாரும், "சரீரஸம்பந்திகளைவிட்டுவிடவேண்டிற்றே" என்றுவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும், "நம்முதலியாண்டானையொழிய ஸந்ந்யஸித்தோம்" என்றருளிச்செய்ய; "இப்படியருளிச்செய்யலாமோ" என்று முதலிகள்விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், "கையில்த்ரிதண்டத்தைக் கைவிடிலன்றோ முதலியாண்டானைக்கைவிடுவது" என்று அருளிச்செய்தருளினார்.

—❧❧✻❧❧—

முதலியாண்டான், உடையவர், அருளிச்செயலில் ஒருபாட்டருளிச்செய்யக்கேட்டு பரவசராயருளினாரென்பது.

முதலியாண்டான் திருவாய்மொழி ஓதினபடி;- எம்பெருமானார் திருப்பள்ளிக்கட்டிலிலே ஏறியருளி ஒருபாட்டைச் சந்தைப்ரஸாதித்தருளினவளவிலே பரவசராயருளினார்; இத்தைக்கண்டு உடையவரும், (వేదవేద్యే పరేపుంసి జాతే దశరథాత్మజే । వేదః ప్రాచేతసాదాసీత్సాక్షాద్రామాయణాత్మనా) (வேதவேத்யே பரேபும்ஸி ஜாதே தஶரதாத்மஜே। வேத:ப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத்ராமாயணாத்மநா) என்றுப்போலே வேதவேத்யனான பரமபுருஷன் தஶரதபுத்ரனாய்வந்தவதரித்தாப்போலே, அந்தவேதங்கள்தானும் ஸ்ரீவால்மீகிபகவான்முகேந இதிஹாஸோத்தமமான ஸ்ரீராமாயணமாய்க்கொண்டு ப்ரகாசித்தாப்போலே, வேதங்கள் ஆழ்வார்முகேநத்திருவாய்மொழியாய்வந்தவதரித்ததன்றோ, அத்தைக்கண்டன்றோ இவர்பரவசராயருளினார் என்றருளிச்செய்தருளினார்.

—❧❧✻❧❧—

உடையவர், நம்பெருமாள்அவப்ர்தங்கொண்டாடவெழுந்தருளும்போது முதலியாண்டான்திருக்கைத்தலத்தைப்பற்றியெழுந்தருளி மீண்டெழுந்தருளும்போது பிள்ளையுறங்காவில்லிதாஸர் திருக்கையைபற்றியெழுந்தருளினாரென்பது.

பெருமாள், பெரியதிருநாள்கொண்டருளி அவப்ர்தங்கொண்டாடவெழுந்தருளும்போது, முதலியாண்டான்திருக்கைத்தலம்பற்றியெழுந்தருளி, நீராடிமீண்டெழுந்தருளும்போது பிள்ளையுறங்காவில்லிதாஸர்திருக்கைத்தலம்பற்றியெழுந்தருள; "இதுக்கடியேன்" என்று முதலிகள்விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும், "ஜந்மம் உயர்ந்திருக்கச்செய்தே தாழநில்லாநின்றோமே" என்கிற அபிமாநமுண்டே நமக்கெல்லார்க்கும், அக்குறையுமில்லாதவரிறேயிவர்" என்றருளிச்செய்தார்.

—❧❧✻❧❧—

பெரியநம்பிதிருமகளார்அத்துழாய்க்குச் சீதநவெள்ளாட்டியாக அடிமைசெய்துவந்தமுதலியாண்டானை அழைக்கொள்ளும்படிஅவர்புக்ககத்தார் உடையவரைத்தாழ்ந்துவேண்டிக்கொள்ள; அவரைத்தம்மிடத்துக்குஅழைத்துக்கொண்டாரென்பது.

பெரியநம்பிதிருமகளார் அத்துழாய் புக்ககத்திலேவாழுங்காலத்திலே ஒருநாள்வேளையிலே தீர்த்தமாடவேண்டி, மாமியாரை, "துணைவரவேணும்" என்றபேக்ஷிக்க; மாமியாரும் "உன்சீதநவெள்ளாட்டியைக்கொண்டுபோ" என்று கடுத்துச்சொல்ல; அத்துழாயும்பிறந்தகத்தேவந்து, "ஐயா! என்னை இப்படிசொன்னாள்" என்று பெரியநம்பிக்குவிண்ணப்பஞ்செய்ய; நாமறிவோமோ, உடையவர்க்கு விண்ணப்பஞ்செய்யும்" என்ன; அத்துழாய் உடையவர்ஸந்நிதியிலேசென்று அச்செய்தியைவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும் அருகிருந்தமுதலியாண்டானையழைத்து, "இந்தாரும் உமக்குச்சீதநவெள்ளாட்டி" என்று கூட்டியனுப்ப; முதலியாண்டானும் அவரை நீராடப்பண்ணிக்கொண்டுவந்து அவர்புக்ககத்திலேயிருந்து தாஸவ்ருத்தியைச்செய்யத்தொடங்கினார்; அவர்புக்ககத்தார், பெரியநம்பிதிருவடிகளிலேதண்டன்ஸமர்ப்பித்து முதலியாண்டானையனுப்பி, "எங்களை இப்படி அதோகதியிலே தள்ளவேணுமோ" என்று விண்ணப்பஞ்செய்ய; நம்பியும், "நாமறிவோமோ, உடையவருக்கு விண்ணப்பஞ்செய்யுங்கோள்" என்ன; அவர்களும் உடையவர்ஸந்நிதியிலேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, முதலியாண்டானையனுப்பி எங்களை அதோகதியிலேத்தள்ளவேணுமோ" என்றுவிண்ணப்பஞ்செய்ய; பின்பு ஸ்ரீபாஷ்யகாரரும், முதலியாண்டானையழைத்துஅத்துழாய்க்குச்சீதநவடிமை

யாகக்கொடுத்துவிட்டோம், அங்கிருந்து அவர் அடிமைசெய்கிறது உங்களுக்கநிஷ்டமாகில் இங்கேயிருந்தடிமைசெய்கிருர்” என்று அழைப்பித்துக்கொண்டருளினுர்.

—⁂—

மாறனேரிநம்பி தம்சரமதசையிலே ச்லோகத்வயத்தை யருளிச் செய்து த்வயநிஷ்டர்வைபவத்தை பெரியநம்பியைக்கொண்டு வெளியிட்டருளியது.

அதுக்குமேலே மாரனேரிநம்பிசரமதசையிலே அவர்கலக்கங் கண்டு திருவுள்ளங்கலங்கினபெரியநம்பிதிருவுள்ளந்தேறும்படி, ஸுலபமானச்லோகத்வயத்தையும் உதாஹரித்தருளியும், ஏதந்மூலமாக த்வயநிஷ்டர்வைபவத்தைத் தம்முடையப்ரச்நத்துக்கு உத்தரமாகப் பெரியநம்பிமுகேந வெளியிடுவித்தும்செய்தருளினுரிறே.

—⁂—

பெரியநம்பி, தம்குமாரரானபுண்டரீகரை உடையவர்திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தது.

பெரியநம்பி அத்துழாயும்தாமுமாக எழுந்தருளியிருக்கச்செய்தே உடையவரும்முதலிகளுமாகவெழுந்தருள ; பெரியநம்பிஎழுந்திருந்துதண்டனிட ; இப்படிசெய்யலாமோ, உம்முடையசிஷ்யரன்றே” என்று அத்துழாய்சொல்ல ; நம்பியும், “அத்தாளுக்குத்தக்க தலைகாண்” என்றருளிச்செய்து, தம்முடையகுமாரரானபுண்டரீகரையும் உடையவர்திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினுர்.

—⁂—

மாறனேரிநம்பி த்வயாநுஸந்தாநத்துடனே திருநாட்டுக்கெழுந்தருள, பெரியநம்பி அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தாரென்பது.

பெரியநம்பி, மாறனேரிநம்பியைப்ரஹ்மமேதத்தாலேஸம்ஸ்கரித்துப்பள்ளிபடுத்தருளினுர்; இத்தைக்கேட்டு உடையவரும் பெரியநம்பி திருமாளிகையிலேயெழுந்தருளி தண்டன்ஸமர்ப்பித்து, “அடியேன் ஸம்ஸாரஞ்சிறுகிடாதபடி ஒருவழியிலேவரம்புகட்ட; தேவரீர் ஒருவழியிலேபிரித்தருளாநின்றதே!” என்றுவிண்ணப்பஞ்செய்ய; பெரியநம்பியும், “வாரீர்உடையவரே ! இக்ஷ்வாகுவம்சத்திலேதிருவவத்ரித்து ஸாமாந்யதர்மத்தைவெளியிடுகிற பெருமாளைக்காட்டில் நான்பெரியவனே?, பெரியவுடையாரைக்காட்டில் இவர்தண்ணியரோ?, ஸாமாந்யதர்மநிஷ்டரைக்காட்டில் நான்பெரியவனே?, ஸ்ரீவிதுரரைக்காட்டில் இவர்தண்ணியரோ?, * பயிலுஞ்சுடரொளி * நெடுமாற்கடிமை கடலோசையோ” என்ன ; அவரும்நிருத்தரராயிருந்தார்.

பெரியநம்பிஉடையவருடனே,மாறனேரிநம்பிதிருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது, “பெரியபெருமாள்திருவடிகளேசரணம்,ஆளவந்தார் திருவடிகளேசரணம் என்றுசொல்லக்கண்டிலோம்” என்றருளிச்செய்ய;உடையவரும், “அவர்க்குச்லோகத்வயாநுஸந்தாநமாகக்கொள்ளீர்” என்றருளிச்செய்ய ; “அதுபெண்கண்டபிச்சன்வார்த்தையன்றே” என்று பெரியநம்பிஅருளிச்செய்ய ; “பெண்ணினுடையநித்யயோகத்தைத் திருவுள்ளம்பற்றுதொழிகிறதென்” என்றருளிச்செய்தருளினுர்.

—⁂—

உடையவர் ஒருவூமைக்குத் தம்முடையதிருமேனியைரக்ஷகமாகக் காட்டியருள, அத்தைக்கண்ட கூரத்தாழ்வான், “எம்பெருமானுர்திவ்யமங்களவிக்ரஹமேதஞ்சம் என்கிறநிஷ்டைக்கு அநதிகாரியாய்விட்டேனே” என்று தம்மை வெறுத்தருளியது.

ஓருநாள் உடையவர் ஒருஊமையைக்கடாக்ஷித்து ஏகாந்தத்திலே வைத்துக்கொண்டு ஊமைக்குத்தம்முடையதிருமேனியைரக்ஷகமாகக் காட்டியருள ; ஆருக்கும்ஸித்தியாத விசேஷகடாக்ஷத்தை கூரத்தாழ்வான் கதவுபுரையிலேகண்டு மூர்ச்சித்துத்தெளிந்து, “ஐயோ! ஒன்றுமறியாதேபிறந்தேனுகில் இப்பேற்றைஉடையவர் அடியேனுக்குமிரங்கியருளுவர், கூரத்தாழ்வானுய்ப்பிறந்து சாஸ்த்ரங்களைக்கற்கையாலேயன்றே தம்முடையதிவ்யமங்களவிக்ரஹத்தை அடியேனுக்குக்காட்டித்தந்தருளாமல் ப்ரபத்தியைஉபதேசித்துவிட்டார் ; ஆகையால் எம்பெருமானுர் திவ்யமங்களவிக்ரஹம் அடியேனுக்குத்தஞ்சம் என்கிறநிஷ்டைக்கநதிகாரியாய்விட்டேனே” என்று ஆழ்வான் வெறுத்துக்கொண்டருளினுர்.

—⁂—

பெரியநம்பி, உடையவருக்கு “ஸதாசார்யவிக்ரஹமே ஸதாத்யேயம், தந்நாமமேஸதாஜப்யம்” என்றருளிச்செய்தது.

நம்பிதான் திருக்கோட்டியூரிலே திரைவளைத்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க ; உடையவர் அங்கேயெழுந்தருளி தண்டன்ஸமர்ப்பித்து, அவரைப்பார்த்து, “திரைவளைத்துக்கொண்டு எழுந்தருளியிராநின்றீர், த்யாநமேது, மந்த்ரமேது” என்றுகேட்டருள ; நம்பியும் “ஆளவந்தார்வடவாற்றிலே நீராடியருளும்போது திருமுதுகிருக்கும்படி, வலியகடாரம்கவிழ்த்தாப்போலேகாணுமிருப்பது, அது எனக்குத்யாநம், யமுனைத்துறைவரென்கிறது மந்த்ரம், நீரும்அத்தைமறவாமல் நினைத்திரும்” என்றருளிச்செய்தார். இத்தால் – “ஸதாசார்யவிக்ரஹமேஸதாத்யேயம் என்றும், தந்நாமமேஸதாஜப்யம்” என்றும் அருளிச்செய்தாராய்த்து.

அதுக்குமேலே பெருமாள்திருவுள்ளக்கருத்தையுமறிந்து அவர்க்கு உயிரநிலையாய்த் திருமுடித்துறையிலே ததநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்யநிரதராய்வர்த்தித்துப்போருகிற பட்டினிப்பெருமாளையுங் கிட்டி, அட்டத்திலே பலநாளும்ஸேவித்து அவர்லோகயாத்ரையில் கண்வையாதே பகவதநுபவைகபரரான ஆகாரத்திலேதாம்வித்தராய் ப்ரீதியாலே, "பெருமாளே! பெருமாளே" என்ன; அவரும், "தம் கைங்கர்யம்பலித்தது" என்று, "ஜீயா! ஜீயா!" என்ன; அவர்கருத்தறிந்து அவர்க்கு ஜீவநாவதியும்கற்பித்தருளி, தாமும் அப்படியே, (భగవన్తం నారాయణం ధ్యాయన్ యోగేన దృష్ట్వా) (பகவந்தம்நாராயணம்த்யாநயோகேநத்ருஷ்ட்வா) என்றுபகவதநுபவம்பண்ணி அநுபவஜநிதப்ரீதிகாரிதகைங்கர்யங்களோடே காலங்கழியாநின்றுகொண்டுபோராநிற்கிறகாலத்திலே,

கூரத்தாழ்வான், உடையவராலே "இளையாழ்வாரான ராமாநுசன்" என்று திருநாமம்சாத்தபெற்ற தம்குமாரரான கந்தாடையாண்டானை ஆட்கொண்டவில்லிஜீயரிடத்திலே ஆச்ரயிப்பித்தது.

முதலியாண்டானுக்கும் ஒருகுமாரர் ஆசார்யகைங்கர்யத்துக்கு அர்ஹராகவவதரிக்க; அவரையும் அப்படியே அபிமாநித்தருள; அநந்தரம்முதலியாண்டானும்உடையவர்ஸந்நிதியிலே, இந்தசிசுவை தேவரீர் திருநாமம்சாத்தவேணும்என்றுவிண்ணப்பஞ்செய்ய; அப்படியே "இளையாழ்வாரானராமாநுசன்" என்று கந்தாடையாண்டானுககுத் திருநாமம் சாத்தியருள; அவரும், (రామానుజార్య భూయిష్ఠం నమఃక్తిం ప్రచక్ష్మహే। యతీన్ద్రకరసంస్పర్శసౌఖ్యం యేనాన్వభూయత) (ராமாநுஜாயபூயிஷ்டம்நமஉக்திம் ப்ரசக்ஷ்மஹே। யதீந்த்ரகரஸம்ஸ்பர்சஸௌக்யம்யேநாந்வபூயத) என்னும்படிகடாக்ஷகதாரகராய் வளர்ந்துபோந்தார்; அவரை ஆட்கொண்டவில்லிஜீயரிடத்திலே ஆச்ரயிப்பித்தருளினர்; மற்றுமுண்டான ஆசார்யபுருஷர்களுக்கும் இப்படி ஸத்ஸந்தாநங்களுமுண்டாய்த்து. இப்படி இவர்களெல்லாரும் * கோயில்பிள்ளைகளாய்வளர்ந்து ஸகலவித்யைகளும் அதிகரித்துக்கொண்டுபோந்தார்கள். மற்றும்திருவடிகளை ஆச்ரயித்தமுதலிகளெல்லாரும் தந்தாம்புத்ரர்களையும் உடையவர்திருநாமம்சாத்தினர்கள். ஸ்ரீவைஷ்ணவவண்ணாத்தானும் அப்படியேதிருநாமஞ்சாத்த; அந்தப்பிள்ளையை உடையவர்எடுத்துக்கொண்டுமிகவும் உகந்தருளினர். அத்தைக்கண்டு எல்லாரும் "அந்தப்பிள்ளையுடைய பேறிருந்தபடியென்!" என்று ப்ரீதரானர்கள். (రామో రామో రామ ఇతి ప్రజానామభవన్ కథాః) (ராமோராமோராமஇதிப்ரஜாநாமபவந்கதா:) என்னுமாப்போலே ஜகத்தெல்லாம்ராமாநுஜன்திருநாமத்தாலே உஜ்ஜீவித்துப்போர,

பெரியநம்பி தெற்கேஎழுந்தருளும்போது மணலைமந்த்ரித்துத் தெளித்து கோயிலுக்குரக்ஷையிட்டருளினரென்பது.

அக்காலத்திலே இத்தைஅஸூயையாலே ஸஹிக்கமாட்டாதகிழக்குத்தையில் ராஜாக்களாலே அத்தேசத்துக்கு உபத்ரவமுண்டாகத்தேட; அத்தை எம்பெருமானர், பெரியநம்பிக்கு அறிவிப்பித்தருள; "தத்பரிஹாரார்த்தமாகப்பெருமாளுடையதிருவெல்லையை நான் ஒருப்ரதக்ஷிணம்பண்ணும்படி யென்பின்னேநிரபிமாநராய் வரும்படிக்கு உம்முடையசிஷ்யர்களிலே ஒருவரைப்போரவிடும்" என்ன; உடையவரும், "அதுக்காவாரை தேவரீரேகூட்டிக்கொண்டெழுந்தருளலாகாதோ" என்ன; (பலரடியார்முன்பருளிய) என்கிறபடியே பெரியநம்பியும் ஆழ்வானைக்கையைப்பிடித்துக்கொண்டு எழுந்தருளி, (நவஞ்செய்மலர்ப்பொழில்கூரநாதன்மணல்கொண்டோதிநாளிலமெண் திருவரங்கங்காத்தளித்தோன்) என்னும்படி அவர்பின்னே ஆழ்வான் மடியிலேகட்டிக்கொண்டுசென்றமணலைதிரக்ஷபண்ணிவலஞ்செய்தருளினர். இப்படியாய்த்துபெரியநம்பிபெரியகோயிலைக்காத்தருளினபடி. அந்தரக்ஷையேயிறே ஸர்வரக்ஷகனுக்கும் எப்போதும்ரக்ஷையாய்த்து.

உடையவர் வேதாந்தார்த்தத்தை விசதீகரித்துக்கொண்டுகோயிலிலே அறுபதுஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தாரென்பது.

இப்படி, பாரெல்லாம்பரம்பும்படியான திருநாமத்தால்வந்தபெருமையையுடைய எம்பெருமானரும், ஜகத்தெல்லாம் * திருமால்திருக்கை திருச்சக்கரமான திருவிலச்சினை, * திருமால் திருமண், (திருமாலுக்குரியதொண்டர்) என்று தாஸ்யநாமம், * திருமால் திருநாமமான த்வயம், * திருமாலைக்கைதொழுகையாகிற சேஷவ்ர்த்திமுதலான இவற்றாலே * திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்க; அவர்களும், "ராமாநுஜனுடையார்" என்று - உடையவரபிமாநாந்தர்ப்பூதராய், முமுக்ஷுக்களாய், மோக்ஷகலக்ஷயராய்வாழ்ந்துகொண்டு போருகிறவக்காலத்திலே ப்ரணவார்த்தப்ரகாசகவஸ்துவினுடையஸந்நிதியிலே, இப்படிபெண்ணும்பேதையும்ஸம்ஸாரத்தினின்றும் உத்தீர்ணராய்க்கொண்டுபோருகிறகாலத்திலே, ப்ரணவார்த்தப்ரகாசகமான வஸ்துவினுடையபரத்வத்தைததர்த்தநிர்ணயமுகேநப்ரகாசிப்பாராய், (సర్వస్య వేదజాతస్య ప్రకృతిః ప్రణవః, ప్రణవప్రకృతిరకారః, ప్రణవవికారో వేదః, స్వప్రకృతిభూత ప్రణవే లీనః, ప్రణవోఽప్యకారభూత స్వప్రకృతావకారే లీనః, తస్య ప్రకృతిభూతస్యాకారస్య యః పరో వాచ్యస్స మహేశ్వర ఇతి) (యద్వేదాదౌ స్వరః ప్రోక్తో వేదాన్తే చ ప్రతిష్ఠితః। తస్య ప్రకృతిలీనస్య యః పరస్స మహేశ్వర ఇతి) [మహతామీశ్వరో మహేశ్వరః) (తమీశ్వరాణాం పరమం మహేశ్వరమ్)

(సింహాభూతమహేశ్వరః) (సర్వలోకమహేశ్వరమ్) (అఇతిబ్రహ్మ) (నారాయణపరం బ్రహ్మ) (హ్రీశ్చతేలక్ష్మీశ్చపత్న్యౌ, అహోరాత్రేపార్శ్వే) (ఋతంసత్యంపరంబ్రహ్మ) (సత్యంజ్ఞానమనన్తంబ్రహ్మ) (అహన్తాబ్రహ్మణస్తస్య సాహమస్మిసనాతనీ) (బ్రహ్మణిశ్రీనివాసే) (శ్రియఃకాన్తోనన్తో వరగుణగణైకాస్పదపదశ్శుద్ధాశేషావద్యః పరమఖపదో వాఙ్మనసయోః| అభూమిర్భూమిర్యో నతజనదృశామాదిపురుషః) (పరమంబ్రహ్మమహద్బ్రహ్మ) (అక్షరాణామకారోస్మి) (అఇతిభగవతోనారాయణస్యప్రథమాభిధానమ్) (భూర్భువస్స్వస్తరుఃప్రణవః) (అకారోవిష్ణువాచకః) (ఓఙ్కారోభగవాన్విష్ణుః) (ఓమిత్యేకాక్షరం బ్రహ్మవ్యాహరన్మామనుస్మరన్) (భూర్విష్ణుశ్చతథాలక్ష్మీర్భువ ఇత్యభిధీయతే, తయోస్స్వామితిజీవస్తు సువరిత్యభిధీయతే) తైత్తిరీయకే, (నారాయణపరంబ్రహ్మతత్త్వం నారాయణఃపరః, నారాయణపరోజ్యోతిరాత్మానారాయణఃపరః) ఐతరేయబ్రాహ్మణే, (అగ్నిర్వైదేవానామవమోవిష్ణుఃపరమః, తదన్తరేణసర్వాదేవతాః) ఇతి, యజుష్యపి, (అగ్నిరవమోదేవతానాంవిష్ణుఃపరమః) ఇతి,తైత్తిరీయకే,(తద్బ్రహ్మ,సఆత్మా, అఙ్గాన్యన్యాదేవతాః) ఇతి, ఇతిహాససముచ్చయే, (నారాయణాజ్జగత్సర్వం సర్గకాలేప్రజాయతే। తస్మిన్నేవపునస్తచ్చ ప్రళయేసంప్రలీయతే॥ పరాదపిపరశ్చాసౌ తస్మాన్నాస్తిపరాత్పరః|సఏవహిపరోదేవస్సఏవపరమేశ్వరః) இத்யாதிவேதாந்தவாக்யாநம் விஶதமாக்கிக்கொண்டு (సంసేవితస్సంయమిసప్తశత్యా పీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతః। అన్యైరనన్తైరపివిష్ణుభక్తైరాస్తేధిరఙ్గంయతిసార్వభౌమః) (ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்தஶத்யா பீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேத:। அந்யைரநந்தைரபிவிஷ்ணுபக்தைராஸ்தேதிரங்கம்யதிஸார்வபௌம:) என்றும், (వ్యాకుర్వతాతేనవిపశ్చిదోఘైర్వేదాన్తమవ్యాహతవాగ్విహారైః| రఙ్గేశకైఙ్కర్యధురన్ధరేణ యతీశ్వరేణోషితమబ్దషష్టిః) (வ்யாகுர்வதாதேநவிபஶ்சிதோகைர்வேதாந்தமவ்யாஹதவாக்விஹாரை:। ரங்கேஶகைங்கர்யதுரந்தரேண யதீஶ்வரேணோஷிதமப்தஷஷ்டி:) என்னும்படி அறுபதுஸம்வத்ஸரம்வாழ்ந்துகொண்டுபோருகிறகாலத்திலே,

சோழராஜன், தன்வித்வஜ்ஜநங்களிடத்தில், "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்று கையெழுத்துவாங்கியது.

உடையவர், கூரத்தாழ்வான், முதலியாண்டான் அருளாளப்பெருமாளெம்பெருமானார் இவர்களுக்கு, ஸ்ரீபாஷ்யார்த்தமருளிச்செய்யத்தொடங்கிக்கொண்டுவாழுங்காலத்திலே, (రాజేన్ద్రచోళాఖ్యపురేధకశ్చిచ్ఛైవాగ్రహోబ్రాహ్మగమశర్దమస్థః|అన్యస్యనాశ్చన్వవిద్వరాహః చోళాధిపశ్శుద్ధపరత్వగన్ధమ్॥సశైవమార్గాగమతత్త్వనిష్ఠైర్నారాధసైద్ధప్రభృతిభిశ్చమూఢైః। అక్షీణపాపైరసురాంశజాతైరవోచదిత్థం లిఖితవ్యమేవ॥ శివాత్పరంవస్తునకించిదస్తీచార్య తచ్ఛాసనవాక్యభీతైః। విద్వజ్జనాఖ్యైర్లిఖితవ్యమేవ విమృశ్యరాజానమథాహమన్త్రీ॥ రామానుజార్యోభగవాన్ త్రిదణ్డీసన్న్యాసధర్మాకృతిరద్వితీయః। పరాత్పరందైవతమప్రమేయంసవేత్తినాన్యోభువి వేత్తి కశ్చిత్ ॥ నాలూరితిగ్రామనివాసినోక్తంనిశమ్యరాజానిజనాశహేతుమ్।స్వకింకరాన్దుర్మతిరేవమాహ రామానుజంయూయమిహానయధ్వమ్॥ యావద్భటేష్వాగతమాశురఙ్గే నీత్యాంవిచిన్వన్సుయతీన్ద్రరేవ।విమృశ్యభావ్యంయతివేషమాశుశ్రీవత్సచిహ్నాయ దదౌయతీన్ద్రః) என்கிறபடியே — ராஜேந்த்ரசோழபுரத்திலே சோழராஜாவென்பானொருவன் பரதத்வாஉஸஹிஷ்ணுவாய் கேவலகர்த்தமஸ்தமான விட்வராஹம் போலே ஶைவாகமத்திலேதானேமடுவிட்டிருக்கிற அவன்சொல்படிக்கு ஶைவாகமநிஷ்டர்களாயிருக்கிற நராதமரானவர்கள், ராஜசாஸநத்துக்குபயப்பட்டு மூடாத்மாக்களாய், (శివాత్పరతరంనాస్తి) (ஶிவாத்பரதரம்நாஸ்தி) என்று எழுதிக்கொடுக்க;

சோழன் வரவிட்டதூதர்களுடனே உடையவர் எழுந்தருளமுயன்றது.

இவர்கள் எழுதிக்கொடுத்ததை ராஜமந்த்ரியான நாலூரான் கேட்டு ராஜாவைப்பார்த்து, "இவர்களெழுதினதிலேப்ரயோஜநமில்லை, ஸ்ரீரங்கஸ்த்தலத்திலே த்ரிதண்டகாஷாயதரராய், ஷட்தர்ஶநதத்வவேத்தாவாய், ஸர்வரும் "இவர்பகவதவதாரம்" என்னலாம்படியான வைபவத்தையுடையராயிருக்கிறார், அவரொருவருமே பரதத்வமறிந்தவர், என்று சொல்லக்கேட்டு, ராஜாவும், தனக்கு மேல்வரும் அநர்த்தத்தைத்தெரியாமல் சிலதூதர்களையனுப்பி, "ராமாநுஜனை இங்கேபிடித்துக்கொண்டுவாருங்கோள்" என்றனுப்ப; அவர்களும் அப்படியேஸ்ரீரங்கஸ்த்தலத்திலேசென்று ராமாநுஜனைவீதிகள்தோறும்தேடி ராமாநுஜனுடைய மடத்துவாசலிலேவந்து, "ராமாநுஜனெங்கே, அழையுங்கோள்" என்ன; இச்செய்தியை உடையவர்நீராடத்திருமஞ்சநம் முகந்துகொடுக்கிற கூரத்தாழ்வானுக்குத் திருச்செவியிலே ஒருஸ்ரீவைஷ்ணவர் ரஹஸ்யமாகவிண்ணப்பஞ்செய்ய; அத்தைக்கண்டு உடையவரும், "என்?" என்றுகேட்டருள; ஆழ்வானும் அச்செய்தியைவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும், சங்கரபாத்வஸாதிக்கிறவர்கள் சரிந்துபோம்படி நிராகரிக்கவேணுமென்று உத்ஸாஹிக்க;

உடையவர், தம்முடைய த்ரிதண்டகாஷாயாதிகளை ஆழ்வானுக்கு ப்ரஸாதித்து தாம் வெள்ளைசாத்தித் திருநாராயணபுரத்தை நோக்கி யெழுந்தருளியது.

ஆழ்வானும், அடிகாத்து, "அப்படிசெய்யவொண்ணாது, த்ரிதண்டகாஷாயாதிகளை அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணும்" என்ன ராமாநுஜனும், அப்படியே த்ரிதண்டகாஷாயாதிகளை ஆழ்வானுக்கு ப்ரஸாதித்து, தாம் வெள்ளைத்திருப்பரியட்டத்தைச் சாத்திக்கொண்டிருக்க; கூரத்தாழ்வானும் த்ரிதண்டகாஷாயதரராய்ப் புறப்பட்டவளவிலே, பெரியநம்பியும் ஆழ்வானுடனேயெழுந்தருள; உடையவரும் "ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் என்னதீங்குவருகிறதோ!" என்று க்லேசித்துக்கொண்டிராநிற்க; முதலியாண்டான்முதலான முதலிகள் திருவடிகளிலேஸேவித்து, "தேவரீர் இவ்விடத்திலே எழுந்தருளியிருக்கவொண்ணாது" என்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் முதலிகளுமாகப் பெரியபெருமாள்திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, (வெறுப்பொடுசமணர்முண்டர்விதியில்சாக்கியர்கள்நின்பால் பொறுப்பரியனகள்பேசில் போவதேநோயதாகிக், குறுப்பினுக்கடையுமாகில் கூடுமேல்தலையையாங்கே, அறுப்பதேகருமங்கண்டாயரங்கமாநகருளானே) என்று ஆழ்வாரருளிச்செய்தபடியேசடக்கென அவன்தலையையறுத்தருளவேணும் என்றுவிண்ணப்பஞ்செய்து, பரமதர்மாவான உடையவரும், (ధర్మోవనం ప్రస్థితః) (தர்மோவநம்ப்ரஸ்த்தித:) என்கிறபடியேவெள்ளைசாத்தி மேற்கேதிருநாராயணபுரத்தைநோக்கி யெழுந்தருள; அத்தசையில் கள்ளரானராஜமநுஷ்யர் அறிந்து பின்தொடர்ந்துவர; "ஆள்வருகிறார்கள்" என்று உடையவருக்குமுதலிகள்விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், வழியில்மணலையள்ளி, (கொடுமைசெய்யுங்கூற்றமுமென் கோலாடிகுறுகப்பெறா, தடவரைத்தோள்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே) என்று அபிமந்த்ரித்து இத்தை அவர்கள்வருகிறவழியில் ஒழுக்கிவாருங்கோள்" என்று அபிமந்த்ரித்துக்கொடுக்க; அவர்களும் அப்படியேசெய்துவர; ராஜமநுஷ்யரும் அம்மணலைமிதித்தாப்போலே அப்பால் அடியிடப்போகாமல், "போகிறவர்கள், போரமந்த்ரவர்தம்பண்ணிப்போனார்கள்" என்று மீண்டுபோனார்கள். உடையவரும், (ప్రకృష్టశార్ఙ్గపరివృత్తచక్రోవికోశఖడ్గప్రగృహీతశఙ్ఖః। శ్రీమాన్ సమారూఢపతఙ్గరాజ శ్రీరఙ్గరాజః పథిమే సహాయః) (ப்ரக்ருஷ்டசார்ங்கபரிவர்த்தசக்ரேவிகோஶகட்கப்ரக்ருஹீதஶங்க: । ஸ்ரீமாந்ஸமாரூடபதங்கராஜஸ்ரீரங்கராஜ:பதிமேஸஹாய:) என்று-*அரங்கத்துறையுமின்றுணைவனையே வழித்துணையாகக்கொண்டு அறுகாதம் அப்பாலெழுந்தருளினார். (அங்குநடந்தவெதிராசனன்பர்நாற்பத்தைவருடன்। தொங்கினறுகாதஞ்சென்று குறுகிவேடர்பதிதங்க) என்கிறபடியே பெருமாள்

திருவபிஷேகோத்ஸவங்குலைந்து ஸ்ரீகுஹப்பெருமாளிருப்பிடத்திலே விட்டாப்போலே, எம்பெருமானாரும்ஸ்ரீபாஷ்யாபிஷேகமஹோத்ஸவங்குலைந்து நல்லானடியாரான வேடமுதலிகளிருப்பிடத்திலே கூடியெழுந்தருளினார்.

—❀—

த்ரிதண்டகாஷாயாதிகாரான கூரத்தாழ்வானும், பெரியநம்பியும், சோழராஜனைக்கண்டது.

அநந்தரம் அந்தராஜாமநுஷ்யர், (త్రిదణ్డకాషాయధరశ్చ కూరనాథం బృహత్పూర్ణమవేక్ష్య తేమీ। ప్రణమ్య తౌ ప్రాహురథాస్య వార్తామాగమ్య తాంభూపసమీపమాశు॥ ఇత్యుక్తవద్భిస్సహ రాజదూతైరవాపతుస్తామథ రాజధానీమ్ । అసజ్జనోపాసితకుగ్రభక్తం అపారపాపం సతు చోళరాజమ్॥ పరాత్పరం బ్రహ్మనిరూపణాయ భవత్ప్రసాదాదితి సంవిచార్య అశేషవిద్వద్భిరుపాస్యమానముపాస్యమావేదయితుం ప్రవృత్తమ్॥ ఆసీనమాసన్నవిపత్కరైశ్చ దుశ్శిష్యపాషణ్డికపాలిభిశ్చ । యామ్యైశ్చ దూతైరివ సంవృతం తం పాపైశ్చ విష్యత్క్రిమికణ్ఠసంజ్ఞమ్॥ దదర్శ దైత్యాంశజమల్పపుణ్యం సదైవ దైవోపహతాత్మబుద్ధిమ్। నిన్దన్తమాత్మేశ్వరమచ్యుతం తం హరాధిపక్రూరవచోఽభ్యసితాగ్రమ్॥ కూరేశపూర్ణావుమలీప్సితఘ్నావ్యురక్షితౌ వీక్ష్య తమోరథైకమ్। త్రిదణ్డకాషాయశిఖోపవీతమ్ నీతోర్ధ్వపుణ్డ్రోజ్జ్వలతత్కౌఘ్యమ్॥ యతీ ఇమౌ వేతి సరీక్ష్య పార్శ్వే నాలూరవస్థానమువాచ రాజా । అస్మాసరామానుజపావకిం వా నా సౌవిత్రీప్రాహ సమశ్చ తస్య॥ అనేన తత్త్వార్థనిరూపకేణ తత్త్వం పరశ్చేల్లిఖితం తవోక్తమ్ । తమాహ రాజా ప్రతిలేఖ్యమిత్థం శివాత్పరం వస్తు న కిఞ్చ నేతి॥ విరుద్ధమాకర్ణ్య రుషా విషాదాదభీతివిశేషాద్గవిదాం వరేణ్యః । తిష్ఠత్సు వేదేషు సహేతిహాసైస్సమం పురాణైస్స్మృతిభిశ్చ తత్త్వైః॥ అన్యాయ్యమన్యాయ్యమహో యదేతే హరిం వినాన్యత్పరమం వదన్తి। ప్రవర్షమానాఖప్రభవశ్చ రుద్రబ్రహ్మేశచన్ద్రార్కనిశాకరాద్యాః॥ యస్యాజ్ఞయా నాహతయా చ నిత్యం విష్ణోశ్చ తస్మాదపరః పరః కః విష్ణోః పరోఽస్తీతి కథం వదన్తి వేదాన్తవిజ్ఞానవిదాం పురస్తాత్॥ యస్యాశ్వరూపే విజయోఽప్యపశ్య బ్రహ్మాణమీశం కమలాసనస్థమ్ । విశ్వప్రపఞ్చం విమలోదరస్థం తస్మాద్ధరేః అస్తి పురః పుమాన్ కః॥ భూయోఽప్యభీరాత్మగతం విచిన్త్య సయుక్తమథ్యాత్మగిరోఽప్యసహ్యామ్ । ఫలోక్తిరేవాస్య జయాయ హేతిశశ్వం సవిద్వత్సు మిషత్సు తత్ర॥ శివాత్పరం వస్తు సదాస్తి నిత్యం ద్రోణశ్చ తస్మాదధికం పరశ్చ । ఇతి చ్ఛలోక్త్యా ప్రతిపాదితార్థస్సకోపసార్థం ప్రగుణైస్స రాజా॥ ఛలోక్తిరస్మత్పురతః ప్రయుక్తా త్వయ్యాథయా వఞ్చితభాషణేన । దణ్డప్రచణ్డస్త్వయి పాతితవ్యో మహీసుర త్వాం సుదథాప్తపేవ॥ చక్షుర్ద్వయం చ క్షేపమథాహ రాజా మే నేహితం కూరకులాధిపస్య । కుదష్టిస్సదర్శనదోషదుష్టదృష్టిద్వయోత్పాటనమిష్టమేవ॥ కర్తుం తథా తం విగసజ్జ రాజా పూర్ణం సమాహూయ యథావాక్ లిఖితస్వ । ఇతి ప్రయుక్తస్సతు నిర్భయో మూరేః పరశ్చ నైనేతి సపద్యమాహ

పాపీనీసరద్యావపదాబ్జమేకః ప్రావక్షుశ్చాన్యతమస్తదమ్ము। అదీధరన్మూర్ధ్ని తతశ్శివోభూత్ కోవాధికో హ్యేష విచారణీయః॥ యథాత్మనశ్చ చకారకోపాత్ నరాధమస్స్పృష్టమసహ్యమూశ) என்கிறபடியே காஷாயாதிதரான ஆழ்வானையும் ஆக்ரஹியான பெரியநம்பியையுங்கண்டுஸேவித்து, "ராஜஸமூஹத்துக்கு வாருங்கோள்" என்றழைக்க;

பிராட்டியும் பெரியவுடையாரும் ராவணன்கையிலே அகப்பட்டாப்போலே, அவர்களும் அப்படியே அஸத்கோஷ்ட்டியான ராஜஸகாசத்திலேசெல்ல; அந்தராஜாவும் அஸஜ்ஜநங்களாலேசூழப்பட்டு, சிவபக்தனாய் அபரிமிதபாபனாய், "பரப்ரஹ்மநிரூபணம்பண்ணவேணும்." என்று ப்ரார்த்தித்தழைப்பித்த வித்வான்களாலே சூழப்பட்டவனாய், சைவரென்ன, பாஷண்டிகளென்ன, காபாலிகளென்ன, அதுவுமன்றியே அண்டினவர்களுக்கு விபத்துபண்ணுவிக்குமவர்களாலேயும் யமதூதர்கள்போலேயிருக்கிற துர்வாதிகளாலேயும்சூழ்ப்பட்டவனாய், இனிமேலும், "க்ரிமிகண்டன்" என்று பேர்வரும்படியாயிருக்கிறவனாய் அஸுராம்ஸமாகப் பிறந்திருக்கிறவனாகையாலே ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனை நிந்திக்கிறவனுமிருக்கிற அந்தராஜாவை ஆழ்வானும்பெரியநம்பியும்கண்டார்கள்.

(சிவாத்பரதரம்நாஸ்தி) என்று எழுத்திடச்சொன்ன சோழராஜன்
முன்னே, (த்ரோணமஸ்திததঃபரம்) என்று எழுத்திட்ட
கூரத்தாழ்வானையும்பெரியநம்பியையும்நேத்ரோத்
பாடநம்பண்ண; அந்தராஜாவுக்குஉடைவா
ளெடுப்பாளொரு பெண்பெண்டாட்டி
இவர்களைஊருக்குவெளியில்ஆதரி
த்துவைத்துக்கொண்டிருந்
தாளென்பது.

ராஜாவும் புரஸ்த்திதர்களாய் குமதிநிராகரிஷ்ணுக்களாயிருக்கிற இவர்களிருவரையும்பார்த்து, அவர்களிருவரிலும் த்ரிதண்டகாஷாய சிகோர்த்வபுண்ட்ரதராயிருக்கிறஇவரைவிசேஷித்துப்பார்த்துநாலூரானைப்பார்த்து, "நீர்முன்புசொன்ன ராமாநுஜனோஇவர்" என்று கேட்க; அவனும், "அந்தராமாநுஜனன்று,* அவர்க்குஸத்ர்சர்" என்ன; இப்படிசொன்ன நாலூரானைப்பார்த்து தத்வார்த்தநிரூபகரான இவராலே, "சிவாத்பரதரமில்லையென்று எழுதுவிக்கவேணும்". என்று ராஜாசொல்ல;

விசேஷார்த்தவித்துக்களுக்கெல்லாம் புகலிடமாயிருக்கிற ஆழ்வானும், விருத்தமாய்கர்ணகடோரமாயிருக்கிற வாக்யத்தைக்கேட்டு,

கோபத்தினாலும் துக்கத்தினாலும் க்லேசயுக்தராய், (యోవిష్ణురేవపరతత్త్వమితిప్రతిజ్ఞాం ప్రత్యర్థిసంసదిసమర్థయతేస్మసత్యామ్। వేదాన్తవాక్యగతిభిర్వివిధైశ్చతర్కైః శ్రీవత్సచిహ్నగురుమేనముపాశ్రయామి॥ యస్త్వల్వణోర్ఽణుతరో మహతో మహీయాన్ ఆత్మాజనస్యజగతశ్చగురుశ్చయోభూత్। వేదాత్మకప్రణవకారణవర్ణవాచ్యం తత్త్వంవయన్తుపరమేశ్వరమామనామః) (யோவிஷ்ணுரேவபரதத்வமிதிப்ரதிஜ்ஞாம் ப்ரத்யர்த்திஸம்ஸதிஸமர்த்தயதேஸ்மஸத்யாம் | வேதாந்தவாக்யகதிபிர்விவிதைஸ்சதர்க்கைஸ் ஸ்ரீவத்ஸசிஹ்நகுருமேநமுபக்நயாமி|| யஃக்ல்வணோரணுதரோ மஹதோமஹீயாநாத்மாஜநஸ்யஜகதஸ்சகுருஸ்சயோபூத்|வேதாத்மகப்ரணவகாரணவர்ணவாச்யம்தத்வம் வயந்துபரமேஸ்வரமாமநாமः) என்று இப்படி ச்ருதிஸ்ம்ர்திதிஹாஸபுராண தர்க்கங்களோடேகூட நித்யமாயிருக்கிறவேதங்கள் "ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்" என்றுஅறுதியிட்டிருக்க, ஸர்வஜ்ஞர்களாயிருக்கிற இந்தவித்வாங்கள், ஸ்ரீமந்நாராயணனன்றியிலே வேறேயொருதேவதையை பரதேவதையென்று சொல்லுகிறார்கள், இந்த அந்யாயமெங்கேயுண்டு, இந்த ஆஸ்சர்யம் எங்கேயாகிலுமுண்டோ;-"ப்ரஹ்மாவென்ன, ஈச்வரனென்ன, இந்த்ரனென்ன, அர்க்கனென்ன், நிசாகரனென்ன, இவர்கள்முதலான ஸகலதேவதைகளும், நிரங்குசையாயிருக்கிற யாதொருவருடைய ஆஜ்ஞையினாலே ஆஜ்ஞாபிக்கப்பட்டுத்தங்கள்தங்கள் அதிகாரங்களைப்பண்ணிக்கொண்டு ப்ரபுக்களாயிருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஸ்ரீமந்நாராயணனையல்லதுபரனாகஒருவனுண்டோ?யாதொருவருடையவிச்வரூபத்திலே ப்ரஹ்மாவையும் ருத்ரனையும் ஸமஸ்தப்ரபஞ்சங்களையும்சுத்தஸத்வமயமான திருவுதரத்திலே திவ்யசக்ஷுஸ்ஸினாலேகண்டான், அவனையன்றியிலே வேறேயொருபரமபுருஷன் எவனுண்டாகிறான்' என்றுகூப்பிட்டு, மீளவும், இந்தபாஷண்டபூயிஷ்டமானஸதஸ்ஸிலே பரதத்வப்ரதிபாதகங்களாயிருக்கிற வேதாந்தவாக்யோபந்யாஸம்உசிதமன்று, சலோக்தியேநமக்குஹிதம்" என்று மநஸ்ஸிலேநிஸ்சயித்து, "குறுணிக்குமேலுமுண்டு, அதுக்குமேலே பதக்குமுண்டு, அதுக்குமேலேயும் அதிகமுண்டு" என்று எல்லார்க்கும்கேட்கும்படி கோஷித்து, (ద్రోణమస్తితతఃపరమ్) (த்ரோணமஸ்திததঃபரம்) என்று எழுத்திட்டருளினார்.

இத்தைக்கேட்டு ராஜாவும்குபிதனாய், "என்முன்பே நீர் இப்படி எழுத்திடுகையாலே க்ரூரதண்டம் உம்முடையவிடத்திலே பண்ணவேணும், நீர் ப்ராஹ்மணராகையாலே வதார்ஹரன்று, உமக்கு தண்டம் நேத்ரோத்பாடநம்" என்ன; ஆழ்வானும், "துர்த்ருஷ்டிகளையும் உன்னையும்பார்த்த மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கு நீசொன்னதுவே தண்டம், அதுவேநமக்கபிமதம்" என்று திருக்கைகளாலே கீண்டுகொண்டு, (ఇహసన్తోనవాసన్తి) (இஹஸந்தோநவாஸந்தி)(வாழாட்பட்டுநின்றீ

ருள்ளீரேல்) என்கிறபடியே பகவத்விட்டுக்களாயிருக்கிற இந்நீசகோஷ்டிக்குள்ளே பகவத்பரராயிருப்பார் ஒருவராகிலுமில்லையோ என்றாராய்ந்துபோர; அப்போது ராஜாவுக்கு உடைவாளெடுப்பாளொரு பெண்பெண்டாட்டி, வாளை அவன்முன்னேபொகட்டு, "நாயந்தே! அடியேன் விடைகொண்டிருக்கிறேன்" என்று ஆழ்வானுக்குக்கைகொடுத்து ஊருக்குப்புறத்திலேவிட்டு அற்றைக்கங்கே அநுகூலித்துக்கொண்டிருந்தாள்.

பின்பு பெரியநம்பியையும் அழைத்து, "நீர் எழுத்திடும்" என்ன; பெரியநம்பியும் அவனைப்பார்த்து, "ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்" என்று பஹுமுகமாகவருளிச்செய்து, அதுவுமன்றியே, ([illegible] । [illegible]) (ஏகஃப்ராவீஸரத்பாதமங்யஃப்ரக்ஷாளயந்முதா । அபரோதீதரந்மூர்த்நா கோதிகஸ்தேஷுகண்யதாம்) என்கிறபடியே ஒருவன் இடக்காலைஉசர நீட்டினான், அந்தக்காலை ஒருவன் கமண்டலோதகத்தினாலேகழுவினான், அந்தக்கழுவினஜலத்தை ஒருவன்தரித்து பரிசுத்தனானான், இதிலே பெரியவர் ஆர்? நீயேசொல்லிக்காணாய்" என்றும், அதுவுமன்றியே, "([illegible]) (யச்சௌசநிஸ்ருதஸரித்ப்ரவரோதகேநதீர்த்தேந மூர்த்ந்யதித்தேந சிவஶ்ஶிவோபூத்) என்கிறபடியே த்ரிவிக்ரமன்திருவடிகளில்பிறந்த கங்காஜலஸங்கத்தாலே கபாலித்வம்போய் சிவத்வமுண்டானவனிறே" என்று அருளிச்செய்ய; அவனும் குபிதனாய் ஆழ்வானைப்பண்ணுவித்ததண்டத்தை இவரையும்பண்ணுவித்து தன்ஸகாசத்திலும் புறப்படவிட; அத்தசையிலேபெரியநம்பிதிருமகளார் அத்துழாய் இவரிருவரையுங்கூட்டிக்கொண்டுபோய் பரிஹரித்துக்கொண்டிருந்தாள்.

—※—

பெரியநம்பி, "ஒருபாகவதன்மடியைக்காட்டில் கோயில் உத்க்ர்ஷ்டஸ்த்தலமா" என்று அருளிச்செய்து, கூரத்தாழ்வான்மடியில் திருமுடியும் அத்துழாய்மடியில் திருவடிகளுமாகத் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்பது.

ஆழ்வானும், "தர்சநத்துக்காகதர்ஶநங்கொடுக்கப்பெற்றோமே!" என்று ப்ரீதராயெழுந்தருளியிருந்தார்; பெரியநம்பியும் வ்ர்த்தராகையாலே வேதனைபொறுக்கமாட்டாமல் ஆழ்வான்திருமடியிலேதிருமுடியும்அத்துழாய்திருமடியிலே திருவடிகளுமாய்க்கண்வளர்ந்தருள; நம்பியுடைய ஆபத்தசையிலே ஆழ்வானும் அத்துழாயும், "கோயிலும் ஸ்ரீபாஷ்யகாரரும் பெருமாளுமிருக்க இங்கேதிருநாட்டுக்கெழுந்தருளவேண்டுகிறதே!" என்று மிகவும்க்லேசிக்க; பெரியநம்பியும், "நானும்

அங்கேபோனேனாகில், "பெரியநம்பிக்ககப்படக் கோயிலிலேசரமதசைக்குப்போகவேண்டிற்று, நமக்கும் அப்படியாகவேணும்" என்றுதேசாந்தரஸ்த்தரான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் திவ்யதேசங்களை அபேக்ஷித்து அதுகிடையாமையாலே என்செய்யக்கடவது?" என்று ஏங்கியிளைப்பார்கள்; அப்படி ஆகாமைக்காகவும், இன்னமும், ([illegible] । [illegible]) (யத்ரக்வாப்யதவா தேஶே வைஷ்ணவோம்ரியதே யதி। ததாதத்ராஶுஸாந்நித்யம் கரோதிகருடத்வஜ:) என்கிறபடியேராவணன்வேட்டைவ்யாஜத்தாலே பெருமாள் தண்டகாரண்யத்துக்கெழுந்தருள, அங்கேபெரியவுடையாருக்குப் பெருமாள்திருமடிவலித்திதாப்போலே, பெரியநம்பிக்கும், கண்டகனைகண்டிக்கிறவ்யாஜத்தாலேஆழ்வான்திருமடிவலித்திதது. ([illegible]) (வைஷ்ணவஸ்யாங்கஶய்யாயாம் வைஷ்ணவஸ்யக்ர்ஹேபிவா) என்று அருளிச்செய்து, "ஒருபாகவதன்மடியைக்காட்டில் கோயிலுக்குஉத்கர்ஷமென்" என்று அருளிச்செய்து ஆளவந்தார்திருவடிகளைத்யாநித்துக்கொண்டு, கூடஸ்த்தரானநாதமுநிகள் குருகைகாவலப்பன் திருநாட்டுக்கெழுந்தருளின முக்திபூமியிலே இவரும்திருநாட்டுக்கெழுந்தருளினார்.

—※—

ஸ்ரீபராந்தகனில்ஸ்ரீவைஷ்ணவர்கள், பெரியநம்பிவிமலசரமவிக்ரஹத்தை ப்ரஹ்மமேதத்தாலேஸம்ஸ்கரித்துத்திருப்பள்ளிபடுத்துத் திருவத்யயநமும்பெருக்கநடத்தி யருளினார்களென்பது.

அங்கே அநாதப்ரேதஸம்ஸ்காரம்பண்ணிக்கொண்டுதிரிவார்சிலர் வந்து அப்படிகளைச்சொல்லித் தாங்கள்செய்வதாக உத்யோகிக்க; இத்தசையிலும், ஒருவரையும் ஒன்றுஞ்சொல்லியறியாத ஆழ்வானும் அத்யவஸாயங்குலையாமல், "வாரீகோள்மாணிகாள்! உபயவிபூதிநாதனான ஈச்வரனும் ஈச்வரவிபூதியும் வைஷ்ணவனுக்கு கிஞ்சித்கரிக்கவிருக்க, வைஷ்ணவனுமாய் அநைவையுமாயிருப்பாரை நீங்கள் எங்கேதேடுவதிகோள்" என்று அவர்களை உபேக்ஷித்துவிட்டாராய், இப்படியிருக்குந்தசையிலே, ([illegible]) (கூரேஶஸ்ஸஹசபராந்தகத்விஜேந்த்ரைஸ்ஸம்ஸ்கர்த்யோசிதவிதிநாமஹார்ஹபூர்ணம்) என்கிறபடியே ஸ்ரீபராந்தகனில்ஸ்ரீவைஷ்ணவர்கள்வந்து • உதவிமஹாபூர்ணருடைய மங்களமான வபுஸ்ஸை ஸர்வேச்வரனுக்குபூர்ணஹவிஸ்ஸாம்படி ஸமர்ப்பித்து ப்ரஹ்மமேதத்தாலே திருப்பள்ளிபடுத்து ஆழ்வானையும் ஒருகட்டணத்திலே ஊரேற எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய்த் தங்கள் திருமாளிகையிலே

பரிஹரித்துக்கொண்டிருந்தார்கள். இப்படி ஆழ்வான்விஷயத்திலும் பெரியநம்பிவிஷயத்திலும் உதவின நாவல்கொடியம்மாள், 'அவர்களுக்கு நம்பெருமாள்தீர்த்தப்ரஸாதங்களும் ஸகலவரிசைகளும் ப்ரஸாதித்தருளி' திருவோலக்கத்தில் ஆசார்யபதமும் ப்ரஸாதித்து உபலாளித்தருளினார்.

—❧❧✳❧❧—

வேடமலையருகிலுள்ள வேடமுதலிகள், திருவரங்கர்செல்வக்குறையையும் உடையவர்திருவடிகளுக்குண்டான குறையையும் கோயில் ஸ்ரீவைஷ்ணவர்சொல்லக்கேட்டு எருமுகைதவிர்த்து ஆறுநாள் பட்டினியேகிடந்தார்களென்பது.

அநந்தரம் உடையவர் மேற்கே திருநாராயணபுரத்தைநோக்கியெழுந்தருளுகிறவர், ஏழுநாள் உபவாஸத்துடனே வேடமலையருகேயெழுந்தருள ; அவ்விடத்திலே திருமலை நல்லான்சிஷ்யர்களாயிருப்பார் சிலர் புலம்பாவாநிற்க, அங்கே ஒருஸ்ரீவைஷ்ணவர் கோயில்நின்றும் வாராநிற்க, அவர்களும், திருநாமமேகுறியாக, "எங்குநின்றுமெழுந்தருளுகிறீர்" என்றுகேட்க ; ஸ்ரீவைஷ்ணவரும், "கோயில்நின்றும் வருகிறோம்" என்ன ; அவர்களும், "பெரியபெருமாள் திருச்செல்வத்துக்கு ஒருகுறையில்லையே, 'எம்பெருமானார்திருவடிகளுக்குஒருகுறையில்லையே" என்ன ; அந்தஸ்ரீவைஷ்ணவரும், "என்ன எம்பெருமானாரும், என்னதிருச்செல்வமும், எம்பெருமானார் வெள்ளைசாத்தியெழுந்தருளினார், இன்னவிடத்தேயெழுந்தருளினாரென்று தெரிந்ததில்லை" என்றவாறே அவர்களும் புனம்பாவுகைதவிர்ந்து ஆறுநாள் பட்டினியேகிடந்தார்கள் ;

—❧❧✳❧❧—

உடையவர் முதலிகளுடனே திருநாராயணபுரத்தைநோக்கியெழுந்தருளும்போது ஏழுநாள்பட்டினியாக வேடமலையருகேயெழுந்தருள, நல்லான்திருவடிஸம்பந்திகளான வேடமுதலிகள் மழையில்நனைந்துவந்தஅவர்கள்சாத்துகைக்குத் திருப்பரியட்டமும் அமுதுசெய்தருளுகைக்கு தினைக்கதிரும் தேனும்ஸமர்ப்பித்தார்களென்பது.

ஆறும்நாள்ராத்ரி எம்பெருமானாரும் முதலிகளும் மழையிலே யீடுபட்டு அவர்கள்புனத்திலே அம்மலையடியிலே நெருப்பொளி கண்டு, "அங்கேநம்மைக்கொண்டுபோங்கோள்" என்று அருளிச்செய்ய ; அவர்களும் அப்படியேகொண்டுபோய், "வழியெங்கே? பிள்ளைகாள்!" என்ன ; அவர்கள், "ப்ராஹ்மணக்குரலாயிருந்தது, பெருவிடாயோடே ஒருகுரலழையாநின்றது" என்று

வேலியைப்பிரித்து, "இங்கேவாருங்கோள்" என்று இவர்கள்சாத்துகைக்குத் திருப்பரியட்டமும்கொடுத்து இவர்கள்சாத்தியிருந்த திருப்பரியட்டங்களையும்வாங்கி உலரவிட்டுக்காய்ச்சி ஒற்றி, "நீங்கள் எங்குநின்றும் எழுந்தருளுகிறீர்கோள்" என்றுகேட்க ; இவர்களும், "கோயில்நின்றும்வருகிறோம்" என்ன ; "எம்பெருமானார்செய்தருளுகிறபடியென்" என்றுகேட்க ; முதலிகளும், "நீங்கள் எம்பெருமானாரையறிந்தபடியெங்ஙனே" என்ன ; "நாங்கள் நல்லானடிமைகள், எங்களுக்கு நல்லான்ஹிதமருளிச்செய்யும்போது த்வயத்தைப்ரஸாதித்தருளி, 'நமக்கெல்லார்க்கும் பரமாசார்யர் எம்பெருமானாராயிருக்கும், நீங்கள்எம்பெருமானார்திருவடிகளேதஞ்சமென்றிருங்கோள்" என்றருளிச்செய்தருளினார்" என்ன; உடையவரும், (శ్రీనల్లాన్ మే ఘోయం వనమధ్యే ప్రవర్షతి । ఇతి ప్రసిద్ధమాచార్యం పరిత్యజ్య భజే) (ஸ்ரீநல்லாநிதிமேகோயம்வநமத்யேப்ரவர்ஷதி । இதிப்ரஸித்தமாசார்யம்பரித்யஜ்யபஜே) என்றருளிச்செய்து நல்லான்என்கிறகாளமேகம்நடுக்காட்டிலும்வர்ஷித்ததோ! என்றருளிச்செய்தருளினார்; அவ்வளவிலே அருகிருந்தமுதலிகள், "இவர்தாம் எம்பெருமானார்" என்று உடையவர்திருவடிகளைக்காட்ட; "அவர்களும் திருவடிகளிலேவிழுந்துஸேவித்து பெருக்கவ்யாகுலப்பட்டு அனைவரும் ஆதரத்துடனேநின்று தினைக்கதிரைக்கொண்டுவந்து தேனமுதையும்மிடாவோடேஸமர்ப்பித்து, "இத்தைவறுத்திடித்துத்தேனிலேகுழைத்து அமுதுசெய்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய ; அவர்களும் அப்படியேசெய்து அமுதுசெய்தருளிக்கண்வளர்ந்தருள ; அதின்மற்றைநாள் அந்தவேடமுதலிகளிலே ஒருவரையும்ஸ்ரீபாதத்தில் முதலிகளிலே ஒருவரையும்கோயிலுக்குப்போகவிட ; அங்குநின்றும் நானூற்றுநாற்பத்தஞ்சுமுதலிகள் எழுந்தருளினார்கள்.

—❧❧✳❧❧—

மற்றைநாள்வேடமுதலிகள், அந்தஸ்ரீவைஷ்ணவர்களை மற்றொருவேடமுதலி அகத்திலேவிட, அவர், கொங்கில்பிராட்டி திருமாளிகையில்விட்டுக் குறைவறுப்புச்சமைத்தாரென்பது.

அதின்மற்றைநாள் வேடமுதலிகள் அந்தமலைக்குமேற்கே அருகாகவழிகொண்டுபோய் ஒருவேடமுதலியகத்திலேவிட்டு மீண்டுபோனார்கள்; அந்தவேடமுதலிபகலெல்லாம் வேட்டைக்குப்போய்வந்து உண்ணப்புக்கவாறே, "ப்ராஹ்மணர் உண்ணுதிருக்கநாம்உண்ணலாகாது" என்று அருகாக ஒருக்ராமத்திலேயிருப்பானொரு கட்டளைவாரியென்பானொருவனகத்திலே வேண்டும்தட்டளைகளையுங்கொடுத்து, "சடக்கென இவர்களையமுதுசெய்யப்பண்ணுவியுங்கோள்" என்று ஆளுங்கொடுத்துப்போகவிட ; அவர்களும், இவர்களையழைத்துக்கொண்டுபோய்ச்சடக்கென வமுதுசெய்யப்பண்ணுவியுங்கோள் என்றுசொல்லி

மீண்டார்கள். பின்பு அவ்வகமுடைய மணவாட்டிப்பெண்பிள்ளையும் முதலிகளுக்கு தண்டன்ஸமர்ப்பித்து, "உங்களுக்கு அமுதுசெய்யவேண்டாவோ" என்றுகேட்க; முதலிகளும், "வேண்டா" என்றார்கள்; அவளும் "உங்களுக்குபயப்படவேண்டா" என்றாள்; அத்தைக்கேட்டுமுதலிகளும், "இதுவென்பெண்ணே" என்றுகேட்க; "நானும் எம்பெருமானார்ஸ்ரீபாதத்தையுடையேன்" என்றாள்; பின்பு முதலிகளும், "நீ எம்பெருமானார்ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தபடியெங்ஙனே" என்ன; அவள்சொன்னபடி ;—

கொங்கில்பிராட்டி, தான்உடையவர்திருவடிகள்ஸம்பந்தம்பெற்றபடியும், உடையவர், அவளுடைய அநுஷ்டாநத்தை ஆராய்ந்துமுதலிகளை அமுதுசெய்ய நியமித்தருளியதும்.

நாங்கள் இவ்விடம்வர்ஷமின்றிக்கேயிருக்கையாலே என்னகமுடையானும் நானும்கோயிலிலேவந்திருந்தோம், ஒருமச்சிலேயிருக்கையாயிருக்கும்; ஒருநாள் அந்தஅகத்திலே எம்பெருமானார்மாதுகரத்துக்கு எழுந்தருளினார், அவரைக்கண்டு மச்சில்நின்று மிழிந்து இடைகழியிலேநின்று தகைந்தேன், ராமாநுசனும், "இதுவென்பெண்ணே? என்றுகேட்டருளினார்; அப்போது நானும், "உம்மைராஜாக்களும்பட்டணத்துமுதலிகளும்தெண்டனிடாநின்றார்கள், நீர்மாதுகரம் பண்ணாநின்றீர், இதுக்குப்பொருளேது?" என்றுகேட்டேன்; "அவர்களுக்கு பகவத்விஷயத்திலே சிலவார்த்தைசொல்லுகையாலேகாண்" என்றருளிச்செய்தார்; அந்தவார்த்தையை எனக்குமருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்தேன், அப்போதுஹிதத்தைப்ரஸாதித்தருளினார்; பின்பு எங்கள்தேசம்வர்ஷமுண்டாய்த்தெளிந்து எங்கள் நாட்டேறப்போகிறபோது அவாருளிச்செய்த நல்வார்த்தையை மறந்தேன், மீளவும் ஸேவிக்கப்பெற்றிலேன் என்றிருக்கச்செய்தேமீளவும் அப்போது அங்கேயெழுந்தருளினார்; பின்பு உடையவரைஸேவித்து "தேவரீர்முன்பருளிச்செய்த நல்வார்த்தையைமறந்தேன், அத்தைஎன்னெஞ்சில்படும்படி அருளிச்செய்யவேணும்" என்று விண்ணப்பஞ்செய்தேன், அப்படியே நெஞ்சில்படும்படி அருளிச்செய்து எழுந்தருளப்புக்கவாறே, "அடியேனுக்கு ஆத்மரக்ஷையாக ஏதேனுமொன்று தந்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்தேன், அப்போது தாம் சாத்தியிருந்தஸ்ரீபாதரக்ஷையைப்ரஸாதித்து எழுந்தருளினார்; பின்பு நாங்களும் அங்நாளேபோந்தோம், மீளவும் ஸேவிக்கப்பெற்றிலேன் என்றவாறே, உடையவரும் தம்திருவுள்ளத்திலேவிசாரித்தருளி, தளிகைக்குத் திருப்போனகம்சமைக்கும்படி நியமித்தருளி இவள்செய்யுமதுபார்த்திருக்கச்சொல்லி ஒரு ஸ்ரீவைஷ்ணவரைநியமிக்க; அவளும் அடைவாகச்சமைத்து முன்பு உடுத்தபுடைவையைவிழுத்து சுத்தமான புடைவையைஉடுத்துக்கொண்டு போனகத்தை உள்ளேகொண்டுபுகுந்து, "எம்பெருமானார்திருவடிகளேசரணம்" என்று உச்சரித்துப் புறம்பேபுறப்பட்டு முதலிகளுக்குதண்டன்ஸமர்ப்பித்து ஸ்ரீபாதம்விளக்க எழுந்தருளவேணும் என்று விண்ணப்பம்செய்ய; இவள்செய்யுமது பார்த்திருக்கச்சொன்னஸ்ரீவைஷ்ணவரையழைத்து இவள்செய்ததென் என்றுகேட்க, அந்தஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ்செய்தபடி;— அவளும் அடைவாகச்சமைத்து முன்புடுத்தபுடைவையயவிழ்த்து சுத்தமானபுடைவையயுடுத்துக்கொண்டு திருப்போனகத்தைஉள்ளே கொண்டுபுகுந்து "எம்பெருமானார்திருவடிகளேசரணம்" என்று உச்சரித்துக்கதவையடைத்துத்யாநம்பண்ணிக்கொண்டிருந்தாள், கறுத்துநீண்டிருந்தது, எம்பெருமானாயிருந்ததில்லை என்றவாறே, அவள்தன்னையழைத்து, "நீசெய்ததென்?" என்றுகேட்க; முன்பு ஏறியருளப்பண்ணித்தந்த ஸ்ரீபாதரக்ஷையை ஏறியருளப்பண்ணித் திருவடிவிளக்கி அமுதுசெய்யப்பண்ணியாய்த்து அடியேன் ப்ரஸாதஞ்சூடுவது, இப்போதும் அப்படியேசெய்தேன்" என்ன; அவைதன்னைக்கொண்டுவந்து காட்டுக்காண் என்ன; அவளும்கொண்டுவந்துகாட்ட; அவை அங்குத்தைக்குத்தகுதியாயிருந்தது, எம்பெருமானாருளிச்செய்தவார்த்தை ஒத்திருந்ததில்லையாகில்முதலிகள்அமுதுசெய்யார்கள், அத்தைஎன் செவியிலேசொல்லிக்காண் என்ன; அவளும் விண்ணப்பஞ்செய்தாள், வார்த்தையும் ஒத்திருந்தது, ஆகில் இதுக்குள்ளே எம்பெருமானருண்டோ என்று பார்த்துக்காண்என்ன; அவளும் திருவிளக்கு ஏற்றிக் கொண்டுவந்து அடைவேபார்த்தாள், எம்பெருமானார்திருவடிகளானவாறே அங்கேதிகைத்து, "திருக்கையிலேபிடித்த த்ரிதண்டமும் திருவரையிலேசாத்தின காஷாயமுமில்லாமையாலே தெரிகிறதில்லை" என்றவாறே, "நான்காண்" என்றருளிச்செய்ய; அவளும் திருவடிபிடித்துக்கொண்டு அழப்புக்கவாறே கண்களைத்துடைத்து, ([illegible]) (விதுராந்நாநிபுபுஜேஶுசீநிகுணவந்திச) என்கிறபடியே பாவநத்வபோக்யத்வங்களை யுடைத்தாயிருந்தது, இனி முதலிகளெல்லாரும் அமுதுசெய்யக்குறையில்லை" என்றருளிச்செய்ய; அவர்களும், அமுதுசெய்தருளிக்கண்வளர்ந்தருள ;

உடையவர்,முதலிகள் அமுதுசெய்த தளிகைப்ரஸாதத்தைச்சூடப்
பெற்றதால் ஸ்வாதீநனனகொங்கில்பிராட்டியின் பர்த்தாவை
தம்திருவடிகளுக்கு ஆளாக்கிக்கொண்டதும்,
த்ரிதண்டகாஷாயாதிகளை ஸம்பாதித்து
தரித்தருளியதும்.

அவளும் தளிகைப்ரஸாதத்தைக்கலந்து தன்பர்த்தாவையுமெழுப்பி ப்ரஸாதப்படப்பண்ணி தான் ப்ரஸாதப்படாமலிருக்க; அவனும், "இதுவென்" என்றுகேட்க; கோயிலினின்றும் உடையவரும் முதலிகளும் எழுந்தருளி, "ப்ராக்ர்தக்ர்ஹத்திலேஅமுதுசெய்யமாட்டோம்" என்றுகண்வளர்ந்தருளினார்கள், ஆகையாலே நான்ப்ரஸாதஞ்சூடுவதில்லை" என்ன; அவனும் அதுக்குநான்செய்யவேண்டுவதென்" என்ன; "நீரும் எம்பெருமானார்ஸ்ரீபாதத்தை ஆச்ரயிக்கவல்லீரோ" என்ன; அவனும் இசைந்து ப்ரத்யயம்பண்ணிக்கொடுக்க; அவளும் ப்ரஸாதப்பட்டு நித்ரைபண்ணி,மற்றைநாள்விடிவோறே பெரியபிராட்டியாராகிற அந்தப்பெண்பிள்ளைவந்து எம்பெருமானார்திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, "இற்றைதிவஸம் நல்விடிவாம்படி தேவரீர் இற்றைக்கு இங்கேயெழுந்தருளியிருக்கவேணும், இவரைக்ர்பைபண்ணி யெழுந்தருளவேணும்" என்று தன்பர்த்தாவைக்காட்டி விண்ணப்பஞ்செய்ய; அப்படியே அற்றைக்கு எழுந்தருளியிருந்து, அவளுக்காக அவனை க்ர்பைபண்ணியருளி அந்தக்ராமத்திலே நாலஞ்சுநாள் எழுந்தருளியிருந்து,த்ரிதண்டகாஷாயாதிகளையும்ஸம்பாதித்துதம்முடையதிருவாராதநமான பேரருளாளர்ஸந்நிதியிலேவைத்து அவற்றைஉடையவர்தரித்தருளினார். அதின்மற்றைநாள், பெருமாள், பிராட்டிவர்த்தாந்தமாராய்கைக்குமாருதியைப்போகவிட்டருளினாப்போலே, ஆழ்வான்தசையை ஆராய்கைக்கு மாருதியாண்டானைப்போகவிட்டருளினார்; அவருடன் அம்மங்கியம்மாளும் கூடவெழுந்தருளினார்.

—❧—

உடையவர் திருவேங்கடமுடையானைக்குறித்து அர்க்யப்ரதாநம்
பண்ணியருளியது.

அதின்மற்றைநாள்உடையவரும், "இடம்வலமேழ்பூண்டவிரவித்தேரோட்டி,வடமுகவேங்கடத்துமன்னும்" என்றும், (வேங்கடம்கோயில்கொண்டதனோடும்வானிடையரக்கன்மேவிநிற்பான்)என்றுஞ்சொல்லுகிறபடியே-ஸதாத்யேயனாய் *ஸவித்ர்மண்டலமத்யவர்த்தியான நாராயணன்திருவேங்கடமுடையானாகையாலேஅவனைக்குறித்துதிருக்கையில் அர்க்யஜலத்தைஸமர்ப்பித்தருளினார். ப்ராஹ்மணர்கையில்அர்க்யஜலத்தாலேஆதித்யனுக்கு தேஜஸ்ஸு அபிவர்த்தமாய் அந்ததேஜஸ்ஸாலே

மந்தேஹரைதஹிக்குமாப்போலே*நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்தியான திருவேங்கடமுடையானும் அஜ்ஞாநதமோபிபூதனானவனை ஜ்ஞாநகட்கத்தினாலே நிக்ரஹித்தருளினார்; அதெங்ஙனேயென்னில்;- (దుర్మేధా స్స్వజనపురోహితానురోధీ నిర్భిద్య త్రిభువననాయకస్య విష్ణోః । ధామౌఘం సులలితచిత్రకూటముఖ్యం పాథోధే ర్వ్యయనిసపాతయాంబభూవ)(துர்மேதாஸ்வஜநபுரோஹிதாநுரோதீநிர்ப்பித்யத்ரிபுவநநாயகஸ்யவிஷ்ணோ: । தாமௌகம்ஸுலலிதசித்ரகூடமுக்யம்பாதோதேர்வ்யயஸிஸபாதயாம்பபூவ) என்கிறபடியே சோழமண்டலத்திலுண்டானஎம்பெருமான்களுடையகோயில்களையெல்லாம் நிலைத்துவம்பமாகஅம்பலத்திலே அடக்குவித்தும், குணகடலிலே கோவிந்தராஜனைக்கண்வளரப்பண்ணியும்,அநந்தரம்அகில திவ்யதேசங்களுக்கெல்லாம் வேர்ப்பற்றாயிருக்கிற, * செருவிலேயரக்கர்கோனைச்செற்றநம்சேவகனார் மருவியபெரியகோயிலையும் அலைக்கவேணும் என்று கெடுவழியிலேகண்டவன் வந்துகடுகின்விட;

—❧—

திருவேங்கடமுடையான் திருக்குற்றுடைவாளாலே சோழன்
கழுத்தைக்குத்த அவன்க்ர்மிகண்டனானானென்பது.

அவ்வளவிலேதிருவேங்கடமுடையான்செய்தருளினபடி;-*மந்திபாய்வடவேங்கடமாமலைவானவர்கள்சந்திசெய்யநின்றான்அரங்கத்தரவினணையானாகையாலேதம்படுக்கைவீடாய்*பள்ளிகொள்ளுமிடமானகோயிலை அலைப்பதாக்வருகையாலே,கடுகஉடைவாளையுருவி அந்தகண்டகன் கண்டத்திலேஅவனுக்கு உசிததண்டமாம்படிகுத்தி * ஆகாயமூடறுத்தண்டம்போய்நீண்டு அகண்டமான வடியோடே கண்டகரைகண்டதண்டமாக்குகிற கட்கமும்கையுமாய்க்கறுத்தவடிவோடேநிற்க; அந்தபுருஷனைக்கண்டு கலங்கி ஆரென்றலறிக்கேட்க; அவனும் "நம்மையறிந்திலையோ, * சீறுவெரியும்திருநேமிவலவனாய், * திணரார்சார்ங்கத்தையுமுடையனாய், அதிலே * தீவாய்வாளி மழைபொழியுமவனாய், * வெஞ்சுடர்வாளான வுடைவாளையுடையனாய்க்கொண்டு * நிலதமூலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமான் நான்" என்று மூதலித்து முன்னேநிற்க; அவனும், "வேங்கடத்தான்குத்தினான் வேங்கடத்தான்குத்தினான்" என்றுஏங்கிவிழுந்தவளவிலே மீண்டுதன்னூரைச்சேர; அவ்வளவில் தசகண்டஸமனான அவன்கண்டத்திலே வ்ரணமாய் க்ர்மித்து, (ఇహైవఫలమశ్నుతే) (இஹைவபலமச்நுதே) என்கிறபடியே - பாபபலத்தை இம்மையிலே அநுபவித்துக்கொண்டு சிலகாலம் சித்ரவதமாகக்கிடந்தான்; இப்படி அவன்கர்ப்பங்கலங்கி நிர்ப்பாக்யனாய்விழும்படி அர்க்யப்ரதாநம்பண்ணினவநந்தரம், சோலையேறவெழுந்தருள;

—❧—

உடையவர், முதலியாண்டான்திருவடிவிளக்கி வந்தபுஷ்கரிணிதீர்த்தத்தாலே கோவையூரரான பாஷண்டிகளைத்திருத்தி, தொண்டனூர்நம்பிதிருமாளிகைக்கெழுந்தருளி, ததீயாராதநத்துக்குவேண்டியவற்றைக்கொங்கில்பிராட்டி பர்த்தாவைக்கொண்டு வரவழைத்துக்கொண்டாரென்பது.

அவ்வூராரடைய சைவராகையாலே உடையவரை ஆநாதரித்திருக்க ; உடையவரும் அவர்கள்திருந்தும்படிக்கு முதலியாண்டானைப் பார்த்து, " ஆண்டான் ! அவர்கள் நீரெடுக்கிறதுறையிலே திருவடிகளைவிளக்கிவாரும்" என்று நியமிக்க ; அவரும் அப்படியேசெய்ய ; அந்த அதுலமான பாவநமானதீர்த்தஸ்வீகாரத்தாலே அவ்வூரிலுண்டானவர்களடையத்திருந்தித் திருவடிகளிலே ஆச்ரயித்தார்கள் ; அன்றுதொடங்கி அவ்வூருக்கு " ஸ்ரீஸாளக்ராமம்" என்றுதிருநாமமாய்த்து. அவர்களுக்குத் திருவடிகளிலே நித்யஸேவையுண்டாம்படி அத்தைசிலாலிகிதமாக்கிவைத்து குப்தமாக நிக்ஷிப்ததீர்த்தமுண்டாக்கிக்கொடுத்து அவர்களை அநுகூலராக அபிமாநித்து அங்கேவடுகநம்பிக்கு தர்சநதாத்பர்யங்களை அருளிச்செய்துகொண்டு சிங்கர்கோவிலிலேயெழுந்தருளி அவ்விடந்தன்னிலே ப்ரதிகூலநிரஸநம்பண்ணுவதாக விசாரித்து கோபாக்நியாலே ச்யேநவித்யுக்தப்ரகாரத்திலே அபிசாரகர்மத்தைஆச்சானைக்கொண்டு அநுஷ்டிப்பித்தருளி அவ்விடத்திலே சிலகாலமெழுந்தருளியிருந்து அங்குநின்றும்புறப்பட்டுத்தொண்டனூரேறவெழுந்தருளி நிரபிமாநரான தொண்டனூர்நம்பிதிருமாளிகையிலேயெழுந்தருளியிருந்தார். அப்போது ததீயாராதநத்துக்கு அமுதுபடிமுட்டாக; அப்போது, கொங்குப்பிராட்டியார்பர்த்தாவுக்குத்திருமுகம் போகவிட்டருள ; அவரும் திருமுகத்தை சிரஸாவஹித்துக் கொண்டு ஸஹஸ்ரநிஷ்கம்கொண்டுவந்து ஸமர்ப்பிக்க ;

—⁂—

விடலதேவராயன் மகளுக்கு பிசாசம்பிடித்திருந்ததென்பதும், அவன்தன்குருக்களை விருந்துசொல்ல அவர்கள்வாராதேநின்றதும்.

அக்காலத்திலே அங்குத்தையில் விடலதேவராயன்மகள் பிசாசாவிஷ்டையாய் ஓடித்திரிய ; அவனும்வைத்யர்கள் பலரையுங்கொண்டு தீர்க்கத்தேடினவிடத்திலும் ஒன்றிலும்தீராமையாலே து:கிதனாயிருக்க; நிர்வாணையாய் ஓடித்திரிகிறபெண்ணைக்கண்டு தத்பத்நியும்து:கிதையாயிருக்க ; தொண்டனூர்நம்பி உபாதாநார்த்தமாக அந்தராஜக்ருஹத்திலே யெழுந்தருளினவளவிலேராஜபத்நியும்து:கிதையாயிருக்க ; அத்தைக்கண்டு ராஜபத்நியைப்பார்த்து, "து:கவேறதுவென்?" என்றுகேட்க ; தத்பத்நியும் தத்காரணத்தை அவர்க்குச்சொல்ல

பின்பு நம்பியும் அத்தைக்கேட்டு, "எங்களாசார்யர் ராமாநுஜன்கடாக்ஷித்தால் இப்பேய் காடேறிஓடிப்போம்" என்ன ; அவளும்கேட்டு அச்செய்தியை ராஜாவுக்குஅறிவிக்க ; ராஜாவும், " உடையவர் அப்பேயைவிடுவிக்கில் அவரேநமக்கு ஆசார்யர், அவர்திருவடிகளிலே ஆச்ரயிக்கக்கடவேன்" என்ன ; அப்படியிருக்கவும், தன்குருக்களை விருந்துசொல்லவேணும் என்ன ; ராஜபத்நியானவள், " அவர்கள் வாரார்கள், சொல்லாதேகொள்ளும்" என்ன ; அவனும் அவர்கள் வாராதொழிவர்களோ என்று அவள்வார்த்தையை அதிக்ரமித்து அவர்களைவிருந்துசொல்ல ; முன்பு டில்லீச்வரனானராஜா இவனைப்பிடித்துக்கொண்டுபோய்பட்டார்ஹனன்றிக்கேபோம்படிக்குஒரு அங்குலிச்சேதம்பண்ணுவிக்கையாலே, " விடலதேவராயன்" என்று லோகத்திலே ப்ரஸித்தமாயிருக்கையாலே, " அங்கஹீநனகத்திலேயுண்ணவொண்ணாது" என்று அவர்கள்வரத்தவிர்ந்துவிட்டார்கள் ; அவனும் க்ருத்தனாய், இவர்களைக்கொண்டுகார்யமென் என்றிருக்கச்செய்தே.

—⁂—

விடலதேவராயன்மகளுக்குப்பிடித்திருந்த பிசாசம் உடையவர் ஸ்ரீபாததீர்த்தத்தால் நீங்கிற்றென்பதும், அவன் உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க, அவர் அவனுக்கு " விஷ்ணுவர்த்தநராயன்" என்னும் திருநாமம்ப்ரஸாதித்தாரென்பதும்.

பின்பு ராஜபத்நியானவள் அவனைப்பார்த்து, " உடையவர்திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கலாகாதோ" என்ன ; ராஜாவும் இசைந்து தன்னுடைய க்ருஹத்துக்கு எழுந்தருளவேணும் என்றுப்ரார்த்திக்க ; உடையவரும் அத்தைக்கேட்டு, " நாம்ராஜதாநியைமிதியோம்" என்றருளிச்செய்ய ; தொண்டனூர்நம்பியும் இவனைக்ருபைபண்ணினால் நம்தர்சநத்துக்குபஹூபகாரமுண்டு என்றுவிண்ணப்பஞ்செய்ய; உடையவரும்ஸம்மதித்து ராஜாஸ்த்தாநத்தேறவெழுந்தருள; ராஜாவும் எழுந்திருந்துஎதிர்கொண்டு திருவடிகளிலேஸேவித்துபஹுமாநம்பண்ணி ஆஸநமிட எழுந்தருளியிருந்தவளவிலே, தொண்டனூர்நம்பி, உடையவர்ஸ்ரீபாததீர்த்தத்தைச்சேர்த்து தத்புத்ரிக்குப்ரஸாதித்து அத்தாலேப்ரோக்ஷிக்க; உடனேசித்தப்ரமம்போய்ப் புடைவையை உடுத்திக்கொண்டு உடையவர்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க ; ராஜாவும் இத்தைக்கண்டு ஆச்சர்யப்பட்டு உடையவர்திருவடிகளிலே ஆச்ரயிக்க ; அவனைக்ருபைபண்ணியருளி, "விஷ்ணுவர்த்தநராயன்" என்றுதிருநாமம் ப்ரஸாதித்தருளினார்.

—⁂—

விடலதேவராயன் உடையவர்திருவடிகளிலே ஆச்ரயித்ததைக்கண்ட அவன்குருக்கள்மாரான பன்னீராயிரம்க்ஷபணர் உடையவரோடுவாதித்ததில்தோற்று கல்காணத்தில் அரைபட்டு முடிந்தார்களென்பது.

இத்தைக்கண்டு அவன்பூர்வகுருஸம்பந்திகளானவர்கள், "எங்கள் சிஷ்யனைமயக்கி சிஷ்யனாக்கிக்கொள்ளும்போது எங்களுடனே தர்க்கித்துஎங்களைஜயித்தன்றோ இவனைசிஷ்யனாக்கிக்கொள்ளுவது" என்று ஏககாலத்திலே பன்னீராயிரம் க்ஷபணர்வந்து தர்க்கிக்கத்தொடங்க; உடையவரும் மின்னுக்கஞ்சி இடியின்கையிலே அகப்பட்டாப்போலேயும், தேளுக்கஞ்சிப் பாம்பின்கையிலே அகப்பட்டாப்போலேயும் ஆச்சுதே! இனி என்னசெய்வோம், தம்முடைய திவ்யசக்தியைப்ரகடியாதிருக்கவொண்ணாது" என்று நிச்சயித்து ஒருமண்டபத்திலே திரைவளைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்து ஸஹஸ்ரபணாமண்டலமான திருவநந்தாழ்வானுடைய அவதாரமாய் ஒவ்வொருத்தருக்குப்பதினாயிரம் முகமாக உத்தரமருளிச்செய்து அவர்களெல்லாரையும் வாய்மாளப்பண்ணி, காலயவநனுக்கு ஒளித்து குஹையிலேப்ரவேசித்து தத்ரஸ்த்தனை முசுகுந்தனாகிறராஜாவைக்கொண்டு அவனைதக்த்தனாக்கினாப்போலே, கண்டகனுக்காக ஒளித்துத்தொண்டனூரிலே தாமுமெழுந்தருளியிருந்து ஆஸுரப்ரக்ருதிகளாய் பத்மகிரியிலுண்டான பாஹ்யரையெல்லாம் அப்படியே ராஜாவைக்கொண்டு கல்காணந்தன்னில் அரைப்பித்து நிச்சேஷமாகநிவாரிப்பித்துத் தம்முடைய திவ்யசக்தியைப்ரகாசிப்பிக்க; இத்தைக்கண்டு ராஜாவும் உடையவர்திருவடிகளிலே மிகவும் ப்ரவணனாயிருந்தான். அங்குத்தையில்எம்பெருமானைத் தெண்டனார்நம்பி அபிமாநித்திருக்கையாலே, அவர்க்கு, "நம்பிமூத்தபிரான்" என்று திருநாமமுகந்து வேதாந்தவ்யாக்யாநம்பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே திருக்கையில் திருமண்மாண்டு, "சாத்துகைக்குத்திருமண்பெற்றிலோம்!" என்றுமுசித்து மூன்றுநாள் அமுதுசெய்தருளாமல் கண்வளர்ந்தருள;

அவ்வளவிலே, (నారాయణగిరిర్నామ సంసారార్ణవతారణః। ససహ్యస్యోత్తరే పార్శ్వే పూర్వస్యాం దిశి సంస్థితః॥ దూరాదాలక్ష్యతే శృఙ్గైః గగనస్పర్శిభిః సితైః। తత్రాస్తి పరిధానేన తపసా చాధిదైవతమ్॥ అభ్యర్చ్య విధివత్ కామాన్ లభతే కమలాసనః;) (శ్రీభగవాన్ (అత్రి) ఉపదేష్ట్రురూపేణ క్షేత్రమహిమానమ్।) హృదయం మమ తత్స్థానం శ్రుతీనాం నయనం శుభమ్॥ మునీనామపి సర్వస్వం మమ క్షేత్రం ప్రథమాఙ్కురమ్। దక్షిణోత్తరభేదేన ద్వావేతౌ హిమవత్ప్రస్థౌ॥ సత్త్వోత్తరాణాం భూయస్త్వాత్ సతు సత్త్వోత్తరో గిరిః। గుణత్రితయభేదేన ప్రకృతిర్భిద్యతే పరా॥ నారాయణాద్రినిష్ఠానాం నరజన్మోత్తమోత్తమః। శ్రీరఙ్గే వృషభాద్రౌ

క్షేత్రే సత్యవ్రతే మమ॥ విష్ణులోకే చ యా ప్రీతిః సా ప్రీతిస్తత్ర జాయతే। తత్ర శేషశ్చ తనుతే శేషవృత్తిం యుగే యుగే॥ అశేషశేషిణే మహ్యం శేషాశనముఖైస్సహ। అనన్తః ప్రథమం రూపం లక్ష్మణశ్చ తతః పరమ్। బలభద్రస్తృతీయస్తు కలౌ కశ్చిద్భవిష్యతి॥ అర్చితః కృష్ణరామాభ్యాం తతోఽహం ద్వాపరే యతః। తేన యాదవశైలోఽయమితి లోకేషు కథ్యతే॥ సహస్రశిఖరశ్శ్రేయాన్ సాక్షాచ్ఛేషాత్మకో గిరిః। వైకుణ్ఠాదపి యత్రాహం స్థిరమాయా సహామోదతే॥ వైకుణ్ఠావ్యవహితస్థానసారస్యం యదుభూభృతః। సేవయా కృతస్సమస్తానసే సేవా త్వత్ర భవిష్యతి॥ వైకుణ్ఠవాసినస్సర్వే శేషశేషాశనాదయః। తిర్యక్స్థావరజన్మాని శ్రయన్తే యదుభూధరే) என்று ஏவம்விதவைபவத்தையுடைய நாராயணாத்ரியை ஆதரத்துடனே தூரத்திலேஸேவித்துக்கொண்டிருக்க;

—✻—

திருநாராயணப்பெருமாள்ஸாதித்த ஸ்வப்நத்தின்படி உடையவர், காடுசெய்த்து யதுகிரியேறவெழுந்தருளி திருநாராயணப்பெருமாளிருக்கிறவிடம்காணாமல் கவலையுற்றிருந்தாரென்பது.

அவ்வளவிலேதிருநாராயணப்பெருமாள் இவர்ஸ்வப்நத்திலேயெழுந்தருளி, "யதுகிரிசிகரத்திலே உம்முடையவரவுபார்த்துநில்லாநின்றோம், உம்திருவுள்ளத்துக்குப் போந்ததிருமண் இங்கேயுண்டு, சடக்கெனப்புறப்பட்டுவாரீர்" என்றுஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; உடையவரும்ஸ்வப்நம்கண்டெழுந்திருந்துஸ்வப்நம்கண்டபடியைமுதலிகளுடன் அருளிச்செய்து, பெரியஏரிகட்டுவிக்கிற விஷ்ணுவர்த்தநராயனை அழைப்பித்துதாம்ஸ்வப்நங்கண்டபடியை அருளிச்செய்ய; அவனும்ஸம்மதித்துக்காடுவெட்டுவித்துச்செல்ல; எம்பெருமானாரும், செம்பொன்யதுகிரியேறிவேதபுஷ்கரிணியிலேநீராடி யதுபூதரத்தைக்கிட்டி, (తస్య యాదవశైలస్య పార్శ్వే దక్షిణతస్స్థితామ్। పరిధానశిలాం దృష్ట్వా ప్రణమన్తి ద్విజోత్తమాః॥ యస్యాస్త్రిప్రణామం కుర్వాణాః ప్రణమన్తే సురాసురైః। సాహి సత్త్వమయీ పుంసాం సత్త్వం సద్యః ప్రయచ్ఛతి॥ పురా హి శాక్యపాషణ్డకాలే దార్వ్యామహీతలే। శ్రుత్యాం వైయాకులీం చ క్రుః చిత్రైర్దుర్వచనవిస్తరైః॥ అత్రేరాసీదిరామ్నాయైస్స్వాకం మానుషరూపభృత్। త్రిదణ్డధారీ భూత్వాహం నిరాసమహమీదృశాన్। దత్తాత్రేయస్య మే తత్ర తదా కాషాయసఙ్గినః। అతో మత్పరిధానేన శిలాయా నామ కథ్యతే। యే తత్ర ప్రతిగృహ్ణన్తి నరాః కాషాయశాటికామ్॥ మద్భావేన సమస్తే మద్భక్తేషూత్తమోత్తమాః) என்னும்படியான அதிசயத்தையுடைய பரிதாநசிலையிலே, (ఉపవీతం త్రిదణ్డఞ్చ కౌపీనాచ్ఛాదనం తథా। శిక్యఞ్చైవ వస్త్రఞ్చ పశ్యామాత్రేదధౌ వసః) என்று முன்புதத்தாத்ரேயர்த்ரிதண்டகாஷாயாதிகளைதரித்தாப்போலேஇவரும் தரித்து பரிமண்டிதமான வேஷத்தையுடையராய் முன்னடந்து திருநாராயணப்பெருமாளிருக்கிறவிடம்காணாமல் பகவத்ப்ரபாவத்துக்குக்குறைவற என்னசெய்தோம்என்றுமுசித்துக்கண்வளர்ந்தருள;

—✻—

மறுபடிஸாதித்த ஸ்வப்நத்தின்படி திருத்துழாய்க்கொழுந்தடையாள
மாக கல்யாணஸரஸ்ஸின்கரையில் திருநாராயணனெழுந்தருளி
யிருக்கும் ஓர்புற்றைக்கண்டுகளித்தது.

பின்னையும் திருநாராயணப்பெருமாள் இவர்ஸ்வப்நத்திலேயெழுந்தருளி, "நீர்முசிப்பானென்?, நாம் கல்யாணஸரஸ்ஸின்தென்மேல்மூலையிலேசம்பகவநஸமீபத்திலே மேல்கிழக்குத்தென்பார்ச்வத்திலே வளர்ந்ததிருத்துழாய்மரத்தின்கீழேபுற்றிலேயிராநின்ரேம், நாம்உமக்கடையாளமாக இவ்விடந்தொடங்கி நாமிருக்கும்புற்றளவாக முறித்திட்டதிருத்துழாய்க்கொழுந்தேகுறியாகவாரீர்" என்றருளிச்செய்ய; இவரும்ஸ்வப்நங்கண்டெழுந் திருந்து முறித்திட்ட திருத்துழாய்க்கொழுந்தேகுறியாகவெழுந்தருளி கல்யாணஸரஸ்ஸைக்கிட்டிசம்பகவந ஸமீபத்திலே மேல்கிழக்குத்தென்பார்ச்வத்திலே வளர்ந்திருக்கிற திருத்துழாய்மரத்தைக்கண்டுபலகாலும்தண்டனிட்டு,(పారే కల్యాణతీర్థస్య విమానం విపులం హితమ్ । పఞ్చపూరుషమాత్రేణ రూపేణ దదృశే జనైః॥ భగవానపి భక్తానాం పరతన్త్రస్స్వలీలయా । తదన్యప్రమితేనైవ రూపేణ దదృశే తతః॥ ఆశ్చర్యమిదమాశ్చర్యం మహానారాయణః పుమాన్ । అప్రమేయప్రమేయాభ్యాం రూపాభ్యామవలోక్యతే॥ అహో సుఖం కల్యాణమహో కల్యాణమద్భుతః । అహో నారాయణశ్శ్రీమాన్ నైకత్వాద్వయమాగతః ॥ ఇతి సర్వేపి తత్రత్యాస్సన్తోషేణ బభాషిరే । తస్మాత్కల్యాణతీర్థాన్తర్దధువర్మునిపుఙ్గవాః ॥ స్థాపయిత్వా విమానస్థం ప్రాఙ్ముఖే పురుషోత్తమమ్ । పఞ్చరాత్రవిధానేన సమర్చ్యయత భక్తితః) என்கிறபடியே அத்திருத்துழாய்மண்காப்புநீக்கினவளவிலே,

—⁂—

திருப்புற்றடியிலே ஸேவைஸாதித்த திருநாராயணனுக்கு திருப்ர
திஷ்டைபண்ணுவித்து, "ஒருநாயகம்" என்கிறதிருவாய்
மொழியை அவருக்கு ஸமர்பித்தது.

(శమపియమగిద్ధంగా ద్వీస్థందదర్శ) என்கிறபடியே சகாப்தம்தொள்ளாயிரத்தொருபதுடன் பின்னுமோராண்டுசென்ற வர்த்தமாநம்பஹுதாந்ய ஸம்வத்ஸரம் தைமாஸம் சுக்லபக்ஷ சதுர்த்தசியும் வ்யாழக்கிழமையுங்கூடின புனர்பூசநக்ஷத்ரத்திலே பொற்கோயில்தோன்றிய பின்மற்றும்இங்கினிதமர்ந்த நீலசிகாமணிதோன்றக்கண்டு,கொந்தளித்துக்குணலைக்கூத்தாடி, சங்கம்ர்தங்கஜயசப்தவாத்யகோஷம் பண்ணி விஷ்ணுவர்த்தநராயனையழைத்துக்காட்டி, பாலாலே மூன்றுநாள் திருமஞ்சனஞ்செய்து, (பகல்கண்டேன் நாரணனைக்கண்டேன் கனவில் மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யேமிகக்கண்டேன்) என்று திருநாராயணப்பெருமாளை அடிக்கடிகண்ணால்கண்டநுபவித்து, (மாறனடி

பணிந்துய்ந்தவன்) என்றுஞ் சொல்லுகிறபடியே பரமாசார்யரான பராங்குசர்க்கு தாம் பரமஹிதபுத்ரராகையாலே பித்ர்தநத்தை புத்ரன் விநியோகங் கொள்ளுமாப்போலே,(தமிழ்மறைகளாயிரமு மீன்றமுதல்தாய்சடகோபன்,மொய்ம்பால்வளர்த்தவிதத்தாயிராமாநுசன்)என்றுஞ்சொல்லுகிறபடியே திருவாய்மொழிக்குப் பெற்றதாய்சடகோபனும் வளர்த்ததாய்ராமாநுஜனுமாகையாலே ஐச்வர்ய கைவல்யங்களாகிற க்ஷுத்ரபுருஷார்த்தங்களை நிராகரித்து, "திருநாரணன்தாளே உபாயோபேயம்" என்கிற ஒருநாயகத் திருவாய்மொழியையும் திருநாராயணற்குஸமர்ப்பித்தருளினர்.

—⁂—

உடையவர் த்ரிதண்டத்தாலேகீறத்திருமண்கண்டுகளித்ததும், உத்ஸவ
பேரமான ராமப்ரியரையெழுந்தருளப்பண்ணிக்கொண்டுவர
டில்லிக்குஎழுந்தருளியதும்.

பின்பு கல்யாணஸரஸ்ஸின்வடமேல்மூலையிலே(శ్వేతద్వీపాత్సమాగత్య శేషేన శుద్ధం మృద్ద్రవ్యమాహృతమ్ । యాదవాద్రౌ వినిక్షిప్తం మయా యత్తం మమాజ్ఞయా॥ సత్త్వస్య ప్రకృతిశ్శుద్ధిశ్శుద్ధా తత్రాపి మృత్తికా । అతస్సత్త్వమయస్థానమాదరాదధిగచ్ఛత॥ పురా వరాహరూపేణ వసుధాం బిభ్రతా మయా । ఉషితం ఖలు తీర్థస్య కల్యాణస్యాస్య పూర్వతః॥ మజ్జతస్తస్య జలధౌ మమాఙ్గాద్గలితం జలమ్ । తేన పూర్ణమిదం తీర్థం తస్మాత్పుణ్యం పురాతనమ్ ॥ తస్మాదేతస్య తీర్థస్య తీర్థం వహతి మూర్ధని । తదూర్ధ్వగతికామానాం మునీనామూర్ధ్వరేతసామ్ ॥ వాఞ్ఛావరాహరూపస్య మమ సేవావిధాయినామ్ । ఊర్ధ్వపుణ్డ్రవిధానార్థం చోదితో గరుడో మయా॥ శుద్ధాముపాహరద్దివ్యాం శ్వేతద్వీపస్య మృత్తికామ్ । భాగే కల్యాణతీర్థస్య నిచిక్షేప చ పశ్చిమే॥ తస్మాచ్ఛ్రోత్రియాస్సమస్తానాం విషాంశుద్ధా మృదామథాభూత్ ; స్నాత్వా కల్యాణతీర్థేస్మిన్ ధృత్వా శుద్ధాశ్చ మృత్తికామ్॥ ఇమాం మద్భక్తియోగేన మత్వా యజమ్యవాప్స్యసి) என்றுஞ் சொல்லுகிறபடியே கல்யாணஸரஸ்ஸின்வடமேல்மூலையிலே ராமாநுஜனும் த்ரிதண்டத்தாலேகீற, பாலாறுபோலேபொங்கிக்குழம்புகிற திருமண்குவையைக்கண்டு பலகாலும்தண்டனிட்டுஅந்தச்வேதம்ர்த்திகையையெடுத்துத் திருமண்காப்புச்சாத்தியருளி த்ரிதண்டமண்டிதகரராய் ஸ்ரீபாஞ்சராத்ரஸாத்வதஸம்ஹிதையாலே ஸ்ரீரங்கராஜபட்டர் திருக்கையாலேப்ரோக்ஷணதிதிருப்ரதிஷ்டையும்பண்ணுவித்தருளி, இவர்திருநாள்நடத்துகைக்கு உத்ஸவபேரம் பெற்றிலோமில்லையே! என்று முசித்துக்கண்வளர்ந்தருள; அப்போதுதிருநாராயணப்பெருமாள்இவர்ஸ்வப்நத்திலேயெழுந்தருளிநம்உத்ஸவபேரமானராமப்ரியர் டில்லீபுரத்தேற வெழுந்தருளி எம்மாடுராயனென்பானொருவனகத்திலேயிருக்கிறர், அங்கேபோய் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வாரும்" என்று ஸ்வப்நமுகேநவருளிச்செய்ய; உடையவரும்,

ஸ்வப்நங்கண்டெழுந்திருந்து, ஸ்வப்நங்கண்டபடியை முதலிகளுடன் அருளிச்செய்து டில்லிபுரத்தேறவெழுந்தருளாநிற்கச்செய்தே ;

ஸம்பத்குமாரனென்னும் திருநாமம்பெற்ற ராமப்ரியர்வைபவம்.

ராமப்ரியர்வைபவம் ;—(లబ్ధ్వా కులధనం రాజా లఙ్కాం ప్రాయాద్విభీషణః) (லப்த்வாகுலதநம்ராஜாலங்காம்ப்ராயாத்விபீஷணः) என்று பெரிய பெருமாளை ஸ்ரீவிபீஷணப்பெருமாளுக்குப்ரஸாதித்து பெருமாளை எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டுபோனவநந்தரம், (విభీషణే గతే రామో రఙ్గనాథే చ దూరగే । విషీదన్నివ తత్రైత్యైః పౌరైః క్షణమదృశ్యత ॥ అత్రాన్తరే విమానేన బ్రహ్మలోకాదుపాగతః । అబ్రవీద్రఘుశార్దూలం బ్రహ్మలోకపితామహః ॥ నారాయణాచలస్థేన కాకుత్స్థ రఘునన్దన । అర్చితస్య త్వయా పూర్వం విష్ణోరంశోఽయమద్భుతః ॥ మూర్తిమేతద్గృహాణ త్వం రూపమేతన్మయార్చితమ్ । తచ్ఛ్రుత్వా బ్రహ్మణో వాక్యం ఇక్ష్వాకుకులవర్ధనః ॥ సహసోత్థాయ పరయా భక్త్యా కౌతూహలాన్వితః । గృహీత్వా రఘునాథస్తాం మూర్తిం పద్మాసనార్చితామ్ ॥ అర్చయామాస సుచిరం సుమిత్రానన్దనాన్వితః । ఉపేతకౌతుకో నిత్యముపచారైస్సహస్రశః ॥ సీతే వేరఘునాథస్తాం మూర్తిం విష్ణోస్సదాన్వితః । సాకం లక్ష్మ్యా చ భూమ్యా చ సాకేతకులదైవతమ్ ॥ చరాచరం సహానైషీద్దివ్యధామ స రాఘవః । తదా హనూమతా హస్తే ప్రాదాదాదిమదైవతమ్ ॥ కుశాయ రామపుత్రాయ తతస్స పవనసమ్భవః । ఆదిశద్దివ్యరూపం తదర్చితం పద్మయోనినా ॥ తతః కుశో పితృదాజ్ఞా రాఘవేణ సమర్చితమ్ । రూపమభ్యర్చయామాస పిత్ర్యం ధనమితి స్మరన్ ॥ లక్షణైర్గుణతశ్చాపి తస్య కన్యాభవత్తదా । సా చ కణ్ఠస్థయా సాకం జాతా కనకమాలయా ॥ అతస్తాం బాన్ధవాః ప్రాహుర్నామ్నా కనకమాలినీమ్ । నిత్యం ధ్యానపరాం నిత్యం కన్యాం కాం ధన్యరూపిణీమ్ ॥ అవలోక్య కుశః ప్రీతిం ఉపలేభే మహత్తరామ్ । కుశస్య కులదైవం తత్ కుశేశయవిలోచనమ్ ॥ అవలోక్య విశాలాక్షీ నిత్యం పరిచచార సా । తదా కుశలవో నమ్యం కుశీలవకులైర్యుతమ్ ॥ రామప్రియస్య తస్యాగ్రే రామాయణమగాయత) என்னும்படியான வைலக்ஷண்யத்தையுடைய இவளுக்கு அநுரூபவரனை வரிசிக்கித்துப்போருகிறதசையிலே,

ராமப்ரியர், குசனாலே, தன்மகளுக்கு ஸ்த்ரீதநமாகக் கொடுக்கப்பட்டாரென்பது.

(ఏవం చిన్తయతస్తస్య నిశి నిద్రా వ్యజాయత । దదర్శ రాఘవం స్వప్నే కుశస్సౌమిత్రిణాన్వితమ్ ॥ భరతం సహశత్రుఘ్నం జననీశ్చాపి జానకీమ్ । తతః పరమయా భక్త్యా కుశః కౌతూహలాన్వితః ॥ సానుజం సహితం దేవ్యా వవన్దే రఘునన్దనమ్ । తం ప్రాహ రఘునాథోఽపి తాతారాధివ నిశాననః ॥ తాపాపహారిభిర్వాక్యైస్స్మితశ్చన్ద్రికామలైః । కుశాగ్రబుద్ధే బుధ్యస్వ స్వహితశ్చ

కురుమద్వచః ॥ కన్యాం ప్రయచ్ఛ తే వత్స తస్మై కల్యాణరూపిణీమ్ । యస్తు నారాయణపరో నామ్నా చ యదుశేఖరః ॥ జననీ చాపి తం ప్రాహ పుత్రం జనకనన్దినీ । యది చేత్ స్త్రీధనం తస్యై త్వం ప్రయచ్ఛ కుమారికామ్) என்று பெருமாளும்பிராட்டியும் ஸ்வப்நத்திலேவந்தருளிச்செய்தவநந்தரம், (అగమద్రాజధానీం తాం యదుశేఖరరక్షితామ్] సఖ్యా వాధ్యలక్ష్మీసంపుతా నారాయణాచలే ॥ సార్వభౌమపదం ప్రాప్తస్సన్త్రైవర్ణ్యసిఖిరావృతః । పితా తస్య చ భూపాలో నామ్నా యాదవభూషణః) என்னும்படியான நாராயணபராயணனை அந்தராஜாகுமாரனுக்குக்குமாரியைக்கொடுப்பதாக உத்யோகிக்க; அவள் இருப்பிலேநாடிச்செல்ல; அதுக்குமுன்பே அநுரூபரானராஜகுமாரர்கள்வந்துவரித்துதிரஸ்க்ருதராய்ப்போக ; எல்லாப்படியாலும் ஏற்றத்தையுடைய அந்தராஜாகுமாரனை, (అన్వేషయితుమాగచ్ఛద్యోద్ధా పృథివీపతిః । పితుర్వాక్యప్రమాణేన కన్యాం కనకమాలినీమ్ ॥ యదుశేఖరనామ్నే తాం ప్రాదాద్రఘువనన్దనః) என்னும்படி அநுரூபனானவரனாகவரித்து, பெருமாளருளிச்செய்தபடியே குமாரியை அவனுக்குக்கொடுத்தும் ஸ்த்ரீதநமாக ராமப்ரியரையுங்கொடுத்து ஸத்கரித்துவிட ; (కిం ముదే యన్తవే తాం ... సరాజా కన్యకాం శ్రుత్వా । అన్వయాచత సా పుత్రీ పితరం ప్రీతమానసా ॥ ... అర్చితం రఘునాథేన నస్యం కిమపి తద్ధనమ్ । జనకశ్చ వచస్తస్యాః జానకీం ... సంస్మరన్ ॥ దదౌ స దివ్యాం తాం మూర్తిం దినకృద్వంశవర్ధనః । లబ్ధ్వా కన్యాం తతో రాజ్ఞాం శేఖరో యదుపుఙ్గవః ॥ నిర్జగామ పురాత్తస్మాత్ నిర్జరాధిపవిక్రమః । తతః కనకమాలిన్యా సహితో యదుశేఖరః ॥ అర్చయామాస గోవిన్దమర్థితాధికదాయినమ్ । యదువంశక్రమేణాథ భగవాన్ భక్తవత్సలః ॥ వసుదేవస్య భవనే వాసం చక్రే తతః పరమ్ । దేవకీజఠరే వాసం స్వోదరే విశ్వదర్శనః) என்னும்படி தம்பதிகளான இருவரும் ஊரேறவந்துவாழ்ந்துகொண்டுபோனவநந்தரம்;

சக்ரவர்த்தித்திருமகன், குசன், இவர்களால் ஆராதிதராய், யதுவம்சத்துக்கு ஸ்த்ரீதநமாகக்கிடைத்தவராய், நம்பிமூத்தபிரான், கண்ணன்இவர்களாலும் ஆராதிக்கப்பட்டவருமான ராமப்ரியர் திருநாராயணனுக்கு உத்ஸவராக எழுந்தருளினாரென்பது.

அந்த யாதவவம்சபரம்பரையிலே வஸுதேவதேவகிகளிடத்திலே அவர்களுக்குபுத்ரராகவவதரித்து ராமக்ருஷ்ணர்கள் வளர்ந்தருளுகிறகாலத்திலே அதிபலராமனான நம்பிமூத்தபிரானானவர், (కదాచిత్తీర్థయాత్రార్థం గతస్సఙ్కృతాఖిలః । రేవతీపతిరద్రీశ్రం రుచిరం యాదవాచలమ్ ॥ తస్య శృఙ్గం సమాసాద్య తీర్థే కల్యాణసంజ్ఞితే । స్నాత్వా మునిగణైస్సార్ధం కఞ్చిత్కాలముపాసదః ॥ భేజే నారాయణం తత్ర భేషజం భవరోగిణామ్ । చక్షుషా మనసా వాచా కేవలం సేవ్యమద్భుతమ్ ॥ ద్వారకామథ సంప్రాప్య పౌత్రపుత్రం భవామ్బుధేః । బలభద్రో యదుశ్రేష్ఠం బభాషే యమినాం వరః ॥ అథ కృష్ణదశాయాం హి దక్షిణస్యాం మహీధరః । కశ్చిద్విపశ్చితామాసీదాస్థానం నిత్య

శజ్ఞినామ్॥ తస్యాగ్రే భగవానాస్తే భవసన్తాపనాశనః। తస్యరూపత్తు పశ్యామి దేవే వ్యస్తతులాకృతే॥ తయోరన్యోన్యవైషమ్యం నైవపశ్యామికశ్చన। ఏవంవాదినమాలోక్య ప్రాహయాదవపుఙ్గవః॥ భగవన్ రేవతీజానే నైవంవాదీ కదాచన। అస్మత్కులధనస్యాస్య కోవాతుల్యో భవిష్యతి॥ ఇతి కృష్ణవచశ్శ్రుత్వా బలభద్రోబ్రవీద్రుషా। నాహంవదామి వితథం స్పష్టాం కృష్ణ త్వయా శృణు॥ శైలేన్ద్రం హాపతుర్యస్మిన్నాస్తే నారాయణశ్శ్రియా। తస్యాగ్రతస్త్వయం దేవం స్థాపయిత్వాయదూద్వహౌ॥ నాపశ్యతాం తయోర్మూర్త్యోర్వైషమ్యం కలయాచ తౌ। తతస్సమాప్తకలహౌ ముదితౌ యదుపుఙ్గవౌ॥ అన్యోన్యసఙ్గమాదేన మధికాన్వితవైభవమ్ । రూపంతేదుభయం నిష్కల్మషంన్వభూతాం చిరాయతౌ॥ తతోయాదవవంశ్యాస్తాం గిరింసర్వేనిషేవిరే । నారాయణగిరిః పూర్వం సగిరిర్మునిసత్తమాః॥ తదాప్రభృతి తస్యాసీత్ యాదవాద్రిరితి ప్రథా) என்றுஞ்சொல்லுகிறபடியே முன்புசதுராநநனைப்ரஹ்மா,சக்ரவர்த்தித்திருமகனைபெருமாளுக்கு ஸமர்பிக்க; பெருமாளாலே ஆராதிதராய் அத்தாலே, "ராமப்ரியர்" என்றுதிருநாமமாய், பின்புபெருமாள் தம்குமாரனைகுசனுக்குதம்திருவாராதநமான அந்தராமப்ரியரை ஆராதநமாகக்கொடுக்க; குசனும் அப்படியே தம்குமார்த்திக்குஸ்த்ரீதநமாகக்கொடுக்க; அந்தகுமார்த்தியடியாகவுண்டான யாதவவம்சபரம்பரையிலே அவதரித்தார் க்ருஷ்ணர்கள் ஆராதித்துக்கொண்டுபோந்த திருவாராதநத்தை நாராயணகிரியில் நாராயணன்ஸந்நிதியிலே சேரவெழுந்தருளப்பண்ண;

—※—

டில்லியில்எம்மாடுராயன்என்கிற துருஷ்கன்மகள்ஸஜ்ஜாக்ரஹத்திலெழுந்தருளியிருந்த ராமப்ரியர், தம்மையெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோம்படி உடையவருக்கு ஸ்வப்நம்ஸாதித்தது.

அநந்தரம் அந்தயதுகுலநாதனை க்ர்ஷ்ணன்யாதவர்களோடே ஆதரித்துஎழுந்தருளியிருந்த ஸ்த்தலமாகையாலே அதுவே நிரூபகமாக "யாதவாத்ரி" என்றுதிருநாமமாய்நடந்துசெல்ல; பின்பு கலிகாலத்திலே சிலதுஷ்டப்ரபுக்களாயிருப்பார், "மேலக்கோட்டை" என்று நிலையாகஅரண்செய்துகொண்டுபோர, பின்பு ஒருகாலத்திலே கலஹமாய் அதுகுலைந்து ராமப்ரியரை எம்மாடுராயன்என்கிறயவநன் கொண்டுபோய்ஸ்வக்ர்ஹத்திலேஎழுந்தருளப்பண்ணிக்கொண்டிருக்க; அத்தைக்கேட்டருளி அப்போதேபுறப்பட்டு அவன்பாடேசென்று அவனைப்பார்த்து, "நம்குலதெய்வமானராமப்ரியர் உன்க்ர்ஹத்திலேயிருக்கிறார், அவரைத்தரவேணும்" என்ன; அவனும், "சிறைகொண்டுவந்த எம்பெருமான்கள் சிறைச்சாலையிலே சோதித்துக்கொள்ளீர்" என்று அப்பணையிட்டுவிட; இவரும் அந்தச் சிறைச்சாலையிலே எழுந்தருளிச்சோதித்துப்பார்த்தவிடத்திலே ஒருவரும் திருநாராயணன்வடிவுக்குஒத்திராமையாலேமுசித்துக்கண்வளர்ந்தருள;

பின்புராமப்ரியரும் இவர்ஸ்வப்நத்திலேயெழுந்தருளி, "நாம்அவன் மகளாலேபூஜைகொண்டு அவள்ஸஜ்ஜாக்ர்ஹத்திலே யிருக்கிறோம், அங்கேறவாரீர் கொண்டுபோகும்படியாக" என்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய; இவரும் ஸ்வப்நங்கண்டெழுந்திருந்து வப்நங் கண்டபடியை ராஜாவுக்கறிவிக்க; ராஜாவும்அத்தைக்கேட்டு, "உம்முடையப்பக்கல் அவர்வ்யாமுக்த்தராகில் தானேவரக்கடவர்" என்ன; உடையவரும் அவரைஒருக்கால்கண்ணால் கண்டநுபவிக்கலாகாதோ என்றருளிச்செய்ய; ஆகில் இங்கேவாரும்என்று அவரையுங்கூட்டிக்கொண்டு அவள்ஸஜ்ஜாக்ர்ஹத்தேறவெழுந்தருள;

—※—

ராமப்ரியர் உடையவராலே "செல்வப்பிள்ளை"என்னும் திருநாமம்சாத்தப்பெற்றாரென்பது.

ராமப்ரியரும், உடையவரைக்கண்டு இட்டசட்டையும், சட்டிய சிறுச்சதங்கையும், இட்டகஸ்தூரித் திருநாமமுமாக ஊஞ்சல் நின்றும்குதித்து, (தன்னியலோசைசலன்சலனென்றிட) என்கிறபடியே,*செஞ்சொல்சதங்கைநிரைசெஞ்செல்)என்னும்படி ஓடிவந்து உடையவர்மடியிலே வந்திருக்க; உடையவரும், விம்மல்புரம்பிதோளும்மார்பும்பூரித்து, "என்னுடையசெல்வப் பிள்ளையன்றோ" என்றெடுத்து அணைத்தருளினார். அன்றுமுதலாக ராமப்ரியர்க்கு "செல்வப்பிள்ளை" என்று திருநாமமாய்த்து. ராஜாவும் இத்தைக் கண்டுமிகவும் ஆச்சர்யப்பட்டு செல்வப்பிள்ளையையும் அநேகம்திருவாபரணங்களையும் ஸமர்ப்பித்து, "ஊரேற வெழுந்தருளவேணும்" என்றுவிண்ணப்பஞ்செய்தனுப்ப;

—※—

செல்வப்பிள்ளை, தம்மைப்பிரியில்தரியாத எம்மாடுராயன்புத்ரியைத் தமக்கு ஆளாக்கிக்கொண்டாரென்பது.

அநந்தரம் உடையவர்,செல்வப்பிள்ளையைத்திருப்பல்லக்கிலேஎழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோகிற ஸமயத்திலே ராஜபுத்ரியானவள் செல்வப்பிள்ளையைப்பிரியமாட்டாமல், "கூடப்போவேன்" என்ன; ராஜாவும் வஸ்த்ரபூஷணாதிகளை ஸங்கோசமறக்கொடுத்தனுப்ப; உடையவரும், செல்வப்பிள்ளையையும்எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ராஜபுத்ரியையும் அழைத்துக்கொண்டு பயணகதிகளிலேத்வரித்து திருநாராயணபுரத்தேறவெழுந்தருளினவளவிலே செல்வப்பிள்ளை அந்த ராஜபுத்ரியை அந்தர்த்தாநமாக அங்கீகரித்தருளினார்.

—※—

உடையவர், திருநாராயணபுரத்திலே செல்வப்பிள்ளையைத் திருநாராயணனுடனே எழுந்தருளப்பண்ணி ஸகலோத்ஸவங்களையும் நடத்திக்கொண்டு பன்னிரண்டுஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தாரென்பது.

உடையவரும் செல்வப்பிள்ளையை ஹஸ்தநக்ஷத்ரத்திலே ப்ரோக்ஷணப்ரதிஷ்டாபுரஸ்ஸரமாகத் திருநாராயணப்பெருமாளுடனே சேர்த்துத் திருநாராயணப்பெருமாளுடைய நித்யோத்ஸவகர்த்தாவாக்கி விமாநமும் கோயில்களும் சமைப்பித்து ராமாநுஜமடமுங்கட்டி வைத்து ஐம்பத்திருவரையும் கைங்கர்யத்திலே நிறுத்தித் தாமும்குறைவறத் திருவாராதநமும்நடத்திக்கொண்டு,(కలౌఖల్వృభవిష్యతి) (கலெளகல்வபிபவிஷ்யதி) என்றும், (கலியுங்கெடும்கண்டுகொண்மின்) என்றும் சேஷாவதாரராக அவதரித்தருளின எம்பெருமானார், தம்முடைய ஸ்ரீபாதத்திலே ஆச்ரயித்த ஆசார்யர்களுடனேயும், அஸங்க்யாதரான சாத்தின சாத்தாத முதலிகளுடனேயும், பன்னீராயிரம் ஏகாங்கிகளுடனேயும் ஸேவ்யமாநராய்க்கொண்டு. எழுந்தருளியிருக்கச்செய்தே, பத்மகிரியிலே செல்வப்பிள்ளைக்கெதிரான பௌத்தாதிகளையும் கல்காணந்தன்னில் அரைப்பித்து நிச்சேஷமாகநிவாரிப்பித்து வேதாந்தவ்யாக்யாநம்பண்ணிக்கொண்டுதிருநாராயணப்பெருமாள்ஸந்நிதியிலே பன்னிரண்டுஸம்வத்ஸரம் வாழ்ந்தருளினார்.

தொண்டனூர்நம்பிதம்பிரான், திருநாராயணபுரத்திலேசெல்வப்பிள்ளையுடன் திருப்பாடிவேட்டைகண்டருளியது.

அங்காலத்திலேதொண்டனூரில்*புண்டரீகக்கேள்வனெம்பெருமான் செல்வப்பிள்ளைசேர்த்தியிலேயெழுந்தருளித் திருப்பாடிவேட்டைச்சிறப்புக்கொண்டருளவேணும் என்று தொண்டனூர்நம்பிகளுவிலேயருளிச்செய்ய ;அவரும் தாம்கண்டகனவை அங்குள்ளவர்களுக்கருளிச்செய்ய; அப்போது எம்பெருமானையெழுந்தருளுவித்துக் கொண்டு எம்பெருமானார் உபலாலித்தருளுகிற திருநாராயணன் திருமுன்பில் ராமாநுஜன்திருமண்டபத்திலே செல்வப்பிள்ளைதிருவோலக்கத்திலேசென்று ஸேவித்திருக்க ; எம்பெருமானாரும் "நம்பிதம்பிரான்" என்று அந்த எம்பெருமானுக்குத் திருநாமஞ்சாத்தி, (ஆடியமுதுசெய் அப்பனுமுண்டிலன் உன்னோடுடனேயுண்பான்) என்கிற படியே சேர்த்தியுடன் அமுதுசெய்வித்து ஆதரித்து நம்பிக்குப்பரியட்டமும் கட்டுவித்து*அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும்தயிர்வாவியும் நெய்யளறுமாக்கிவைத்துப்பண்டுஅமுதுசெய்தருளப்பண்ணினதுபோலேஸந்நிதியில் திருப்பாவாடையும் போரப்பெருத்திருக்கப்ரார்த்தநீயமானவற்றைநம்பிதம்பிரான்பரிகரமான அறுபத்திருவராசைப்பட;அவர்

களைச்சூறைவிட்டருள ;அவ்வளவில் ஐம்பத்திருவர்முறையிட ; அவர்களைப்பாறவடித்து நீங்கள் சூறைகொள்ளுங்கோள் என்ன அவர்களும் அப்படியேசெய்ய ; இப்படிகொள்ளவும் அள்ளவும்தள்ளவுமான ஸரஸகோலாஹலம் அத்யாபிநடந்துபோரும்படி கட்டளையிட்டருளி;

உடையவர், திருமண்வைபவத்தை ப்ரகாசிப்பித்தருளியது.

இந்தப்பதமேயன்றியே எல்லாப்பதங்களையுங் கொடுக்குமவராகையாலே மேல்நாட்டிலுள்ளவர்களெல்லாரும் மேலானபதம்பெறுகைக்காக இவர்ஸ்ரீபாதத்திலேவந்தாச்ரயிக்க; அவர்களுக்குத்திருவிலச்சினையும் திருநாமமும்பெருக்கி, (విశుద్ధమూర్తికాంతం త్రలలాటే ధారయన్తియే। అన్యేష్వపియథా స్థానమఙ్గేషుయతచేతసః॥ సద్యస్సశుద్ధరూపేభ్యో హ్యేతేభ్యో బిభ్యతి దానవాః) (விசுத்தமூர்த்திகாம் தத்ரலலாடே தாரயந்தியே।அந்யேஷ்வபியதாஸ்தாநமங்கேஷுயதசேதஸ:।ஸத்யஸ்ஸசுத்திரூபேப்யோஸ்தேப்யோபிப்யந்தி தாநவா:) என்றுஞ்சொல்லுகிறபடியே திருமண்வைபவத்தை மண்ணுலகிலுண்டானவர்களெல்லாருமறியும்படி ப்ரகாசிப்பித்தருளியும்,

பெரியதிருமந்த்ரத்தின்வைபவம்.

நாரங்களாயுள்ளசேதநரை யெல்லாரையும் *நாரணன்தமராம்படி* நலந்தருஞ்சொல்லான நாராயணநாமத்தினுடைய ப்ரபாவத்தை, (ఇదంహిశుద్ధవచసాం శ్రుతీనామవలమ్బనమ్ । సూరీణామపిసర్వేషాం కర్ణేష్వమృతసేచనమ్॥ నారాయణపదంయస్యజిహ్వాగ్రేవర్తతేసదా । నారాయణశ్శ్రియాసార్ధం నైవముఞ్చతితం క్షణమ్॥ అర్థంవినాపిశబ్దోయం త్రాయతేమహతోభయాత్ । కిమ్పునర్జ్ఞాయమానార్థః కృతీనాంపాపనాశనః॥ ఆపోహినారశబ్దార్థో నారావిష్ణుస్సముద్భవాః । సతాసామయనత్వాచ్చ తేననారాయణస్స్మృతః॥ అక్షరత్వాన్నరాజీవాః నారాస్తేషాం సముచ్చయాః। తేషామయనతాంయాతి తేననారాయణస్స్మృతః॥ నరశ్చభగవాన్విష్ణుస్తజ్జాస్తద్యోగినోపివా । నారాస్తదయనంవాపి తేననారాయణస్స్మృతః॥ అథవానేత్రభూతోయం నరోనారంచరాచరమ్ । వాసస్థానమిదంతస్య తేననారాయణస్స్మృతః॥ జ్ఞానశక్త్యాదయోయద్వాగుణానారాఇతిస్మృతాః। షాడ్గుణ్యపరిపూర్ణోయం తేననారాయణస్స్మృతః॥ షాడ్గుణ్యంవాసుదేవస్యయథావ్యూహపరత్వమ్ । సఙ్కర్షణాదిభేదస్తుగుణాభివ్యక్తిమాత్రతః॥ జ్ఞానశక్త్యాదిభిష్షడ్భిస్తద్భేదైర్గుణాదిభిః । అతోనారాయణశ్శ్రీమాన్ సర్వత్రపరిపూర్యతే॥ విశ్వామిత్రాయమిబాలస్యయథాహిజఠరేజగత్ । షాడ్గుణ్యోదరమాశ్రిత్యవర్తన్తేగుణకోటయః) என்றும், (తతోవిజ్ఞాపయామాసవిష్ణోరేషానపాయినీ। వేదోపదేశంబాలస్యభగవన్కర్తుమర్హసి॥ సహధర్మచరీవాక్యాత్ సచసన్తోషదాయినః । ఏవంవిజ్ఞాపితశ్చపశ్చాద్దేవోమిత్రాహ్వహశ్రియఃపతిః॥ శ్రుత్వాతద్వచనం జ్ఞాత్వాత్ ఆదావోమిత్యుదీరయన్) என்றும்,

(పితామహస్యాపితద్భ్రిత్వాతదేవావక్త్రయోః పునః। ప్రణవం ప్రణవాద్యశ్చ ద్వయోమక్షరమాలప॥ కమలాకమలేశాభ్యాం లాళితః కమలాసనః। వేదాదిః ప్రణవశ్చాసీదకారస్తస్యకారణమ్॥ తస్యార్థశ్చపరం బ్రహ్మనారాయణ ఇతిశ్రుతిః। బహుశః ప్రణవాలాపబద్ధరాననమాత్మజమ్॥ దృష్ట్వాతుతోషభగవాన్ దయానిర్భరయాదృశా। ఉపాదిశత్తతశ్శ్రీమాన్ స్వాయమష్టాక్షరం విధేః॥ తద్ధిసర్వస్య వేదస్య కారణం భవతారణమ్) என்றும், (శరీరం స్యన్దనం విద్ధి విద్ధియుగ్యాంశ్చ పూరుషాన్। మత్తుణాంశ్చ గుణాన్ విద్ధి మాఞ్చ త్వం విద్ధి సారథిమ్॥ సర్వేష్వపిచ ధర్మేషు పారతన్త్ర్యమితిస్మరన్। మామేవసాధనం విద్ధి విద్ధి మామేవతత్ఫలమ్॥ ఏవం ప్రబోధితస్తేన బ్రహ్మసర్వజ్ఞతాం యయౌ) என்றும், (అష్టాక్షరస్య మన్త్రస్య ప్రభావమపిచాబ్రవీత్ ◆ బ్రహ్మన్నష్టాక్షరో మన్త్రః శ్రుతీనాం దృష్టిరిష్యతే॥ ధర్మార్థకామమోక్షాణాం చతుర్ణామపిసాధనమ్। కృతం బహువిధైర్మన్త్రైః కృతం యజ్ఞైర్నియన్త్రితైః॥ కృతఞ్చకర్మణా తత్ర యత్రాష్టాక్షరసన్నిధిః। సాధారణోప్యయం మన్త్రస్సర్వస్వపి చ మూర్తిషు॥ అస్యానుకల్పతాం యాన్తి మూర్తిమన్త్రస్వహస్రశః। వ్యాపకేషు చ మన్త్రేషు త్రిష్వప్యేష పరో మతః॥ వ్యాప్యవ్యాపకయోరత్ర విశేషణావబోధనాత్। అతో హి విష్ణుగాయత్ర్యామాద్యో మన్త్రస్స ఉచ్యతే॥ మన్త్రో యం సద్గురోరేవ శ్రోతవ్యో నాన్యతోపి చ। న ఖల్వర్థస్య జాత్వర్థం ప్రదాతుం యష్టిమర్హతి॥ యథా మహేశ్రీనివాసత్వమసాధారణమిష్యతే। తథా నారాయణపదం త్రియస్తేషు నిగద్యతే॥ నారాయణపదం లోకేనామయస్య ప్రకీర్త్యతే। అపవర్గో హి తన్మాతుః అయత్నాదేవ సిద్ధ్యతి॥ అసనే శయనే యానే భోజనాదౌ చ కర్మసు। మన్త్రమష్టాక్షరం బ్రహ్మన్ మధ్యే చిత్తం నివేశయ) என்றும்சொல்லுகிறபடியே—

பக்தர்களான பரமரிஷிகளுக்திகளாலும்பகவதுக்திகளாலும்பாக்யவான்களான பாகவதர்களுக்கு பக்திஜநகமாகவும் முக்திமூலமாகவும்வெளியிடாநின்றுகொண்டுமற்றும்திருமந்த்ரத்துக்குவாச்யன்திருநாரணனென்னுமதுதோற்ற, (வண்புகழ்நாரணன்)என்றும், (எண்ணுந்திருநாமந்திண்ணம்நாரணமே) என்றும், (திருநாரணன்றாள் காலம்பெறச்சிந்தித்துய்மினோ) என்றும், (திருமால்திருநாமம் நானும்சொன்னேன் நமரும்முரைமின்நமோநாராயணமே) என்றும், இப்படி * திருமால் திருப்பேரான திருமந்த்ரத்தையும் த்வயத்தையும் தத்விஷயமாக ப்ரஸாதித்து, அதுக்குமேலே,(நாராயணனே) (நாராயணாலே)(நாராணனேயாவது) (నారాయణపరోధ్ధవ) (நாராயணபரோபவ)என்றுசரமார்த்தத்தையும் தத்விஷயமானமந்த்ரத்திலேப்ரகாசிப்பித்தும், அத்தைஎங்கும் ப்ரவர்த்திப்பித்தும், (நாடாதமலர்நாடி நாடோறும்நாரணன்றன் வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று) என்னும்படிநாட்டை, (నారాయణసమారాధనమ్)(நாராயணஸமாராதநம்) என்றுஞ்சொல்லுகிறபடியே நாராயணஸமாராதநபரமாக்கியும் இப்படிராமாநுஜனை தாம் நாராயணனுடைய வைபவத்தைவர்த்திப்பித்துக்கொண்டு திருநாராயணபுரத்திலே நாராயணபரராயெழுந்தருளியிருக்க; அங்கு

ள்ளவர்களும், (ఆదౌ నారాయణాఖ్యో మునిజనమహితో మూలమన్త్రోపదేష్టా మధ్యే పార్థార్పితాఙ్ఘ్రిశ్చరమమనుగురుర్వాసుదేవాభిధానః। భూత్వా విష్ణుస్స పశ్చాత్ సకలజనహితం మన్త్రరత్నం ద్వయాఖ్యం భూయో రామానుజాఖ్యస్సమదిశదఖిలం శ్రీమతేస్మై నమస్తాత్) (ஆதௌநாராயணாக்யோ முநிஜநமஹிதோமூலமந்த்ரோபதேஷ்டாமத்யேபார்த்தார்ச்சிதாங்க்ரிஶ் சரமமநுகுருர்வாஸுதேவாபிதாநः। பூத்வா விஷ்ணுஸ்ஸபஶ்சாத் ஸகலஜநஹிதம்மந்த்ரரத்நம்த்வயாக்யம் பூயோ ராமாநுஜாக்யஸ்ஸமதிஶதகிலம் ஶ்ரீமதேஸ்மைநமஸ்தாத்) என்றுஞ்சொல்லுகிறபடியேஇவருடையமந்த்ரதர்சித்வமாஹாத்ம்யத்தையறிந்து ஸர்வரும்திருவடிகளிலே சரணமாகவடைந்து உடையவரை உடையராய்வாழ்ந்துபோந்தார்கள்.

இவரும், (వైకుణ్ఠవర్ధనం నామ క్షేత్రం తత్పర్యుచ్యతే। ప్రమాణం తస్య విజ్ఞేయం పరితో యోజనద్వయమ్॥ యావద్దృష్టిపథం యాతి సర్వతో యం మునీశ్వరః। తావత్ప్రమాణకం సర్వం ముక్తిక్షేత్రం తదుచ్యతే) (வைகுண்டவர்த்தநம் நாமக்ஷேத்ரம் தத்ஸமுச்யதே। ப்ரமாணம் தஸ்யவிஜ்ஞேயம் பரிதோயோஜநத்வயம்॥ யாவத்த்ருஷ்டிபதம் யாதிஸர்வதோயம்முநீஶ்வரா:। தாவத்ப்ரமாணகம் ஸர்வம் முக்திக்ஷேத்ரம்ததுச்யதே) என்கிறவைபவத்தையுடைய க்ஷேத்ரவாஸத்தையும்ப்ராப்யதயா செய்யாநின்றுகொண்டு,(ఆనన్దమయమిత్యేవ తస్య నామాభిధీయతే। నమస్కారోపి కిం తస్య కీర్తనాద్దర్శనాదపి॥ ఆజన్మమరణం యత్స్యాత్ అఘం తదపి నశ్యతి। అవతీర్ణం హి వైకుణ్ఠాత్ అద్యైకృతయుగే హి తత్॥ జగతాముపకారాయ స్వయం సఙ్కల్పతో మమ) (ஆநந்தமயமித்யேவதஸ்யநாமாபிதீயதே। நமஸ்காரேபிகிம் தஸ்யகீர்த்தநாத்தர்ஶநாதபி॥ ஆஜந்மமரணம்யத் அகம்ததபிநஶ்யதி। அவதீர்ணம்ஹிவைகுண்டாதாத்யேக்ருதயுகேஹிதத்॥ஜகதாமுபகாராயஸ்வயம்ஸங்கல்பதோமம) என்றுஞ்சொல்லப்படுகிறஶ்ரீதிவ்யவிமாநத்தையும்அதிலேதிவ்யமங்களவிக்ரஹோபேதனாய்திவ்யமஹிஷியானசிரியாஸேவ்யமாநஶ்ரீபாதாரவிந்தங்களையுடையனாய், இப்படி * திருமருத்தாள்களையுடையனாயிருக்கிறஶ்ரீமந்நாராயணனையும்ஸேவித்துக்கொண்டு ஹ்ருஷ்டராய், (యథా కల్యాణతీర్థస్య తీర్థే కల్యాణచేతసామ్। తీర్థే తత్రామలే స్నాత్వా ముచ్యన్తే సర్వకిల్బిషైః) (யதாகல்யாணதீர்த்தஸ்யதீர்த்தேகல்யாணசேதஸாம் । தீர்த்தேதத்ராமலேஸ்நாத்வாமுச்யந்தேஸர்வகில்பிஷைः) என்றுஞ்சொல்லப்படுகிறவைபவத்தையுடைய திருக்கல்யாணியிலே உடையவர் முதலிகளோடே அநுஷ்டாநார்த்தமாகவெழுந்தருளியிருக்கிற வேளையிலே.

கூரத்தாழ்வான், மாறொன்றில்லாமாருதிச்சிறியாண்டான், அம்மங்கியம்மாள், இவர்களாலே உடையவர்வ்ருத்தாந்தத்தையும், சோழன் க்ரிமிகண்டனானனென்பதையுங் கேட்டுக் களித்தது.

மாறொன்றில்லாமாருதிச் சிறியாண்டானும் அம்மங்கியம்மாளும்கொங்கின்மலையினின்றும்ஆழ்வான்தசையைஆராய்வதற்கு அனுப்பியருளினபின்பு பயணகதிகளிலேத்வரித்துப்போய்ஸ்ரீபராந்தனிலேவந்துஆழ்வான்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க ; ஆழ்வானும் உடையவரைஸேவித்தாப்போலேமிகவும்ஆதரித்து,அவர்களை,"உடையவர்செய்கிறதென்" என்றுகேட்க ; அவர்களும்அக்குத்தையில் வ்ருத்தாந்தங்களையெல்லா ஸவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்யக்கேட்டு, "இவ்வளவுகாணப்பெற்றோமே!" என்ன ; அவ்வளவிலே, "அவன் புழுத்தான், புரண்டான்" என்றுபெருவிசேஷமாக; இத்தை ஆராயக்கடவோம் என்றிருக்கச்செய்தே ;

—※—

சோழன் க்ரிமிகண்டனாய்ப்புழுத்துப்புரண்டான் என்கிற செய்திகொண்டுவந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உடையவர்மீளவும் த்வயத்தை உபதேசித்தருளினாரென்பது.

பெரியநம்பி திருநாட்டுக்கெழுந்தருளின சரமச்லோகம் ; -(కాలయుక్తేష్టకామస్య తిథిప్రోక్తా మహాగురోః । యామునార్యపదాంభోజసంశ్రయాయాస్తు సంపదా) (காலயுக்தேஷ்டகாமஸ்ய திதிப்ரோக்தா மஹாகுரோ:। யாமுநார்யபதாம்போஜஸம்ச்ரயாயாஸ்து ஸம்பதா) என்கிற ச்லோகத்தையெழுதிக்கொடுக்க ; அத்தைவாங்கிக்கொண்டு கங்கைகொண்டசோழபுரத்திலே யெழுந்தருளி அத்தை லிகிதவத்கரித்துக்கொண்டு பயணகதிகளிலேத்வரித்து, திருநாராயணபுரத்திலே உடையவர்திருவடிகளைத் தங்களாநந்தாச்ருக்களாலே நனையாநின்றுகொண்டு, "பாபிஷ்டனான அந்தச்சோழன் க்ரிமிகண்டனாய்ப் புழுத்துப்புரண்டான்" என்ன ; உடையவரும்கர்ணாம்ருதமான வார்த்தையைக்கேட்டுத்தோளும்மார்பும் பூரித்து, "இத்தனைதூரம் நல்வார்த்தைகொண்டுவந்த இவர்களுக்கு நாம்கொடுக்கலாவதென்" என்று விசாரித்தருளி முன்புப்ரஸாதித்தருளின த்வயத்தைமீளவும் ப்ரஸாதித்தருளினார். அநந்தரம்உடையவரும் முதலிகளைப்பார்த்து இவ்விடம் கல்யாணஸரஸ்ஸென்னுமிடம் அர்த்தவித்தமாகக்கண்டோமிறேஎன்றருளிச்செய்தருளினார். முதலிகளும், "அப்படியாம்" என்று அத்தைக்கொண்டாட ;

—※—

29-9-86.

உடையவர், பெரியநம்பி திருநாடலங்கரித்ததைக்கேட்டு ஸ்ரீசூர்ணபரிபாலநமும் திருவத்யயநமும்நடத்துவித்து, (கமலாபதி கல்யாண) என்கிறச்லோகத்தை அவர்விஷயமாகஅருளிச் செய்தருளியது.

அநந்தரம்,பெரியநம்பி திருநாட்டுக்கெழுந்தருளின சரமச்லோகத்தைஸமர்ப்பிக்க அத்தையுங்கடாக்ஷித்து,(மயல்பெருங்காதலென்பேதைக்குஎன்செய்கேன்வல்வினையேனே) என்கிறபடியே க்லேசமதிசயித்து பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ணபரிபாலநத்தையும் பண்ணி ஸ்ரீவைஷ்ணவர்களையுந்திரட்டிச் சீர்மையுடனே திருவத்யயநமும்நடத்துவித்து,(నాథస్య పాదాంబు తీర్థం వైష్ణవాంఘ్రి జలాచ్చుభా। తేషాం పాదరజఃపుణ్యం గంగామపి పునాతి హి) (நாதஸ்ய பாதாம்பு தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரிஜலாச்சுபா । தேஷாம்பாதரஜ: புண்யம் கங்காமபிபுநாதிஹி) என்றும் சொல்லுகிறபடியே பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தையும்சேர்த்து ஸ்வீகரித்தருளி, அநந்தரம் ஸ்ரீவைஷ்ணவர்களையு மமுதுசெய்வித்தருளி, (కమలాపతి కల్యాణగుణామృత నిషేవయా। పూర్ణకామాయ సతతం పూర్ణాయ మహతే నమః) (கமலாபதி கல்யாணகுணாம்ருத நிஷேவயா । பூர்ணகாமாயஸததம்பூர்ணாயமஹதேநம:) என்கிறச்லோகத்தை அவர்விஷயத்திலே அருளிச்செய்தருளினார்.

—※—

திருக்கல்யாணியின் கீழ்கரையிலுள்ளதிருமலையில் அழகியசிங்கரை மங்களாசாஸநஞ்செய்தருளியது.

பின்புஒருநாள் திருக்கல்யாணியிலேநீராடிநித்யாநுஷ்டாநங்களுஞ் செய்தருளிஹ்ருஷ்டராய்த் திருமண்காப்புச்சாத்தியருளித் திருவடிகளில் துண்டரனைவர்களெல்லாரும் திரண்டுஸேவித்துநிற்க ; அவர்களுடன் திருக்கல்யாணிதீர்த்தத்திலே ஸல்லாபத்துடன் எழுந்தருளியிருந்து, (కల్యాణసరసః పూర్వం నరసింహగిరేరథః) (கல்யாணஸரஸ: பூர்வம்நரஸிம்ஹகிரேரத:) என்கிறபடியே திருக்குளத்துக்குக்கிழக்குதிக்கிலே, (மலைகீழ்துபிளந்தசிங்கம்)என்னும்படி மலையின்பேரிலேநக்கரிக்கவிருக்கிற * சக்கரச்செல்வனான அழகியசிங்கரைக்குறித்து, (உன்னைச்சிந்தையினாலிகழ்ந்த) என்கிறபடியே தேவரீரை இல்லைசெய்து, (எங்குமுளன்கண்ணனென்றமகனைக்காய்ந்து) என்றும்,(பள்ளியிலோதி தொடங்கி, ஆங்கதனுக் கொன்றுமோர் பொறுப்பிலனாகிப்பிள்ளையைச்சீறி) என்றும், (సాధూనాం యస్సదా భవేత్) (ஸாதூநாம்யஸ்ஸதாபவேத்) என்று-ஸாதுக்களுக்கெல்லாம் த்ருஷ்டாந்தமாகச்சொல்லப்பட்ட ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானிடத்திலே அஸஹமானாய் அபசாரப்பட்டுப்போந்த ஹிரண்யனை விதாரணஞ்செய்தாப்போலே தேவரீர்பாதத்வத்தை மாறுடிக்கீழுடி பேரிலேயேயிட்டும், பெரியநம்பிக்கும் ஆழ்வானுக்கும் தீங்கு

செய்துபோந்த கங்கைகொண்டசோழபுரத்தில்கண்டகனையும் தண்டித்தருளிற்றே என்று விண்ணப்பஞ்செய்ய ;

அப்படியே, శ్రీరామానుజమునిధార్యచోదితస్సన్ ప్రహ్లాదోద్ధృన్నృహరిర్యథాహిరణ్యమ్। విద్యాధతుంతిపతిమాయధేనశత్రోర్ద్రాణంనిశనిశతేనవేజ్కటేశః॥తద్ధతిప్రదలితకణ్ఠనాళరన్ధ్రాన్నిర్విష్టోషధిపునరుత్తిరుర్తిజారాత్।తత్రసైకృమిపటలంయత్తదాసీత్ తస్యాత్తంకృమిగళనామపావలక్ష్మ॥ ఉద్భూతైర్వృస్పమతశేశదాహగద్ధిశ్చ్శేశోజ్వలితచితాగ్నిదీపగద్ధః। సజ్ఞాతావ్యధనికృతపొలామతోవ్యరంసీత్ శతావ్యధాన్తరపరిచారకాణాగమార్ధి॥ ఆయాతాద్యతిపతిరార్యశిష్యైచ్ఛేశంవృషభగిరినాథపాలిదగ్ధమ్। నిష్ఫ్యాతకృమిపటలాద్వతాద్గతాసుంప్రీతోదాద్యయమనుపూర్ణపాత్రమస్తే॥శ్రీనారాయణపురిసమ్పదాత్మజాఖ్యం కలాణాహ్వయసరసితటేముముక్షమ్। ఉత్పాద్యాకృతసదశోత్తరద్విచత్వారింశత్కూటకూటనికరాన్వితంయతీన్ద్రః) என்று முன்பேஸங்கல்பித்தருளின ஸங்கல்பத்தினாலே, (నిహతాగ్రపూర్వమేవ) (நிஹதாக்ரபூர்வமேவ) என்னும்படியாக அவன் முன்பேமுடிந்துபோக ;

பின்பு, (அந்தகராம்புதுக்கியன்பருடனுமூலாவியிருப்ப | வந்தனிறைஞ்சுமம்மங்கியம்மாள் வனைமாருதியானைச் | சிந்தைமகிழ்ச்சிசெப்புமெனக்குயிர்தீர்ந்தானெனினும்| இந்தவுகவைக்கேட்டதனாலிதுகல்வியாணித்தலமென்றாள் || இன்மொழியிந்தவிவர்க்கெதுகொடுப்பதென்றாய்ந்தவ| கன்பருடனுமன்றளிக்குந் துயமேயதிகமென்றருளி| வன்பருதாவரம்பில்லார் தம்மைத்தொண்டனூர்வைப்பித், தென்புலன்களேறகல்செக்கில்திருப்பினபின்) என்று இப்படிசோபநவிசேஷங்கொண்டுவந்துசொன்ன அநுகூலர்க்கு அத்யந்தம்ப்ரியமும் தர்சநத்துக்கு அசோபநகாரிகளானப்ரதிகூலர்க்கு அப்ரியமும் செய்தருளினவநந்தரம் தமக்கிருப்பிடமான விவ்விடத்துக்குமேலைமூலையான செங்காமியளவும்எழுந்தருளி அங்குள்ளமாயிகளையும்ஜயித்து அங்கே ராமாநுஜமடமுங்கட்டுவித்து, அப்பால்சென்றுதிருக்தும்படி தம்திருவடிநிலைகளான முதலியாண்டானையனுப்பியருளித்தாம்மீண்டெழுந்தருளி;

——❧❧✻❧❧——

உடையவர், விஷ்ணுவர்த்தநாராயனைக்கொண்டு பஞ்சநாராயண ப்ரதிஷ்டை செய்வித்ததும், சோழன்மாண்டானென்பதும்.

(விஞ்சுபுகழாண்டானை வேலூர்செலவிடுத்தருளிப்| பஞ்சநாரணனைப்ரதிட்டைபண்ணி நாரணப்பதியில்|அஞ்சலென்று தன்னடியையாருமைம்பத்திருவர்தமைக் | கஞ்சமலராள் நாயகனைகாத்திருமென்றேகழுறு) என்கிறபடியே முதலியாண்டானும் வேலூரேறவெழுந்தருளி அங்குண்டானஅனைவரையும் உடையவருக்குஉரித்தாம்படி திருத்தி, முன்பே எம்பெருமானார்தாம் திருநாராயணபுரம்புதுக்கினை

வநந்தரத்திலே விஷ்ணுவர்த்தநனென்கிற ப்ரபுவைக்கொண்டு ஏகமுஹூர்த்தத்திலே தழைக்காட்டில், கீர்த்திநாராயணனென்கிற * வாழ்புகழ்நாரணன், தொண்டனூரிலே லக்ஷ்மீகாந்தனென்கிற ஸ்ரீமந்நாராயணன், கதுகலத்தில்வீரநாராயணன், விஜயாபுரத்தில் விஜயநாராயணன், வேலூரில் கேசவனுக்கு அநந்தரம் நாராயணனுகையாலே கேசவநாராயணனுகிற பஞ்சநாராயணப்ரதிஷ்டாபர்யந்தமாகச்செய்தருளினகைங்கர்யம்முதலாயுவுள்ளவற்றையும் ஆராய்ந்துமற்றும் நியமித்தருளினகைங்கர்யங்களெல்லாங்கண்டு மீண்டவநந்தரம் க்ரிமிகண்டன் மாண்டான்,

——❧❧✻❧❧——

திருநாராயணபுரத்தில் ப்ரஹ்லாதவரதரான அழகியசிங்கரை உடையவர் மங்களாசாஸநம்செய்தருளியது.

இனிநாம், (அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக் கண்டகண்கள்) என்னும்படி கண்ணாரக்கண்டு ஸேவிக்கவேணும், (திருவரங்கம்நம்மூர்) என்னும்படியான திருவரங்கப்பெருநகருக்கு எழுந்தருளவேணுமென்று * [ப்ரஹ்லாதவரதர் அழகியசிங்கரைத் திருவடித்தொழுது, (శ్రీరామానుజమునిధార్యచోదితస్సన్ ప్రహ్లాదోద్ధృన్నృహరిర్యథాహిరణ్యమ్। విద్యాధతుంతిపతిమాయధేన శత్రోర్ద్రాణం నిశనిశతేనవేజ్కటేశః) (ஸ்ரீராமாநுஜவிபுதார்யசோதிதஸ்ஸந் ப்ராஹ்லாதோத்ஸ்ருஹந்ந்ருஹரிர்யதாஹிரண்யம்| வித்யாதக்ஷிதிபதிமாயுதேநகண்டே நித்ராணம்நிசிநிசிதேநவேங்கடேசஃ) என்றநுஸந்தித்து, முன்பேஸங்கல்பித்தருளின ஸங்கல்பத்தாலே ஹிரண்யன், பரதத்வமான தேவரீரை இல்லைசெய்தமாத்ரமன்றிக்கே, (సాధూనాంయస్పదాభవేత్) (ஸாதூநாம்யஸ்ஸதாபவேத்) என்று-ஸாதுக்களுக்கெல்லாம்த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்லாதாழ்வானுக்கு அபராதம்பண்ணினஹிரண்யனை நிரஸித்தாப்போலே, கூரத்தாழ்வானுக்குப் பொல்லாங்குபண்ணினவிவனையும் க்ரிமிகண்டனுக்கி நிரஸித்தருளிற்றே! என்று விண்ணப்பஞ்செய்து,

——❧❧✻❧❧——

திருநாராயணபுரத்திலுள்ளார்க்கு, தமக்குப்ரதிநிதியாகஒரு உடையவர்விக்ரஹம் ஏறியருளப்பண்ணிக்கொடுத்து, திருநாராயணன் செல்வப்பிள்ளை இவர்களுடைய கைங்கர்யங்களை ஆராய்ந்துபோரும்படி கட்டளையிட்டருளியது.

பின்புதமக்கிருப்பிடமான, (திருவரங்கம்நம்மூர்)என்னும்படியான திருவரங்கப்பெருநகருக்கெழுந்தருளவேணுமென்று] திருவுள்ளமாய், திருவநந்தபுரதாஸரையும், ஸ்ரீமாலாகாரதாஸரையும், திருக்குறுங்குடி

* [-] இந்த அடையாளத்துக்குள்ளிருக்கிற க்ரந்தம் ஒருஸ்ரீகோசத்திலேதா னிருக்கிறது.

தாஸரையும், யதிராஜதாஸரையும்பார்த்து, "செல்வப்பிள்ளை இனத் தங்களைப்பிள்ளையாயிருக்கும், மங்களாசாஸநத்துடனே ஸதா தர்சநம் பண்ணிக்கொண்டுபோருங்கோள்" என்று அருளிச்செய்தருள ; அவர்களும் திருவடிகளிலேஸேவித்து "தேவரீர்திருவடிகளைப்பிரிந்திருக்கப்போகாது" என்றுவிண்ணப்பஞ்செய்ய ; அப்போதுஉடையவரும் (மாறனடிபணிந்துய்ந்தவன்) என்னுமதுதோற்றத் திருத்தோளில்திருமகிழ்மாலையும், திருவாராதநத்துக்கர்ஹமாகத்திருக்கைகளிலேசாத்தின உபயபவித்ரமும், ஸர்வாத்மாக்களுக்குமாக நாராயணசரணஸரணவரணம்பண்ணி அஞ்ஜலிஹஸ்தத்தோடே பத்மாஸநஸ்தராயெழுந்தருளியிருக்கிற தம்முடையதிவ்யமங்களவிக்ரஹத்துக்குப்படிவிளக்கிருப்போலேயிருக்கிற அர்ச்சாவிக்ரஹத்தை யேறியருளப்பண்ணித் தம்முடையதிவ்யசக்தியை அதிலேப்ரதிஷ்டிப்பித்தருளி, ஒருநிலைக்கண்ணாடியை அழைப்பித்து, தம்முடையவிக்ரஹத்தையும் அர்ச்சாவிக்ரஹத்தையும்பார்க்குமளவில் இரண்டுமேகாகாரமாகவிருக்கையாலே, "இதோ உங்களுக்காகநாம் இங்கேயிருக்கிறோம்" என்று அருளிச்செய்து அவர்களுக்கு அடைக்கலமாகக்காட்டியருள ; அவர்களும் மஹாநிதியாகக்கைக்கொண்டு உடையவர்திருவடிகளைத் தங்கள் சிரஸ்ஸிலும் உரஸ்ஸிலும் மநஸ்ஸிலும் தரித்துக்கொண்டிருக்க ; அவர்களைப்பார்த்து, (நல்வகையால்நமோநாராயணாவென்றுநாமம்பலபரவிப் பல்வகையாலும் பவித்திரனேயுன்னைப்பல்லாண்டுகூறுதும்) என்றும், (நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று பல்லாண்டும்பரமாத்மனைச்சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே) என்று செல்வப்பிள்ளைவிஷயமாகவும் திருநாராயணன்விஷயமாகவும் மங்களாசாஸநம்பண்ணிக்கொண்டுபோருங்கோள்என்றருளிச்செய்து,

—※—

உடையவர், திருநாராயணன்நியமநம்பெற்றுக் கோயிலுக்கு எழுந்தருளியது.

அநந்தரம், திருநாராயணப்பெருமாள்ஸந்நிதியிலேயெழுந்தருளி, (అజ్ఞానజన్మకర్మాత్మగుణైర్విముక్త మాజ్ఞాతిలఙ్ఘనపరాయదుశైలనాథ । మిథ్యాప్రపఞ్చమపి మామవలోకయ త్వం లక్ష్మీంచ మామపి గుణానవలోక్య పూర్వాన్)(அஜ்ஞாநஜந்மகர்ஹமாத்மகுணைர்விமுக்த மாஜ்ஞாதிலங்கநபரம்யதுசைலநாத ! மித்யாப்ரபஞ்சமபிமாமவலோகயத்வம் லக்ஷ்மீஞ்சமாமபிகுணாநவலோக்யபூர்வாந்) என்று அநுஸந்தித்து, தேவரீர், முன்புபிராட்டியைப்பிரித்தும், பெரியஉடையாரைமுடித்தும், ரிஷிகள்குடியிருப்பைக்குலைத்தும் போந்ததசக்கண்டனை நிரஸித்தருளிற்று ; இப்போது அடியேனுக்கு அத்யந்தாபிமதரான ஆழ்வானைப்பிரித்துக்கண்கலங்கும்படிபண்ணியும், அடியேனுக்குஉத்தேச்யரான பெரியநம்பியை தேசாந்தரத்திலே திருநாடு

சேரும்படிபண்ணியும், தேவரீருக்கிருப்பிடமானதிருவிருப்புகளைக் குலைத்தும், (నారాయణాత్పరం నాస్తి)(நாராயணாத்பரம்நாஸ்தி) என்றுபரதேவதைதேவரீராயிருக்கஅவதேவதையை ஆதரித்துக்கொண்டுபோந்த இவனையும்க்ர்மிகண்டனைநிரஸித்தருளிற்று ; ஆகையாலே அடியேன், * நலந்திகழ்நாரணனைக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற தேவரீரைத்திருவடித்தொழும்படி விடைகொள்ளுகிறேனென்று தண்டன் ஸமர்ப்பித்துநிற்க ; திருநாராயணரும் "அப்படியேசெய்யும்" என்று (சேலுகளும்திருவரங்கம்நம்மூர்) என்றும், (வண்புகழ்நாரணன் திண்கழல்) என்கிறபடியே நம்மைத் திருவடித்தொழும்படி பண்ணி விடைகொண்டுபோருமென்றுவிடைகொடுத்தருள ;

—※—

திருநாராயணன்விஷயமாக உடையவர்ஸமர்ப்பித்த * ஒருநாயகத்தையநுஸந்தித்துக்கொண்டு அங்குள்ளார் வாழ்ந்துபோந்தார்களென்பது.

இவரும், (ఉత్సన్నోయం)(உத்ஸந்நோயம்)என்கிறவாக்யம்நடந்துசெல்லுகிறநாளிலேபுறப்பட்டு, ஸஹ்யாதியில்நின்றும் திருக்காவேரி ஸ்ரீரங்காபிமுகமாக ப்ரவஹிக்குமாப்போலே யாதவாத்ரியில் நின்றும் சிஷ்யப்ரவாஹத்துடன் ஸ்ரீரங்காபிமுகராய், தம்மைவணங்காதவழியிலுண்டான அவைதிகமர்யாதாநிரதரையும்அழியாநின்றுகொண்டு, பரமவைதிகரானதம்மைவணங்கிவழிப்பட்டாரையும்வாழ்வித்துக்கொண்டுவழிப்பட்டுஎழுந்தருளாநிற்க, திருநாராயணபுரத்திலே*நாரணன்தமராகஸ்தாபிக்கப்பட்டவர்களாய் ராமாநுசமுடையாராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள்மேல்நாட்டிலுண்டான, ஸ்ரீவைஷ்ணவர்களும்எம்பெருமானாராகிற பெரியயேரியைப்பிரியாமல்நாலுமூன்றுபயணம்ஸேவித்துக்கொண்டுவர ; ராமாநுசனும் அவர்களைநிர்ப்பந்தித்துநிறுத்திப்பெருபுறக்கடலான திருநாராயணரை நித்யஜீவநமாகக்காட்டிவிட ; அவர்களும் வருத்தத்துடனே திருநாராயணபுரத்திலேவந்துபுகுந்து, விடாய்த்தவன் வெறுங்குளத்திலேவிழுந்தாப்போலே மிகவும்பரிதபித்துத் தங்களிலே தேறிக்கொண்டு, (అనన్తః ప్రథమం రూపం లక్ష్మణశ్చ తతః పరమ్। బలభద్రస్తృతీయస్తు కలౌ కశ్చిద్భవిష్యతి) (அநந்தப்ரதமம்ரூபம்லக்ஷ்மணஸ்சததபரம், பலபத்ரஸ்த்ருதீயஸ்துகலௌகஸ்சித்பவிஷ்யதி) என்றும், (கலியுங்கெடுங்கண்டுகொண்மின்) என்கிறவிஷயத்தையும் இங்கேகாணப்பெற்றோமே, இவர்தாமே முன்பே க்ருதயுகத்திலே திருநாராயணனைஸ்வேநரூபேண திருவநந்தாழ்வானாய்த் திருவாராதநம்பண்ணியும், த்ரேதாயுகத்திலே பெருமாளும்பிராட்டியும், (నారాయణముపాగమత్)(நாராயணமுபாகமத்) என்று சென்று அடிமைசெய்யுமிடத்து இளையபெருமாளாய்த் தாமும்எடுத்துக்கைநீட்டி அடிமைசெய்தும், அன்றிக்கே, மாஹாத்மியோ

க்தப்ரகாரத்திலே ஸ்வயமேவ இங்கேயடிமைசெய்தும், த்வாபரயுகத்திலேதீர்த்தயாத்ரா வ்யாஜத்தாலே நம்பிமூத்தபிரானாய்வந்தாராதித்தும், கலியுகத்திலேராமாநுஜனாய்த்திருநாராயணனுக்கு அனைத்தழகுங்கண்டருளப்பண்ணி அடிமைசெய்துபோந்தார் என்றும், (కృతాదిషు ద్వాపరయుగే కలివాసినాం ప్రసాదశేషాన్త్యయుగే యదాత్మనా | సమర్చయత్స్వోక్తిహృష్టసమృద్ధ్యధస్సాకేతసాధర్మ్యమవాప్స్యతే మునిః) (க்ருதாதிஷு த்வாபரயுகே கலவாஸிநாம் ப்ரஸாதசேஷாந்த்யயுகே யதாத்மநா | ஸமர்ச்சயத்ஸ்வோக்திஹ்ருஷ்டஸம்ருத்த்யதஸ்ஸாகேதஸாதர்ம்யமவாப்ஸ்யதே முநி:) என்று அநுஸந்தித்துக்கொண்டுடையவராலேதத்தமான * ஒருநாயகத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு அவர்நியமித்தருளின கைங்கர்யத்தையும்செய்துகொண்டு, (செம்பொற்றிருவமைந்தசெல்வப்பிள்ளையாமவனை | ஐம்பத்திருவர்தமடைக்கலமாவைத்தாரோ | திருவரங்கங்கோயில்தனைநோக்கிச்சிறப்புடனே | யதிகளுடனரியர்கள்சூழ்ந்திறைஞ்சும்வேதியனே) என்று அநுஸந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

—⁂—

கோயிலிலுள்ளார், உடையவர் திருக்காவேரியிலேநீராடித் திருமண்காப்புச்சாத்தியருளியது.

இப்பால்உடையவரும், (இருளிரியச்சுடர்மணிகளிமைக்கும்நெற்றியினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த | அரவரசப்பெருஞ்சோதியநந்தனென்னுமணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவித் | திருவரங்கப்பெருநகருட்டெண்ணீர்ப்பொன்னித்திருக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளுங்கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென்கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே) என்றுகொண்டுகோயிலையும் பெருமாளையுஞ்ஸேவிப்பதெப்போதோ என்றுவழிப்பட்டெழுந்தருளாநிற்க, * திருவரங்கப்பெருநகரிலுண்டானவர்களெல்லாருங்கடல்கலங்கினாப்போலேகலக்கி என்றுகொலோகண்குளிரக்காணுநாளே) என்கிறபடியேகாங்க்ஷித்துக்கொண்டுதடகடல்வழியேகுடக்கொங்குகளையும் அவ்விடத்திலுண்டான மலைகளையுமெல்லாம் கடுநடையாலேகடந்துபோந்து, அநந்தரம் சென்னிவளவன்திருநாட்டுவளப்பத்தை உன்பெருங்காதலோடே அநுபவியாநின்றுகொண்டு * விழாவருவீதி வளநாட்டுத்திருவரங்கன் திருப்பதியருகாய் காவேரீதீரமான திருமுடித்துறையிலே குறைவறவிட்டருளி விச்ரமித்து, (மலைத்தலைப்பிறந்திழிந்துவந்துநுந்துசந்தனம் — அலைத்தொழுகுகாவிரி) என்றும், (எண்டிசைக்கணங்களுமிறைஞ்சியாடுதீர்த்தநீர்) என்றுஞ்சொல்லப்படுகிற திருக்காவேரியிலே ஸகலஸந்தாபங்களுமாறும்படித் திருமண்காப்புச்சாத்தியருளி, மீண்டும், * அண்டர்கோனமருஞ்சோலையணிதிருவரங்கத்திலேப்ரவேசிக்கப்பெறுவதே! என்றுப்ரீதராயெழுந்தருளியிருக்க; அவ்வளவில் முதலிகளெல்லாரும், (சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே) (அவரைத்தொழும்

புல்லாண்டிசைத்துக் கவரிசெய்வரேழையரே) என்கிறபடியே அவர்களும் தம்மைமங்களாசாஸநம்பண்ணிக்கொண்டு ஸந்நிதியிலேஸேவித்துக்கொண்டிருக்க; அவ்வளவில் ராமாநுஜப்பெருவெள்ளத்தின் முற்கொழுந்துபோய்க்கோயிலிலேதாக்கி இவர்இங்கேயெழுந்தருளின படியை எங்கும்விளம்ப;

—⁂—

கோயிலார், உடையவர் மீண்டெழுந்தருளின செய்திகேட்டு ஆநந்தபரவசரானார்களென்பது.

அநந்தரம், * நல்லார்கள்வாழும் நளிரரங்கத்திலுண்டானவர்களெல்லாருங்கடல்கலங்கினாப்போலே கலங்கிக்களித்துக்களித்து அத்யந்தாபிவாத்தமானஹர்ஷத்தையுடையராய், (அரங்கன்மெய்யடியார்கள்தமீட்டம்) என்றும, (தூராதமநக்காதல்தொண்டர்தங்கள்குழாம்) என்றும், (அணியரங்கன்திருமுற்றத்தடியார்தங்களின்பமிகு பெருங்குழவு) என்றும்சொல்லப்படுகிற * தொண்டக்குழாத்திலுண்டானவர்களெல்லாருந்திரண்டு, இவர்மீண்டெழுந்தருளினசெய்திகேட்டு, (తతో హర్షసముత్థోసౌ నిస్వనో దివమస్పృశత్ | స్త్రీబాలవృద్ధానాం రామోయమితి కీర్త్యతే) (ததோஹர்ஷஸமுத்தோ நிஸ்வநோ திவமஸ்ப்ருஶத் | ஸ்த்ரீபால இவவ்ருத்தாநாம் ராமோயமிதி கீர்த்யதே) என்னும்படி அனைவரும் ஆர்த்துக்கொண்டு வாராநிற்கிறவிவரை, (பொலிகபொலிக) (ஊழிபெயர்த்திடுங்கொன்றே) என்றநுஸந்தித்துக்கொண்டு, (గాయన్తి కేచిత్ప్రణమన్తి కేచిన్నృత్యన్తి కేచిత్ప్రహసన్తి కేచిత్) (காயந்திகேசித்ப்ரணமந்திகேசித்ந்ருத்யந்திகேசித்ப்ரஹஸந்திகேசித்) இத்யாதிப்படியே ஸஸம்ப்ரமராய்ச்சென்றுகிட்டி ஸாஷ்டாங்கதீர்க்கப்ராணாமங்களை வளையவளையப்பண்ணி, (యావన్న చరణౌ భ్రాతుః పార్థివవ్యంజనాన్వితౌ | శిరసా ధారయిష్యామి న మే శాన్తిర్భవిష్యతి) (யாவந்நசரணௌப்ராதுஃ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ | ஶிரஸாதாரயிஷ்யாமி நமேசாந்திர்ப்பவிஷ்யதி) என்று எதிராஜருடையசரணங்களை எல்லாருஞ்சிரஸாதரித்து ஸேவித்துசாந்தியையடைந்து, பின்பு, (పరస్పరనీచభావైః) (பரஸ்பரநீசபாவை:) என்கிறபடியே உடையவரையுடையரான உபயவர்க்கமும் அந்யோந்யம்வந்தநபரராய் அதஏவ ஆநந்தத்தையுடையராய், அநந்தரம் இங்குநின்றுஞ்சென்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானார்திருமுகமண்டலத்தைத் ஸேவியாநின்றுகொண்டு, (தர்க்கச்சமணரும்சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் | சொற்கற்றசோம்பருஞ்சூனியவாதரும் நான்மறையும்நிற்கக்குறும்புசெய்நீசரும்மாண்டனர்நீணிலத்தே | பொற்கற்பகமெம்மிராமாநுசமுனிபோந்தபின்னே) என்கிறபடியே — இதரமதநிரஸநபூர்வகமாகத்தேவரீர் இங்கே விஜயத்தோடே யெழுந்தருளப்பெறுவதே! என்று, (வையங்குருடன்றேமாமறையும்பொய்யன்றோ | ஐயனுரைத்ததமிழாரறிவார் | வையத்துக் | கூன்றுகோலென்றை

யெதிராசராதரித்த। மூன்றுகோல்காண்பதற்குமுன்) என்று—தேவரீர் இங்கில்லாவிடில் இவ்விடம்என்னமாய்ப் போகக்கடவதோ!என்று ஈடுபாடு தோற்ற விண்ணப்பஞ்செய்ய ;

—⁂—

கோயிலிலுள்ளார் அரங்கன்திருச்செல்வம் குறைவறநடந்துவருகிற தென்று உடையவரிடத்தில்விண்ணப்பம்செய்தது:

உடையவரும், * " ஆற்றங்கரைக்கிடக்கிற * கோயில்பிள்ளையைப் போற்றிக்கொண்டுபோந்திகோளோ,மாற்றலர்மடியப்பெற்றதோ என்று வினவியருள ; அவர்களும் (எல்லாஉயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்பொருள்சுரந்தான்) என்றும்,(அரங்கன்செய்யதாளிணையோடார்த்தான்) என்றும்,(சிந்தையினோடுகரணங்கள்)என்றுதொடங்கி,தந்தவரங்கனும்தன்சரண்தந்திலன் தானதுதந்து) என்றுஞ்சொல்லுகிறபடியே தேவரீர்பண்ணியருளினகர்ஷி ஸபலமாம்படி அத்தலைக்குஅடிமைசெய்துகொண்டுபோராநின்றோம், இப்போது; (கையில்கனியன்னகண்ணனைக்காட்டித்தரிலும் உன்றன்மெய்யில்பிறங்கிய சீரன்றிவேண்டிலன்யான்) என்னும்படியான தேவரீர் செய்யவடிவைஸேவிக்கப்பெற்றோமே என்ன ; அவர்களையும் விசேஷகடாக்ஷம்செய்தருளி, அநந்தரம், ஸ்தாநஸமயத்திலுண்டானஸர்வரும் ஸம்ப்ரமத்துடன் ஸங்கமாக ஸேவித்துக்கொண்டுவர ;

—⁂—

உடையவர் சோலைவளப்பங்களை யநுபவித்தருளியது.

அவர்கள்நடுவேஸிம்ஹமானது நடந்துசெல்லுமாப்போலே ஸ்ரீரங்காபிமுகராய்ப்ரதக்ஷிணமாகவெழுந்தருளுகிறவர், * பொன்னுமாமணியும்முத்தமுஞ்சுமந்துபொருதிரைமாநதிபுடைசூழ்ந்து அன்னமாடலவுமலைபுனல்சூழ்ந்தபடியையும், * (சந்தினோடுமணியுங்கொழிக்கும் புனல்காவிரி) என்றும்,(வண்டுபாடும்மதுவார்புனல்வந்திழிகாவிரி)என்றும், (துளைக்கையானைமருப்பும் அகிலுங்கொணர்ந்துந்தி, முன்றிளைக்கும் செல்வப்புனல்காவிரி) என்றும், (பரந்தபொன்னிரந்து நுந்திவந்தலைக்கும்வார்புனல்)என்றும்(புண்ணந்துழாமேபொருநீர்)என்றும்இப்படிப்ரவஹிக்கிறதிருக்காவேரியின்ஜலஸம்ருத்தியையும்,அதில்,*நண்டையுண்டுநாரைபேரவாளைபாயநீலமே அண்டைகொண்டுகெண்டைமேயும்படியையும், அதினருகில் * அண்டநாறும்பொழில்களையும், *அணிபொழில்களையும், *பொங்குநீர்பரந்துபாயும்பூம்பொழில்களையும்,அதில் *போதில்வைத்ததேன் சொரியும்படியையும், அதினருகில்*அங்கயல்பாய்வயலையும், அதில் * சேவலொடுபெடையன்னம் செங்கமலமலரேறி ஊசலாடும்படியையும்,*திருமுகமாய்ச் செங்கமலம்திருநிறமாய்க் கருங்குவளை பொருமுகமாய்நின்றலரும்படியையும், * திருவடிதன்

19-10-86.

223

திருவுருவும் திருமங்கைமலர்க்கண்ணுங்காட்டிநின்று உருவுடையமலர் நீலம்காற்றாட்டவோசலிக்கும்படியையும்,*உரம்பெற்றமலர்க்கமலமுலகளந்தசேவடிபோலுயர்ந்து காட்டவரம்புற்றகதிர்ச்செந்நெல்தாள்சாய்த்துத்தலைவணங்கும்படியையும்,*புதுநாண்மலர்க்கமலம்எம்பெருமான் பொன்வயிற்றில்பூவேபோல்வான் * பொதுநாயகம் பாவித்திறுமாந்து பொற்சாய்க்கும்படியையும், அதில் * பூமருவுபுள்ளினங்கள் புள்ளரையன்புகழ்குழறும்படியையும், * யாழினிசைவண்டினங்கள் ஆளம்வைக்கும்படியையும், *எல்லியம்போதிருஞ்சிறைவண்டெம்பெருமான்குணம்பாடும்படியையும், மற்றும் (வண்டினமுரலுஞ்சோலை) இத்யாதியான ஆராமங்களையும் கரைவழியேகண்டுகேட்டு ஹ்ருஷ்டராய் அநுபவியாநின்றுகொண்டு * திட்கொடிமதிளைவந்துகிட்டி வடக்குத்திருவாசலாலேஉள்ளேபுக்கு,*கொடிமதிள்கள் மாளிகைகோபுரங்கள் துன்னுமணிமண்டபங்கள் சாலைகள்தொடக்கமானவற்றையும் கண்டுதண்டனிட்டு

உடையவர் ஸ்ரீரங்கநாயகியாரைமங்களாசாஸநம்செய்தருளியது.

ப்ரதமம்*ஸ்ரீரங்கராஜமஹிஷியான ஸ்ரீரங்கநாயகியார்ஸந்நிதியிலே சென்று ஸேவித்து, ([illegible]) (பகவந்நாராயணாபிமதாநுரூப - ஶரணமஹம்ப்ரபத்யே) என்று அநுஸந்தித்துக்கொண்டு திருவடிகளினருகேநிற்க;*அகிலஜகந்மாதாவான ஆகாரந்தோன்ற ஸகலதுக்கசமநபூர்வகமாக ஸகலஸத்காரங்களையுஞ்செய்தருளி நிகிலகைங்கர்யங்களையும்நியமித்தருளிப்போரவிட ; இவரும்பெரியபிராட்டியாராலேபெருக்கஸத்கரிக்கப்படாநின்றுகொண்டு அத்தாலே கைங்கர்ய ஸ்ரீயையுடையராய் அங்குநின்றும் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் புறப்பட்டருளுவதாகவொருப்பட்டருள;

—⁂—

உடையவர் அழகியமணவாளனை மங்களாசாஸநம்செய்தருள, அவர்தீர்த்தம் திருமாலைமுதலானவரிசைகள் ப்ரஸாதித்தருளி தம்மருகேவர்த்திக்கும்படி நியமித்தருளியது.

ஸ்ரீவைஷ்ணவர்களும், (அங்கயல்பாய்வயல் - இராமாநுசனடிப்பூமன்னவே) என்று தங்கள்ப்ராப்யத்தையும், ப்ராப்யவர்த்தகையான அவள்ஸந்நிதியிலே ப்ரார்த்தியாநிற்க ; பின்பு * பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு அங்குநின்றும்புறப்பட்டு, எங்கும் அவள்புருஷகாரமாக ஸேவித்து பின்பு ஸ்ரீபலிபீடத்தருகேசென்று ஸேவித்து, அங்குண்டான, (செம்பொனாரும்மதிள்) (ஆயபொன்மாமதிள்) என்கிறதிருமதிளையும்ஸேவித்து உள்ளேப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, * செம்பொனையவருவரையனையகோயிலாய்ப்ரணவாகாரமானதிவ்யவிமாநத்தையும் ஸேவித்துசேஷாசநாதிகளையும்ஸேவித்துபாதச்சாயையிலே,([illegible]

ஸுஶுடு), பாதுகே ஹேமபூஷிதே) என்னும்படியான பொன்னின் திருவடி நிலைகளையும் ஸேவித்து அழகியமணவாளன் திருமண்டபத்திலே யெழுந்தருளி அழகியமணவாளப்பெருமாளான பெருமாளைப் பெரியப்ரீதியுடனே எதிரேஸேவித்து பின்பு, பெரியதிருவடி திருவாசல்காக்கும்முதலிகளநுமதியுடனே பெரியபெருமாள் திருவடிகளிலே, (அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள் முகில்வண்ணனடியே) என்னும்படி கிட்டிநின்று பிரிந்தக்லேசமெல்லாமாறும்படி நெடும்போது ஸேவித்து, அநந்தரம் * அமலனாதிப்பிரானில்படியே அடியேபிடித்து முடியளவாகவநுபவித்து, (கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே) என்று அஸ்தமிதாந்யபாவராய், பின்பு திருப்பல்லாண்டுதொடங்கி யநுஸந்தித்து மங்களாசாஸநம்பண்ணி ஸ்தோத்ரகத்யங்களையுமநுஸந்தித்து அதினர்த்தாநுஸந்தாநத்தாலே ப்ரேமபரவசராயிராநிற்க ;

பெருமாளும் இவரைப்பார்த்து, "பெருக்கவருத்தப்பட்டுக்லேசித்தீர்" என்று, (వచసా సాన్త్వయిత్వైనం లోచనాభ్యాం పిబన్నివ) வசஸாஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ) என்னும்படி * சிரஸ்யாக்ஷிபதங்கதரானவிவரைக் கண்டுகொண்டிருந்து ஸவிநயராய் வினவியருள ; இவரும், "தேவரீர் ஸ்ரீரங்காதிஸ்த்தலங்களிலும் நமக்கு அத்யந்தாபிமதமாயிருக்கும்" என்றருளிச்செய்த நாராயணகிரியிலே ஸ்ரீரங்கநாராயணரான தேவரீர் ஸேவையை அந்தத்திருநாராயணனைக்கொண்டு தேவரீர் கிற்கிற நிலையிலே நித்யஸேவைபண்ணிக்கொண்டு * வருத்தமுந்தீர்ந்து மகிழ்ந்து *(செவ்வடிசெவ்விதிருக்காப்பு) என்று திருவடிகளில் திருக்காப்பில் விருப்பத்துடனே விடைகொண்டிருந்தேன், திருவடிகளுக்கு ஒருதீங்கின்றிக்கேயிருக்கப்பெற்றதே! என்று விண்ணப்பஞ்செய்து, (என்றுமென்பிள்ளைக்குத்தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர்களே) என்றும், (పునర్జాతం తదా మేనే సుతానాత్మానమేవ చ) (புநர்ஜாதம்ததாமேநே ஸுதாநாத்மாநமேசவ) என்றுஞ்சொல்லுகிறபடியே சத்ருக்கள் சாபத்தாலே சமித்தவநந்தரம் பெரியபெருமாள் பெருமாளுள்ளிட்டாரையும், தம்மையும் மறுபிறவியாகவுமெண்ணி, (அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு) என்று ஆசாஸித்து அத்யந்தம்ஹர்ஷ்டராயிருக்க ;

அநந்தரம் தீர்த்தம், திருமாலை, சடகோபன், பரியட்டம் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்தருளி, "நம்முடைய செங்கோலை உம்முடைய கையில் முக்கோலாலே நடத்திக்கொண்டு நம்முடைய ஸ்ரீகார்யத்தையும் அநிவார்யமாக அதிசயத்துடன் நடத்திக்கொண்டு யாவச்சரீரபாதம் நம்முடைய * ஸ்ரீமத்ரங்கத்திலே உத்துங்காய்வர்த்தியும்," என்று விடைகொடுத்தருள ; புறப்பட்டருளினவநந்தரம், (శ్రీరఙ్గరాజచరణామ్బుజరాజహంసః శ్రీమత్పరాఙ్కుశపదామ్బుజభృఙ్గరాజః । శ్రీభట్టనాథపరకాలముఖాబ్జమిత్రః శ్రీవత్సచిహ్నశరణం యతిరాజ ఏషః ॥ చణ్డాదిహేతిమదఖణ్డనదక్షదేశికేన్ద్రైః శ్రీ[illegible]

[illegible]మతకుఞ్జరకేసరీన్ద్రైః । శ్రీమన్యతీన్ద్ర జయలక్ష్మణదేశికార్య రామానుజాచ్యుతపదార్చనభూతనిత్యమ్ ॥ పాషణ్డషణ్డమతఖణ్డనచణ్డవాయం వేదాన్తలబ్ధపదపాదసరోజభృఙ్గమ్ । [illegible]రంకరపరిస్ఫురితత్రిదణ్డం రామానుజం భజమనస్సతతం మునీన్ద్రమ్) என்று இப்படிகளிலே ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு அனைத்துக்கொத்திலுள்ளவர்களும் ஸேவித்துக்கொண்டுபோய் மங்களமஹோத்ஸவமாகமடத்திலே திவ்யஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளுவித்து, (అనిశం భజతామనన్యభాజం చరణామ్బురుహం మదరేణ పుంసామ్ । వితరన్నివిధాం విభూతిమిష్టాం జయ రామానుజరఙ్గధామ్ని నిత్యమ్ ॥ జయ నోవిషయా[illegible]దియక్తి[illegible]కులిశభూతమదృష్టిభిస్సమేతా । శకలీకురుతే[illegible] జయ రామానుజరఙ్గధామ్ని నిత్యమ్ ॥ శ్రుతిషు స్మృతిషు ప్రమాణతత్త్వం కృపయాలోచ్య విశుద్ధయా హి బుద్ధ్యా । అకృథాస్తది హైవ భాష్యరత్నం జయ రామానుజరఙ్గధామ్ని నిత్యమ్) என்று மங்களாசாஸநம்பண்ணி ஸேவித்து அவரநுமதியுடனே அங்கு நின்றும் போந்து தந்தாம் திருமாளிகைகளிலே ஸுஸ்த்திராராயிருந்தார்கள்.

உடையவர், திருவடிகளில் ஸேவித்துநிற்கிற சோழநாடு முதலியவற்றிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை குசலப்ரச்நம்செய்தருளியது.

ஆநந்தரம் எம்பெருமானாரும் பெரியநம்பி திருமாளிகையேறவெழுந்தருளி ஸேவிக்க ; அத்தசையில் ஸ்ரீபுண்டரீகர், அத்துழாய் முதலானவர்கள் திருவடிகளிலே விழுந்துபடிந்து தண்டனிட்டுக்கொண்டுகிடக்க; அவர்களையும் எடுத்துத்தேற்றிஸத்கரித்துப் புறப்பட்டு மடமேயெழுந்தருளி, பின்பு தாமும், * ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸராய் ஸேவித்துக்கொண்டு, (ஸம்ஸேவித) இத்யாதிப்படியே ஸகலரும் தம்மை பரிவர்தராய் ஸேவிக்க, ரங்கம் மங்களஸம்பத்தாய்க்கொண்டு வாழ்ந்தருளுகிற செய்தியை சோழமண்டலத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள், பாண்டியமண்டலத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள், மலைமண்டலத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள், தொண்டைமண்டலத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள், மற்றும் நாநாமண்டலத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும், (బహూని నామ వర్షాణి గతస్య సుమహద్వనమ్ । శృణోమ్యహం ప్రీతికరం మమ నాథస్య కీర్తనమ్) (பஹூநிநாமவர்ஷாணிகதஸ்யஸுமஹத்வநம்) என்னும்படி கேட்டு ச்ருணோம்யஹம் ப்ரீதிகரம்மமநாதஸ்யகீர்த்தநம்) கல்யாணமாசத்திரண்டுவந்து திருவடிகளிலே ஸேவித்து [illegible]கமெல்லாமாறி, * உலகங்கட்கெல்லாமுயிரான தேவரீரை ஸேவிக்கப்பெற்றோமே, ஸநாதரானோமே என்று ஸந்துஷ்டராயிருக்க ; உடையவரும் அவர்களை கடாக்ஷித்தருளி, "ஸுகமேயிருந்தீர்களோ," என்று குசலப்ரச்நம்பண்ணியருளி நம்மிடத்தில் பேசுருந்தபடி கண்டோமேயென்று ஸம்மாநித்தருள ஸத்க்ருதராய் ஸேவித்துக்கொண்டிருந்தார்கள். (ஆய்ந்த சகாப்தமாயிரத்தைம்பத்தொன்பதினீங்கினின்றும் போந்துபதினோராண்டிங்ஙன் புகழ்தான் வளர்ந்த பெரும்பூதூர் வேந்தனெண்ணிலவன்புருடனுமாங்கநகரெய்திப் பாந்தளணைத்துயில் பரமன் பாதம்பணிந்திங்குறைந்திடுநாள்) என்கிறபடியே எழுந்தருளியிருக்க ;

இதுக்குமேலாகக் கூரத்தாழ்வான்வ்ர்த்தாந்தஞ்சொல்லுகிறது;— (அன்றங்கிருந்தவருள் கூரத்தாழ்வானரங்கநகருடைய | அன்றெதிராசனடியார்தம்மைவாசல் விடாதிருப்பச் | சென்றுதிருமாலிருஞ்சோலைச்செல்வர்தம்மைத் தோத்திரஞ்செய்து|ஒன்றியழகர்தம்பதியில்பதிரோண்டுறைந்ததற்பின்) என்றும், *(ఏకాదశసమాస్తత్ర కూరార్యస్సజలోవసత్) (ஏகாதஶஸமாஸ்தத்ரகூத்தார்ச்சஸ்ஸபலோவஸத்)என்று, (శరత్ప్రకర్ష శ్రుత్వాస్యుస్వపలా ఛాదనః) (ஶரதல்பகதோபீஷ்மஶ்ஶரம்யங்கிவஹ்நதாஶநஃ) என்றுஞ்சொல்லுகிறபடியே அழகர்கோயிலிலே ஆழ்வானெழுந்தருளியிருக்க; இப்படிஅத்யந்ததசாபந்நரான ஆழ்வானளவிலேதத்விச்லேஷாஸஹரான உடையவர்திருவுள்ளஞ்சென்று அவர்இங்கேயெழுந்தருளும்படிக்கு அழகர்திருமலைக்குத் திருமுகம்போகவிட்டருளி, ததாகமநகாங்க்ஷியாயெழுந்தருளியிருந்தார்.

ஆழ்வான்திருநயநங்களுக்குஉபத்ரவம்ஒருஸம்வத்ஸரம்ஸ்ரீபராந்தகனிலே ஸ்ரீவைஷ்ணவர்களாலேபரிஹ்ருதமாய்அவர்கள்எழுந்தருளுவித்துக்கொண்டுவந்து கோயிலிலேவிட்டவநந்தரம்பெரியஸ்ரீபலிபீடத்தருகேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, (உன்திருவருளாலன்றிக்காப்பரிதால்முறையோவரவணைமேல்பள்ளிகொண்டமுகில்வண்ணனே என்றும், (புண்ணந்துழாமேபொருநீர்த்திருவரங்காவருளாய்) என்றும், ✻ புண்ணராக்கையுடன்பொருந்தாதவாகாரத்தோடேதம்முடையஆர்த்தியை ஆவிஷ்கரித்து, "பெரியநம்பியையங்கீகரித்தாப்போலே அடியேனையும்அங்கீகரித்தருளிற்றில்லையே"என்றுவெறுத்துவிண்ணப்பஞ்செய்து பின்புஉள்ளேபுகுந்து ஸேவிப்பதாகவெழுந்தருள்; திருவாசல்காக்கும்முதலிகளிலேசிலர், "எம்பெருமானாராலேயன்றோ இத்தேசத்துக்குக கலஹம்விளைகிறது" என்று அவர்ஸம்பந்தமுடையாரொருவரும் உள்ளேபுகுந்துஸேவிக்கவொண்ணாது" என்று தகைய; சிலர், "அவரெல்லாரும்போலல்ல இவர், ஆத்மகுணமுடையவிவரைப்புகுரவிடுங்கோள்" என்ன; "இதென்" என்று அங்குப்பிறந்தவ்ர்த்தாந்தங்களைக் கேட்டருள; அங்குப்பிறந்தபடியை அங்கிலுள்ளார்விண்ணப்பஞ்செய்யக்கேட்டுத் திடுக்கிட்டு ஜலசந்த்ரனைப்போலே நடுங்கி நாலடிபின்வாங்கி, "ஐயோ! எல்லார்க்குமுண்டானஆத்மகுணம் ஆசார்யஸம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது, அடியேனுக்குண்டானஆத்மகுணம்ஆசார்யஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ளுகைக்கு ஹேதுவாய்விட்டதோ" என்று வெறுத்துக்கொண்டுபுறப்பட்டு, "என்பேற்றுக்குஎம்பெருமானார்திருவடிகள்ஸம்பந்தமேயமையும், தத்ஸம்பந்தத்தை யொழியப்பெருமாளைத்திருவடித்தொழவேண்டுவதில்லை" என்று,

—✻—

திருமாலிருஞ்சோலையின்வளப்பம்.

(புனைவளர் — கயல்கண்ணியென்காரிகையே) என்கிறபடியே ✻என்னரங்கத்தின்னமுதருடைய, (குழலழகர்வாயழகர்கண்ணழகர்கொப்பூழிலெழுகமலப்பூவழகர்) என்கிறபடியே அழகியமணவாளப்பெருமாள்ஸேவையெல்லாம், (సంజ్ఞాసుందరమఙ్ఘ్రిసుందరమహో బాహాద్వయీసుందరం భూషాసుందరమింద్రియాలయలసద్వక్షస్స్థలీసుందరం। కాంతాస్రక్భుజసుందరం స్మితముఖం శ్రీశార్ఙ్గదృక్సుందరం కిం ప్రత్యంగమిహాస్యహేవనగిరౌ సర్వాత్మనా సుందరమ్) (ஸஂஜ்ஞாஸுந்தரமங்க்ரிஸுந்தரமஹோபாஸ்வத்கடீஸுந்தரஂபூஷாஸுந்தரமிந்திராலயலஸத்வக்ஷஸ்த்தலீஸுந்தரம் | காந்தாஸ்ரக்புஜஸுந்தரஂ ஸ்மிதமுகஂ ஸ்ரீசாவித்ர்க்ஸுந்தரஂகிஂப்ரத்யங்கமுபாஸ்மஹேவநகிரௌஸர்வாத்மநாஸுந்தரம்) என்று அழகனலங்காரனை அழகரிடத்திலே அநுபவிக்கும்படி திருமலையேறவெழுந்தருளி ✻ அருளுடையவன்றாளையடைந்து, ✻ முடிச்சோதியில்படியே முடியேதொடங்கியநுபவித்து, ✻மூந்நீர்ஞாலத்தில்படியே ப்ரக்ருதிஸம்பந்தநிவ்ர்த்தியையுமபேக்ஷியாநின்றுகொண்டு, (திருவேங்கடமாமலையொன்றுமேதொழநம்வினையோயுமே) (சமன்கொள்வீடுதரும்தடங்குன்றமே) என்கிறபடியே அந்தஅநிஷ்டநிவ்ர்த்தியையும் இஷ்டப்ராப்தியையும் திருமலையாழ்வாரேசெய்தருளுவர், ✻ அந்தண்திருமாலிருஞ்சோலையாகையாலே திருமலையிலேதிருவுள்ளஞ்சென்று, திருமலையில் சிலம்பாறுபாயும்படியையும், சிலம்பாற்றுக்கு உத்பத்திஸ்த்தாநமான சிலம்பாயிருக்கிற ✻ மதிதவழ்குடுமியையும் அதினருகில் ✻ மயல்மிகுபொழிலிருக்கிறபடியையும், அப்படியேமயக்கப்பண்ணுகிற ✻ அதிர்குரல்சங்கத்தழகரிருக்கிறபடியையும் ஸேவித்து, திருமலையின் ஊர்த்த்வசிகரத்திலே ✻ ஊர்ந்தியங்குகிறவெண்மதி ✻ மலமறுமதியாய், அந்தநைர்மல்யத்தாலே ஊர்த்த்வலோகத்தில் தைவமகளிர் ✻தங்கள்திங்கள்முகத்துக்கு ஊர்த்த்வபுண்ட்ரதாரணம் பண்ணுகைக்கு களங்கமற்றகண்ணாடிப்புறம்போலேயிருக்கப் பாராநிற்கும்படியையும், அதின்சிகரத்திலசந்த்ரகலையைக்கண்ட சாகாம்ர்கமானது, (சிலையினிலங்கைசெற்றதேவனேதேவனாவான்) என்றும், (தேவர்கள் நாயகனை) என்றும்தேறி, ✻ எழில்தோளெம்மிராமன் மலையிலுள்ளதாகையாலே பிறைதங்குசடையானைசந்த்ரசேகரஸம்பந்தத்தாலே அத்தை நிந்தித்து ஸ்பர்சியாதிருக்கும்படியையும், (கருவாரணந்தன்பிடிதுறந்தோடக்கடல்வண்ணன்திருவாணைகூறத்திரியும்) என்று - திர்யக்குக்களும்பகவதாஜ்ஞைக்குப்பயப்பட்டுநடக்கும்படியையும், திருமலையாழ்வார்✻ஆயிரம்பைந்தலைய அநந்தசயநனாகையாலே ✻ படங்கள்பலவுமுடைப்பாம்பரையனுடையகோத்ரவைபவத்தாலே அந்தகோத்ரத்திலுண்டான குண்டலிகளை அங்குண்டான ✻ மாதுறுமயில்களான சிகண்டிகள் அண்டிதண்டியாதபடியையும், அங்குண்டானபறைவைகள் ✻ ஆடற்பறவையனாயாஜ்ஞையநடத்தும்படியையும், அதில் ✻ ஊரும்வரி

யரவமாணபாம்புகள் * பாம்பரையனுஜ்ஞையைநடத்தும்படியையும், அங்குண்டான ஹரிகுலமானது *அரியரையனை அநுமன்புகழ்பாடி அந்தத்திருவடியான திருவடிகளின் ஆஜ்ஞையைநடத்தும்படியையும், அதில் * கானவெண்கானவை "சாம்பவன்வாழ்க" என்று அவனுஜ்ஞையைநடத்தும்படியையும், கழுகுஎன்னும்படியானவதில்க்ர்த்ரமும் க்ர்த்ரராஜனுடைய ஆஜ்ஞையைநடத்தும்படியையும், அதில் * மழைக்களிறும் * பட்டிப்பிடிகளும் * பிடிசேர்களிறுய்கஜராஜனன் கஜேந்த்ராழ்வானுடைய ஆஜ்ஞையைநடத்தும்படியையும், அதில் * சந்தநப்பொழிலினதாழ்சிலைமிழல்தாழ்வரைமகளிர்கள் நாளும் * வகுளதரஸரஸ்வதியாய்*பண்ணார்பாடலான திருவாய்மொழியை, அவனோபாதி, (தென்னாதென) என்றுபண்ணாலே ஆளத்திவைக்கும்படியையும், அதில் * அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லிச்சிறுகாலைப்பாடும்படியையும், அதில் * வாணகச்சோலை மரதகச்சாயல் மாமணிக்கல்லதிர்ந்நிறைந்துமன்னிநுகரும்படியையும், இப்படிதிருமலையிலுண்டான திர்யக்குக்களும் தங்கள்குலகுருக்களான ததீயவைபவாபிஜ்ஞர்களாய்ப்ரதிபத்திபண்ணும்படியையும் அநுபவியாநின்றுகொண்டு

—⁂—

உடையவர் ஸுந்தரராஜன்வடிழகிலே யீடுபட்டது.

அதில் ஏகதேசஸ்த்தனாய், *மேலிருங்கற்பகமாய்நிற்கிற அழகருடைய அவயவசோபை, சமுதாயசோபை, ஆபரணசோபை, ஆயுதசோபை, விக்ரஹகதங்களானகுணங்கள், ஸ்வரூபகதங்களானகுணங்கள், இவற்றுக்கெல்லாம்ஆச்ரயமானஸ்வரூபவைலக்ஷண்யம், இவற்றினுடையஸத்பாவத்தைஸாதிக்கிற வேதாந்தவேத்யத்வத்தை,(வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்தவிளக்கு) என்றும், * (மெய்ஞ்ஞானிவேதியனை*சிலம்பியலாறுடையமாலிருஞ்சோலை நின்ற*நலந்திகழ்நாரணனைஎன்று நாராயணநுவாகஸித்தனென்னும்படியையும், அவன்றான் *ஏறுதிருவுடையனாயிருக்கையாலேஸ்ரீய꞉பதியாயிருக்கும்படியையும், அந்தப்பெரியபிராட்டியாரைப்பெறுகைக்கு*மந்தரம்நாட்டியன்றுமதுரக்கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளுடையனாய், அதஏவ * திருவினையாடுதிண்டோளனாயிருக்கிறபடியையும் அதின்அட்டத்திலே விட்டத்திலிருப்பாரைப்போலே அவற்றையாச்ரயித்துப்போருகிற ஸ்ரீபூமிநீளைகளும் அச்சேர்த்தியையநுபவித்து அநுபவஜநிதப்ரீதிகாரிதகைங்கர்யநிரதராயிருக்கிற * அமரர்கோன் தொடக்கமான * அயர்வறும்மர்களையும், அவர்களடிமைக்குறுப்பான திருவெண்கொற்றக்குடை, திருவெண்சாமரந்தொடக்கமான * கைங்கர்யோபகரணங்களையும், இவர்களுடன் இருவருக்கும் க்ரீடாஸ்த்தாநமான * ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும் ஆயிரம்பூம்பொழில்களையுமுடைத்தாயிருக்கும்படியையும் அருளிச்செய்த ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளை அடியொத்தியருளிச்

செய்தும், அதுக்குமேலே, (மூவரில்முதல்வன்) என்றும், (தேவர்கள் நாயகன்) என்றும், (பங்கயமாமலர்க்கண்பரனையெம்பரஞ்சுடரை) என்றும், (பரஞ்சோதிநீபரமாய்) இத்யாதியாலும், (முழங்கார்கடலுட்கிடந்து) என்றும், (அண்டரும்பரவவரவணைத்துயின்றசுடர்முடிக்கடவுள்) என்றும்,(எழில்தோளெம்மிராமன்) என்றும்,(உறியமர்வெண்ணெயுண்டவன்) என்றும், (கோவலர்கோவிந்தன்) என்றும், (என்னெஞ்சுமுயிருமுள்கலந்து) என்றும், (தானேயாகிநிறைந்தெல்லாவுலகுமுயிருந்தானேயாய்)என்றும்,(திருமாலிருஞ்சோலைமலையை-ஒருமாநொடியும்பிரியான்) என்றும், (திருமாலிருஞ்சோலைக்கோனே) என்றும், (தேசமெல்லாம்வணங்கும் திருமாலிருஞ்சோலைநின்ற) என்றும் – பரத்வாதிபஞ்சகப்ரகாரத்தையும், விசேஷித்து, (మధ్యే) (மத்யே) என்றுதொடங்கி,(శేషశయనే శేషే సదా సున్దరే)(சேஷசயநேசேஷேஸதாஸுந்தரே),என்கிறபடியே, (வள்ளல்மாலிருஞ்சோலை மணாளனார்பள்ளிகொள்ளுமிடம்) என்றும்,(త్వంహి సున్దర) (த்வம்ஹிஸுந்தர) என்றுதொடங்கி, ((ఇహైవ సదా) (இஹதிஷ்டஸேஸதா)என்கிறபடியே (வெற்பென்றிருஞ்சோலைவேங்கடமென்றிவ்விரண்டும்நிற்பு) என்றும், (హస్తిశైలనిలయోపవఙ్గవాన్) (ஹஸ்திசைலநிலயோபவங்பவாந்)என்றுதொடங்கி,(విశ్వమేవ తత హి సున్దర) (விச்வமேவததஸேஹிஸுந்தர) என்கிறபடியே (ஒருவாரணம்பணிகொண்டவன்) என்றும், (அத்தியூரான் புள்ளையூர்வான்) என்றும், (హరితవారణపార్శ్వమ్) (ஹரிதவாரணப்ர்த்யம்) என்றுதொடங்கி, (దృఢమలంభయ ఏవ హి సున్దర) (த்ர்டமலம்பயஏவஹிஸுந்தர) என்றும் இத்யாதியாலும் இப்படி ஆழ்வார்களை அடியொத்தி புஷ்பத்யாகபோகமண்டபங்களென்று ப்ரஸித்தமாகச்சொல்லப்படுகிற திருப்பதிகளிருப்புமுதலானவற்றையும் அநுபவித்து.

பெருமாளும்இத்தைக்கேட்டுப்போரத்திருவுள்ளமுகந்து ஆழ்வான்! உமக்குவேண்டினத்தைக்கேட்டுக்கொள்ளீரென்று திருவுள்ளம்பற்றியருள; ஆழ்வானும், அடியேனுக்கவையொன்றும் வேண்டுவதில்லையென்றுவிண்ணப்பஞ்செய்தார்: பெருமாளும் நம்மாணையேதருகிறோம் கேட்டுக்கொள்ளீரென்று திருவுள்ளம்பற்றியருள; ஆனல் அடியேனுக்கவையொன்றும்வேண்டுவதில்லை, ஒன்றும் வேண்டுவதில்லையென்று விண்ணப்பஞ்செய்தார்: மீளவும் பெருமாள் நம்மாணை நம்பெண்டுகளாணை நம்மிராமாநுசனுணையேதருகிறோம் கேட்டுக்கொள்ளீரென்று திருவுள்ளம்பற்றியருள; ஆழ்வானும் திருவாணைக்குமேலாணையில்லையேயென்றுகொண்டு (பொங்கைம் புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம்இங்கு இவ்வுயிரேய் பிரகிருதிமானங்காரமனங்களே) என்கிறபடியே அடியேனுக்கு இந்த இருபத்துநாலுதத்வங்களும் கூடியிருக்கிற விரோதமானசரீரத்தை விடுவித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார்: பெருமாளும் இத்தைக்கேட்டுப் போரக்லேசித்து ஆழ்வான்! இத்தையொழியக்கேட்டுக்கொள்ளீரென்றுதிருவுள்ளம்பற்றியருள; ஆழ்வானும் தேவரீர்இரண்டுவார்த்தையருளிச் செய்யலாமோவென்று விண்ணப்பஞ்செய்ய; ஆனல் தந்தோமென்றுதிருவுள்ளம் பற்றியருளினர்.

அநந்தரம், ஆழ்வானும் அடியேனுக்குப்ரஸாதித்தருளின பேறு நாலூரானுக்கும் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்தார்; பெருமாளுமிதென்? ஆழ்வான்! நாம் அவனையன்றே (నక్షమామి) (நக்ஷமாமி) என்று மூங்ந்தோமென்றருளிச்செய்ய; ஆழ்வானும் (నామోక్తిర్నాపిభాషతే) (நாமோக்திர்நாபிபாஷதே) என்கிறபடியே தேவரீர் இரண்டுவார்த்தை யருளிச்செய்யலாமோவென்று விண்ணப்பஞ செய்தார்; ஆனல்உம்முடையபேர்சொன்னவர்களுக்கும் உம்முடையஸம்பந்திஸம்பந்திகளுக்கும் நாமுகந்தமேலைவீடு தந்தோமென்று திருவுள்ளம்பற்றி பரமபதத்திலே திருமாமணிமண்டபத்திலே நடுவில்நாயகப்பத்தியிலே உமக்குநாமுகந்தமேலைவீடு தந்தோமென்று திருவுள்ளம் பற்றி, இவருக்குதீர்த்தப்ரஸாதமும், திருமாலைப்ரஸாதமும், சடகோபனும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினர்: ஆழ்வானும்,மாகவைகுந்தங்காண்கையிலே மநோரதத்தையுடையராய், அர்ச்சிராதிமார்க்கத்துக்கு ப்ரதமாலங்காரம் பண்ணினுப்போலே யிருக்கப்புறப்பட்டருளி விமாநப்ரதக்ஷணமாக எழுந்தருளாநிற்கச்செய்தே, பிள்ளையாழ்வீர் எம்பெருமானர்திருவுள்ளத்திலே பெருமாள் நம்மையிப்படி அங்கீகரிக்கக்கடவரோஎன்று ஆநந்தபாஷ்பங்கள்விழ, பட்டருக்கும் சிராமப்பி

ள்ளைக்கும், ஆண்டாளுக்குமறியாதே, உடையவர்க்குவிண்ணப்பஞ் செய்யாதே, கூரத்தாழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளவேண்டி யிருந்தது. ஆழ்வானும் தம்முடையதிருமாளிகையிலே எழுந்தருளாமல் ஆழ்வார்திருமாளிகையிலே பிறவீடுவிட்டெழுந்தருளியிருந்தார்.

ஆண்டாளும் இச்செய்தியைக்கேட்டு, பட்டரையும், சீராமப்பிள்ளையையும்பார்த்து, பிள்ளைகாள்! நீங்கள் உங்களுக்குப் பெருமாளுளரென்றிருந்தீர்களேயாகிலும், ஆழ்வானுக்குப் பெருமாள் மேலைவீடு ப்ரஸாதிக்கத் திருவுள்ளம்பற்றியருளினர், நாம் இனி ஆழ்வான்ஸந்நிதியிலே ஸேவிக்கப்போவோம்வாருங்கோள், என்றுபட்டரையும் சீராமப்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு, ஆழ்வான் எழுந்தருளியிருக்கிற ஆழ்வார்திருமாளிகையிலே விடைகொண்டு, ஆழ்வான் திருவடிகளிலே ஆண்டாள்! தெண்டன்ஸமர்ப்பித்துநிற்க; ஆழ்வானும், ஆண்டாளைப்பார்த்தருளி ஆண்டாள் நீயென்னநினைத்திருக்கிறுயென்ன; அடியேனுக்கொரு நினைவுண்டா, தேவரீர்திருவடிகளைப் பின்செல்லுகை யென்று விண்ணப்பஞ்செய்தாள். ஆண்டாள்! (திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே) என்கிறபடியே, ஸ்ரீவைஷ்ணவவிஷயத்திலே மிகவுமாதரத்தோடே ஸேவித்துப்போரு, எம்பெருமானார் திருவடிகளிலே பசியன் சோற்றைக் கண்டாப்போலேமிகவும்ஆதரத்தோடேஸேவித்துப்போருஎன்று அருளிச்செய்தருளினர். பட்டரும் ஆழ்வான் திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்துநிற்க, ஆழ்வானும் பட்டரைஎடுத்தணைத்து, பட்டரே நீரும் எம்பாருக்கருளின விஷயமன்றே (பீதகவாடைப்பிரானர் பிரமகுருவாகிவந்து) என்று, எம்பார் திருவடிகளிலேயும், எம்பெருமானர் திருவடிகளிலேயும், மிகவும் ஆதரத்தோடேஸேவித்துப்போரும், எம்பெருமானர் ஸ்ரீபாதத்தின் முதலிகளைக்கண்டால் நம்மைக்கண்டாப்போலே மிகவும் ஆதரத்தோடே ஸேவித்துப்போருமென்று அருளிச்செய்தருளினர். சீராமப்பிள்ளையும் ஆழ்வான்திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்துநிற்க, ஆழ்வானும் சீராமப்பிள்ளையைப்பார்த்து, நீரும் பட்டர்திருவடிகளிலேமிகவும் பக்திப்ரேமத்தோடே ஒதுங்கிவர்த்தியுமென்று அருளிசெய்தருளினர். பிள்ளைப் பிள்ளையாழ்வானும் திருவடிகளிலேதண்டன் ஸமர்ப்பித்துநிற்க; பிள்ளைப் பிள்ளையாழ்வீர் ([illegible]) (யதிச்சஸிவஸீகர்த்தும்ஜகதேகேந கர்மணபாபவாதஸ்யேப்யோகாம்சரந்தீர் நிவாரய) என்கிறபடியேவாக்கொன்றையுங்குறிக்கொண்டிரும், எதிரிகூடக்குத்தும் என்றதனல், ராஜதண்டம் வருமென்றதனல், காயத்தால்வராதபடிநெஞ்சால்நினைத்திருந்தீராகில், அதுதிருவுள்ளத்தில்படாதபடி எம்பெருமானர்திருவடிகளே தஞ்சமென்றிருமென்று அருளிச்செய்தருளினர். ஆழ்வானும், ஸ்ரீபாதத்தில்

லிகளைப்பார்த்து, பிள்ளைகாள்! நீங்கள் உங்களுக்கு ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களை, தாரகபோஷக போக்யங்களாகவும், திருவாய்மொழிதானே காலக்ஷேபப்ரகாரமாகவும் அநுஸந்தித்துக்கொண்டு போருங்கோள்" என்று அருளிச்செய்தருளினர். முதலிகளும், ஆழ்வான்திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்துநிற்க, ஆழ்வானும், பிள்ளைபிள்ளையாழ்வானைக் காணப்பெற்றிலோமே என்று அருளிச்செய்தருளினர்.

ஆழ்வான் மேல்வீடுபெறுவதற்கு உடையவர்களிப்புற்றதும், பின்பு இருவரும் ஸம்பாஷித்தது.

உடையவரும் முதலிகளுமாக, (சிற்றஞ்சிறுகாலே) என்கிறபாட்டுக்கு அர்த்தமருளிச்செய்துகொண்டு எழுந்தருளியிருக்கச்செய்தே பெருமாளுடையதிநசரிதை எம்பெருமானர்ஸந்நிதியிலே ப்ரஸங்காத்ப்ரஸங்கமாக, இப்படிஆழ்வானுக்கு பெருமாள் மேலைவீடுப்ரஸாதிக்கத் திருவுள்ளம்பற்றியருளினரென்று விண்ணப்பஞ்செய்தார்கள். எம்பெருமானரும் இத்தைக்கேட்டு த்ரிதண்டத்தையும் காஷாயத்தையும் எறிவது ஏற்பதாய் மிகவும் களித்து, நாம்இனி ஆழ்வானுடைய ஸம்பந்தஸம்பந்தம்பெற்றோமே நமக்குஇனி ஒருகுறைகளுமில்லையேயென்று, நாம்இனிஆழ்வான்பக்கல்போகவேணுமென்று தாமும், ஸ்ரீபாதத்தில்முதலிகளுமாக ஆழ்வான் எழுந்தருளியிருக்கிற ஆழ்வார்திருமாளிகையை நோக்கி எழுந்தருளா நிற்கச்செய்தே, "பிள்ளைபிள்ளையாழ்வானும், உடையவரும்முதலிகளுமாக எழுந்தருளுகிறர்கள்" என்று ஆழ்வானுக்கு விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும் எம்பெருமானர்க்குஎதிராகவெழுந்தருளி, எம்பெருமானர்திருவடிகளிலே தெண்டன் ஸமர்ப்பித்துநிற்க, எம்பெருமானரும், ஆழ்வானை எடுத்தணைத்து, ஆழ்வான்! நீர் இப்போதிதுவென்னென்றர்; ஆழ்வானும் பேசாதே எழுந்தருளியிருந்தார். ராமாநுஜனும், ஆழ்வான்! நீர் பேசாதிருப்பதென்? முற்பட்ட நாமிருக்க உமக்குப்புறப்பட வாய்த்ததே! யென்றருளிச்செய்தருளினர். ஆழ்வானும், முற்பட்டவர்கள் பிற்பட்டவர்களை எதிர்கொள்ளுவர்கள்அடியேன்பிற்பட்டால்அடைவுகேடாமென்றர்; உடையவரும்அடைவான போகவிபூதியிலே ஆழ்வான்! நீரொருவருமடைவுகெடுவதென்? "சேஷத்வத்திலுறைப்பிருந்தபடி முதலிகாள்பாரிகோள்" என்றுபோரவித்தராய்த் திருமுத்துதிர்த்து, ([illegible]) (அத்யந்தபக்தியுக்தாநாம் நசாஸ்த்ரம்நைவசக்ரம:) என்னுஞ்சொல்லுகிறபடியே ஆழ்வான்திவுருள்ளத்திலே ஓடுகிறத்தையறிந்து ஸ்ரீபாஷ்யகாரரும் செவியிலே த்வயத்தை ப்ரஸாதித்தருளினர். முதலிகளும் இப்போது இதுவென்னென்றர்கள்; இளையாழ்வாரும் முதலிகாள், பாரிகோள் நீங்கள்அறிவிகோளே, உங்களுக்குத்தெரியுமோ, நம்முடைய

ஆழ்வானுடைய நிலையையாராலேயறியலாம், ராஜகுமாரனுக்குகர்ப்பூரநிகரமில்லாதபோது நாக்குவரளுமாப்போலே நம்முடைய ஆழ்வானுக்கும்,த்வயவசநமில்லாதபோது நாக்குவற்றுமென்றருளிச்செய்தருளினார்

எம்பெருமானாரும் ஆழ்வானை எடுத்தணைத்து உடைகுலைப்பட்டுஉகந்துஉள்ளம்விம்மல்பொருமலாய், ஆழ்வான்! நீர்நமக்கு ஸ்ரீபாஷ்யத்துக்குஉசாத்துணையாகவும் நம்முடைய உடம்புமுயிருமாகவும், நிழலாகவும்இப்படிஎழுந்தருளியிருக்கிறஉம்மையிழந்து எங்ஙனேதரிப்பேன், உடன்போகத்திருவுள்ளம்பெற்றிலீர், நம்மைவிட்டுப்போக உமக்கு ருசிப்பதே! இனி உம்முடையதிருவுள்ளங்கலங்கச்சொல்லி என்ன பிரயோஜநம், * பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரியானபெருமாள் ஸங்கமற்று பரமபதநாதன் இப்படி அருள்பாடிட்டுழைந்தப்பண்ணுவதே!, (ప్రణవోధనుశ్శరోహ్యాత్మా) (ப்ரணவோதநுஸ்ஸரோஹ்யாத்மா) இத்யாதிச்ருதிப்ரமாணத்துக்கு விஷயமானீரே! பரமபதநாதனுக்கும் நாய்ச்சிமார்களுக்கும், நித்யஸூரிகளுக்கும் பெரும்செல்வமும், பெருங்களிப்புமாய்ப் பெருகிச்செல்லாநின்றதே ! இங்கிருக்கிறபெருமாளுக்கும், நாய்ச்சிமார்களுக்கும், அடியேனுக்கும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் போராரவாரமாய்ச்செல்லாநின்றதே ! ஆழ்வான்!தேவரீர் லீலாவிபூதியில்நின்றும் நித்யவிபூதியிலேறவெழுந்தருளி விரஜாஸ்நாநம் பண்ணி அமாநவன்திருக்கை ஸ்பர்சமும்பெற்று, (தம்மையேநாளும்வணங்கித் தொழுவார்க்குத்தம்மையேயொக்க வருள்செய்வராதலால்) என்கிறபடியே, நிரஸ்ததர்மாநராய், உயர்ந்த மகுடத்தையுடையராய், பரமபதத்திலே திருமாமணிமண்டபத்திலே நடுவில் நாயகப்பத்தியிலே, பரமபதநாதனையும், நாய்ச்சிமாரையும், நித்யஸூரிகளையும், ஸேவித்துக்கொண்டெழுந்தருளியிரும்என்று திருமுதுகைத்தடவிவிடைகொடுத்தருளினார்; ஆழ்வானும் எம்பெருமானார்திருவடிகளிலே வேரற்றமரம்போலேவிழுந்து, திருவடிகளை, திருமுடியிலும், திருமார்பிலும், திருக்கண்களிலும்தரித்துக்கொண்டு, ஸ்ரீபாததீர்த்தமும்சேர்த்துக்கொண்டு திருக்கைகளாலேப்ரஸாதிக்க நிறையப்ரஸாதப்பட்டு,(యోనిత్యమచ్యుతపదాంబుజయుగ్మరుక్మ వ్యామోహతస్తదితరాణి తృణాయమేనే। అస్మద్గురోర్భగవతోస్య దయైకసింధోః రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే) (யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே । அஸ்மத்குரோர்ப்பகவதோஸ்யதயைகஸிந்தோ ராமாநுஜஸ்யசரணௌஸரணம்ப்ரபத்யே) என்கிற ச்லோகத்தை அநுஸந்தித்துக்கொண்டுநிற்க, முதலிகளும் இதுசரமதசையில்ப்ரபந்தம்என்று பட்டோலைகொண்டார்கள். எம்பெருமானாரும், ஆழ்வான்நீர்இங்கேயிரும்என்று அநந்தரம், வடவாற்றங்கரையேறவெழுந்தருளி, ஆற்றிலேநீராடி, அகமர்ஷணம்பண்ணியருளி, மீண்டெழுந்தருளும்போது, இதுநம்முடைய

ஆழ்வான் எழுந்தருளியிருந்த விடமென்று திருக்கண்சாத்தியருளி மடத்தில்எழுந்தருளியிருந்தார்.

கூரத்தாழ்வான், தம்திருவடிகளிலேவிழுந்துக்லேசித்த அமுதனாருக்கு “ எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும்” என்று அருளிச்செய்து விடைகொடுத்தருளியது.

எம்பெருமானாரும் ஆழ்வான் எழுந்தருளியிருக்கிற ஆழ்வார் திருமாளிகையிலேஎழுந்தருளி, திருமுதுகைத்தடவி ஆழ்வானுக்கு விடைகொடுத்தருளினார்என்று சிலஸ்ரீவைஷ்ணவர்கள் அமுதனாருக்கு விண்ணப்பஞ்செய்ய, அமுதனாரும் இத்தைக்கேட்டு, தாயிழந்தகன்றுபோலே ஆழ்வான்எழுந்தருளியிருக்கும் ஆழ்வார்திருமாளிகையிலே விடைகொண்டு, ஆழ்வான்திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்து, ஆழ்வான்! தேவரீர், (பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து)என்றும்,(பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல்நன்றாகத்திருத்திப்பணிகொள்வான்) என்றும், (என்னைப்பெற்றவத்தாயாய்த்தந்தையாய்) என்றும், (பெற்றதாய்நீயேபிறப்பித்ததந்தைநீ)என்றும், (பெற்றாரும்சுற்றமுமென்றிவையேபேணேன்நான்,)என்றும்,(பெற்றார்பெற்றொழிந்தார்பின்னுநின்றடியேனுக்கு)என்றும்,(கற்றார்பற்றறுக்கும்பிறவிப்பெருங்கடலே) என்றும், (இச்சுவைதவிரயான்போயிந்திரலோகமாளும் அச்சுவைபெறினும்வேண்டேன்) என்றும்,(எங்கண்மாலிறைவனீசன் கிடந்ததோர்கிடக்கைகண்டும் எங்ஙனம்மறந்துவாழ்கேன்) என்றும் - நடையழகிலும் கிடையழகிலும்நீராசையற்று,*வீற்றிருந்தேழுலகிலும் தனிக்கோல்செல்லுகிறவிருப்பிலே,தேவரீர்க்குத்வரைவிஞ்சி, திருநாட்டுக்கெழுந்தருளினால், அடியேன் இத்தை எப்படி ஸஹிப்பேன்என்று அமுதனாரும் அழுதுக்லேசிக்க ; ஆழ்வானும் (செழுந்திரைப்பாற்கடல்கண்டுயில்மாயன்திருவடிக்கீழ்) என்றும், (இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம்மாலிருஞ்சோலை) என்றும்,(அங்கயல்பாய்வயல்தென்னரங்கனணியாகம்) என்றும், அநுபவித்துக்கொண்டதேவரீர், “வெண்ணெய்பிடித்து நெய்க்கழுகிறதென்,எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும்” என்றுஅருளிச்செய்தருளினார்; அமுதனாரும்,ஆழ்வான்திருவடிகளிலேதெண்டன்ஸமர்ப்பித்து, ஸ்ரீபாததீர்த்தமும் சேர்த்துக்கொண்டு, திருக்கைகளாலேப்ரஸாதிக்க நிறையப்ரஸாதப்பட்டு அஞ்சலித்துக்கொண்டுநிற்க, ஆழ்வானும், அமுதனார்க்கு விடைகொடுத்தருளினார்.

ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளின வ்ருத்தாந்தம்.

அமுதனார்க்குவிடைகொடுத்தருளின வநந்தரம், ஆழ்வார்திருமாளிகைக்கருகாக இட்டதிருக்காவணத்திலே, பிள்ளைப்பிள்ளையாழ்வான்திருமடியிலே திருமுடியும், ஆண்டாள்திருமடியிலேதிருவடிகளும், பட்டர்திருமடியிலே திருக்கைகளுமாய்க்கண்வளர்ந்தருளி, (உதிப்பனவுத்தமர்சிந்தையுள் - எதித்தலைநாதன் இராமாநுசன் தன்னிணையடியே) என்கிறபடியே உடையவர்திருவடிகளை த்யாநித்துக்கொண்டு கூரத்தாழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினார்.(மஞ்சுயர்மாமதிதீண்டநின்றமாலிருஞ்சோலை மணாளர்வந்து- மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்தமாமுகில்போன்றுளர்வந்துகாணீர்) என்று ஸேனைமுதலியாராழ்வார், ஆழ்வானை யருள்பாடிட்டருள, ஆழ்வானும் சடக்கெனவெழுந்திருந்து தெண்டனிட்டு,(முழுசிவண்டாடியதண்டுழாயும், மொய்ம்மலர்க்கண்ணியும்மேனியஞ்சாந்திழ்சியகோலமிருந்தவாறுமெங்ஙனஞ்சொல்லுகேன்) என்று, இவன் * காஷ்டபாஷாணஸங்நிபனேயாகிலும், நான்எப்படி ஸஹிப்பன்என்று அருளிச்செய்தபடியே * உலகமளந்தபொன்னடியையடைந்து, (அணிபொழிற்றிருவரங்கத்தம்மானே) என்று - பெருமாள்திருவுலகளந்தருளினதிருவடிகளை பாதேயமாக எழுந்தருளாநிற்கச்செய்தே, அவ்வழகியமணவாளப்பெருமாள்தாமே இவருக்குக் கையாளாகஎழுந்தருளி தேசாந்தரகதனான புத்ரனை மாதா உகந்து எடுத்தணைக்குமாப்போலே ஆழ்வானையெடுத்தணைத்து, அத்தவாளத்தலையாலேமுடிக்கைக்கொண்டுலோகங்கவெல்லாங்கடந்து *முடிவில்பெரும்பாழானமூலப்ரக்ருதியையும்கடந்து, இப்பாலுள்ளவைகளெல்லாவற்றையுங்கடந்து, அம்ருதவாஹிநியான விரஜையைச்சென்று கிட்டி,அம்ருதவாஹிநியான விரஜையிலேநீராடி,சுத்தஸத்வாத்மகமாய்,திருமேனியெல்லாம்பொன்னாய், (தம்மையேநாளும்வணங்கித்தொழுவார்க்குத் தம்மையேயொக்கவருள்செய்வராதலால்) என்று,திருமங்கையாழ்வார்அருளிச்செய்தபடியேதிருவாழியையும், திருச்சங்கையும்,தரித்துக்கொண்டு,திருவபிஷேகங்களையுடையனாய்நானப்பொடிபீதகவாடை*விரையார்நறுஞ்சாந்தங்கொண்டு ஐந்நூறுதிவயாப்ஸரஸ்ஸுக்களும்,நித்யஸூரிகளும்,எதிரேவந்து,(கதிரொளிதீபங்கலசமுடனேந்தி)என்கிறபடியே ஆழ்வானை எதிர்கொண்டுஸத்கரிக்க, ஆழ்வானும்பரமபதத்துக்கெழுந்தருளாநிற்கச்செய்தே,(கூரகுலமன்னர்வந்தார்,கோயில்வாழுமவர்வந்தார், வாதியர்காலன்வந்தார், வாக்கினால்வென்றார்வந்தார், வேதமுடிசூடியவேதவ்யாஸர்வந்தார், இலைத்தளயடியாக எதிராஜர்க்கினியார்வந்தார், எதிராருமில்லாதார்வந்தார், சதிராகஎழுத்திட்டார்வந்தார், சகலகுணஸம்பந்நர்வந்தார், ஸ்ரீகூரத்தாழ்வான்வந்தார், தனக்கு விரோதியானநாலூரானுக்கும் தன்பேறு அளித்தார்வந்தார், பதக்கென்றெழுத்திட்டபராசரபட்டர்வந்தார்,வந்தார்) என்றுஎங்கும்பொற்களம்மாறுடியூதிற்று, செம்பொனால்சின்னந்திகழநின்றூதிற்று, ஆழ்வானும்பரமபதத்திலேஎழுந்தருளி பாதபீடத்திலே அடியிட்டு, ஸ்ரீவைகுண்டநாதன்திருவடிகளிலே தெண்டன்ஸமர்ப்பித்துநிற்க, ஸ்ரீவைகுண்டநாதனும் ஆழ்வானைஎடுத்தணைத்து,பெரியபிராட்டியார்திருக்கையிலேகாட்டிக்கொடுக்க,பெரியபிராட்டியாரும்இவரைமார்விலணைத்து,மதுரமானகடாக்ஷத்தாலேகுளிர்விழியப்பார்த்து,ஸ்ரீவைகுண்டநாதன்திருக்கையிலேகொடுக்க,ஸ்ரீவைகுண்டநாதனும்,ஆழ்வான் *இந்தவானவர்நாட்டையும்நீகண்டுகொள்என்றருளிச்செய்தருள,ஆழ்வானும்பூவளரும்திருமகளால் அருள்பெற்றுப்புறப்பட்டு*உத்தம ஸிதாஞ்சலியாய்நிற்க, *எதிரெதிரிமையவரிருப்பிடம்வகுக்க,ஆழ்வானும்அஞ்சலித்துக்கொண்டுநிற்க, திருநாட்டிலேஒருஅபிஷேகம்வைத்தாப்போலே(அஹமந்நமஹமந்நம்)'அஹமந்நமஹமந்நம்) என்று அநுபவித்துக்கொண்டுஹ்ருஷ்டராய் எழுந்தருளியிருந்தார். நித்யஸூரிகளோடே ஒருகோவையானார்.

—※—

உடையவர்,கூரத்தாழ்வான்திருநாடலங்கரித்ததைப்பற்றிக்லேசித்தது.

ஆண்டாளும்பிள்ளையாழ்வானைப்பார்த்து,இப்படிஆழ்வான்திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று உடையவர்க்குவிண்ணப்பஞ்செய்துவாரும் என்ன, பிள்ளையாழ்வானும், வங்கிபுரத்துநம்பியைப்பார்த்து, இப்படி ஆழ்வான்திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று உடையவர்க்குவிண்ணப்பஞ்செய்துவாரும்என்ன, வங்கிபுரத்துநம்பியும் மடத்தேறவிடைகொண்டு, எம்பெருமானார்திருவடிகளிலேதெண்டன்ஸமர்ப்பித்து, இப்படி ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும் இத்தைக்கேட்டு, கன்றிழந்தபசுப்போலே திருவுள்ளங்கலங்கி, (ஒருமகள்தன்னையுடையேனுலகம் நிறைந்தபுகழால், திருமகள்போலவளர்த்தேன்செங்கண்மால்தான்கொண்டுபோனான்,)(நல்லதோர்தாமரைப்பொய்கைநாண்மலர்மேற்பனிசோர, அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டழகழிந்தாலொத்ததாலோ, இல்லம்வெறியோடிற்றாலே என்மகளைஎங்குங்காணேன் மல்லரையட்டவன்பின்போய்மதுரைப்புறம்புக்காள்கொலோ)ஆழ்வான்!வாராய்(வந்திடாய்)(நீகாணவாராய் (நாண்படுஞ்ஞான்றுகொலோ)காணுமாறருளாய்)(கள்வன்கொல்யானறியேன்கரியானொருகாளைவந்து வள்ளிமருங்குலென்றன் மடமானினைப்போதவென்றுவெள்ளிவளைக்கைப்பற்றப்பெற்றதாயரைவிட்டகன்று, அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ) என்று பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளால், ஜ்ஞாநபக்திவைராக்யங்களையுடையராய் ஆசார்யபூர்த்தியும் சிஷ்யபூர்த்தியுமுடைய இவ்வாழ்வானைவைத்துக்கொண்டிருக்கப்பெற்றோமில்லையே! என்று அருளிச்செய்து போரக்லேசிக்க; அப்போது அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்ரீமதுரகவிகளைப்

போலே பஞ்சமோபாய நிஷ்டராய்க்கொண்டு எழுந்தருளியிருக்கையினாலேயும், தேவரீருடையபரமக்ருபையினாலேயும், இத்தனையெல்லாம்ப்ரஸாதித்தருளிற்று; இப்படிப்பட்டஆழ்வானுக்குத்திருவுள்ளங்கலங்கவேண்டுவதில்லை என்று விண்ணப்பஞ்செய்தார்.

கூரத்தாழ்வானை ப்ரஹ்மமேதத்தாலே ஸஂஸ்கரித்து, திருவத்யயநமும் பெருக்கநடத்தியருளியது.

எம்பெருமானாரும்ஸ்ரீபாதத்தின்முதலிகளைப்பார்த்து நம்முடைய ஆழ்வானைத் திருப்பள்ளிபடுத்துவாருங்கோள் என்று வேண்டுந்திருக்கைவழக்கமாறுதிருக்கப்ரஸாதித்து, பின்பு பெருமாளுடைய திருமாலைப்ரஸாதங்கள், களபப்ரஸாதம்,பரியட்டப்ரஸாதம்முதலான வரிசைகளையும் வாத்யகோஷத்துடன்வரக்காட்டியருளினார். எம்பெருமானார் ஸ்ரீபாதத்தில்முதலிகளும்பெருமாள்பரிகாரமுமாகஆழ்வான்எழுந்தருளியிருக்கிறஆழ்வார்திருமாளிகையிலேயெழுந்தருள,பட்டரும்,எம்பெருமானார்ஸ்ரீபாதத்தில் முதலிகளையும்,பெருமாள்பரிகாரத்தையுங் கூட்டிக்கொண்டு,தாம்(సర్వకర్మాణిసూక్ష్మేణగాయత్ర్యావైష్ణవేనచ।నారాయణానువాకేనస్థాపయేత్పితరంసుతః) (ஸர்வகர்மாணிஸூக்ஷ்மேணகாயத்ர்யாவைஷ்ணவேநச। நாராயணாநுவாகேநஸ்த்தாபயேத்பிதரம்ஸுத:)என்றுஞ்சொல்லுகிறபடியே, ஆழ்வானைத்திருமஞ்சநம்பண்ணித்திருவொற்றுவாடைசாத்தி,திருப்பரியட்டம்சாத்தி, திருமண்காப்புச்சாத்தி, திருமுடிச்சீலை சாத்தி, ஆழ்வானுக்குத்திருக்கோலமுமணிந்து, முதலிகளைத்தீர்த்தங்கொண்டு சுருளமுதுபரிமாறி வேண்டிக்கொண்டு அநந்தரம்திருச்சூர்ணமிடித்து, எல்லாருமெண்ணெய்சுண்ணங்கொண்டாடி, அநந்தரம் ஆழ்வானைத் திருத்தேரிலே ஏறியருளப்பண்ணி (కేశవార్పితసర్వాంగంశరీరంమంగళావహం।నప్రదాహయేద్విప్రో)బ్రహ్మమేధవిధింవినా,(கேசவார்ப்பிதஸர்வாங்கம் சரீரம்மங்களாவஹம்। நப்ரதாஹயேத் விப்ரோப்ரஹ்மமேதவிதிம்விநா) என்றும், (బ్రహ్మమేధవిధింప్రోక్తం)మునిభిర్బ్రహ్మతత్పరైః।మహాభాగవతానాంవైకర్తవ్యమిదముత్తమమ్)ப்ரஹ்மமேதவிதிம்ப்ரோக்தம்முநிபிர்ப்ரஹ்மபரமதத்பரை:।மஹாபாகவதாநாம்வை கர்த்தவ்யமிதமுத்தமம்) என்றுஹாரீதஸ்ம்ருதியிலே சொல்லுகையாலே, மஹாபாகவதரான கூரத்தாழ்வானுக்கு பட்டர் ப்ரஹ்மமேதத்தாலே ஸஂஸ்கரித்துப் பள்ளிபடுத்தார்; ஆண்டாளும் கர்த்தார்த்தையாய், முதலிகளும் திருக்காவேரியிலேநீராடி, பட்டர் திருமாளிகையிலேஎழுந்தருளி, ஆழ்வான்எழுந்தருளினானென்றெழுந்தருளாதே, நெடுநாள் * திருவரங்கன்திருப்பதியிலே எழுந்தருளியிருந்து பக்வத்விஷயத்தை ப்ரஸாதித்துக்கொண்டு, (శతంజీవశరదోవర్ధమానః)(ஸதஞ்ஜீவஸரதோவர்த்தமாந:) என்கிறபடியே,ஆசீர்வாதங்களைப்பண்ணித் தாம்திருமாளிகையிலே எழுந்தருளினார்கள்;பட்டரும்ஆண்டாள்தி-

ருவடிகளிலேதெண்டன்ஸமர்ப்பித்துதிருமுத்துதிரஎழுந்தருளியிருக்க, ஆண்டாளும், ஆழ்வானுக்காகஎம்பெருமானார்எழுந்தருளியிருக்க க்லேசிக்கிறதென்னவென்று திருமுதுகைத்தடவி, திருக்கண்மலரைத்துடைக்க,எம்பெருமானாரும் மடத்திலும் தளிகைவாவிட்டருளினார்;இவர்களும் அமுதுசெய்துஎழுந்தருளியிருந்தார்கள்;அதின்மற்றைநாள்எம்பெருமானாரும்ஸ்ரீபாதத்தில்முதலிகளைப்பார்த்து,நம்முடையவாழ்வானுக்குப்பின்னிரண்டுநாளில்க்ரியையும்நடக்கும்படிக்குவேண்டுந்திருக்கைவழக்கமாராதிக்க ப்ரஸாதித்துவரக்காட்டியருளினார், பன்னிரண்டுநாளையில் க்ரியையும்முடிந்தபின்பு திருவத்யயநம் நடத்தவேணுமென்று பட்டர் உடையவரையும், அரையரையும், ஸ்ரீவைஷ்ணவர்களையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய், (శుభాంతేద్విజవర్యైశ్చసర్వసంపచ్ఛుభావహం।సహస్రశాఖాధ్యయనంకారయేద్వైదికోత్తమః)(ஸுபாந்தெளத்விஜவர்யைஸ்சஸர்வஸம்பச்சுபாவஹம்।ஸஹஸ்ரஸாகாத்யயநம்காரயேத்வைதிகோத்தம:) என்றும், (అశుభాంతేవిశేషేణద్రావిడీబ్రహ్మసంహితా। అధ్యేతవ్యాద్విజవరైరాద్యంగీతసహస్రకమ్) (அசுபாந்தேவிசேஷேணத்ராவிடீ ப்ரஹ்மஸம்ஹிதா। அத்யேதவ்யாத்விஜவரைராத்யம்கீத ஸஹஸ்ரகம்) என்றுஞ்சொல்லுகிறபடியேபுஷ்பாஞ்சலிபண்ணிசாத்தி, (నాతఃపరతరంతీర్థంవైష్ణవాంఘ్రిజలాచ్ఛుభాత్।తేషాంపాదరజఃపుణ్యంగంగామపిపునాతిహి) (நாத:பரதரம்தீர்த்தம்வைஷ்ணவாங்க்ரிஜலாச்சுபாத்।தேஷாம்பாதரஜ: புண்யம்கங்காமபிபுநாதிஹி) என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்ரீபாததீர்த்தத்தைசேர்த்து ஸ்வீகரித்து அதின்மற்றைநாள், (యథాతుష్యతిదేవేశోమహాభాగవతార్చనాత్। తథా నతుష్యతేవిష్ణుః విధివత్స్వార్చనాదపి) (யதாதுஷ்யதிதேவேசோமஹாபாகவதார்ச்சநாத்।ததாநதுஷ்யதேவிஷ்ணு: விதிவத்ஸ்வார்ச்சநாதபி)என்றுஞ்சொல்லுகிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்களையமுதுசெய்வித்துஸத்கரித்தருளினார்.

அழகியமணவாளன், பட்டரையும் சீராமப்பிள்ளையையும் உடையவர் திருக்கையிலேகாட்டிக்கொடுத்தது.

அதின்மற்றைநாள்பட்டரும்ப்ராதர்ஸஹாயராய்ஸ்ரீவைஷ்ணவர்களுடன் கூடப்புறப்பட்டுவந்து எம்பெருமானார்திருவடிகளிலேஸேவித்துநிற்க; எம்பெருமானாரும், (బహుమానేనమహతాహనామంతమవైక్షత) (பஹுமாநேநமஹதாஹநாமந்தமவைக்ஷத) என்னும்படி விசேஷகடாக்ஷம்செய்தருளி, பட்டருள்ளிட்டாரையுங் கூட்டிக்கொண்டு ப்ரதக்ஷிணமாகஎழுந்தருளிவைநதேயனையும்ஸேவித்து, உள்ளேபுகுந்து,பெருமாளைஸேவிக்கப்பண்ணியருளி, ஆழ்வான்திருநாட்டுக்கெழுந்தருளினாரென்றுவிண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் இளையாழ்வீர்.

நாம்இந்த ஆத்மாவை அன்றேபுத்ரஸ்வீகாரம்பண்ணிக்கொண்டோமே, நம்புத்ரரானபட்டரையும், சீராமப்பிள்ளையையும் ஆழ்வானைப்போலே ஸம்ரக்ஷணம்பண்ணிக்கொண்டுவாரும்என்று வினவியருளித்தந்திருமகனைவாசிதோன்ற, பட்டரை ஆதரத்துடன் அருள்பாடிட்டு, ஆழ்வான்போனுரென்று வ்யாகூலப்படவேண்டாம், நாமேஉமக்குபிதாமுதலானுரெல்லாரும்என்று அருளிச்செய்து, (తత్సూనుం స్వసుతమధాన్నిజాం స్యుదానాత్ స శ్రీకశ్శ్రుతిగురుభట్టనామధేయమ్) (தத்ஸூநும்ஸ்வஸுதமதாந் நிஜாம்புதாநாத் – ஸச்ரீகச்ருதிகுருபட்ட நாமதேயம்) என்கிறபடியே அபிமானித்து, (வேதமுன்விரித்தான்) என்னும்படிவிசேஷமாக "வேதாசார்யபட்டர்" என்றுதிருநாமமும்ப்ரஸாதித்து, தீர்த்தப்ரஸாதங்களும் சடகோபனும் ப்ரஸாதிக்கப்பெற்று க்ர்தார்த்தராயிருக்க, உடையவரும் தேவரீர்இவருக்கு ஆயுஸ்ஸைப்ரஸாதித்தருள, அடியேன் வித்யையை அப்யஸிப்பிக்கிறேன்என்றுவிண்ணப்பஞ்செய்து, ஒருரு த்வயத்தைப்ரஸாதித்து, விசேஷாபிமானம்செய்தருளி, ஒருச்லோகத்தை திருமுன்பேசொல்லிவைத்து சுற்றும்பிற்றும்பார்த்து "நம்முடையவர்களெல்லாரும் இவரைநம்மைக்கண்டாப்போலே காணுங்கோள்" என்றருளிச்செய்து, அநந்தரம்நாய்ச்சியார்ஸந்நிதியிலேகொண்டெழுந்தருளிஸேவிக்கப்பண்ண, நாய்ச்சியாரும்அப்படியே புத்ராபிமானம்பண்ணியருள *பூவளருந்திருமகளாலருள்பெற்றுப்புறப்பட்டு உடையவருடனேஸேவித்துகொண்டு மடமேயெழுந்தருள ;

பட்டர் உபந்யாஸத்தைக்கேட்டு முதலிகள்கொண்டாடியது.

உடையவரும் எம்பாரையழைத்தருளி, பட்டரைஅவர்திருக்கையிலேகாட்டிக்கொடுத்து, இவர்தர்சநப்ரவர்த்தகராம்படி தர்சநார்த்தங்களையெல்லாம்ப்ரஸாதியுமென்று நியமித்தருள ; அவரும் அப்படியே கைக்கொண்டு,ஸகலார்த்தங்களையும்ப்ரஸாதித்தருளி,ஒருநாள்ஒருச்லோகத்தைத்திருமுன்பே உபந்யஸிக்கச்சொல்ல; அவரும் அப்படியேஉபந்யஸித்தவநந்தரம், அத்தைக்கேட்டருளி, (జనకానాంకులే కీర్తిమాహరిష్యతి మే సుతా)(ஜநகாநாம்குலேகீர்த்திமாஹரிஷ்யதிமேஸுதா)என்கிறபடியே, நமக்கும், ஆழ்வானுக்கும்,உடையவருக்கும் அதிசயத்தைவிளைத்திரே! என்றுமிகவும்உகந்தருளினூர்.இத்தை,(భట్టార్యాయ ప్రపత్తిం హ్యదిశదథవరద్రావిడామ్నాయమౌలేరర్థం శ్రీభాష్యమస్యానపి చ యతివరాదేశతోర్థాన్రహస్యాన్ । యశ్చోక్తో దేశికేన్ద్రో యతివరచరణచ్ఛాయ నామార్యవర్యైస్తం గోవిన్దార్యమస్మత్కులగురుమమితజ్ఞానవైరాగ్యమీడే) (பட்டார்யாயப்ரபத்திம்ஹ்யதிஶததவரத்ராவிடாம்நாயமௌலேரர்த்தம் ஸ்ரீபாஷ்யமஸ்யாநபிசயதிவராதேஶதோர்த்தாந்ரஹஸ்யாந் । யஶ்சோக்தோதேசிகேந்த்ரோயதிவரசரணச்சாயநாமார்யவர்யை ஸ்தம்கோவிந்தார்யமஸ்மத்குலகுருமமிதஜ்ஞாநவைராக்யமீடே) என்றும் அநுஸந்தித்தார்கள்;

'ஆசார்ய சேஷத்வம்முறைதவறவொண்ணுதென்கிற த்வரையும், சரமதசையில் *ப்ராணப்ரயாணபாதேயமாகஸ்வாசார்யன்தானே த்வயத்தை விடாய்கெட உபதேசிக்கப்பெற்றதன்னேற்றமும், பகவதபிமாநஸ்த்தலத்திலும் ததீயாபிமாநஸ்த்தலமே சரமதசையாகப் பெற்ற தன்னேற்றமும், ஆழ்வான்பக்கலிலே அநுஷ்டாநசேஷமாகக்கண்டதிறே.

ஆழ்வான் திருநாட்டுக்கெழுந்தருளின ஆறும்மாஸம்தத்துல்யரானமுதலியாண்டானும் அப்படியே நாற்றைந்துதிருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்து, திருநாட்டுக் கெழுந்தருளினூர். உடையவரும், ஆண்டான் எழுந்தருளின வன்று, "இன்று இருவருங்கூடப் பரமபதத்தேற எழுந்தருளுவர்கள்" என்றருளிச்செய்தார். அதுக்குமேல் சிலநாள்சென்றபின்பு ஆழ்வானுடையவிச்லேஷம்ஸஹிக்கமாட்டாமல் பிள்ளையுறங்காவில்லிதாஸரும் பரமபதத்துக்கெழுந்தருள, அவருடைய விச்லேஷம் ஸஹிக்கமாட்டாமல் (மாரிமாக்கடல்) இத்யாதிப்படியே பொன்னுய்ச்சியாரும் பரமபதத்துக்குப் போக, இருவரையும் பள்ளிபடுக்கும்படி பட்டரைக் கட்டளையிட்டனுப்ப, அவரும் அப்படியே செய்வித்தருளினூர்.

உடையவர் பள்ளிகொண்டருளியது.

ஏவம்விதரான ஆழ்வானுடைய சரமதசாவைபவம் சதுரமாக நடந்த வநந்தரம், உடையவரும் பெருமாளுடைய ஸ்ரீகார்யமாராய்ந்துகொண்டு, (భాష్యరఙ్గమివాపరమ్) (பாஷ்யரங்கமிவாபரம்) என்று, ஸ்ரீரங்கசாயியான பகவானைப்ரகாசிப்பிக்கிற ஸ்ரீபாஷ்யத்தையும், (மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்றதமிழ்மறைகளாயிரமும்) என்றும் சொல்லுகிறதிருவாய்மொழியையும்,இவர் அஹோராத்ரம் நடத்திக்கொண்டு பகல்ஸ்ரீபாஷ்யத்திலேகாலக்ஷேபமாய், ராத்ரி குடிநீர்பாலமுதுசெய்து திருப்பள்ளியிலே யேறியருளினூல், * பாலோடமுதன்னவாயிரமான திருவாய்மொழி யநுபவத்திலே பரவசராயிருக்க; அத்தசையிலே முதலிகளெல்லாருங்கூடி அவருடைய அநுபவபாரவச்யதையை அநுபவித்துக்கொண்டிருந்து அங்குத்தையின் ஸௌகுமார்யத்தாலே (కూరేశదాశరథిసౌమ్యవరాభిధానయోగీన్ద్రవన్ద్య పదపఙ్కజయోగిరాజ । శేషాధిరుహ్య శయనం మహనీయమార్యవర్యైరభిష్టుతయశా జగతాం హితాయ) (கூரேஶதாசரதி ஸௌம்யவராபிதாநயோகீந்த்ரவந்த்ய பதபங்கஜயோகிராஜ । ஶேஷ்வாதிருஹ்யஶயநம்மஹநீய மார்யவர்யைரபிஷ்டுதயஶா ஜகதாம்ஹிதாய) என்கிறபடியே ஜர்கருகராய்க் கண்வளர்ந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; அநந்தரம், (శ్రీరఙ్గనగరతరఙ్గశేఖరాసారతారకితచారు

మూర్తయే। భోగిభోగశయనీయశాయినే మాధవాయ మధువిద్విషే నమః) (க்ஷீராஸாகரதரங்கஶீகராஸாரதாரகிதசாருமூர்த்தயே । போகிபோகஶயநீயஶாயிநே மாதவாயமது வித்விஷே நம:) என்றும், * பள்ளியாவது பாற்கடலரங்கமாகையாலே * நாகத்தணைப்பாற்கடல் கிடக்கும் ஆதிநெடுமாலை * யோகத்திலே அணையா நின்றுகொண்டு *அரவத்தமளியில் படியே எங்கும் காவலடைத்து நிர்ப்பாராய், (యా నిశా సర్వభూతానాం తస్యాం జాగర్తి సంయమీ। యస్యాం జాగ్రతి భూతాని సా నిశా పశ్యతో మునేః) என்றும், (వాసుదేవ ప్రసుప్తోఽస్మి యావన్నోదయతే రవిః। అహం స్వాపన్న వత్స్యామి సర్వభూతహితాయ వై) என்கிற அநுஸந்தாநத்துடனே தத்கத சித்தராய்க் கண்வளர்ந்தருளப்புக்கார்.

உடையவரைத்திருப்பள்ளியுணர்த்தியது.

பெருமாள் ச்ருங்கிபேரபுரத்திலே இங்குதீவ்ர்க்ஷத்தின்கீழே பள்ளிகொண்டருளினபோது, (నియమ్య పృష్ఠే తు తలాఙ్గులిత్రవాన్ శరైస్సుపూర్ణావిషుధీ పరన్తపః। మహద్ధనుస్సజ్యముపోహ్య లక్ష్మణో నిశామతిష్ఠత్పరితోఽస్య కేవలమ్॥ తతస్త్వసౌ ఖడ్గోత్తమబాణచాపధృత్. స్థితోఽభవం తత్ర స యత్ర లక్ష్మణః। అతన్ద్రిభిర్జ్ఞాతిభిరాత్తకార్ముకైర్దృఢేన్ద్రకల్పం పరిపాలయంస్తదా) என்று லக்ஷ்மணகுஹாதிகள் நோக்கினாப்போலவும், கடற்கரையிலே மஹாராஜருள்ளிட்டமுதலிகள் நோக்கினாப்போலவும், காவேரிக்கரையிலே (உலகமுண்டுமிழ்ந்தகற்பகத்தை) என்கிறகல்பகச்சாயையிலே பள்ளிகொண்டருளுகிறயதீந்த்ரரானஇவரையும் உறங்காவில்லிதாஸர் போல்வாரானராமாநுஜவேளைக்காரர், ஸ்ரீகுஹதாஸர், ஹநுமத்தாஸர் முதலானோர் நோக்கிக்கொண்டுபோந்தார்கள். இப்படி (శ్రీమాన్ సుఖసుప్తః) (ஸ்ரீமாந்ஸுகஸுப்த:) என்னும்படி, ஸ்ரீமானானராமாநுஜனும் பள்ளிகொண்டருளினவநந்தரம், (ప్రభాతాయాన్తు శర్వర్యాం పృథువక్షా మహాయశాః। ఉవాచ రామస్సౌమిత్రిం లక్ష్మణం శుభలక్షణమ్। భాస్కరోదయకాలోఽయం గతా భగవతీ నిశా। అసౌ సుకృష్ణో విహగః కోకిలస్తాత కూజతి। బర్హిణానాఞ్చ నిర్ఘోషః శ్రూయతే నదతాం వనే। ఉష్య రాత్రిం తు తత్రైవ గఙ్గాకూలే స రాఘవః। భరతః కాల్యముత్థాయ శత్రుఘ్నమిదమబ్రవీత్। శత్రుఘ్నోత్తిష్ఠ కిం శేషే నిషాదాధిపతిం గుహమ్। శీఘ్రమానయ భద్రన్తే తారయిష్యతి వాహినీమ్) என்று ராமாநுஜர்களை ப்ரபாதகாலஸூசகமான அடையாளங்களைச்சொல்லி எழுப்பினாப்போலவும், (செங்கழுநீர்வாய்நெகிழ்ந் தாம்பல்வாய்கூம்பினகாண்) என்றும், ப்ரபாதஸமயஸூசகமான அடையாளங்களைச்சொல்லி, எல்லாரையும் எழுப்பிப் பின்பு, (செம்பொற்கழலடிச் செல்வாபலதேவா உம்பியும் நீயும் உறங்கேல்) என்று நம்பி மூத்தபிரானைத் திருப்பள்ளியெழுப்பினாப்போலேயும், ததவதாரமான இவரையும் திருப்பள்ளியுணர

ர்த்தி, பின்னையும் இவர் ஆசார்யப்ரேமாதிகளாலுண்டான வைபவத்தையும், பகவத்ப்ரேமாதிகளாலுண்டான வைபவத்தையும் சொல்லி,

உடையவரைத் திருப்பள்ளியுணர்த்துகைக்காக முதலிகளருச்செய்த ஸுப்ரபாதம்.

ததீயர் திருப்பள்ளியுணர்த்த உபக்ரமித்து (జయజయయతిసార్వభౌమాఽమలస్వాన్త తుభ్యన్నమో జయజయజనిసిన్ధుమగ్నాత్మసన్తారకగ్రామణీః। జయజయభజనీయకూరేశముఖ్యైః ప్రసీద ప్రభో జయజయ విదుషాం నిధే జాగృహి శ్రీనిధే జాగృహి ॥౧॥ పూర్ణార్యపూర్ణకరుణా పరిలబ్ధబోధవైరాగ్యభక్తిముఖదివ్యగుణామృతాబ్ధే। శ్రీయామునార్యపదపఙ్కజరాజహంస రామానుజార్య భగవంస్తవ సుప్రభాతమ్ ॥౨॥ ఆసేతుమద్య వరదస్య గజాద్రిభర్తుః పానీయమచ్ఛమతిశీతమగాధకూపాత్। ధ్వాన్తం నిరస్తమరుణస్య కరైస్సమన్తాద్రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౩॥ శ్రీరఙ్గరాజపదపఙ్కజయోరశేషకైఙ్కర్యమాకలయితుం సకుతూహలత్వమ్। ఉత్తిష్ఠ నిత్యవిధిమప్యఖిలఞ్చ కర్తుం రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౪॥ త్వాం శిక్షితుం సముపయాతి నృపాచలేన్ద్రస్త్వత్సంప్రక్లృప్తపరశఙ్ఖరథాఙ్గపాణిః। సంయోజితామురసి మామ్భవతైవ బిభ్రద్రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౫॥ శ్రీమత్కురఙ్గపరిపూర్ణవిభుస్త్వదుక్తం శ్రీభాష్యశాస్త్రమమలం త్వయి భక్తియుక్తః। శ్రోతుం సమిచ్ఛతి యతీన్ద్ర సితోర్ధ్వపుణ్డ్రస్తద్బోధయార్థమఖిలం తవ సుప్రభాతమ్ ॥౬॥ శ్రీభాష్యమాలిఖితుమాత్తవిశాలలేఖ్య శ్రీవత్సచిహ్నగురురాసత దివ్యగాత్రః। వేదాన్తసూత్రమపి వక్తుమముష్య సర్వముత్తిష్ఠ లక్ష్మణమునే తవ సుప్రభాతమ్॥౭॥ శ్రీమాన్ సపూర్ణవటురాదరతః ప్రగృహ్య శ్రీపాదుకాం యతిపతే పదయోః ప్రమోక్తుమ్। ద్వారి స్థితిం వితనుతే వినతార్తిహారిన్ రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౮॥ కాషాయవస్త్రకటిసూత్రకమణ్డలూంశ్చ శ్రీదన్తకాష్ఠమపి దేశికసార్వభౌమః। పాణౌ నిధాయ నివసత్యవిశుద్ధగాత్రో రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౯॥ త్వాం బోధయన్తి గురవః ప్రథితా మహాన్తః శ్రీవైష్ణవాశ్చ యమినస్తవ పాదభక్తాః। ఏకాన్తినశ్చ విమలాస్త్వదనన్యభావాస్తాన్ పాలయాద్య యతిశేఖర సుప్రభాతమ్ ॥ ౧౦ ॥ బ్రాహ్మే ప్రబుధ్య విబుధాస్స్వగురూన్ప్రణమ్య రామానుజాయ నమ ఇత్యసకృద్బ్రువాణాః। అష్టాక్షరం చ చరమం ద్వయముచ్చరన్తి రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్॥౧౧॥ ప్రాతః పఠన్తి పరమం ద్రవిడప్రపన్నగాయత్రిమన్త్రిశతమష్టశిరస్కమచ్ఛమ్। శ్రీవైష్ణవాస్తవ పదాబ్జనిషక్తభావాః రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౧౨॥ ఆరాధనం రచయితుం కమలాసఖస్య శ్రీయాదవాచలపతేర్వివిధోపచారైః। పాతుఞ్చ దృష్టికమలేన నతానశేషాన్ రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥౧౩॥ సంసేవ్య సప్తశతసంయమిసార్వభౌమైః స్వదేశికైస్సకలశాస్త్రవిదాం వరిష్ఠైః। ఏకాన్తిభిః పరమభాగవతైశ్చ సేవ్య రామానుజార్యభగవంస్తవ సుప్రభాతమ్ ॥ ౧౪ ॥ గద్యత్రయం నిగమశేఖరదీపసారౌ శ్రుత్యర్థసఙ్గ్రహమపి ప్రథితఞ్చ

నిత్యమ్। గీతార్థభాష్యమపి దేశికపుఙ్గ వానాం దాతుం ప్రసీద యతిశేఖర సుప్రభాతమ్ ॥౧౫॥ పాదామ్బుజం యతిపతేశ్శరణం విహర్తుం సఙ్గత్య సంసరణవారిధితర్తుకామాః। ఆయాన్తి హస్తకమలాభిధృతోపచారాః తాన్ పాహి తే కరుణయా తవ సుప్రభాతమ్ ॥౧౬॥ స్నాతుం కవేరతనయా సలిలేషు శిష్యైరాచార్యపూరుషవరైర్యతిభిర్విశుద్ధైః। శ్రీవైష్ణవైశ్చ సహ సేవ్యమహానుభావై రామానుజార్య భగవం స్తవ సుప్రభాతమ్ ॥౧౭॥ என்று இத்யாதிகளாலும் திருப்பள்ளியுணர்த்த, உள்ளினின்றும் புறப்பட்டருளி;

உடையவர் திருப்பள்ளியுணர்ந்து ஸ்வாசார்யன் தொடங்கி எம்பெருமான்வரையில் அநுஸந்தித்து நீராட்டத்துக்குப்புறப்பட்டருளியது.

அவ்வளவிலே கந்தாடையாண்டான் திருக்கைகொடுக்க, இப்பால் யமுனைத்துறைவனென்கிற திருமண்டபத்திலே எழுந்தருளியிருந்து, சுத்தாசமநம்செய்தருளி, பரிசுத்தராய் காலையெழுந்திருந்த விவர், (காலைநன்ஞானத்துறைபடிந்தாடி) என்கிறபடியே, குருபரம்பரா பூர்வகமாக (திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமருமுரைமின்) என்கிறபடியே த்வயத்தை ஸார்த்தமாக அநுஸந்தித்து, ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரையும் அநுஸந்திக்கும்படி நியமித்தருளி, பின்னும் (వాసుదేవాదిదివ్యానాం నామ్నాం సఙ్కీర్తనం చరేత్) (வாஸுதேவாதிதிவ்யாநாம் நாம்நாம்ஸங்கீர்த்தநம்சரேத்) என்கிறபடியே மற்றுமுள்ள திருநாமங்களையும் ப்ராப்யபுத்த்யா அநுஸந்தித்துக்கொண்டு, (ప్రత్యూషే గురుపాదపద్మయుగళం ధ్యాత్వాథ తద్దేశికాన్ నత్వా క్రమశో భరం భగవతి న్యస్యాత్మనో నిర్వృతః। ధ్యాత్వాగ్రే పరమే పదే మణిమయే శ్రీమణ్టపే హ్యాసనే ధ్యాసీనం పరవాసుదేవమభితస్సంసేవితం సూరిభిః॥ శ్రీశానాం మనసైవ రఙ్గపురతో నిష్క్రమ్య భూమిష్ఠ్వరన్ ప్రాపయ్య వశాదహం భగవతస్సం ప్రాప్య దివ్యాలయాన్। తత్తద్ధామని కేతనాన్ భగవతో రఙ్గేశితుర్విగ్రహాన్ నానాకారజుషస్స్వభావపరసాన్ సేవే మునీన్ద్రస్తతః) என்கிறபடியே பெரியபெருமாளுக்குமாகாமாய் * வைகுந்தம் கோயிலான பரத்வமே தொடங்கி பெரியகோயில்முதலான அநேகம் கோயில்கள்தான் அர்ச்சாவதார பர்யந்தம் மாநஸாநுபவமாக அநுஸந்தித்து மக்நமநாவாய்ப் பின்பு ப்ராங்முகராய்ப்புறப்பட்டருள; அவ்வளவிலே வடுகநம்பியும் திருவடிநிலைகளிலே தெண்டன் ஸமர்ப்பித்துத் திருவடிநிலைகளைக் கொண்டுவந்து திருமுன்பே வைக்க; உடையவரும் கோலவடி நிலைகளைத் தொடுத்துப் புறப்பட்டு இப்பால் எழுந்தருளுகிறவளவிலே, * தொண்டர்குழாமெல்லாம் திரண்டுவந்து திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பிக்கக் கண்டு கடாக்ஷித்தருளி * புண்டரீகபாதத்தை அவர்கள்முடிக்கு தநமாக

ப்ரஸாதித்து ப்ரஸந்நராக்க; அவர்களும்கைங்கர்யோபகரணமான கநித்ரபிடகச் சாத்ரப்ர்ங்காதிகளை தரித்துக்கொண்டுஉடனேஸேவித்துக்கொண்டுபோர;

உடையவர் நீராட்டஞ்செய்தருளி ப்ராதரநுஷ்டாநஞ் செய்தருளியது.

அநந்தரம் அவ்வருகே எழுந்தருளி * குணதிசைபாதம்நீட்டின ப்ரதேசத்தைக்குறித்து ஸேவித்து, அநந்தரம் ஆதிகேசவப்பெருமாள்கோயிலுக்கு உத்தரதிக்காய் உத்தரகாவேரீ தீரமான தவராசன் துறையான தந்துறையிலேஇறங்கி தண்டகமண்டலாதிகளைக் கரையருகில் பரிசுத்தஸ்தலத்திலே வைத்து, அபரிக்ராஹ்ய தேசத்திலே ஆவச்யகமான திருமேனிசோதனையும் பண்ணி, உத்த்ர்தமான உதகத்தாலே யதா சாஸ்த்ரோக்தமாக (యతీనాన్తు చతుర్గుణమ్) (யதீநாந்து சதுர்க்குணம்) என்கிறபடியே, ம்ர்த்திகைக் காப்புசாத்தி, ஸ்ரீபாதம் விளக்கி அப்படியே திருக்கைகளும் விளக்கி, கண்டூஷம் செய்தருளி, சுத்தாசமநஞ்செய்தருளிப்ரணவத்தாலே தந்ததாவநம்செய்தருளி, புநஶ்ச கண்டூஷம்செய்தருளி, ஜலபவித்ர்தமான ஜலத்தாலே சுத்தாசமநம் செய்தருளி, ம்ர்த்திகாஸ்நாநார்த்தமாக, (மின்னு சோதி நவமணியும் வேயின் முத்தும் சாமரையும் பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும்) என்றும், * அகிற்குறடுஞ் சந்தநமும் அம்பொன்னுமணி முத்தும்மிகக்கொணர்ந்து திரையுந்தும்) என்றும், (దుగ్ధాబ్ధిర్జనకో జనన్యహమియం శ్రీదేవపుత్రీ వర శ్రీరఙ్గేశ్వర ఏతదర్హణమహం కుర్యామితి వ్యాకులా। చఞ్చచ్చామరచన్ద్రచన్దన మహామాణిక్యముక్తోత్కరాన్ కావేరీలహరీకరైర్వితనుతే పర్యేతి సా సేవ్యతామ్) என்றும் சொல்லுகிறபடியே அரங்கநகரப்பன் திருவருள்போலே ப்ரவஹிக்கிற திருக்காவேரியிலே முழுகி, அகமர்ஷணமும் அகமர்ஷண ஸூக்தத்தின்படியே செய்தருளி, (ధ్యాత్వాగ్ర గఙ్గాం హరేః పాదాత్ పతమానాం స్వమూర్ధని। ధ్యాయం దేవం పరం బ్రహ్మ యథాశక్తి నిమజ్య చ) என்னும்படி ப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு வல்லவளவும் அதிலே உள்புகுந்து * குள்ளக்குளிரக்குடைந்து நீராடி மெள்ளக்கரையேறி, (ఖణ్డద్వయం శిరశ్చాఙ్గం ప్రత్యేకం పరిమార్జయేత్) (கண்டத்வயம் ஶிரஶ்சாங்கம் ப்ரத்யேகம்பரிமார்ஜயேத்) என்கிறபடியே திருமுடி திருமேனிகளுக்கு தனித்தனியே திருவொற்றுவாடைசாத்தி, அநந்தரம்கடிஸூத்ரகௌபீந காஷாயங்களைதரித்து, கைங்கர்யப்படி திருமண்காப்பு சாத்தியருளி, ஜலபவித்ரபூர்வகமாக சுத்தாசமநம் செய்தரு

ளி, நித்யத்தில்படியே நித்யாநுஷ்டாநங்களையும் நிறைவேற்றி; அவற்றையும் ஸ்ரீரங்கராஜார்ஹமாகவே சிந்தித்து, அஷ்டாக்ஷர பூர்வகமாக காயத்ரீஜபம் செய்தருளினபின்பு,

திருவீதிகளிலுள்ள ஆசார்யபுருஷர்கள் ஸத்கரிக்க உடையவர் திருக்காவேரியினின்றும் மடத்துக்கெழுந்தருளியது.

(శ్రీరఙ్గరఙ్గశమణింకరుణానివాసం శ్రీవేఙ్కటాద్రిశిఖరాలయకాళమేఘమ్। శ్రీహస్తిశైలశిఖరోజ్జ్వలపారిజాతం శ్రీశంనమామిశిరసాయదుశైలదీపమ్) என்று புஷ்பத்யாக போகஜ்ஞாநமண்டபங்களையும் திக்குநோக்கி தண்டன்ஸமர்ப்பித்து, (క్షీరాబ్ధేర్మణ్డలాద్భానోర్యోగినాంహృదయాదపి। రతింగతోహరిర్యత్ర తద్రఙ్గమితికథ్యతే) என்கிறபடியே * ஒருகாலுடையதேரொருவனாய் * அரங்கமாநகரமர்ந்து கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுக்கு ப்ரீதியாகவே நித்யகர்மங்களை நீங்களும்செய்து போருங்கோள் என்று சிஷ்யர்களை யர்சாவிக்க, அவர்களும் அப்படியே க்ர்தக்ர்த்யர்களாய்வந்து திருவடிகளிலே ஸேவித்த வுடனே திருவடிநிலைகளை சாத்தியருளி (కృష్ణిపూతంన్యసేత్పాదమ్) என்னும்படி, வடக்குத்திருவீதியிடமே யெழுந்தருளி, நடுவீதியிலேபுக்கு, வீதியார எழுந்தருள, அவ்வளவிலே அவ்வவதிருமாளிகையிலுண்டான ஆசார்யபுருஷர்கள் திருவடிகளிலேபடிந்து ஸேவிக்க, அவர்களையும் ஸம்மாநித்து, அவ்வருகேசென்று, பெரியதிருக்கோபுரத்தையும், திருவாசலையும், திருமதிள்களையும் கண்ணாலேகண்டநுபவியா நின்றுகொண்டு, அத்தோடே ஒத்திருப்பதான மற்றப்ராகார கோபுரங்களையும் பாராநின்றுகொண்டு, ஓங்கி யுயர்ந்திருக்கிற திருமாளிகைகளையும் திருக்கண்சாத்தாநின்றுகொண்டு, அருளிச்செயலைப்பண்ணிசைபாட்டுவிண்ணப்பஞ்செய்வார், இயல்ஸேவிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், அவர்தம்தேவிமார், திருக்குமாரர்கள்வந்து விருப்பத்துடனே திருவடிகளிலே ஸேவிக்க, அவர்களை ஸவிநயராய் கடாக்ஷியாநின்றுகொண்டு, (ప్రాదక్షిణ్యేనగచ్ఛేత్) (ப்ராதக்ஷிண்யேநகச்சேத்) என்னும்படி-த்ரிவிக்ரமன்திருவீதியாலே ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸ்வநிவேசநமான மடத்திலே யெழுந்தருளி மலர்ப்பாதங்கள் விளக்கிகூர்மாஸநத்திலே யெழுந்தருளியிருந்து திருமண்காப்புச்சாத்த உபக்ரமித்தருள; அவ்வளவிலே ஸந்நிதியில் கைங்கர்யபரரானவர்கள்திருமுன்னிடந்துடைத்து தீர்த்தப்ரஸாதத்திருமண்கூடை, திருப்புல்கூடை, திருமஞ்சநகோஷ்டீ தொடக்கமானவற்றைக்கொண்டுவந்து ஸந்நிதியிலேவைத்து தண்டன்ஸமர்ப்பித்துநிற்க,

கோயில்முதலான திவ்யதேசத்தெம்பெருமான்களுடைய பவித்ரங்களைச் சாத்திக்கொண்டு திருமண்காப்புச் சாத்திக்கொண்டாரென்பது.

அநந்தரம், கோயில், திருமலை, பெருமாள்கோயில் தொடக்கமான திருப்பதிகளிலும் தத்ப்ரஸாதமாகவந்த திருப்பவித்ரங்களைத் திருமுடியிலும் திருக்கழுத்திலும் சாத்திக்கொண்டு, (స్నాతోధృతోత్తరీయస్తు సోత్తరీయఃపవిత్రవాన్। ప్రాగుదఙ్ముఖఆసీనః సుగన్ధాంమృత్తికాంసితామ్॥ వామేత్రిశోధితేహస్తే వాగ్యతఃప్రణవేనతు। నిధాయజలమాదాయ గన్ధద్వారేతిసేచయేత్॥ అస్త్రమన్త్రేణరక్షాఞ్చ కృత్వాదశసుదిక్ష్వపి। నృసింహబీజఞ్చలిఖేత్ రక్షార్థందోమశాస్త్రయే॥ తామేకీకృత్యతర్జన్యా స్పృత్వామమపదద్వయమ్। శతధారేతిమన్త్రేణ తీర్థతోయంవినిక్షిపేత్॥ తారమన్త్రేణసంమృజ్య మూలమన్త్రేణయోజయేత్। సప్తభిర్వైష్ణవైర్మన్త్రైర్మన్త్రయిత్వాయథావిధి॥ శ్రీశశ్రీభూమిగాయత్రీర్జప్త్వాతద్గతమానసః। ఉద్ధృతాసీతిమన్త్రేణ దేవంసంప్రార్థ్యవైవిభుమ్॥ హరేరిపాదాకృతింరమ్యం ఊర్ధ్వపుణ్డ్రంప్రకల్పయేత్। లలాటేకేశవాయేతి చతురఙ్గులమాయతమ్॥ ద్వ్యఙ్గులంత్ర్యఙ్గులంవాపి సాన్తరాళంప్రకల్పయేత్। కుక్షౌనారాయణాయేతి ధారయేత్తుదశాఙ్గులమ్॥ వక్షస్థలేమాధవాయ న్యసేదష్టాఙ్గులంతథా। గోవిన్దాయేతిమన్త్రేణ కణ్ఠేచచతురఙ్గులమ్। విష్ణుఞ్చదక్షిణేకుక్షౌ ధారయేత్తుదశాఙ్గులమ్। న్యసేదష్టాఙ్గులంబాహౌ దక్షిణేమధుసూదనమ్। త్రివిక్రమందక్షిణాంసే ధారయేచ్చతురఙ్గులమ్॥ వామనంవామకుక్షౌతు ధారయేత్తుదశాఙ్గులమ్। శ్రీధరంవామబాహౌతు న్యసేదష్టాఙ్గులంతథా॥ హృషీకేశంవామగళే ధారయేచ్చతురఙ్గులమ్। పృష్ఠేచపద్మనాభఞ్చ ధారయేచ్చతురఙ్గులమ్। దామోదరంగళేపశ్చాత్ ధారయేచ్చతురఙ్గులమ్। ఊర్ధ్వపుణ్డ్రస్యాన్తరాళే సారిద్రాంధారయేత్సదా। ధారణాదూర్ధ్వపుణ్డ్రస్య శరీరంమఙ్గళావహమ్) இத்யாதிப்படியே திருமண்காப்புச்சாத்தியருளுகிறபோது திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, கண்ணிநுண் சிறுத்தாம்பு, ஸ்தோத்ரரத்னங்களின் அநுஸந்தாநத்துடனே திருமண்காப்பும், ஸ்ரீசூர்ணகாப்பும், சாத்தியருளினவநந்தரம்,

உடையவர் திருமண்காப்பு சாத்திக்கொண்டவநந்தரம் பகவத்த்யாநஞ்செய்தருளினபடி.

(చతుశ్చక్రన్నమస్యామి కేశవంకనకప్రభమ్। నారాయణంఘనశ్యామం చతుశ్శఙ్ఖంనమామ్యహమ్॥ మాధవంమణిభఙ్గాభం చిన్తయామిచతుర్గదమ్। చన్ద్రభాసంచతుశ్శార్ఙ్గం గోవిన్దముపసంశ్రయే॥ విష్ణుంచతుర్హలంవన్దే పద్మకిఞ్జల్కసన్నిభమ్। చతుర్ముసలమబ్జాభం సంశ్రయేమధుసూదనమ్॥ అగ్నివర్ణంచతుఃఖడ్గం భావయామిత్రివిక్రమమ్। వామనంబాలసూర్యాభం చతుర్వజ్రంవిభావయే॥ శ్రీధరంపుణ్డరీకాభం చతుఃపట్టసమాశ్రయే। చతుర్ముద్గరమధ్యేమి హృషీకేశంతటిత్ప్రభమ్॥ పఞ్చాయుధంపద్మనాభం నమస్యామ్య

ర్ధ్వ్రోబిషేమ్। దామోదరం చతుఃపార్శ్వ విద్యుత్కోపనిభం భజే॥ ఊర్ధ్వపుణ్డ్రేష్వధిశ్రీశం నిత్యం ధ్యాయీత నామభిః। కేశవాద్యేషు పుణ్డ్రేషు మధ్యే ధృత్వా సుపావనమ్॥ హరిద్రాచూర్ణమైశ్వర్యం లక్ష్మీరూపమనుత్తమమ్। శ్రీర్లక్ష్మీః కమలా కాన్తా చ ద్మినీ కమలప్రియా॥ వృద్ధిదా ధారణాచర మోపాపద్మవాసినీ। సర్వలోకస్వామా తేతి నామభిః క్రమశోన్వహమ్॥ ధ్యాయీత పరమైకాన్తీ శరీరాత్మవిశుద్ధయే) இத்யாதிப்படியே த்யாநச்லோகமும் அநுஸந்தித்து, பொருந்தின திருவடிகளான * தென்னரங்கன் கழல் சென்னிவைத்து, * தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் பூண்டவன்பாளராய்த்தொழுது, * திருமாமகள் கேள்வனை திருவேங்கடமுடையானுடைய பூவார்கழல்களை, (கோலமாமென் சென்னிக்குன் கமலமன்னகுரைகழல்) என்றுசிரோபூஷணமாகதரித்து, * திருமாலிருஞ்சோலைநின்ற நலந்திகழ் நாரணனுடைய கனைகழல்களையும் அப்படியே * தொழுது * யமுனைத்துறைவரிணையடியாங்கதி பெற்றுடையராய் ஸேவித்து இப்படி ஸ்ரீயபதியான எம்பெருமானைத் தொடங்கி ஸ்வாசார்யபர்யந்தமாக குருபரம்பரையினடைவே எல்லார் திருவடிகளையும் ஸேவித்து,

உடையவர்தம் திருவாராதநமான பேரருளாளரைத் திருவடி விளக்கியருளி அழகியமணவாளன் மங்களாசாஸநஞ் செய்ய ஸந்நிதிக்கெழுந்தருளியது.

தம்முடைய திருவாராதநமான பேரருளாளன் திருமுன்பே எழுந்தருளி, (గురుపరంపరయా పరమగురుం భగవన్తం ప్రణమ్య) என்கிறபடியே குருபரம்பரா பூர்வகமாக, திருமந்த்ரத்தையும், சரணாகதியையும், அர்த்தஸஹிதமாக அநுஸந்தித்து, ஸாஷ்டாங்கதீர்க்க ப்ரணாமம் பண்ணி அநந்தரம், சரமச்லோகாநுஸந்தாநத்தாலே நிர்ப்பரராய், தமக்கு ஸாதநத்தில் அந்வயமில்லாமையாலே தத்கைங்கர்யரூப ஸமாராதநத்திலே தத்பரராய், (தூநீர்வண்ணமாமலர்கொண்டு விரையேந்தி) என்று சொல்லுகிறபடியே ஸமாராதநோபகரணங்களையும் ஸம்பந்நமாக்கி, தத்பூர்வபாவியாக (మనసైవార్చయేద్ధరిమ్) என்கிறபடியே மாநஸதிருவாராதநமும் செய்தருளி, அநந்தரம் தாம் செய்தருளின நித்யதிருவாராதநக்கட்டளையிலே திருவாராதநம் செய்தருளி பலாதிவஸ்துக்களையும் நிவேதித்தருளி, மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பித்து ஸாஷ்டாங்க தீர்க்கப்ரணாமம்பண்ணி, * வேதாந்த விஜ்ஞாநஸுநிஸ்சிதார்த்தரானதாம், சிஷ்யர்களுக்குத் பாஷ்யபாடத்தருவாய்தொடங்கி ப்ரவசித்து, சீக்ரமாக சேஷசாயியான பெரியபெருமாளைஸேவிப்பதாக சிஷ்யப்ரசிஷ்யர்களுடனே புறப்பட்டருளி, ஸ்ரீரங்கநாய்ச்சியாரைஸேவித்து நிங்க, காருண்யரூபையான பெரியபிராட்டியாரும்விசேஷகடாக்ஷம்பண்ணியருளி, தீர்த்தம் திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்து ஸத்கரித்தருள, (సీతామాశ్రిత్య తేజస్వీ) (ஸீதாமாச்ரித்யதேஜஸ்வீ) என்னும்படி அத்யுஜ்வலராய்ப்புறப்பட்டு ஆழ்வார்கள்பதின்மரையும் அப்படியே பணிந்து, பரமபதநாதனையும் ஸேவித்து, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, திருமங்கையாழ்வார்திருப்பணிகளாயுள்ள கோபுரம், திருமதிள், திருக்கொட்டாரம் தொடக்கமானவற்றையும் கடாக்ஷியாநின்றுகொண்டு, * அணியரங்கன் திருமுற்றத்தில்சென்று ஸ்ரீபலிபீடத்தருகே தெண்டன் ஸமர்ப்பித்து, உள்ளேயெழுந்தருளி, கோயிலாழ்வாரை வலம்செய்து, ஸேனைமுதலியாரையும் ஸேவித்து, அநந்தரம் ஸந்நிதியிலே அழகியமணவாளன் திருமண்டபத்திலேசென்று, பெரியதிருவடியைமுன்னிட்டுக்கொண்டு, பெரியபெருமாள்திருவடிகளிலே, (అనన్తాన న్తశయన పురాణపురుషోత్తమ। రఙ్గనాథ జగన్నాథ నాథ తుభ్యం నమోనమః) என்று ஸேவித்து, ஸ்ரீமத் பாதாரவிந்தபரிஸரத்திலேநின்று ஆபாதசூடம் அநுபவித்து, * அமலனாதிபிரான் * திருப்பள்ளியெழுச்சி * திருமாலைதொடக்கமான ப்ரபந்தங்களை அநுஸந்தித்துக்கொண்டு நிற்கிறவளவிலே, பெரியபெருமாளும், தீர்த்தம் திருமாலை, பரியட்டம், சடகோபன் முதலான வரிசைகளையும்ப்ரஸாதித்து விடைகொடுத்தருளி தம்முடைய செங்கோலையும் அங்குலீயத்தையும் ப்ரஸாதித்து ஸேநாதிபத்யத்திலே நியோகித்தருள;

நம்பெருமாளுக்கு ஸகல கைங்கர்யங்களும் காலகாலங்களிலே நடக்கும்படி பத்துக்கொத்திலுள்ளார்க்கும் கட்டளையிட்டருளியது.

உடையவரும் ரங்காதிராஜருடையஸ்ரீகார்யதுரந்தரரான ஏற்றந்தோற்ற உள்ளிலும் புறப்பட்டருளி பெரியதிருமண்டபத்திலே பெரியமதிப்புடனே எழுந்தருளியிருந்து, (సత్వైర్లోకస్య రక్షణ త్రాణసంహరకారణమ్। శ్రీమచ్ఛ్రీరఙ్గనాథస్య శాసనం శాశ్వతం పరమ్) என்கிற ஸ்ரீமத் ஸ்ரீரங்கராஜருடைய ஸ்ரீமச்சாஸநத்தின்படியே பெரியகோயில் கைங்கர்யம்பண்ணிப்போருகிற கோவணவர்க்குடவர், பட்டர்கள், ஸ்வாமிக்குஉடைவாளும் சட்டையும் எடுக்கும் * தோதவத்தித் தூய்மறையோருள்ளிட்டார், நம் மிராமாநுச முடையாரென்று அபிமாநிக்கும்படியான நாநாதேசத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள், பண்ணிலே பாடுவாரான விண்ணப்பம் செய்வார், தழையிடுவார், பெருமாளுக்குத் திருமஞ்சநமுமெடுத்துத் திருமாலையும் கட்டுவார்,

271

திருவாசல் காக்கும் ஆரியர்கள், பெருமாளுக்குத் திருவடிப்பந்தம்பிடித்துத், திருத்தோப்புச்செய்யும் ஸ்ரீபுண்டரீகருள்ளிட்ட பத்துக்கொத்திலுள்ளாரும், ஆசாரவ்ர்த்தங்கள் குறைவின்றியே பெருமாளுக்கு கைங்கர்யமாக நிவேதித்த கார்யத்துக்கு நல்லருமாய், நம் சடகோபன், கலியனுள்ளிட்டார்ப்ரபந்தங்களிலே பரிசீலநமுடையாரையும் மிகவும் க்ர்பை பண்ணிக்கொண்டு, கீழுக்தரானவர்களை அவ்வவ ஸ்ரீகார்யங்களிலே நியோகித்தருளி, இவர்களுக்குண்டான பணப்ரஸாதங்களும் நடக்கும்படி கட்டளையிட்டருளி,

பலவிதமான தொழிலாளிகளை ஏற்படுத்தியது.

பின்பு, ஸ்ரீகார்யத்துக்குப் பரிவரான திருவேளைக்காரர், திருப்படைவீட்டுக்குக் கடைக்காவலாக விருக்கும்பாடிகாப்பார், திருவீதிதோறும் ஆராய்ந்துபோரும் தலையாரிகள், திருவீதி செப்பனிடுவார், திருமஞ்சனவழி திருத்துவார், திருக்காவேரிக்கரைகாப்பார், சுற்றுக்கோயில் செப்பனிடுவார், பெரியகோயிலுக்குப் பலதொழிலான ஊழியம்செய்து போருவார், ஸுவர்ணரஜததாம்ர காம்ஸ்ய அயஸ்காரர், கடபடாதிநிர்மாணகாரரான குலாலாதிகள், ரதகோபுராதி நிர்மாணகாரானதக்ஷர், மண்டபாலய ப்ராஸாதாதிகளுக்கு உடலான பாஷாணபேதகரான தக்ஷர், மற்றும் ததநுகுணமான நிமந்தத் தொழிற்காரர், ப்ரதிமாதி நிர்மாணகாரானதக்ஷர், சித்ரக்காரர், ரதமண்டபாலங்காரங்களுக்கு உசிதமாகத் ததநுகுணவஸ்த்ரங்களை விவிதசித்ரமாக்குகைக்குத் துன்னர், விஸ்த்ராஞ்சகர், நாட்யம் பழக்குகிறநாட்யவர், நாட்யத்துக்கநுகுணமான நாரிகள், பலசரக்குகள் கோயிலுக்குக் கொண்டுவந்து சேர்க்கும் செட்டிவ்யாபாரிகள், கோயிலுக்கு பாலமுது நெய்யமுதுக்குடலாக மாட்டுத்திறமாராய்ந்து போரும் கோபாலர் முதலானரையும் அவ்வவ கைங்கர்யங்களிலே நியோகித்து அவர்கள் பெறும்பேறுகளான கணக்கரையும் விசாரித்து.

அநந்தரம் சோழநாட்டில் வடகரை, தென்கரை, கீழைமாகாணம், மேலை மாகாணம், திருவிடையாட்டங்களிலே பொன்னும், நெல்லும் பொலிவுடனே செல்லும்படியையும் கணக்கின்படியே ஆராய்ந்து கணிகரைக்கொண்டு பரிகணிப்பித்து தாலபத்ரத்திலே லிகிப்பித்து, சென்றவகைக்குப் பத்துமுறியும் தம்முடைய திருவெழுத்து முன்னாகவே கொடுப்பித்து, அநந்தரம் நாநாதேசத்திலும் வந்திருக்கும் கோதூமசாலியவமாஷமுத்கதிலசணகர்திகளான பலபண்டங்களும், மரீசி ஜீரகஸர்ஷபலவணம் முதலான ஸம்பார த்ரவ்யங்களையும், * திருவருட்கமு சொண்பழுத்தது போலே யான அதில் அஷ்டபாகக்ரமுகத்தையும் ஸம்பந்நமாக்கி அங்குத்தைக்கு உசிதமான ([illegible]) என்று அவற்றையும் அங்குத்தைக்கு அஷ்டதிவஸத்துக்கொருக்கால்வரும்படி ஆராய்ந்து, கர்ப்பூர கஸ்தூரி காச்மீரம்ர்கமதம், ஹிமநீரம், ஏலாலவங்க தக்கோலஹாரித்ரம் முதலானவைகளும் அழைப்பித்துப் பேழைகளிலே சேர்ப்பித்து, சந்தநபாரத்தைஎங்கும்நிரப்பி, (முத்தும்மணியும்வைரமும் நன்பொன்னும் தத்திப்பதித்து) என்னும்படி நாநாரத்நங்களாலும் விசித்ரமாகச்செய்துபோரும் பலவான திருவாபரணங்களினிடையாட்டமாராய்ந்து, ([illegible]) என்றும், * பொன்னொத்தவாடை * பொன்னிறவாடை என்னும்படியானவற்றை தரிக்கும் வஸ்துவுக்கு, கார்ப்பாஸதந்துக்ர்தவஸ்த்ரம், ஊர்ணநாபீதந்துக்ர்த வஸ்த்ரம், அதில்நாநாவர்ணமானவஸ்த்ரங்கள், அதில் கௌஸும்பஹேமவிரசிதவஸ்த்ரம், முக்தாஸந்தர்ப்பஸம்யுக்தமானவஸ்த்ரம், அப்படியேயான முத்தின்குடை, அதின்படியேயான குல்லாமுதலானவைகளும், இப்படி * வரைச்சந்தநக் குழம்பும் வான்கனலும் பட்டும் விரைப்பொலிந்த வெண்மல்லிகையும் நிரைத்து, இனி திருமடைப்பள்ளிக் குடலான கிலாக்குப்பல் போலே யிருக்கிற தண்டுலராசி, ஸுவர்ணம்போலே யிருக்கிறஸூபராசி பநஸாம்ரகதளீநாரிகேளகாரவல்லி கபித்தவ்ர்ந்தாகாமலகாதி பலபலவ்யஞ்சந ராசிகளையும், ஸர்வபலப்ரதவஸ்துவுக்குண்டாக்கி கந்தமூலாதிகளையும் அழைப்பித்து, கீழ்ச்சொன்னவைகளெல்லாம் சமையும்படி அஜ்ஜீர்யங்களான காஷ்டபாரங்களையும் காலாநுகுணமாக அழைப்பித்து, அவற்றை கோஷ்டாகாரப்ரதேசத்திலே ஸர்வதோபமமாக சேர்த்து த்துவைத்துப் போக சதுரராய் நாய்ச்சியார் பரிசரமாய்ப் போருகிற திருவெள்ளறையில் பங்கயச் செல்விபரிகரமானவர்களையும் கொண்டு, சதுர்விதாந்நமாகச் சமைக்கும்படி கட்டளையிட்டு,

அப்படி சமைத்தவுடனே ஸரஸமாய்ப்படைத்து நீட்டும்படி க்ஷீராஜ்ய சர்க்கராதிகளும், (தூங்குண்பலவின்கனி தொகுவாழையின்கனியோடு மாங்கனி) என்னும்படியான பலத்ரயவர்க்கத்தையும் ஸபலமாம்படி யிடுவித்து, (* அப்பங்கலந்த சிற்றுண்டி) (கன்னலிலட்டுவத்தோடுசீடை காரெள்ளினுண்டை) * பேர்த்தும் பெரியன அப்பந் தொட்க்கமான திருப்பணியாரவர்க்கத்துக்கு உடலாகதண்டுலாதியான பலபண்டங்களும், கண்டசர்க்கரைசமையும்படி நெய்யமுதும்விட்டு, இப்படி திருப்பவளத்துக்

கினிதான்வை சமையும்படியும் ஆராய்ந்து, அநந்தரம் ச்ரவண ஸுகமாகவும் த்ர்ஷ்டிப்ரியமாகவும், (முன்னல்யாழ் பயில்நூல் நரம்பின்முதிர்சுவையே) என்று-காநஸ்வரூபியானவனுக்கு அநுகுணமாக ச்ராவ்யமாய், நாநாவிதமான யாழ், குழல், வீணை, கிந்நரி, முகவீணை வாசிப்பாரைக் கட்டளையிட்டு, மண்டபக் கொத்திலுள்ளாரையும் * பல் நடம் பயின்றுடும்படி கட்டளையிட்டு, அநந்தரம், காலவிதாயகர்சொன்ன காலங்களுக்கு அநுகுணமாக கைங்கர்யங்களை ஆராய்ந்து, திருப்பணி திருவாராதநச் செலவுபோக நீக்குண்டாவ தனங்களைக் கருகூலத்திலே சேமிப்பித்து, அவ்விடங்களுக்கெல்லாம் தம்முடைய திருவாழி முதலான பலவிலச்சினையும் இடுவித்து அரண்செய்து, அநந்தரம் கருகூலத்திலுண்டான கைவழி, திருவாபரணம், திருப்பரியட்டம் முதலானவை நன்ருகசோதித்து, பரிஹாரமாக வைப்பித்து, அநந்தரம், திருமாலைப்பலகையிலே யெழுந்தருளி நாநாவிதங்களாலே கட்டின கலம்பகன் திருமாலை நாநாவர்ணங்களாலே வகைந்து கட்டின வைஜயந்திமாலை நீட்டுவாரையும், திருமஞ்சந அறையிலும் ஏலாதிஸம்ஸ்க்ர்தமான திருமஞ்சநம் நீட்டுவாரையும், அப்படியே சாத்துப்படி திருத்துமிடங்களில் நின்று மர்த்திச்சு சாத்துப்படி நீட்டுவாரையும், கநஸாரஸஹிதமான அடைக்காயமுது அடிக்கடி நீட்டுவாரையும், கடாக்ஷித்துக்கொண்டு,

கைங்கர்யோபகரணமான சத்ரசாமர தாலவ்ர்ந்த பதத்க்ரஹ காளாசிகாதிகளையும், கநகப்ர்ங்காரஸ்வர்ண கடாஹிகளையும், படைத்து நீட்டுகிற ஸ்வர்ணரஜத பாத்ரங்களையும், அதின்படியேயான படிக்கம், குத்துவிளக்கு, திருமுன்வட்டில்கள், ஸ்வர்ணதண்டாதிகளையும்கண்டு களியா நின்றுகொண்டு இப்பால் எழுந்தருளி, ஸ்வர்ணரூபமான ஸுபர்ணாநந்தாச்வாதி வாஹநங்களையும் வந்தியா நின்றுகொண்டு இப்பால் இருவருமானசேர்த்திக்கு இனியபேச்சுகள் பேசுகிற சுகசாரிகாதிகளையும் ஆராய்ந்து அவற்றின் இனிய பேச்சுக்களையும் கேளாநின்றுகொண்டு, இப்பால் ஆடுவார், பாடுவார், ஸுவர்ணபேர்யாதி வாத்யங்கள் கொட்டுவார், அத்தாலே பண்ணப்பட்டகாஹளாதிகள் ஊதுவாரிருக்கிறகோலாஹலங்களையும் * வெள்ளை விளிசங்கின் பேரரவத்தையும் கேட்டுக்கொண்டு மெள்ளத் திருமடைப்பள்ளி யருகே எழுந்தருளி, திருப்பணியாரங்கள் நன்ருகச் சமைக்கும்படியையும், திருப்போனகம் சமைக்கும்படியையும், கறியமுது சமைக்கும்படியையும், அவைஸஸ்நேஹ ஸம்பார பரிதமாக்கி அவைகட்டி நீட்டும்படியையும், நியமியா நின்றுகொண்டு, வ்யஞ்சநபண்டாரத்தருகே யெழுந்தருளி, அவற்றின் புஞ்சங்களையும் அவலோகித்து, மஞ்சுளமானவற்றில் அஞ்சநாபராய், (நெய்ச்சுவைத்தேறல்) என்னும்படியான ஸாரஸவஸ்துவுக்குகப்பாகத்தொட்டியிலே நெய்யமுது நிறைந்திருக்கும்படியையும், அவற்றை ஆராய்ந்து உருக்கி அளந்து உள்ளேவிடும்படியையும் ஸம்பாரவர்க்கம் திருத்தும்படியையும் கறியமுது திருத்தும்படியையும் ஆராய்ந்து,

அநந்தரம் இப்பால் சுற்றுக்கோயில்களுக்கு அமுதுபடி, பருப்பமுது, கறியமுது, நெய்யமுது, ஸம்பாரவகைகளும், வெடிவோறே விட்டபடிகளுமாராய்ந்து, திருக்கொட்டாரத் தருகே எழுந்தருளி அமுதுபடி பருப்பமுதுகள் அளக்கும்படியையும், அவலமுது இடிக்கும்படியையும், அவைபொரியமுதாகப் பொரிக்கும்படியையும் பராமர்சித்து, இப்பால் களஞ்சியங்களினருகே திருவரங்கனுக்குத் தகுதியாகத் திருவரங்கன் என்கிற நெல்லும், ஸ்ரீரங்கராஜர் போகத்தளிகைக்குத் தகுதியான ராஜாந்ந நெல்லும், நம்பெருமாளுக்குத் தகுதியான சம்பாநெல்லும், * என்திருமகள் சேர் மார்பனுக்குத் தகுதியான * சீரார் செந்நெல்லும், சேஷசாயிக்குத் தகுதியான * வரம்புற்ற கதிர்ச் செந்நெலான * செஞ்சாலிநெல்லும், மற்றும் பகவத் போக்யமான பஹுவ்ரீஹிவர்க்கஸமூஹங்கள், இதுக்குமேலே கோதூம மாஷமுத்கதிலாதிகளான இவை எல்லாம்அளந்து களஞ்சியங்களிலே சொரியும்படி நியமித்து அப்படியே செய்கிற அவற்றின் ஆரவாரமும் கண்டு கேட்பதாய்க்கொண்டு, நாய்ச்சியார்கோயில் தொடக்கமான சுற்றுக்கோயில்கள் திருச்சுற்றுக்கள் திருவலகு, திருப்பணி, திருவிளக்கு, திருமாலைகள் முதலானவைகளையு மாராய்ந்து,

அநந்தர்ம், (பாலென்கோ) என்கிற வஸ்துவின் * தித்திக்கும் திருப்பவளச் செவ்வாய்க்கு இனிதாகப் பாலமுது சுரக்கும் திருச்சுரபிகளுக்கு, பாலமுது ஸ்ரவிக்கும்படிக்குகருப்பஞ்சாற்றை முன்புபோலே பருகுவிக்கும்படி ஆராய்ந்து, அநந்தரம் தளிகைக்குறுப்பாக தாய பாரங்களை பரித்துக்கொண்டு போரும் எருதுகள், எழுந்தருளும்போது அலங்காராவஹமுமாய் மங்களாவஹமுமான துரங்கமாதங்காதிகளையும், மங்களாவஹமுமாய் பாவநமுமாய் அத ஏவ காட்சிக்குறுப்பான கபிலதேநுவையும் ஆராய்ந்து, அவற்றுக் குறுப்பானவைகளையு மாராய்ந்து, கீழ்உக்தரானக்ரியாகாரகராலே நிர்மிதமான நாநாவிதமான க்ரியைகளையெல்லாம் பரீக்ஷாமுகேநகடாக்ஷியாநின்றுகொண்டு மிகவும் பெரிய திருமண்டபத்திலே எழுந்தருள, அவ்வளவிலே நாழிகைவட்டில் காரர்வந்து ஷோடசகடிகை யாச்சுதென்று விண்ணப்பஞ்செய்ய; இதகேடு

ர்வமான ப்ராதஃகாலத்திலே, பெரிய பெருமாள் மங்களகீத-வாத்யத்துடன் திருப்பள்ளியுணர்த்த மங்களவஸ்துக்களும் கண்டருளி * சிற்றஞ்சிறுகாலே ஆனைமேல் * பூரண பொற்குடத்திலே அலங்காரத்திருமஞ்சநம்வர, பாஞ்சராத்ர தந்த்ரஜ்ஞரான அர்ச்சகமுகேந சிறுகாலைத் திருவாராதநமும், குறைவறக்கொண்டருளி சிறுகாலைச்சந்தியும் நிறைய அமுதுசெய்தருளி, அநந்தரம் பெரிய திருவாராதநம் தொடங்கிநடக்க, அதுக்குடலாக * பேராளன்பேரோதும் பெரியோர், தம்பிரான்மார், பட்டவர்க்கம், இயலிசை வேதவிண்ணப்பம்ஸேவிக்க,எம்பெருமானடியார்களும் நிரைநிரையாகநின்று திருநாமம் ஸேவிக்க, மங்களவாத்யங்கள் எங்குமுழங்க, தூபதீபாதியான ஷோடசோபசாரங்களும் நடந்து இப்படி பெருக்கத்துடனே கண்டருளின் அநந்தரம்.

கீழ், தளிகைக்கான அனைத்துவகைகளும் அலங்காரத்துடனே ஆயிரம்வகையாகத்திருமுன்பே நீட்ட பெரிய திருவந்திக்காப்புக் கொண்டருளின வநந்தரம், மீளவும் உள்ளே தம்பிரான்மார் ஸரஸமாகக் கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலான பாட்டுகள் ஸேவிக்க, தளிகை மேலுக்கு சிலர் நெய்யமுது பரிமாற, சிலர்திருவெண்சாமரம்பரிமாற, திருக்குடக்கையார் திருவொற்றுவாடையுடன் கர்ப்பூரத் தண்ணீரமுது வணக்கத்துடன் அடிக்கடி நீட்ட, இப்படி பெரியமேன்மையோடே பெரியஸந்தியும் அமுதுசெய்தருளி * திருவரங்கச்செல்வரும் பலிப்ரஸாதிக்க, ஸ்வர்ணமயமான திவ்யவிமாநத்திலே ஏறியருளி சதுர்க்கதியுடன் நடந்தருளும்படி ஸாவதாநத்துடன் ஸமர்த்தரானவர்கள் ஸ்ரீபாதம் தாங்க, முக்தாதபத்ரம்பிடிக்க, சஞ்சத்தான சாமரம்பரிமாற, * வெண்துகிற்கொடி * ஆடுபுட்கொடி * குரக்குவெல்கொடி தொடக்கமான அநேகம் கொடிகள் பிடிக்க, திருமுன்பந்தமான பகல்பந்தம் பிடிக்க, பலபல இயங்களார்ப்ப, (అరతోరత్నధ్వామేతి శంఖభేరీతూర్య ధ్వనైః) என்கிற * காளங்கள் வலம்புரிகளான மஹாராஜ சிஹ்நங்கள் ஆர்ப்ப, அந்த ஆரவாரத்துடன் புறப்பட்டருளி, * அணியரங்கன்திருமுற்றத்திலே தாளமத்தளத்துக்கநுகுணமாக அபஸராங்கனைகளுடைய ஆடல்பாடலோடே அப்பாலே எழுந்தருளி பலிபீடத்திலே பலியும் ப்ரஸாதித்து, இப்பால் உள்ளேமீள ப்ரதக்ஷிணமாக எழுந்தருள, அந்தக்ஷணத்திலே அமுதுசெய்தருளின தளிகை வகைகளெல்லாம் ஸ்தலாந்தரத்திலே மாற்றுவித்து, அவற்றில் விசேஷமான அலங்காரத் தளிகை அபூபவர்க்க பாயஸாதிவர்க்கத் தளிகைகளெல்லாம் சேஷாசநருக்கு நீட்டுவித்து, அவர் அமுதுசெய்தருளினவுடனே, தாம் கடைகட்டி

விட்ட தளிகைவகைகள் எல்லாம் கொண்டுவந்து தம்முடைய திருமுன்பேவைக்க, இப்படி வைத்த அஸங்க்யாதமான அபூபாதிவர்க்கங்களையும், சுத்தோதநாதி தளிகை வர்க்கங்களையும் * (நூறுதடாவில் வெண்ணெய்) (நூறுதடாநிறைந்தவக்கார வடிசில்) (வைத்தநெய்யும் காய்ந்தபாலும் வடிதயிரும் நறுவெண்ணெயும்) என்று உக்தமானவைக ளெல்லாவற்றையும் திருக்கண்சாத்தி, இவற்றைக் குறியழித்திட்டு வைத்தாலாகாதோ என்று வெறுத்தருளிச்செய்து, பின்பு தீர்த்தமும் ஸ்வீகரித்து, ஆமலகப்ரமாணம் க்ர்பாதத்தமாய்வந்த ப்ரஸாதஸ்வீகாரமும்செய்து, இவைகளையெல்லாம் ப்ராப்தியடைவேவிநியோகிக்கும்படி விதேயரானவர்களை நியமித்து, பின்பு பெருமாளை ஸேவித்து, அங்குத்தையில் அநுமதியுடனே மடமே யெழுந்தருளப்புறப்பட்டருள, கோயில் கொத்திலுண்டான அனைவரும் பின்தொடர்ந்துவர அவர்களையும் தத்தத்பரிசர்யைகளிலே ஆஜ்ஞாபித்து நிறுத்தியருளிமடமே எழுந்தருளி, அங்கே ஒரொரு ப்ரதேசங்களிலே சப்ததர்க்கம் பின்னையும் ஒரு ப்ரதேசத்திலே பூர்வோத்தர மீமாம்ஸைகளை ப்ரதிபக்ஷ நிரஸநத்துக்கு உறுப்பாக அப்யஸிப்பார், மற்றொரு ப்ரதேசத்திலே ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களாலே வேதத்தில் பூர்வோத்தரபாகங்களில் அர்த்த நிஸ்சயம்பண்ணுவார், வேறொரு ப்ரதேசத்திலே வேதங்களையும், தது பநிஷத்துக்களையும் உருச்சொல்லுவார், ஓதுவிப்பார், ஓதுவார், பின்னையும் ஒரு ப்ரதேசத்திலே அருளிச்செயல்களையும் அப்படியே ஓதுவார் ஓதுவிப்பாராய், ததர்த்த நிர்ணயம் பண்ணுவார், திருமந்த்ராதி ரஹஸ்யார்த்த நிர்ணயம்பண்ணுவார், ஸ்ரீபாஷ்யசிந்தனைபண்ணுவார், வேறொரு ப்ரதேசத்திலே அநந்யகதிகளாய் அவருடைய அங்கீகாரத்தை அபேக்ஷித்துக்கொண்டிருப்பார், அதுக்குமேல் ஒரு ப்ரதேசத்திலே ஜிதேந்த்ரியரான ஜீயர்களும் அவர்களுடையசிஷ்யரானவர்களும் நெருங்கிராமாநுஜ நாமாஞ்சிதிவ்ய ப்ரபந்தாநு ஸந்தாநபராயிருக்க, இப்படி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயாலேகிபிடிதமாய் அவர்களுடைய பஹுவிதமான அநுஸந்தாந மஹாகோஷமானது நடந்து செல்ல, இவற்றையெல்லாம் ஆதரத்துடனே அவலோகியா நின்றுகொண்டு திருச்செவி சாத்தா நின்றுகொண்டு உள்ளே யெழுந்தருளித் திருமஞ்சநச்சாலையிலே ப்ரவேசித்தருளி, ஸ்ரீபாதம் விளக்கி, கண்டூஷபூர்வகமாக சுத்தாசமநம் செய்தருளி, மாத்யாஹ்நிகக்ர்த்யமும் நடத்தியருளி, பகவத்ஸந்நிதியிலே எழுந்தருளி இருக்க;

கீழுக்தரான பகவத்பாகவதர்கள் எல்லாம் ஸங்கம் ஸங்கமாகவந்து தச்சரணாரவிந்தங்களிலே ஸாஷ்டாங்க தீர்க்கப்ரணாமம்

பண்ண, அவர்களை கருணாகடாக்ஷத்தாலே ஈக்ஷித்தருளி, திவ்ய ஸூக்தி அம்ர்தங்களாலும் ஸந்துஷ்டராக்கியருள, அவ்வளவிலே பகவத்ஸம்பந்தத்தை அபேக்ஷித்துக்கொண்டு ஆஸ்திகராயிருப்பார் அநேகர் திருவடிகளிலே ஆச்ரயிப்பதாக, (வந்துசூழ்ந்து படுகாடுகிடப்ப) என்கிறபடியே ஸேவித்துக்கொண்டுகிடக்க அவர்களையும் அப்படியே (యంయం స్పృశతి పాణిభ్యామ్) (யம்யம்ஸ்பர்ஸதிபாணிப்யாம்) என்கிறபடியே, திருக்கைஸ்பர்சம்தொடக்கமானபஞ்சஸம்ஸ்காரங்களையும் செய்தருளி, பரிசுத்தராக்கி, திருவடிகளோட்டை ஸம்பந்தத்தாலே ஸம்ஸாராதுத்தீர்ணராம்படி அபிமாநித்து, அநந்தரம் ஸந்நிதியிலே எழுந்தருளி ஸாஷ்டாங்கதீர்க்க ப்ரணாமாதிகளைப்பண்ணி, திருவாராதநக்குறைகள் எல்லாம் தாமிட்டருளின நித்யத்தின்படியே நிறைவேற்றி, பேரருளாளப்பெருமாள் பெருக்க அமுதுசெய்தருளின தளிகைமாற்றின அநந்தரம், கைங்கர்ய சேஷத்தையும் மந்த்ரபுஷ்ப ஸமர்ப்பணபர்யந்தமாகப் பூரித்து அநந்தரம் சையாஸநத்துக்குறுப்பாக ச்ராவ்யமான ஸ்தோத்ரங்களையும் அநுஸந்தித்து தண்டன் ஸமர்ப்பித்து நிற்கிறதசையிலே தேசாந்தரிகளாய் திருமலை பெருமாள்கோவில் முதலான திவ்ய தேசங்களிலும் ஸ்ரீகார்யார்த்தமாகஎழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களிடையாட்டம் ஆராய்ந்து அவர்களுக்கும், தமக்கபிமத சிஷ்யரானவர்களுக்கும் தீர்த்தமும் ப்ரஸாதித்தருளி ஸ்வதீர்த்தம் ப்ரார்த்தித்தவர்களுக்கும் அப்படியே ஆதர பூர்வகமாக ப்ரஸாதித்தருளி அவர்களையும் கூட்டிக்கொண்டு பகவத்யாகாநந்தரம் பாவிதமான அநுயாகம் செய்வாராக எழுந்தருளியிருக்க, அவ்வளவில் ஸ்தலசுத்திபண்ணி தளிகைபரிமாறின அநந்தரம், கிடாம்பியாச்சான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிவுடன் பரிமாற பரிஷேசநம்செய்தருளி, தீர்த்தமும் அமுதுசெய்தருளி, ஸ்ரீவைஷ்ணவர்களையும் அப்படியே நியமித்தருளி, தாமும் த்வயாநுஸந்தாநத்துடனே இவர்கள் சேர்த்தியிலே கூடியிருந்து அமுதுசெய்தருளி அநந்தரம் அந்வாசந தீர்த்தமும் அமுதுசெய்து திருக்கைமாற்றுதநியருக்கு (త్వదీయభుక్తోజ్ఝితశేషమ్) (த்வதீயபுக்தோஜ்ஜிதசேஷம்) என்றும், (போனகம்செய்தசேடம்) என்றும், சொல்லுகிற ஸுபாவநமான திருத்தளிகை ப்ரஸாதமும் ப்ரார்த்தநா பூர்வகமாக ப்ரஸாதித்து, திருக்கைவிளக்கி கண்டூஷணாநந்தரம், சுத்தாசமநம் செய்தருளி, மாத்யந்திந அர்க்க்யப்ரதாநமும் செய்தருளி,

அநந்தரம்யமுனைத்துறைவர் என்கிற திருமண்டபத்திலே யோகபீடத்திலே எழுந்தருளி இருந்து (హృదయేష్టదళేపద్మే అష్టాక్షరసమన్వితే। సూర్యసోమాగ్నిబిమ్బాన్తే జ్ఞానపీఠేసునిర్మితే॥ ఉత్ఫుల్లపుణ్డరీకాక్షం తప్తహాటకసన్నిభమ్। మన్దస్మితముఖామ్భోజం కరుణాపూరితేక్షణమ్॥ కిరీటహారకేయూరస్ఫురన్మకరకుణ్డలైః। శ్రీవత్సకౌస్తుభాభ్యాఞ్చ వైజయన్త్యాచభూషితమ్॥ పీతామ్బరంచతుర్బాహుం శఙ్ఖచక్రగదాధరమ్। మాణిక్యనూపురోద్దామ గఙ్గాసఙ్గిపదామ్బుజమ్॥ కోటికన్దర్పసౌన్దర్యం కోటిసూర్యసమప్రభమ్। ప్రసన్నమూర్తింవరదం సచ్చిదానన్దవిగ్రహమ్॥ అనన్తదివ్యకల్యాణ గుణరాశివిభూషితమ్। లక్ష్మీసమేతంశేషాది సూరిభిఃపరివారితమ్॥ ధ్యాత్వాచైవ మాకారం మనసాధారయేన్ముదా। తత్పాదపద్మనిష్యన్ద సుధానుభవతత్పరః) என்றும் (శఙ్ఖచక్రగదాపద్మ లక్ష్మీకౌస్తుభలక్షణమ్। ప్రసన్నవదనంసౌమ్యం పద్మపత్రనిభేక్షణమ్॥ పీతామ్బరధరంచారు వనమాలావిభూషితమ్। శుద్ధస్ఫటికసఙ్కాశం జ్ఞానమయమవ్యయమ్॥ నిష్కలన్నిరవద్యఞ్చ నిర్గుణంమద్గుణాశ్రయమ్। అన్యత్సర్వగతంసూక్ష్మ మప్రతర్క్యమనామయమ్॥ అశబ్దమక్షయంనిత్యం నిర్వికల్పంనిరఞ్జనమ్। అతీన్ద్రియమనిర్దేశ్యం నామరూపవివర్జితమ్॥ విజ్ఞానమయమానన్ద మజమగ్రాహ్యమచ్యుతమ్। వాసుదేవాఖ్యమవ్యగ్ర పరమంబ్రహ్మశాశ్వతమ్॥ ఇత్థంమూర్తంస్వకంసూక్ష్మం భక్తోవ్యక్తేనచిన్తయేత్। యదాభక్తోద్వయంయాతో రూపాదిర్వ్యాపిదేహినః॥ తదైవభావయేద్వ్యక్తో మనఃప్రత్యక్షతాంహరిః। సన్తతంచిన్తయేద్విష్ణుః యోగయుక్తోగతక్లమః) என்றும் (నాగభోగేసమాసీనం భగవన్తంపరాయణమ్) என்றும் பரத்தாபரயவஸ்துவை யோகத்தாலே அநுபவித்து பின்பு (యత్పదామ్భోరుహధ్యాన) (யத்பதாம்போருஹத்யாந) என்று குருபதாம்புஜத்தையும் நெடும்போது த்யாநித்துக்கொண்டிருந்து,

அநந்தரம் ஆச்ரிதரிடத்திலே திருவுள்ளஞ்சென்று விசேஷித்து அன்று ஆச்ரயித்தவர்களுக்குதீர்த்தப்ரஸாதங்கள் ப்ரஸாதிக்கும்படி நியமித்து, மற்றுமுண்டானவர்களும் ப்ரஸாதஸ்வீகாரம்செய்தபடியை ஆராய்ந்து, பின்பு எல்லாரும் போந்தாரோ என்று கேட்டருளி, எல்லாரும் யதேஷ்டம் அமுது செய்து ஸந்துஷ்டராய் ஸந்நிதியிலே ஸேவித்துக்கொண்டிருக்க தாமும் ஹ்ர்ஷ்டராய்ஹர்ஷத்துக்குப்போக்குவீடாகப் பெரியபெருமாளுடைய வீரசரிதமான ஸ்ரீராமாயணம் திருச்செவிசாத்தத் திருவுள்ளமாய் இதிஹாஸஞ்ஞானபட்டரையும் சிராமப்பிள்ளையையும் படிக்கும்படி நியமித்தருள அவர்களும், (அகாயதாம்) (సంశ్రవేమధురంవాక్యమ్) என்னும்படி உடையவரையுடையாராகையாலே, கிளி பூவை குயில்மயில் என்று ஸாம்யத்தை யுடையராய் ஆலாபியாநின்றுகொண்டு (கூஜந்தம்) என்று கோகிலம்போலே செவிக்கு இனிதாக ச்ரவிப்பிக்க, (సభుజిత్వాతన్నరశ్రేష్ఠః గీతంమాధుర్యముత్తమమ్। తన్త్రీలయసమాయుక్తం త్రిస్థానకలయాన్వితమ్॥ సత్కృతంలక్షణోపేతంసమతాళసమన్వితమ్। శుశ్రావరామచరితం యస్మిన్ కావ్యేయథాకృతమ్॥ తాన్యక్షరాణిసత్యాని యథావృత్తానిపూర్వశః। శ్రుత్వాపురుషశార్దూలో విసంజ్ఞోబాష్పలోచనః॥ సముహూర్తమివాసంజ్ఞో నిశమ్యచముహుర్ముహుః। సంప్రత్తేమివతత్సర్వం తస్మిన్ గీతేప్రశుశ్రువే॥ పదానుగాశ్చయేరాజ్ఞ స్తాంశ్రుత్వాగీతసమ్పదమ్।

279

అవాఙ్ముఖాశ్చదీనాశ్చ ఆశ్చర్యమితిచాబ్రువన్ ॥ పరస్పరఞ్చ తేతత్ర సైనికాస్సంబభాషిరే । కిమిదంకథ్యతాం వస్త్రాతః కిమేతత్స్వప్నదర్శనమ్ ॥ అర్థోనః పురతోదృష్ట స్తమాశ్రమపదేప్రభుః । శ్రుణుమః కిమిదంస్వప్నే గీతమేవాశ్రయోఽభవేత్ ॥ విస్మయన్తే హ జగ్మత్వా శత్రుఘ్నమిదమబ్రువన్) என்று ராமாநுஜனை சத்ருக்நாழ்வானும், அவர் ஸேனையும் விஸ்மயத்துடன் குசலவர்கள் பாட்டால் ஸ்ரீராமாயணம் கேட்டாப்போலே, *ராமாயணமென்னும் பத்திவெள்ளங்குடிகொண்டகோயில் இராமாநுசனை இவரும் சிஷ்யர்களுடன் விஸ்மயராய்க்கொண்டு விக்ர்தராய் அநுபவபாரவச்யத்தாலே ஆநந்தாச்ருக்களுடன் எல்லார்க்கும் அநுபாவ்யராய் எழுந்தருளியிருந்து, ததிதரபோக்யவஸ்துக்களையும் எண்ணாதே ததேகபாராயிருக்க;

அநந்தரம் ஸாயங்காலமானவாறே ஸர்வாநுஷ்டாநங்களும் தீர்ந்து, திருமுன்பே யெழுந்தருளி ஸாஷ்டாங்க தீர்க்கப்ரணாமம்பண்ணி, (స్థిత్వార్ఘ్యంధ్యానవేదవ్యాత్ ధ్యాత్వాదేవంజపేన్మనుమ్)என்றும் (జపసఙ్ఖ్యానుగణనవ్యాహారేణపవిత్రితమ్) என்றும் அஷ்டாக்ஷராநுஸந்தாநபூர்வகமாக காயத்ரீஜபமும் செய்தருளி, அநந்தரம் ஸந்நிதியிலே ஸேவித்து, திருப்பல்லாண்டு தொடங்கியருளி, மற்றுமுண்டான நித்யாநுஸந்தாநம் ஸேவிக்கும்படி சிஷ்யர்களை ஆஜ்ஞாபித்து, அநந்தரம் பெரியபெருமாளிடத்திலே ப்ரவணராய், கோயிலிலே ஸாயங்காலத்திலே ஸேவிக்கிறவேளையிலே சென்று ஸேவித்து, (அன்பேதகளி) என்றுதொடங்கி, (ஞானச்சுடர்விளக்கேற்றினேன்)என்றும் (పరస్నేహభృతోయుక్త్యా ధృతిదీపః)என்றும்சொல்லும்படியான தம்முடைய ஸ்நேஹமாகிற*நெய்த்த அன்படியாக நெய்யாலே எங்கும்பளபளக்கத் திருவிளக்கேற்றி,ஸந்நிதியிலே பொற்றிருக்குத்துவிளக்குகளும்,ஸந்தம்புழுகு நெய்யோடே கூடின புத்துருக்குப்பசுவின்நெய்யும் பரிமாறியெரியும்படி கற்பித்தருளி, *உருக்காட்டும் அந்திவிளக்குடன் உள்ளேபுகுந்து, *கருமணியைக்கோமளத்தைக்கண்டு அநுபவித்து தத்காலோசிதமான அநுஸந்தாநத்துடன், *திருவரங்கத்தேகிடந்த திருவுடையாள் மணவாளனுக்கு *செண்பகம் மல்லிகைதொடக்கமான எண்பகர் பூக்களாலே புணர்க்கப்பட்ட மணமாலைகளையும், மாலைக்காலத்திலே சாத்துவித்து, இளநீர் அமுதுசெய்வித்து, * அந்த அந்திப்போதில் * அவுணனுடல் பிளந்தவேந்தன் ஸந்நிதியில் க்ஷீராந்நம் அமுதுசெய்தருளி திருவந்திக்காப்புக் கண்டருளின அநந்தரம் தண்டன்ஸமர்ப்பித்துப் புறப்பட்டருளிப்பெரியதிருமண்டபத்திலேயெழுந்தருளியிருந்து, பகல்கொண்டருளினபடியே ராத்ரியும் திருவாராதநம் நடத்துவித்து அமுதுசெய்தருளின அநந்தரம் * திருவரங்கச்செல்வனை எழுந்தருளுவித்துநடைப்பலிகளை நடத்தி, (మహతేదేవతాయాజ్యంజుహోత జ్వాతేనతే) என்கிறபடியே யாகசாலையிலே த்ரிஸந்தியிலும்ஹோமம் நடத்துவித்து;

அநந்தரம், செல்வர்பல்லக்கு எழுந்தருளுவித்து, சாமீகரரத்நதண்டஸஹிதமான சத்ரசாமராதிகள்பரிமாற, (வெற்றிக்கருளக்கொடி) என்னும்படி விஜயத்வஜமான கருடத்வஜம் தொடக்கமான அநேகத்வஜபதாகாதிகள் எடுக்க,திவ்யாப்ஸரஸ் ஸத்ர்சைகளாய், நாநாவித ஆபரணபூஷிதைகளாய் நாநாவித வர்ணவிசித்ரவஸ்த்ரதரைகளான எம்பெருமானடியார் அக்ரத்திலேந்ர்த்தகீதவாத்யங்களுடனே ஸேவிக்க, ஸுவர்ணரஜத தண்டதராய்க்கொண்டு வேத்ரபாணிகள் ஸ்தோத்ரம்பண்ண, புனுகுநெய் பசுவின்நெய்பரிமாறி எரிகிற பொற்பந்தங்கள்பிடிக்க எழுந்தருளும்படியையும் நேத்ரோத்ஸவமாக ஸேவித்தருளி,

அநந்தரம் * பள்ளிகொள்ளுமிடத்திலே மெள்ள எழுந்தருளுவித்து, செல்வர் சம்பா அமுதுசெய்வித்துத் திருவுற்றசாமமும் அமுதுசெய்தருளினவுடனே, தங்வந்த்ர்யநுவிதாநம் பண்ணிக்கொண்டு போருகிற பிஷக்குக்களாலே கல்பிதமான கஷாயமமுதுசெய்வித்து, அநந்தரம் கோயிலுள் எங்கும் உள்ளூராரைக்கொண்டு மெள்ளவெந்நீர்த்திருமஞ்சநம்செய்வித்துத்திருப்பரியட்டங்களாலே திருவொற்றுவாடை சாத்துவித்து,சந்தநாதிகளாலே எங்கும் ஆலேபித்து, அநந்தரம் * தூமப்புகை,* சீருற்ற வகில்புகைகளாலே எங்கும் ஸுரபிதமாக்கி, பட்டுத்திருப்பரியட்டங்களாலே எங்கும் மேல்கட்டுக் கட்டுவித்து, நூறுதிருளித்தரங்கள் நாற்றுவித்து, அப்படியே ஸ்ரீரங்கநாயகியார்கோயில் திருப்பள்ளியறையையும் அலங்கரிப்பித்து, அநந்தரம் (తతోమహార్హపర్యఙ్కే సువర్ణే తోత్తరచ్ఛదే) என்னும்படியான திருப்பள்ளிக் கட்டில் பரிமாறி குங்குமமெத்தை திருவணைமுதலாக மேல்விரி பர்யந்தமாகப் பரிமாறி, ஏவம்விததிவ்யபுஷ்பபர்யங்கத்தை சாதகும்பமயச்ர்ங்கலாஸூத்ரத்திலேகோத்து டோளாயமாநமாயிருக்கிற அதிலே (குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின்மேல் மெத்தென்ற பஞ்சசயநத்தின் மேலேறி) என்னும்படி * என் திருமகள்சேர் மார்பனையவனை ஸம்ப்ரமத்துடனே சேர்த்தியிலே யெழுந்தருளுவித்து, நாநாவிதமான ஸுகந்தங்களைச் சாத்துவித்து, கர்ப்பூரகஸ்தூரீகுங்குமாதிகளாலே மர்த்திச்சுச் சாத்துப்படி சாத்துவித்து, (வல்லிநுண்ணிதழன்னவாடைகொண்டு வசையறத் திருவரைவிரித்துடுத்து) என்னும்படி ஸௌகுமார்யாநுகுணமாகத் தாமே இவற்றையெல்லாம் எடுத்துக்கைநீட்டுவாராய் ஸமர்ப்பித்துச்சாத்துவித்து, கர்ப்பூராலத்தியும் கண்டருளப் பண்ணுவித்து,

அநந்தரம் சகலசந்த திருமாலைகள் முதலானவற்றை ஸேனை முதலியாருக்குச் சாத்துவித்து, பின்னைத் திருப்பள்ளிக்கட்டி லட்டத்திலே பொற்றட்டிலே, ([illegible])என்னும்படி * அடைக்காய் திருத்துவித்து, அநந்தரம் இரண்டருகும் பொற்றிருக்குத்துவிளக்கு எரிய பொற்குடத்திலே கர்ப்பூரத்தண்ணீரமுது பூரித்துவைத்து, பொற்கிடாரம் வெள்ளிக் கிடாரங்களிலே பால்குழம்பு சேர்த்து அமுது செய்வித்தவுடனே, திருவெண்சாமரம், திருப்படிக்கம், கலசப்பானை, திருவடிநிலை, உடைவாள், இலைத்தட்டு, காளாஞ்சி, திருவாலவட்டம், சுழற்றி, அடுக்கொலியல் முதலான அத்தாணிச் சேவகமும் செய்வாராய் ஸேவிக்க, அத்தோடே * அரம்பையர்கள் தற்சூழ்ந்து தாலாட்டு ஸேவிக்க, * யாழ் குழல் வீணைவாசிக்க, பின்பு குடிநீர்ப்பாலமுது செய்வித்து, பின்பு * தேனுகிப் பாலாந்திருமாலானவனை * செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொற்றிருவடியின்னிணைவருட முனிவர் ஏத்த * பள்ளிகொள்ளுமிடத்தடிகொட்டிட * திருவரங்கத் தரவணையிலே பள்ளிகொண்டருள, (உறகலுறகல்) இத்யாதிப்படியே * பள்ளியறை குறிக்கொண்டு நோக்கும்படி சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும், திக்பாலகர்களையும், ஸர்வலோகபாலகரான பெருமாளுக்குக் காவல் அடைத்து நிர்ப்பாராய்க் கொண்டு தெண்டன்ஸமர்ப்பித்து ([illegible]) என்று தொடங்கி க்ஷமைகொண்டு, ஸ்ரீநித்ரை கிடக்கிற விடத்துக்குத் திருக்காப்பு சேமிப்பித்துப் புறப்பட்டருளி;

திருமடைப்பள்ளியருகேஎழுந்தருளிஅந்தத்திருமடைப்பள்ளியில் ஒருமையோடற எல்லாம் புறத்திலேஎடுப்பித்துப்போகட்டு, செத்தை குப்பைஎல்லாம் சோதித்து சுத்திபுண்ணின அநந்தரம், நாளைக்கு நவபாண்டம் வந்திருக்கிற வகைகளையும் ஆராய்ந்து குலால குலங்களை குறிக்கொண்டு, காலசக்ர நிர்வாஹனாய் ப்ரஹ்மாண்டங்களையும் ப்ர்ஹ்மாதி பிண்டங்களையும் அனைகிறவனுக்கு நீங்களும் அப்படியே தண்டசக்ராதிகளைக் கொண்டு ம்ர்த்பிண்ட பாண்டங்களைப் பண்ணி காலகாலங்களிலே கொண்டு வாருங்கள் என்று அந்தக் குலாலாதிகளுக்கு நலம்பெற அருளிச்செய்து, அப்படியே கோபாலர்களுக்கும் * நந்தன்பெற்ற ஆனாயனாய் * தோய்த்த தண்டயிர் வெண்ணெய்பாலுடனுண்டு * கற்றினம்மேய்த்து * ஆயனாயன்று குன்றமொன்றெடுத்து, இப்படி *ஆமருவி நிரைமேய்க்கைக்கு * காலிப்பின்போனவனுடைய காலிமாட்டுத் திறமாராயும் கோபாலரான நீங்கள் காலம்பெறப் பாலமுதுகொண்டு வாருங்கோள் என்று கற்பித்து, அவனுக்கு (கண்ணு

லம் செய்யக்கறியும்கலத்ததரிசியுமாக்கிவைத்தேன்) என்னும்படி அமுதுபடிகறியமுது முதலானவை காலகாலங்களிலே கொண்டு வந்துநிறைக்கும்படி அவ்வவத்தொழிற்காரர்களுக்கு அருளிச்செய்து, (பொன்னாய்) என்றுபொன்னுமாய், பலநெற்றொகையாய் இருக்கிறவனுக்கு பொன்னும் நெல்லும் வந்து செல்லும்படி திருவேளைக்காரர், தேசாந்த்ரிகள், ராஜமநுஷ்யர் முதலானாரையும் அனுப்பியருளி, ([illegible]) இத்யாதிப்படியே எல்லார்க்குமாகத் தான் பாரித்திருந்து காக்குமவனுக்குப் பாலித்திருந்து காக்கும்படியும் கற்பித்து, பத்துக்கொத்திலுண்டானவர்களும் மற்றுமுண்டானவர்களும் பற்றிஸேவித்துவர மடமே யெழுந்தருளி அவர்களை அனுப்பி யருளி அனைத்துவர்க்கமும் ஸேவித்துநிற்க, அவ்வவர்களையும் யதாஸ்த்தாநங்களிலே போம்படி நியமித்தருளி,

திருமஞ்சநச்சாலையிலே யெழுந்தருளி ஸ்ரீபாதம்விளக்கித்திருப்பவளம்மாற்றி, சுத்தாசமநம் செய்தருளி தம்முடைய திருவாராதநமானபேரருளாளர்ஸந்நிதியிலே தண்டன் ஸமர்ப்பித்து எழுந்தருளியிருக்க, அநந்தரம் குடிநீர்ப்பாலமுது வடுகநம்பிகொண்டு வந்து நீட்ட அமுதுசெய்தருளப்பண்ணித் திருக்காப்புச்சேர்த்து, பின்புபெருமாளமுதுசெய்தருளினபால்ப்ரஸாதத்தைஔஷதவத் ஸங்க்ரஹணம் பண்ணாமல் ஸ்வீகரித்தருளி, திருப்பவளம்மாற்றி சுத்தாசமநம் செய்தருளி உலாவியருள, ஸந்ததம் திருவாய்மொழி திருவுள்ளத்திலே நடக்கையாலே குறையும் அநுஸந்தித்துச் சாத்தியருளித்திருப்பள்ளிக்கட்டிலிலேயேறியருளி, அநந்தரம் திருவணையிலே சாய்ந்தருளி, குருபரம்பராபூர்வகமாகத் திருநாமத்தையும், மந்த்ரரத்நமான த்வயத்தையும் ஸார்த்தமாக அநுஸந்தித்து, தத்ப்ரதிபாதக பகவத்கைங்கர்ய த்வரையையுடையராய், அநந்தரம் சரமச்லோகத்தையும் அநுஸந்தித்து, ததேக உபாயத்வத்தாலே நிர்ப்பரராயெழுந்தருளியிருக்க, அவ்வளவில் இவர்க்கு அத்யந்தம் அந்தரங்கரான எம்பார் வடுகநம்பிதொடக்கமானவர்கள், (நடந்தகால்கள் நொந்தவோ) என்று பரிந்து திருவடிகள் வருட அறிதுயில் அமர்ந்தார்; அப்போது, தப்பாமல் எப்போதும் காத்துப்போருமவர்களான வண்டர், சொண்டர்மற்றுமுண்டான மழலைக்கூத்தத்து முதலிகள், ஸ்ரீகுலசேகரதாஸர், கோவர்த்தநதாஸர், திருவழுதிவளநாடுதாஸர் தொடக்கமானார் அநேகர், (புறஞ்சூழ்காப்ப) என்னும்படி, திருமேனிக்காவலாகப் பரிந்து நோக்கிக்கொண்டிருந்தார்கள். ([illegible]) என்கிறபடியே ப்ரதிதிநம் ஸத்பதவர்த்தியான தம்முடைய சுத்தசரித்ரத்தாலே முன்பு ஸங்குசித

மாய்ப்போந்த ஸந்மார்க்கத்தைக்கண்டு கண்டாபதமாக நடத்திக்கொண்டு, ஸம்முகமாக ஸ்ரீகார்யம் ஆராய்ந்து நடத்திக்கொண்டு போருமவராய், அதஎவ பெருமாளுக்கு ப்ராணபூதருமாய், ப்ரியதமருமாய், ஸதாசாரத்தோடும், ஸத்காலக்ஷேபத்தோடும் வர்த்திப்பாராய், பகவத்கைங்கர்யோபகாரகராய்ப் போருகிற இவராலே (వ్యాకుర్వతా తేన విపశ్చితోష్టౌ ద్వేధా న్తమవ్యాహతవాగ్విహారైః। నిర్జిత్య కైద్యుర్యధురంధరేణ యతీశ్వరేణోషితమబ్దషష్టిః) என்று இப்படி அறுபதுகாலங் கழியப் பெற்றது.

இப்படி சிஷ்யஸம்பத்துக்களுடனே வாழ்ந்தருளுகிற எம்பெருமானார், (ప్రాప్త్యైపదస్య పరమస్య భవాత్రిధామ్నాం ప్రాప్త్యై నికృతాఙ్గురుభిరేకపదీం యతీన్ద్రైః। ఘణ్టాపథం పరమకారుణికశ్చకార యస్తన్నమామి శిరసా యతిసార్వభౌమమ్) என்று இப்படி அதிகாரம் இல்லாதவர்கள் துர்க்கதியைப் பார்த்து உபதேசித்தருளும் ஸ்வபாவராகையாலே அந்த உபதேசம்பலித்து, (అర్థపఞ్చకతత్త్వజ్ఞాః మహాభాగవతాస్స్మృతాః) என்றும், (పఞ్చాస్త్రోన్నిక్తాః పఞ్చకాలప్రపన్నాః) என்றும், (దేవాలయన్తి ధరణీశ్వరసైః పఞ్చకాలికాః। దర్శనాత్స్పర్శనాత్తే సంకృతార్థాస్సర్వజన్తవః) என்றும், (యత్రభాగవతా నిత్యం పఞ్చకాలపరాయణాః। నివసన్తి సదా యుక్తాస్తత్క్షేత్రం నైమిశాద్వరమ్) என்றும், (మహాభాగవతా యత్ర వసన్తి విమలాశ్శుభాః। తద్దేశం మఙ్గళం ప్రోక్తం యథా విష్ణుపదం శుభమ్) என்றும், (తేషాం పుణ్యాత్మనాం భీతో భృశం కలిరఘాత్మకః। మద్భిన్నైస్తస్య భవో నిశ్శఙ్కాన ప్రవర్తతే) என்றும், (యే కణ్ఠలగ్నతులసీ నళినాక్షమాలాః యే బాహుమూలపరిచిహ్నితశఙ్ఖచక్రాః। యే వా లలాటఫలకే లసదూర్ధ్వపుణ్డ్రాః తే వైష్ణవా భువనమాశు పవిత్రయన్తి) என்றும், (దర్శనస్పర్శనవచనైర్గురుప్రియా) என்றும் சொல்லுகிறபடியே மஹாப்ருதிவி எல்லாம் மஹாவைபவத்தை யுடைய மஹாபாகவதர்களே யாம்படிதிருத்தி எங்கும்பரம்பி லோகபாவனமாம்படி யானார்கள். ஏவம்விதவைபவத்தை யுடையரான எம்பெருமானாரை, தத்பாகிநேய ஸூநுவாய் தந்நாமத்தை யுடைய தந்நம குணஹர்ஷிதரான கந்தாடையாண்டான் கனக்கஅநுவர்த்தித்து,

(పరిత్రాణాయ) (பரித்ராணாய) இத்யாதிப்படியே தேவரீர், (పుణ్యామ్భోజవికాసాయ పాపధ్వాన్తక్షయాయ చ। శ్రీమానావిరభూద్భూమౌ రామానుజదివాకరః) என்னும்படி அவதரித்தருளின ஸ்ரீபெரும்பூதூர்ஸ்தலத்திலே, ஸர்வகாலத்திலும் ஸர்வசேதநர்க்கும் ஸேவ்யமாம்படி தேவரீருடைய ஒருஅர்ச்சாவிக்ரஹம் ஏறியருளப்பண்ணவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும் அப்படியே செய்யும் என்று அநுமதிபண்ணியருள, அப்போதே கந்தாடையாண்டானும் அநுகூலமான சிற்பியை அழைத்து அப்போதையில்

ப்ராரத்த்யமா யிருக்கிறவார்த்தகவிக்ரஹாகாரத்தை, (ఫుల్లాబ్జద్వయదక్షిర్ద్యుతం విలసితం జఙ్ఘాత్రిరేకోజ్జ్వలం కాషాయేణ శిఖోపవీతరుచిరం దోర్భ్యాం చ రమ్యాజ్జ్వలమ్। ఆసీనం జలజాసనే చ తులసీపద్మాక్షమాలాఞ్చితం యుక్తం జ్ఞానముద్రయా రవినిభం శ్రీభాష్యకారం భజే) என்கிறபடியே அவ்வடிவழகை ஸேவிக்கப்பண்ண, அவனும் (ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்குப்பிறந்த) என்கிறபடியே அர்ச்சாவிக்ரஹம் உகந்தருளப்பண்ணுவித்து ஸந்நிதியிலே அந்த விக்ரஹத்தைக் கொண்டுவந்துவைக்க, உடையவரும் திருக்கண்சாத்தி உகந்தருளி, திருக்கைஸ்பர்சமும்பண்ணி தம்முடைய திவ்யசக்தி ப்ரதிஷ்டிதமாம்படியாக ஆலிங்கநம் பண்ணிக்கொண்டு, புஷ்யமாஸத்தில் குருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டிப்பியும் என்று திருமுகம் எழுதி திநம் குறித்தனுப்பியருள, அவரும் அப்படியே எழுந்தருளுவித்துக்கொண்டு போய் மூலவிக்ரஹத்தையும் ஏறியருளப்பண்ணுவித்து திருமுகப்படியே திருப்ரதிஷ்டையும் செய்வித்தருளினார். இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கிற அற்றைத் திவஸத்திலே திருமேனியில் மிகவும் தளர்ச்சியாய் ப்லஹாநியும உண்டாக, இதேது என்று பராமர்சித்து அவனுக்கு எழுதிக்கொடுத்த திவஸம் ஏதென்றுகேட்டருள, அந்த திவஸம் அன்றுதானாயிருக்க, உடையவரும் விஸ்மயப்பட்டருளி, அவர்க்கு சீக்ரமாகவருவதென்று திருமுகம்போகவிட்டருள, அவரும் திருமுகத்தை சிரஸாவஹித்து, அப்படியே மீண்டு எழுந்தருளி, திருவடிகளை ஸேவித்துக்கொண்டு இருந்தார்.

அநந்தரம் அங்குத்தைக்கு அத்யந்தம் அந்தரங்கரான வண்டர்முதலான முதலிகள்எல்லாரும், பழுத்திருந்த தேமாவைக்கிளித்திரள்கள் காத்திருக்குமாப்போலே தத்துல்யரான இவர்களும், விமலசரமவிக்ரஹத்தை, (கையில்கனி) இத்யாதிப்படியே * மெய்யில் பிறங்கியசீரைப் பழுக்கஸேவித்துக்கொண்டிருக்கிற இவர்கள், (శేషో వా సైన్యనాథో వా శ్రీపతిర్వేతి సాత్త్వికైః। ఇతి సర్వైర్వితర్క్యాయ యతిరాజాయ మఙ్గళమ్) என்னும்படி ஸேவித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி எழுந்தருளி யிருக்கிற உடையவருடைய ப்ரபாவத்தை நம்பெருமாளும், திருவேங்கடமுடையானும், பேரருளாளனும், திருநாராயணப்பெருமாளும், அழகரும், திருக்குறுங்குடி நம்பியும், ரிஷிகளும், நம்மாழ்வாரும், நாதமுனிகளும், ஆளவந்தாரும், பெரியநம்பியும், திருக்கோட்டியூர்நம்பியும், திருமலைநம்பியும், திருமாலையாண்டானும், ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையரும், மற்றும் உடையவர் சிஷ்யர்களான ஆசார்யர்களும், ஸரஸ்வதியும், ப்ரஹ்மராக்ஷஸ்ஸும், ஊமையும்வெளியிட்டார்கள்.

உடையவர் வைபவத்தை, நம்பெருமாள் முதலானோர் வெளியிட்டருளின் விவரணம்.

நம்பெருமாள் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்;- உடையவர் பெருமாளை ஸேவிக்க எழுந்தருளினவளவிலே, அவர்க்கு தீர்த்தம் திருமாலை, பரியட்டத்துடனே சடகோபனையும் ப்ரஸாதித்தருளி, (பொங்கோதம் சூழ்ந்த புவனியும்விண்ணுலகும் அங்காதும்சோராமே யாள்கின்ற) என்கிறபடியே உபயவிபூத்யைச்வர்ய ஸ்ரீயையும் நாம் உமக்குத் தந்தோம், நீர் உபயவிபூதியையும் உடையவர் என்று திருவுள்ளமாய் அருளுகையாலே;

திருவேங்கடமுடையான் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்;-உமக்கும் உம்முடையார்க்கும்உபயவிபூத்யைச்வர்யத்தையும் தெற்குவீட்டில் தந்தோம் என்று திருப்பவளச்செவ்வாய் திறந்து அருளிச்செய்கையாலே;

பேரருளாளர் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்; - அருளாளப்பெருமாளெம்பெருமானுருடனே தர்க்கம்சொன்னபோது உத்தரம் சொல்லமாட்டாமல் இருக்க, இன்னபடி சொல்லும் என்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்கையாலும், யாதவப்ரகாசனுக்கு ஸ்வப்நமுகேந நம் இராமாநுசனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணி ஸந்யஸியாய் என்று அருளிச்செய்கையாலும்;

திருநாராயணப்பெருமாள் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்; - தொண்டனூரிலே ஸ்வப்நங்காட்டி அழைத்துக்கொண்டு போய் ப்ரகாசிக்கையாலும், என்னுடைய செல்வப்பிள்ளையன்றோ வென்று எடுத்தணைக்கும்படி யதிராஜகுமாரனென ஸௌசீல்யத்தாலும்;

அழகர் வெளியிட்டபடி யெங்ஙனே என்னில்; - ஒருநாள் திருவோலக்கத்திலே, "நம்மிராமாநுசமுடையார்க்கருள்பாடு" என்று திருவுள்ளமாயருள, ஆசார்யர்கள் எல்லாரும் திருவடிகளிலேவர, பெரியநம்பி, வழியிலே சிலர் எழுந்தருளி யிருக்க நீங்கள் நாம் அழைக்கவாராதிருப்பானென்னென்ன, அவர்களும் ராமாநுசமுடையார்க் கருள்பாடு என்று திருவுள்ளமாயருளுகையாலே அவர்க்கும் சேஷிகள் நாங்கள் என்று வாராதிருந்தோம் என்ன, அழகரும் தசரத வஸுதேவாதிகள் நம்மை புத்ரப்ரதிபத்தி பண்ணிப்போந்தாப்போலே இருந்தது - நம்மிராமாநுசனையுடையரா யிருந்தும் நம்மிராமாநுசனை நீங்கள் சிஷ்யப்ரதிபத்தி பண்ணினதென்றும், பின்னையும் ஒருநாள் கிடாம்பியாச்சானே! ஒன்று சொல்லிக்காண் என்று திருவுள்ளமாயருள, (నధర్మనిష్ఠోస్మి నచాత్మవేదీ) (நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீ) என்கிறச்லோகத்தை விண்ணப்பம்

செய்ய, நம்மிராமாநுசனை யுடையனாயிருந்து (அநந்யகதி:) என்று சொல்லப்பெறுவாயோ என்று திருவுள்ளமா யருளுகையாலே;

திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்;- உடையவர் நம்பியைஸேவிக்க எழுந்தருளின வளவிலே, நம்பியும் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து, உடையவர்க்கு அருள்பாடிட்டருளி, (బహూని మేవ్యతీతాని జన్మాని తవచార్జున) என்கிறபடியே, எத்தனைஜந்மம் பிறந்தோமோ தெரியாது, இதில் ஒருவரும் வசப்படுவாரன்றிக்கே அதோகதிகளிலே விழுந்துபோய்விட்டார்கள், உமக்கு இவ்வாத்மாக்கள் எல்லாம் அகப்பட்டவிரகை நமக்குச் சொல்லவேணும் என்ன, தேவரீர் கேட்டருளுமாப்போலே கேட்டருளவேணும் என்ன, நம்பியும் ஸிம்ஹாஸநத்தில்நின்றும்இறங்கியருளித்திருக்கொத்தொலியலைப்படுத்து உடையவர்க்கு ரத்நகம்பளத்தை ஆஸநமாகஇட்டு இனிச் சொல்லும் என்ன, உடையவரும் ஹிதத்தை விண்ணப்பம்செய்தார்; அன்றுமுதல் நாமும் ராமாநுசனை யுடையோம் என்று திருவுள்ளமா யருளுகையாலே;

ரிஷிகளும், (వ్యాసోవాభగవాన్ పరాశరమునిర్వా శౌనకోవాశుక స్సాక్షాద్బాదరాయణోథవా శఠరిపుర్వాగీశ్వరోవాస్వయమ్। లోకేశః పురుషోత్తమస్సభగవాన్ శేషీజగచ్ఛేషిణా మజ్ఞాత్యాఖ్యాతుం జగతాం హితాయసమభూద్రామానుజార్యాత్మనా) என்றார்கள்.

இனி நம்மாழ்வார் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்;- லோகத்தைத் திருத்துவதாக எம்பெருமானோடே மார்தட்டி (கின்கண் வேட்கை யெழுவிப்பனே) என்று ஏறிட்டுக்கொண்டவர்தாமே, (ஏபாவம்பரமே) என்று க்லேசித்து, (அகலிடத்தை ஆராய்ந்தது திருத்தலாவதே) என்று ஈச்வரன் அவதரித்துத்திருத்தவொண்ணாததேசத்தை நாமோ திருத்துவோம் என்று, (யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்) என்று தாமும் திருவுள்ளமுமேயாய், பூதபவிஷ்யத்வர்த்தமாந மறிந்தவராகையாலே, (கலியுங்கெடும் கண்டுகொண்மின்) என்று உடையவர்திருவவதாரத்தை ஸூசிப்பித்தருளுகையாலே;

நாதமுநிகள் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்;-குளப்படியிலே தேங்கினால் குருவி குடித்துப்போம், வீராவணத்தேரியிலே தேங்கினால் நாடு விளையும் என்று அருளிச்செய்து (లక్ష్మీనాథాఖ్యసింధౌ శఠరిపుజలదః ప్రాప్యకారుణ్యనీరం నాథాద్రావభ్యషించత్తత ఇతి రఘువరాంభోజచక్షుర్ఝరాభ్యామ్। గత్వాస్త్రీయామునాఖ్యాం సరితమథయతీన్ద్రాఖ్యపద్మాకరేన్ద్రం సమ్పూర్ణం ప్రాణిసస్యప్రవహతిబహుధా దేశికేన్ద్రప్రమేఘః) என்றும் சொல்லுகிற

படியே பெரியபெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம்படிந்து, நாதமுனிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார், மணக்கால்நம்பியாகிற அருவிகளாலே போந்து, ஆளவந்தாராகிற பெருக்காற்றிலேகூடி, பெரியநம்பியாகிற தலப்பழையாலே புறப்பட்டு, எம்பெருமானாராகிற ஏரியிலே தேங்கி, பின்புள்ள ஆசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு, ஸம்ஸாரிகளாகிற பயிர்களிலே ஏறிப்பாய்கிறதென்று அருளிச்செய்த விடத்திலும் ஒத்திருக்கையாலே;

ஆளவந்தார் வெளியிட்டபடி எங்ஙனே என்னில், இம்மஹாநுபாவன் தர்சநத்தில் புகுந்தாரகிலோ என்று பேரருளாளனை நோக்கி ப்ரபத்திபண்ணுகையாலும், * ஆமுதல்வனிவனென்று கடாக்ஷிக்கையாலும்;

பெரியநம்பி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்; - அத்துழாயும் தாமுமாக எழுந்தருளியிருக்கச்செய்தே உடையவரும் முதலிகளுமாக எழுந்தருள, பெரியநம்பி எழுந்திருந்து தண்டனிட, இப்படி செய்யலாமோ உம்முடைய சிஷ்யரன்றோ என்று அத்துழாய் சொல்ல; பெரியநம்பியும் அத்தாளுக்குத்தக்கத் தலைகாண் இது என்றும், ஆளவந்தாரும் முதலிகளும் என்றிருந்தேன் என்றருளிச்செய்து, தம்முடையகுமாரர் ஸ்ரீபுண்டரீகாக்ஷரை உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பிக்கையாலே;

திருக்கோட்டியூர்நம்பி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்;- தாம் அருளிச்செய்த அர்த்தத்தை ப்ரகாசிப்பியாதே என்று ஆணையிடுவித்துக்கொண்டு அருளிச்செய்ய, அவ்வர்த்தத்தை தூளிதாநமாக எல்லார்க்கும் அருளிச்செய்ய, இத்தை நம்பிகேட்டருளி, உடையவரை அழைத்தருளி இவ்வர்த்தத்தை ஒருவர்க்கும் சொல்லாதே என்றன்றோ நாம் சொன்னோம், அப்படியிருக்க நீர் அநேகம்பேருக்கு என்ன நினைந்து சொன்னீர் என்ன, உடையவரும், அவர்கள் எல்லாரும் தேவரீருடைய அபிமாந ஸம்பந்தம்பெற்று உஜ்ஜீவிப்பார்களே! என்று தேவரீர்திருவடிகளை முன்னிட்டுக்கொண்டுசொன்னேன் என்ன, வேறொருவர்க்குஞ்சொல்லாதேஎன்று சூழாவுகொண்டு ஆணைகொண்டு நாம்சொன்னோம், அப்படியிருக்க நம்மை மீறிச்சொன்னதுக்கு பலம் ஏதென்ன, ராமாநுஜனும் நரகமே பலம் என்ன, அப்படி அறிந்திருந்தும் சொல்லுவானேன் என்ன, அடியேன் ஒருவனுமன்றோ நரகம்புகுகிறேன், இவ்வாத்மகோடிகளெல்லாம் உஜ்ஜீவிக்குமே என்ன, நம்பியும் போர உகந்தருளி அவரோ நீர் என்று எடுத்துக்கட்டிக்கொண்டு, தம்முடைய குமாரர் தெற்காழ்வாரையும் உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பிக்கையாலே;

திருமலைநம்பி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்; - உடையவர் திருமலைக்கெழுந்தருளுகிறபோது திருப்பரியட்டப்பாறையளவாக எழுந்தருளினவளவிலே, திருவேங்கடமுடையானுடைய தீர்த்தப்ரஸாதங்கொண்டு பெரியதிருமலைநம்பி எதிரேஎழுந்தருள, இவரும் தெண்டன் ஸமர்ப்பித்து, ப்ரஸாதம் ஸ்வீகரித்தருளி தேவரீர் எழுந்தருளவேணுமோ, ஒருசிறியார்கள் இல்லையோ என்ன, நாலுவீதியிலும் ஆராய்ந்த விடத்தில் என்னில் சிறியாரைக்கண்டிலேன் என்கையாலும், எம்பாரை உதக பூர்வமாகக் கொடுக்கையாலும், தம்முடைய குமாரர் திருமலை நம்பியையும் ராமாநுஜனையும் உடையவர்திருவடிகளிலே ஆச்ரயிப்பிக்கையாலும்;

திருமாலையாண்டான் வெளியிட்டபடி எங்ஙனே என்னில், உடையவர், தம்பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம்கேளாநிற்கச்செய்தே, * அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்புசெய்வித்து அறியாமாமாயத்தடியேனை, வைத்தாயால் என்று - வைப்பதே! என்றுதிருமாலையாண்டான் அர்த்தம் அருளிச்செய்ய, இத்தை உபகார ஸ்ம்ருதியாகக்கொள்ளக் குறையில்லையே என்று எம்பெருமானார் விசேஷார்த்த மருளிச்செய்ய, இது விச்வாமித்ர ஸ்ருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டறியேன் என்று திருமாலையாண்டான் திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்கைதவிர்ந்திருந்தார்; இச்செய்தியை திருக்கோட்டியூர்நம்பி கேட்டருளி கோயிலிலே திருமாலையாண்டான்பக்கலிலே எழுந்தருளி, திருவாய்மொழிக்கு அர்த்தம் நடத்தாமல் தவிர்வானேன் என்று கேட்க, (அறியாக்காலத்துள்ளே) என்கிற பாட்டை உபகாரஸ்ம்ருதி யாக வேணும்என்றதிறுல் என்ன, அதுவும் ஆளவந்தார் அருளிச்செய்ய நான்கேட்டேன்என்று, ஸாந்தீபிநிபக்கலிலே க்ருஷ்ணன் அத்யயநம் பண்ணினாப்போலேகாணும் உம்முடையபக்கலிலே உடையவர் திருவாய்மொழிகேட்கிறது, ஆளவந்தார் திருவுள்ளத்திலேகிடக்கிற அர்த்தமொழிய இவர்க்கு வேறோரர்த்தம்ப்ரகாசியாது என்றிரும்; நீர் இவர்க்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணுகிறோம் என்று இராதே கொள்ளுமென்று அருளிச்செய்தருளினார்; திருமாலையாண்டானும் இதுவும் ஒரு திருவவதாரமோ என்று தம்முடைய குமாரர் ஸுந்தரத்தோளுடையாரையும், உடையவர்திருவடிகளிலே ஆச்ரயிப்பிக்கையாலே;

ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்பக்கலிலே உடையவர் ஆறுமாஸம் ஸேவித்து ஆளவந்தார் அருளிச்செய்த அர்த்தத்திலே

சில வர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும் என்ன, அவர் பாடுகைக்குமுறையாக; மஞ்சள்காப்புசாத்தித்திருமஞ்சநம்பண்ணுவித்துக்கொண்டுபோருகிறகாலத்திலே ஒருநாள் மஞ்சள்காப்பு பாங்காக இராதபடியாலே திருமுகமண்டலத்திலநிந்து பாத்ரத்தை அப்பாலேசேர்த்து மஞ்சள்காப்பைப் பாங்காகச்சாத்தி திருமஞ்சநம்பண்ணுவித்தருள, ப்ரீதராய் என்னுடைய ஸர்வஸ்வத்தையும்கைக்கொள்ளவோ இப்படிசெய்தீர் என்று ஆளவந்தார்ஸ்தோத்ரத்துக்கும் சதுச்லோகிக்கும் அர்த்தமருளிச்செய்து, அநந்தரம், எல்லா ரஹஸ்யார்த்தத்தையும் அருளிச்செய்தருளினார்.

வடுகநம்பி ஆசார்யபதம் என்று தனியே ஒருபதம், அதுவுள்ளது எம்பெருமானாருக்கே, ஆகையாலே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள் என்று எல்லார்க்கும் அருளிச், செய்தருளினார்.

கணியனூர்சிறியாச்சான் ஸசேலஸ்நாநபூர்வகமாக ஆர்த்தியோடே உபஸந்நராய் திவ்யாஜ்ஞையிட்டு, (సత్యంసత్యంపునస్సత్యం యతిరాజోజగద్గురుః। సఏవసర్వభూతానా ముద్ధర్తానాత్రసంశయః) என்கிறபடியே எம்பெருமானார்திருவடிகளொழியத் தஞ்சமில்லை என்று அருளிச்செய்தருளினார்.

அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் தம்முடைய திருவடிகளிலே அநந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர்நம்பியும், மருதூர்நம்பியும், ஆச்ரயிக்க, அவர்களுக்கு, எம்பெருமானார்திருவடிகளேதஞ்சமென்றிருங்கோள்என்றுஅருளிச்செய்தருளினார்.

பிள்ளைப் பிள்ளையாழ்வான் ஆச்ரயித்தவளவிலே ஆசார்யதக்ஷிணையாக த்ரிவிதகரணங்களையும் பரிஹரித்துக்கொள்ளும் என்று ஆழ்வான் அருளிச்செய்ய, அவர் பரிஹரிக்கமுடியாது என்று முசித்துக்கிடக்க, எதிரிகூடக்குத்தும் என்று ராஜதண்டம் வருமென்று காயத்தால் வாராதபடி நெஞ்சால் நினைத்திராகில், அது திருவுள்ளத்துப்படாதபடி எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்று அருளிச்செய்தார்.

மிளகாழ்வான், முதலியாண்டானை என்னோடு தர்க்கிக்க வாரும் என்று அழைக்க, நீதோற்றால் என்செய்கிறாய் என்ன, நான்தோற்றேனாகில் உம்மைச் சுமந்துகொண்டு திரியக்கடவேனென்று மிளகாழ்வான்சொல்ல, அநந்தரம் தர்க்கம்சொல்லித் தோற்று முதலியாண்டானை ஸ்ரீபாதம் தாங்கிக்கொண்டுவந்து "அடியேனை அங்கீகரித்தருளவேணும்" என்று விண்ணப்பம்செய்ய, முதலியாண்டார்

னும் உடையவர்திருவடிகளிலேகாட்டிக்கொடுத்து எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்றருளிச்செய்தார்.

எம்பார், பட்டரைப்பார்த்து, பெருமாள் புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினார், ஆழ்வானுடையபிள்ளை, ஸகலவித்யைகளையும் அதிகரித்தோம் என்று மேன்மையடித்திராதே எம்பெருமானார்திருவடிகளேதஞ்சமென்றிரும் என்று அருளிச்செய்தருளினார்.

பட்டர், ஜீயரைப்பார்த்தருளி, வேதாந்திகள் என்கிற பெருமையையுடையோம், நம்முடையபக்கலிலே ஆச்ரயித்தோம், நமக்கு அநேகம் த்ரவ்யத்தைத்தந்தோம் என்று இறுமாந்திராதே, எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்று அருளிச்செய்தருளினார்.

நஞ்சீயரும் நம்பிள்ளையைப்பார்த்து, லோகாசார்யர் என்கிற பெருமையையுடையோம், திருவாய்மொழிக்குப் பொருள்சொல்லவல்லோம், ஸ்ரீபாஷ்யத்துக்கு ப்ரவர்த்தகர் என்று மேன்மையடித்திராதே, எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்று அருளிச்செய்தார்.

நம்பிள்ளை, சிவக்கறைப்பிள்ளையைக் கையைப்பிடித்துக்கொண்டு எழுந்தருளாநிற்க, இடைகழியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண் வளர்ந்தருள, அவரை, "சாலேமுடக்கும்" என்று சிவக்கறைப்பிள்ளைசொல்ல, பிள்ளையும் இத்தைக்கேட்டு * மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்(திருத்தாள்கள்) என்று பாடியருளினார், இவன்காலென்பானேன் என்று இவரைக் கையைவிட்டருளினார். பின்பு சிவக்கறையிலே போந்து எனக்கு கதியென்னென்று விண்ணப்பம் செய்து போகவிட, தமக்கு எல்லாவற்றுக்கும் ஒரு குறையுமில்லை, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென்று அருளிச் செய்து போகவிட்டருளினார்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் சிறுப்புத்தூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே சோமாசியாண்டான் தன்ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் மூன்றுருவாசித்து மீண்டு எழுந்தருளும்போது அடியேனுக்குத்தஞ்சமாயிருப்பதொருவார்த்தை அருளிச் செய்யவேணுமென்று விண்ணப்பம்செய்ய;நீர்,பாட்டம்,ப்ராபாகரம்,மீமாம்ஸை இவை யித்தனைக்கும் கர்த்தா, பாஷ்யம்வாசித்தோமென்று மேன்மையடித்திராதே, எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்று இரும் என்று அருளிச்செய்தார். கோமடத்துப் பிள்ளான் தன் ஸ்ரீபாதத்திலே காக்கைப்பாடியாச்சான்பிள்ளை ஸ்ரீபாஷ்யம்மூன்றுருவாசித்து இவர் மிகவும் மேதையையுடையவராயிருக்கையா

லே இவர்க்கு எம்முகத்தாலே அபசாரம் வரப்போகிறதோ என்று பயப்பட்டு, எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிரும் என்று அருளிச்செய்தார். எங்களாழ்வான் காக்கைப்பாடியாச்சான்பிள்ளையைப்பார்த்து உம்மைப்பெருமாள் முனிந்தருளினபோது என்ன நினைத்திருந்தீர் என்ன எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருந்தேனென்று விண்ணப்பம் செய்தார்.

நடாதூரம்மாள்ஸ்ரீபாதத்திலே பத்துப்பன்னிரண்டுபேர் ஸ்ரீபாஷ்யம் வாசிக்கிறகாலத்திலே அவர்களுக்கு பாஷ்யத்தை உபந்யஸித்துக்காட்ட பக்திரூபமாயிருந்தது என்ன, ப்ரபத்திரூபமாயிருக்கிறபடியையும் அநுவதித்துக்காட்ட, பக்தியிலும் ப்ரபத்திதான் அரிதாயிருந்தது என்ன, ஆகில் எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள் என்று அருளிச் செய்தார். நடுவிலாழ்வான் திருநாராயணபுரத்திலே உடைவர்ஸந்நிதியிலே கோஷ்டிபண்ணி ஸ்ரீ பாஷ்யம் வாசிக்கிற காலத்திலே வங்கிப்புரத்து ஆச்சியும் சொட்டையம்மாளுள்ளிட்டாரும் ஸ்ரீபாஷ்யத்தைக் கேட்டு இது அரிதாயிருந்தது என்ன, ஆகில்எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள் என்று அருளிச்செய்தார்.

ஸ்ரீவேதவ்யாஸபட்டர் திருநாராயணபுரத்திலே உடையவர் ஸந்நிதியிலே கோஷ்ட்டிபண்ணி ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸிக்க இது கங்காப்ரவாஹமாயிருந்தது, எங்களால் அவகாஹிக்கப்போகாது, எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொருவார்த்தை அருளிச்செய்யவேணும் என்ன, ஆகில் உங்கள் குலதெய்வயான எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்என்று அருளிச்செய்தார். நடுவிற்றிருவீதிப்பிள்ளை வெள்ளைக்குளத்தே ஆனைகாத்த சிங்கர்திருமுன்பே கோஷ்ட்டிபண்ணி ஸ்ரீபாஷ்யம் வாசிக்கிறகாலத்திலே, தம்முடைய சிஷ்யர்களிலே அழகியார் எழுந்திருந்து இதுகங்காப்ரவாஹமாயிருந்ததென்ன, ஆகில் எம்பெருமானார்திருவடிகளே மென்றிருமென்று அருளிச்செய்தார்.

வடுகநம்பி, எம்பெருமானார் திருவடிகளே சரணம், நம்பெருமாள் திருவடிகளேசரணம், என்று இரண்டையும் சேர அநுஸந்திக்கும் ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையர் என்பர்; வடுகநம்பி எம்பெருமானார் திருவடிகளேசரணம் என்னுமாப்போலேயும், திருக்கச்சிநம்பி பேரருளாளப்பெருமாள் திருவடிகளே சரணம் என்னுமாப்போலேயும், எம்பெருமானார் செல்வப்பிள்ளை திருவடிகளே சரணமென்னுமாப்போலேயும், ஒருவர்க்கும் இசைந்திராது.

ஸரஸ்வதி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்; - உடையவர் சாரதா பீடத்துக்கு எழுந்தருளினபோது ஸரஸ்வதியும் எதிரே புறப்பட்டுவந்து, இவர் ஸ்ரீபகவானுடைய அம்சாவதாரம் என்று அத்யந்தம் ப்ரீதையாய், ([illegible]) என்கிறவாக்யத்துக்கு உடையவரை அர்த்தம் கேட்க, உடையவரும் ஸ்ரீமந்நாராயணனுடையதிருக்கண்கள் அப்போதலர்ந்தசெந்தாமரைப் பூப்போலே இருக்கும் என்று அருளிச்செய்ய, ஸரஸ்வதியும் கேட்டு ஸந்தோஷித்து இவர் இட்டருளின ஸ்ரீபாஷ்யம் முதலான ப்ரபந்தங்களையும் சிரஸாவஹித்து இவர்க்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்று திருநாமம் சாத்தி இவரை ப்ரஹ்மரதமேற்றி உபலாளிக்கையாலே.

ப்ரஹ்மரக்ஷஸ்ஸு வெளியிட்டபடி எங்ஙனே என்னில், யாதவப்ரகாசனுக்கு உடையவரைக்காட்டி இவர்நித்யஸூரிகளில் தலைவர் என்று சொல்லுகையாலே.

ஊமை வெளியிட்டபடி எங்ஙனே என்னில், பெருமாள் கோயிலில் பாகவதரிலே ஒருபிள்ளை அஞ்சாறுவயதளவும் ஊமையாயிருந்து நாலு மூன்று ஸம்வத்ஸரம் காணமலிருந்து பின்பு வார்த்தை சொல்லவல்லனாய்வர, இந்தஆஸ்சர்யத்தைக் காண்கைக்காக எல்லாரும் திரண்டு, ஊமாய்! எங்குப்போனாய் என்ன, அவனும் நான்க்ஷீராப்த்திக்குப் போனேன் என்ன, அங்கே விசேஷமென்னென்று கேட்க, ஸேனைமுதலியார் உடையவராய் வந்து திருவவதரித்தருளினார் என்று சொன்ன அநந்தரம் அவனைக் கண்டதில்லை யென்று ஸேநாபதிஜீயர் அருளிச்செய்கையாலே.

இப்படி இவர்கள் எல்லாரும் ப்ரகாசிப்பிக்கைக்கு நாதமுனிகள் தொடங்கி இற்றைவரையாக வுண்டான ஆசார்யர்கள், தந்தாம் சிஷ்யர்களுக்கு எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள் என்று அருளிச்செய்கைக்கு ஹேது என்னென்னில்; ஸ்வாசார்யப்ரீதி நிபந்தநமாகவும் ஆசார்யபதமென்று தனியேயொரு பதம், அதுவுள்ளது எம்பெருமானார்க்கே என்றுவடுகநம்பி அருளிச்செய்கையாலும், எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள் என்று அவரவர்கள் அருளிச்செய்யக்குறையில்லை.

அவதாரங்கள் எல்லாம் ஒத்திருக்கச்செய்தே ராமக்ர்ஷ்ணாத்யவதாரங்களுக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும், திவ்யதேசங்கள் எல்லாம் ஒத்திருக்கச் செய்தே கோயில் திருமலை பெருமாள்கோவில் திருநாராயணபுர்த்துக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும், ரிஷிகள் எல்லாரிலும் வ்யாஸபராசர சுக சௌநக நாரதரென்கிற இவர்களுக்குப்ராதாந்யமுண்டானாப் போலேயும்,

ஆழ்வார்கள் எல்லாரும் ஒத்திருக்கச்செய்தே நம்மாழ்வாருக்குப்ராதாந்யம் உண்டானாப்போலேயும், ஆசார்யர்கள் எல்லாரிலுங்காட்டில் இவர்க்குப்ராதாந்யம் கொள்ளக்குறையில்லை.

ஸ்ரீராமாவதாரத்துக்கு ப்ராதாந்யம் எத்தாலே என்னில்;- பெருமாள் அபயப்ரதாநம் அருளிச்செய்தும், ஸ்ரீகுஹப்பெருமாளுடனே * சீரணிந்த தோழமைகொண்டும், ஸ்ரீஜடாயு மஹாராஜரைத் திருப்பள்ளிபடுத்தும், ஸ்ரீசபரிகையாலே ஸங்க்ஷக்ஷாக அமுதுசெய்தும், திருவடியுடனே (உண்பன் நான் என்ற ஒண்பொருள்) என்னும்படி ஸஹபோஜநம்பண்ணியும்போருகையாலே.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ராதாந்யமெத்தாலே யென்னில்; பிள்ளை சரமச்லோகத்தை அருளிச்செய்தும், பீஷ்மத்ரோணாதிகளுடைய க்ருஹங்களை அதிக்ரமித்து ஸ்ரீவிதுரர்திருமாளிகையிலே வந்து, (విదురాన్నాని) என் - பாவநத்வபோக்யத்வங்களை யுடைத்தா யிருந்ததென்றும், அது தன்னை (ద్విషదన్నంనభోక్తవ్యం) என்று சத்ருகோஷ்ட்டியிலும் ப்ரஸித்தமாக்குகையாலே.

கோயிலுக்குப்ராதாந்யம் எத்தாலே யென்னில், திருப்பாணாழ்வாரோடே கலந்துபரிமாறுகையாலே; திருமலைக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில், குறும்பறுத்தநம்பிக்கும் தொண்டமான் சக்ரவர்த்திக்கும் வார்த்தையருளிச்செய்கையாலே; பெருமாள்கோயிலுக்கு ப்ராதாந்ய மெத்தாலே யென்னில்; திருக்கச்சிநம்பியுடனே ஸ்மிதபூர்வாபிபாஷணம்பண்ணி வார்த்தையருளிச்செய்து கலந்துபரிமாறுகையாலே; திருநாராயணபுரத்துக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்;- ஸம்சரிதநயன்பக்கல் ஆதராதிசயத்தாலே தந்நிவேதிதாந்நத்தை யமுதுசெய்து அவனை வாழ்விக்கையாலும், யதிராஜகுமாரரான ஸௌசீல்யத்தாலும்.

ஸ்ரீவேதவ்யாஸபகவாந் (శ్రీమాన్విష్ణ్వధీశ ప్రముఖసురగణైఃప్రార్థిత స్త్వంభవత్యాం పారాశర్యోవతీర్ణ శ్రుతిగణమఖిలం వ్యాస్తవాన్యార్థతత్త్వైః। ప్రాజ్ఞైర్బుద్ధ్వా సూత్రం త్వతిగహనతమం యస్యవృత్తిం వ్యధాసీత్ శ్రీర్ణాం వ్యాసశిష్యోమునిరథభగవాన్ నామభోధాయనాఖ్యః) என்றும் சொல்லுகிறபடியே வேதத்தை அப்யஸித்து கர்மகாண்டத்தைவிட்டு ஜ்ஞாநகாண்டத்திலே ஸ்ரீபுருஷஸூக்தத்திலும், காரணவாக்யங்களாலும், (సత్యంసత్యం పునస్సత్య ముద్ధృత్యభుజముచ్యతే। వేదశాస్త్రాత్పరంనాస్తి నదైవంకేశవాత్పరమ్) என்று ஸத்யபுரஸ்ஸரமாக தத்வநிர்ணயம் பண்ணுகையாலே - அவர்க்கு ப்ராதாந்யம்; ஸ்ரீபராசரப்ரஹ்மரிஷி, (పురాణేషుచవైష్ణవమ్) என்று - சிதசிதீஸ்வரஸ்வரூபஸ்வபாவங்களை விசதமாகப்ரதிபாதித்து தத்வநிர்ணயத்தைப்பண்ணி, உதாரரென்று ஆளவந்தார் நமஸ்கரிக்கும்

படியான வைபவத்தை யுடையராகையாலே - அவருக்கு ப்ராதாந்யம்;

ஸ்ரீசுகப்ரஹ்மரிஷியை, பரிக்ஷித்து கேட்க பாகவதத்தை ப்ரதிபாதித்து தத்வநிர்ணயத்தைப்பண்ணி, (శుకోముక్తః) (ஶுகோமுக்த:) என்னும்படியான வைபவத்தை யுடையராகையாலே - அவருக்கு ப்ராதாந்யம்; ஸ்ரீசௌநகபகவாந், விஷ்ணுதர்மத்திலே பலவிடங்களிலும் தத்வநிர்ணயம் பண்ணுகையாலே அவருக்கு ப்ராதாந்யம்; ஸ்ரீநாரதபகவான், (భుజయుగమపిచిహ్నైరఙ్కితంయస్యవిష్ణోః పరమపురుష నామ్నాంకీర్తనంయస్యవాచి। ఋజుతరమపిపుణ్డ్రంమస్తకేయస్యకణ్ఠే సరసిజమణిమాలా యస్యతస్యాస్మిదాసః) என்று - இப்படி யிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நான் தாஸன் என்று சொல்லுகையாலே; ஆழ்வாரும், (சேமமுடை நாரதனார்) என்னும்படியான வைபவத்தையுடையராகையாலே அவருக்குப்ராதாந்யம்;

ஆழ்வார்களைக் காட்டிலும் நம்மாழ்வாருக்கு ப்ராதாந்யம் எத்தாலே என்னில்; - ஸஹஸ்ரசாகையான * வேதியர்வேதத்தினுட்பொருளைத் திருவாய்மொழி முகத்தாலே ஸர்வாதிகாரமாக்குகையாலும், நாதமுனிகளுக்கு நாலாயிரத்தையும் ப்ரஸாதித்து, மற்றுமுண்டான தர்சநதாத்பர்யங்களையும் அருளிச்செய்து தர்சநத்தை நிலைநிறுத்துகையாலும்;

உடையவர், கீழ்ச்சொன்னவர்கள்போலன்றிக்கே பெருமாள் அருளிச்செய்த அபயப்ரதாநத்தையும், பிள்ளையருளிச்செய்த சரமச்லோகத்தையும், ரிஷிகளாலே ப்ரோக்தங்களான புராணங்களையும், மற்றையாழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களையும், நாதமுனிகள் அருளிச்செய்த யோகரஹஸ்யம், ந்யாயதத்வம், முதலான திவ்யப்ரபந்தங்களையும், ஆளவந்தார் அருளிச்செய்த திவ்ய ஸூக்திகளையும்கொண்டு ஸூத்ரவாக்யங்களை ஒருங்கவிட்டு, வேதாந்ததீபத்தையும், வேதாந்தஸாரத்தையும், வேதார்த்த ஸங்க்ரஹத்தையும், ஸ்ரீகீதாபாஷ்யத்தையும், ஸ்ரீமத்பாஷ்யத்தையும், கத்யத்ரயத்தையும், நித்யத்தையும் அருளிச்செய்து, ஸமஸ்த ஸமயங்களையும் நிரஸ்தமாக்கி, (எம்பெருமானார் தர்சநம்) என்னும்படி பண்ணுகையாலே இவர் எல்லாரிலும் காட்டிலும் ப்ராதாந்யத்தை யுடையவர். இனி ஆழ்வான், ஆண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் இவர்கள் ப்ரதாநர் என்னுமிடம் சொல்லவேண்டாவிறே: (ఆచార్యవాన్పురుషోవేద) (దేవమివాచార్యముపాసీత)(పాపిష్ఠఃక్షత్రబన్ధుశ్చ పుణ్డరీకశ్చపుణ్యకృత్। ఆచార్యవత్తయాముక్తౌ తస్మాదాచార్యవాన్భవేత్) என்றும், (గురురేవపరంబ్రహ్మ గురురేవపరాగతిః) என்றும்,

(యస్మాత్తదుపదేష్టాసౌ తస్మాద్గురుతరోగురుః) என்றும் (பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து) என்றும், (தேனார்கமலத் திருமாமகள் கொழுனன் தானேகுருவாகி) என்றும்-சிஷ்யனுக்கு ஆசார்யனே ஸர்வமும் என்று சொல்லாநிற்க, இற்றைவரையாகவுண்டான ஆசார்யர்கள் தந்தாம் சிஷ்யர்களுக்கு, எம்பெருமானார்திருவடிகளே தஞ்சம் என்றிருங்கோள் என்றருளிச்செய்கைக்கு ஹேது என்னென்னில்; - ஸ்வாசார்யப்ரீதிநிபந்தநமாகவும், (மாறனடி பணிந்துயர்ந்தவன்) என்றும் சொல்லுகையாலே; ஆழ்வார்களுக்கும் உடையவர்க்கும் நடுவிலுண்டான ஆசார்யர்கள் நம்மாழ்வாருக்கு காணபூதராகையாலும், ஆழ்வாராலே ப்ரவர்த்திக்கப்பட்ட தர்சநத்தை, (గురుంప్రకాశయేద్ధీమాన్) (குரும்ப்ரகாஶயேத்) என்று ப்ரகாசிப்பிக்கையாலே பெரியநம்பிமுதலான பூர்வாசார்யர்கள் இவர்க்கு ஆசார்யராய்ப் பேறுபெற்றார்கள்; ஆழ்வான்முதலான ஆசார்யர்கள் சிஷ்யர்களாய் ஸ்வரூபம் பெற்றார்கள்; ஆகையாலே அகிலாசார்யத்வ பூர்த்தியுள்ளது இவர்க்கே யாகையாலே அருளிச்செய்தார்களிறே.

ஆளவந்தாரும் இவ்வர்த்தத்தை அநுஷ்டித்துக்காட்டியருளினார். எங்ஙனே என்னில்;-மணக்கால்நம்பி உய்யக்கொண்டார் இவர்களுக்கு உகப்பைப்பின் சென்று, (పితామహంనాథమునిం విలోక్య ప్రసీద) என்றும் (నాథాయనాథమునయేత్రపరత్రచాపి) என்றும் - இங்கும் அங்கும் ஆசார்யவிஷயக்ருதஜ்ஞதை யாவதாத்மபாவி என்று அருளிச்செய்தாரிறே. ஆகையால் ஸ்வரூபோஜ்ஜீவநத்துக்கு ஆசார்யன்திருவடிகளே தஞ்சமென்றிருக்கையொழிய இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை.

இவ்வர்த்தத்தை அநுஷ்டித்தாரார் என்னில்;-மதுரகவி ப்ரப்ருதிகளான ஸஜ்ஜநங்களிறே. உடையவர் புழுவன் வ்யாஜேந மேற்கே யெழுந்தருளினபோது உபந்யஸித்தகட்டளைகளை ஆசார்யர்கள் எல்லாரும் கேட்டு மிகவும் ஆஶ்ர்யப்பட, என்பரமாசார்யரான ஆளவந்தார் கடாக்ஷத்தினாலே உபந்யஸித்தேன், இது ஆளவந்தார்திவ்யகோஷ்டியிலேஒருநாளாகிலும் ஸேவிக்கப்பெற்றேனாகில் பரமபதத்துக்கும் இங்குத்தைக்குஞ்சுருளும்படியும் கட்டேனோ என்று அருளிச்செய்தார். உடையவர் அபயப்ரதாநம் அருளிச்செய்யாநிற்க, பிள்ளையுறங்காவில்லிதாஸர் கோஷ்டியில் நின்றும் எழுந்திருந்தார்; உடையவரும், இது வென் பிள்ளாய் என்று கேட்க (త్యక్త్వాపుత్రాంశ్చదారాంశ్చ రాఘవంశరణంగతః) என்றுஸகலத்தையும்விட்டு பெருமாள்திருவடிகளே தஞ்சம்என்று அத்யவஸித்து, (ఖప్లవత్యజితేష్వ)என்று நிலத்தில் கால்பாவாமல், ககநஸ்தனாய், நிராலம்பனாய் வந்த விபீஷணாழ்வானையப்பன் (వధ్యతామ్) என்றுசல்லும் தடியுங்கொட ராமகோஷ்டிக்கு பசுபத்நியாதிகளோடேகூடினநான்ஆளாகப்போகிறேனோ என்றார்; அதுக்குஉடையவரும், கேளாய்! பிள்ளாய் நான் பெற்றேனாகில் நீரும் பெறுகிறீர், பெரியநம்பி பெற்றாராகில் அடியேன் பெறுகிறேன், ஆளவந்தார் பெற்றாராகில் பெரியநம்பிபெறுகிறார், மற்றும் மேலுள்ளார் பெற்றாராகில் அவர்கள் பெறுகிறார்கள், எல்லார்க்கும் நாய்ச்சியார் புருஷகாரம் இல்லாதபோது நச்சவேண்டா. நித்ய ஸம்ஸாரிகளும் எம்பெருமானும் ஒருசங்கலிந்துவக்கிலேஒன்றாய்க்காணுமிருப்பது. நம்முடைய ஒழுங்குக்கூட்டம் நம்மை விடாதென்றிரும், கமுகு உண்ணில் வாழையும்உண்ணும்என்றிரும், ஸ்ரீவிபீஷணாழ்வானோடுவந்த நால்வரையும்தனித்துத்(தகை)என்றதில்லையே, அருள்பாடிட்டபோது தனித்து அருள்பாடிட்டதில்லையே, ஆகையால்நான்பெற்றேனாகில் நீரும்பெறுகிறீர், அஞ்சாதேஸுகமாயிரும்என்று அருளிச்செய்தார்.

[ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்] ஏத்தியிருந்தார் ஸ்ரீபரதாழ்வான், சாத்தியிருந்தார் ஸ்ரீசத்ருக்நாழ்வான்; ஏத்தியிருந்தார் நம்மாழ்வார், அவரைச் சாத்தியிருந்தார் ஸ்ரீமதுரகவிகள்; ஏத்தியிருந்தார் பெரியாழ்வார், அவரைச்சாத்தியிருந்தார் நாய்ச்சியார்;

ஸ்வாசார்ய பரமாசார்யர்களைப் பற்றுமளவே ஸ்வரூபமாகில் திவ்யதேசங்களைக் கைவிட்டானாகானோ என்னில், கைவிட்டானாகான்; - (இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்மாலிருஞ் சோலையென்னும் பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோர், அவை தன்னொடும் வந்திருப்பிடம் மாயனிராமாநுசன்மனத்து) என்கையாலெம்பெருமானார்திருவடிகளைத்தொழவே திவ்யதேசங்களையெல்லாம் திருவடித்தொழுதானாகக்கடவன், அமுதுசெய்தருளப் பண்ணினானாகக்கடவன், ப்ரதக்ஷிணம் பண்ணினானாகக்கடவன்.

(நின்ற வண்கீர்த்தியும்) என்கிறபாட்டிலும், (பேறொன்று மற்றில்லை) என்கிற பாட்டிலும் - கர்மமும் உபாயமன்று, ஜ்ஞாநமும் உபாயமன்று, பக்தியும் உபாயமன்று, ப்ரபத்திதானும் உபாயமன்று, எம்பெருமானாரைப்பற்றுகையேப்ரபத்தி, ராமாநுஜ என்கிற ராமாநுஜசதுராக்ஷரியேமந்த்ரம், அவர்திருவடிகளில்பண்ணும் கைங்கர்யமேபரமபுருஷார்த்தமான என்ஸித்தாந்தம்என்று நடாதூரம்மாள் அருளிச்செய்தருளுவர்.

கூரத்தாழ்வான், (రామానుజేత్యేషా చతురాచతురక్షరీ) என்றும், (—,—య్య, రామానుజ) என்கிற திருமந்த்ரங்களுக்குவாசி; - பந்த

மோக்ஷங்க ளிரண்டு(ప్రాప్యత్వ)து வாசகையும், மோக்ஷகஹேது வாசகையும் ஆகிற வாசிதேன்ற (చతురాచతురక్షరీ) (சதுராசதுராக்ஷரீ) என்றாரிறே. (கையில்கனி) என்கிற பாட்டிலே ஈச்வரனை கரதலாமலகமாகக் காட்டித்தந்தாலும் உன் விக்ரஹ ஸௌந்தர்யமே பரமப்ராப்யம் என்றும், (ராமாநுசனைத்தொழும் பெரியோர் எழுந்திரைத்தாடு மிடம் அடியேனுக் கிருப் பிடமே) என்றும் ஸ்ரீராமாநுஜனைத்தொழும் பெரியோர் நித்யவாஸம்பண்ணும் இடமே அடியேனுக்கு ப்ராப்ய பூமி என்றும், (உன்தொண்டர்களுக்கே அன்புற்றிருக்கும்படி என்னையாக்கி அங்காட்படுத்து) என்றும், ராமாநுஜனே உன்னடியார் திறத்தில் ஊற்றம் மாறாத பக்தியை உண்டாக்கி அவர்களுக்கு என்னை ஆள்படுத்து என்றும், உடையவர் திருமுக மண்டலத்தைப் பார்த்து விண்ணப்பம் செய்ய, இசைந்தெழுந்தருளி யிருந்து தாமே இவ்வர்த்த நிஸ்சயத்துக்கு த்ருடதரப்ரமாணம் என்று நமக்கெல்லார்க்கும் புத்திபண்ணக் குறையில்லை. (அங்கயல்பாய்வயல் தென்னரங்கனணி யாகமன்னும், பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும் பத்தியெல்லாம், தங்கிய தென்னத்தழைத்து நெஞ்சே நந்தலைமிசையே, பொங்கிய கீர்த்தி இராமாநுச னடிப்பூ மன்னவே) என்றும், எம்பெருமானையும் நாய்ச்சியாரையும் புருஷகாரமாகக் கொண்டு, எம்பெருமானார் திருவடிகளைப் பற்றவேணும் என்றுப்ரபந்தம் தலைக்கட்டினாரிறே. (చరితంరఘునాథస్య శతకోటిప్రవిస్తరమ్ । ఏకైకమక్షరంప్రోక్తంమహాపాతకనాశనమ్) என்கிற சக்ரவர்த்தித் திருமகன் வைபவம் போலே ஸ்ரீராமாநுஜார்யர் வைபவமும் அவாங் மநஸ கோசரமிறே. ஸாகரத்தைக் கைநீச்சினால் நீஞ்சினாலும் உத்தியை சிறுங் கிச்சாலும் உடையவர் வைபவம் அடையச் சொல்லப்போகாதிறே. * யதாமதி யதாஸ்ருதமாகச் சொன்னேனத்தனை, பெஹுஸ்ருதராய் புத்திபாஹுள்யமுடையரானவர்கள் விஸத மாகக்கண்டுகொள்வது. இப்படி எல்லாருக்கும் ஸ்வரூ போபாய புருஷார்த்தங்களை நியமித்துக் கொண்டு எம்பெருமானார், ஜகதாசார்யராய், யதிஸார்வ பௌமராய் நம்பெருமாள்கோயிலிலே † நூற்று இருபத்தைந்து திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்தார்.

உடையவரால் ஏற்படுத்தப்பட்ட எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளின் திருநாமங்கள்.

இப்படி எழுந்தருளி யிருக்கிற எம்பெருமானார்திருவடிகளிலே ஆஸ்ரயித்த முதலிகளில் எழுபத்து நாலாரியர்கள் ஆரென்னில் ; - † ஆளவந்தார் குமாரர் சொட்டை நம்பி, அவர்குமாரர் என்னாச்சான், அவர்குமாரர் பிள்ளையப்பன், பெரியநம்பிகுமாரர் ஸ்ரீபுண்டரீகர், திருமாலையாண்டான் குமாரர் சுந்தரத்தோளுடையார், பெரிய திருமலைநம்பிகுமாரர் ராமாநுஜனும், திருமலைநம்பியும், கூரத்தாழ்வான் குமாரர் பட்டரும், சீராமப் பிள்ளையும், முதலியாண்டான், குமாரர்கந்தாடை யாண்டான், நடுவிலாழ்வான், கோமடத்தாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூராழ்வான், பிள்ளைப் பிள்ளையாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், அநந்தாழ்வான், மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், சேட்லூர் சிறியாழ்வான், வேதாந்தியாழ்வான், கோயிலாழ்வான், உக்கலாழ்வான், அரணபுரத்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான், கணியனூர் சிறியாச்சான், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடியாச்சான், திருமலைநல்லான், சட்டம்பள்ளிஜீயர், ஈச்சம்பாடி ஜீயர், திருவெள்ளறைஜீயர், ஆட்கொண்டவில்லிஜீயர், திருநகரிப்பிள்ளை, காராஞ்சிஸோமயாஜீயார், அலங்காரவேங்கடவர், நம்பிகருந்தேவர், செருப்பள்ளிதேவராஜபட்டர், பிள்ளையுறைந்தையுடையார், திருக்குருகைப்பிரான்பிள்ளான், பெரியகோயில்வள்ளலார், திருக்கண்ணபுரத்தெச்சான், ஆசூரிப்பெருமாள், முனிப்பெருமாள், அம்மங்கிப்பெருமாள், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான், சோமாசியாண்டார், சீயாராண்டான், ஈச்வராண்டான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், குஞ்சிப்பூர் சிறியாண்டான், அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, மழுவூர்நம்பி, திருக்குறுங்குடிநம்பி, குரவநம்பி, முடும்பைநம்பி, வடுகநம்பி, வங்கிப்புரத்துநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, அம்மங்கியம்மாள், கொல்லையம்மாள், உக்கலம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள், குமாண்டூர்பிள்ளை, குமாண்டூரிளையவல்லி, கிடாம்பிப்பெருமாள், ஆற்காட்டுப்பிள்ளான்.

(సంసేవితస్సంయమిసప్తశత్యాపీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతైః।అన్యైరనన్తైరపివిష్ణుభక్తైస్తైస్తైర్విరాజ్యయతిసార్వభౌమః)

எம்பெருமானார்திருவடிகளேசரணம்.

பிள்ளைலோகஞ்சீயர் திருவடிகளேசரணம்.

ராமாநுஜார்யதிவ்யசரிதை ஸம்பூர்ணம்.

—:0:—

† இதுக்கு சரியானபாடத்தை கோசாந்தரங்களில் காண்க.

ஆவணக்காப்பக ... சென்னை-600 008.